Q23.22
N15
7860

உ

சிவமயம்

# அருணாசலபுராண வசனம்

இது

ஜீவகசிந்தாமணி வசனம், அரிச்சந்திரபுராண வசனம், ஸ்ரீ பகவத்கீதை வசனம் ஆகிய நூல்களின் ஆசிரியரும், விவேகசிந்தாமணி உரையாசிரியருமாகிய


மதுரை ஜில்லா செம்பூர் வித்வான்

ஸ்ரீமத்

வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்களால்


வசனரூபமாக எழுதப்பெற்றது


[illegible] அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1915

விலை ரூபா 1.



[All Rights Reserved]

# முகவுரை.

கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்த கனவான்களே! பிருதிவி ஸ்தலமாகிய காஞ்சி, அப்பு ஸ்தலமாகிய திருவானைக்கா, தேயு ஸ்தலமாகிய அருணாசலம், வாயுஸ்தலமாகிய ஸ்ரீகாளத்தி, ஆகாய ஸ்தலமாகிய சிதம்பரம் ஆகிய பஞ்சபூத ஸ்தலங்களுள் தேயு ஸ்தலமாகிய அருணாசலம் மிக்க மகிமையுடையதென்பதையும், அதி லெழுந்தருளியிருக்கும் அருணாசலேசுரர் அடியார் பாவத்தை எளிதிற் போக்கி அவரையாட்கொள்ளத் தக்க சிறப்பு வாய்ந்தவ ரென்பதையும் எவரும் நன்குணர்வர். இத்தகைய தலத்தையும், இதிலமர்ந்திருக்கும் ஈசுரரையும் பற்றிய மான்மியங்க ளெல்லாவற்றையும் பக்திமான்க ளொவ்வொருவரும் படித்துணரவேண்டியது அவசியமாதலின், அவர்கள் தெரிந்துகொள்ளும்பொருட்டு இவைகளெல்லாம் சிவபுராணங்களில் ஒன்றாகிய காந்தத்தில் உருத்திர சங்கிதையிலும், இலிங்கபுராணத்திலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள் அடியிற் கூறப்படும் சருக்கங்களில் திருநகரச் சருக்கமுதல் வல்லாளமகாராச சருக்க மீறாகவுள்ள ஏழு சருக்கங்களி லடங்கிய விஷயங்களெல்லாம் காந்தத்தில் உருத்திர சங்கிதையில் பரமசிவன் நந்திகேசுரருக்குச் சொல்ல, அவர் மார்க்கண்டேயருக்குச் சொல்ல, அவர் வேதவியாசருக்குச் சொல்ல, அவர் சூதமுனிவருக்குச் சொல்ல, அவர் சௌனகர் முதலிய ரிஷிகளுக்குச் சொன்னதாகக் கூறப்பட்டவை. தீர்த்தச் சருக்க முதல் புளகாதிபச் சருக்க மீறாகவுள்ள ஆறு சருக்கங்களி லடங்கிய விஷயங்களெல்லாம் இலிங்க புராணத்தில், பிரமதேவர் சனகர்க் குரைக்க, அவர் வியாசர்க்குக் கூற, அவர் சூதர்க் குரைக்க, அவர் நைமிசாரணிய வாசிகளாகிய இருடியர்களுக்குச் சொன்னதாகக் கூறப்பட்டவை. இவற்றைப் பிற்பட்ட காலத்தில் ஸ்ரீலஸ்ரீ-எல்லப்ப நாவலரென்பவர் தமிழர்க்குப் பயன்படுமாறு இனிய தமிழ்ச் செய்யுட்களால், திருநகரச் சருக்கம், திருமலைச் சருக்கம், பார்வதிதேவியார் திருவவதாரச் சருக்கம், பார்வதிதேவியார் திருக்கண் புதைத்த சருக்கம், பார்வதிதேவியார் இடப்பாகம் பெற்ற சருக்கம்,

28040

வச்சிராங்கதபாண்டியச் சருக்கம், வல்லாளமகாராச சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருமலை வலம்புரிதற் சருக்கம், ஆதித்த சருக்கம், பிரதத்தராச சருக்கம், பாவந்தீர்த்த சருக்கம், புளகாதிபச் சருக்கம் ஆகிய பதின்மூன்று சருக்கங்களுள்ள நூலாகத் தாம் பாடிய அருணாசலபுராணமென்னும் அரிய நூலின் வாயிலாக விளக்கிக் கூறினர். இந்நூலுக்கு மழவை மகாலிங்கையரவர்களால் இயற்றப்பெற்ற பொழிப்புரையும் அமைந்துள்ளது. இத்தகைய உரை பொருந்திய இந்நூலைத் தமிழ் நாட்டிலுள்ள கல்வியறிவாளராகிய பக்திமான்களெல்லோரும் விசுவாசத்துடன் படித்து அருணாசலேசுரரின் அருளைப்பெற்று மகிழ்ச்சியடைந்து வருகின்றார்கள். ஆயினும், இந்நூல் இலக்கண இலக்கியப்பயிற்சியுள்ளார்க்கே பெரும்பான்மையும் பயன்படக்கூடியதாயிருத்தலின், மற்றைய சாதாரணப் படிப்புள்ளவர்கள் அருணாசலத்தின் மகிமையைத் தாமே படித்தானந்திக்க ஏதுவில்லையென்னும் குறையொன்று ஏற்பட்டிருந்தது. ஆதலின், அக்குறையை நிவிர்த்தி செய்யும்பொருட்டுப் பாலர்கள், பெண்கள் முதலிய எல்லோரும் படித்துணரத்தக்க எளிய நடையில் இந்த அருணாசலபுராணச் செய்யுட்களைத் தழுவி வசனநூலொன்றியற்றினால் உலகத்தார்க்குப் பெரிதும் பயன்படுமென்று சில புத்திமான்கள் என்னிடம் தெரிவிக்க, நான் அவர்களுடைய அன்பான வார்த்தைக் கிணங்கி, மேற்கூறியபடி ஸ்ரீலஸ்ரீ எல்லப்பநாவலரவர்களாற் செய்யப்பெற்ற அருணாசலபுராண செய்யுட் கருத்துக்களையே பெரும்பான்மையும் தழுவி இடையிற சிற்சில விஷயங்களை விரித்துக் கதைகள் சந்தேகமின்றி எத்தகையினர்க்கும் விளங்கும்படி மிகவும் தெளிவாக எளிய நடையில் இவ் வருசலபுராணவசனமென்னும் நூலை எழுதி முடித்தேன்.

இதிலுள்ள (1) திருநகரச் சருக்கத்தில் திருவண்ணாமலை நகரச்சிறப்பும், (2) திருமலைச்சருக்கத்தில் பிரமன் விஷ்ணு ஆகியவர்களின் பொருட்டு சுவாமி மலைவடிவமான வரலாறு முதலியவைகளும், (3) பார்வதிதேவியார் திருவவதாரச் சருக்கத்தில், தக்கன் அகங்காரமொடுங்கியது, பார்வதி அவனுக்கு மகளாய்த் தாக்ஷாயணியென்னும் பெயருடனிருந்த தன்மையை யொழித்து மலையரசனுக்கு மகளாகப் பிறந்தது, அவளைச் சிவபெருமான் மணஞ்செய்தது முதலிய



விஷயங்களும், (4) பார்வதிதேவியார் திருக்கண் புதைத்த சருக்கத்தில் பார்வதி சிவபெருமானுடைய கண்களை மூடியதனால் வந்த பாவந் தீரும் பொருட்டுத் திருவண்ணாமலைக்குச் சென்று கௌதமருடைய ஆச்சிரமத்தில் தவஞ்செய்தது, விஷ்ணு முதலியவர்கள் மகிடாசுரனால் ஏற்பட்ட துன்பத்தைப் பார்வதியிடம் கூறியது முதலிய விஷயங்களும், (5) பார்வதிதேவியார் இடப்பாகம் பெற்ற சருக்கத்தில் மகிடாசுரன் நாசமடைந்தது, பார்வதியின் தவத்திற்கு மகிழ்ந்து சிவபெருமான் அவளுக் கிடப்பாகங் கொடுத்தது முதலிய விஷயங்களும், (6) வச்சிராங்கத பாண்டியச் சருக்கத்தில் புழுகுபூனையும் குதிரையும் அருணாசலத்தை வலம் வந்த புண்ணியத்தால் தங்கள் சாபம் நீங்கிப் புண்ணிய தேகம் பெற்றது, வச்சிராங்கதபாண்டியன் குதிரைமேலேறி அம்மலையை வலம் வந்தபடியால் துன்பமடைந்து பின்னர் அருணாசலேசுரரைப் பூஜித்து அத்துன்பத்தைத் தீர்த்துக்கொண்டது முதலிய விஷயங்களும், (7) வல்லாளமகாராச சருக்கத்தில் பிள்ளையில்லாமல் வருந்திய வல்லாளனுக்குச் சிவபெருமான் பிள்ளையாகத் தோன்றிய விவரமும், (8) தீர்த்தச் சருக்கத்தில் அருணாசலத்திலுள்ள தீர்த்தங்களின் மகிமை, அவற்றில் மூழ்கியவர் அடைந்த சிறப்பு முதலியவைகளும், (9) திருமலை வலம்புரிதற் சருக்கத்தில் அருணாசலத்தை வலம் வருவதாலுண்டாகும் பயன், அதனை வலஞ்செய்ய வேண்டிய விதம் முதலியவைகளும், (10) ஆதித்தசருக்கத்தில் சூரியன் அருணாசலத்தை மதியாமல் அதன்மேல் தேரைச் செலுத்தியதனால் துன்பமடைந்து பின்னர் அருணாசலேசுரரை வணங்கி அதனைத் தீர்த்துக்கொண்ட விவரமும், (11) பிரதத்தராச சருக்கத்தில் பிரதத்தனென்னுமரசன் அருணாசலேசுரர் கோவில் தாசியைக் கொண்டுபோக நினைத்ததால் குரங்கு முகத்தை யடைந்து பின்னர் அவருக்குக் காணிக்கை செலுத்தி அத்துன்பத்தைத் தீர்த்துக்கொண்ட விவரமும், (12) பாவந் தீர்த்த சருக்கத்தில் அஷ்டவசுக்கள், பிரமன், விஷ்ணு, சந்திரன் முதலியவர்கள் அருணாசலத்தை யடைந்து தங்கள் பாவங்களையும் சாபங்களையுந் தீர்த்துக்கொண்ட விதமும், (13) புளகாதிபச் சருக்கத்தில் புளகனென்னு மசுரன் புழுகுபூனை வடிவமாய் அருணாசலத்தில் புழுகைச் சிதறிய புண்ணிய விசேஷத்தினால் நற்பேறு பெற்ற விதமும் அடங்கியிருக்கின்றன.

இத்தகைய விஷயங்களடங்கிய இந்நூல் மேற்கூறியபடி சிறுவர்க்கும் விளங்கக்கூடிய எளிய நடையில் எழுதப்பெற்றிருத்தலின், நம் தமிழ் நாட்டிலுள்ள பாலர், ஸ்திரீகள், சாதாரண படிப்புள்ள மற்றையர்கள் ஆகிய எல்லோருக்கும் பயன்படுவதன்றிக் கல்விமான்களுக்கும் அருணாசல தல மகிமைகளடங்கிய சரித்திரங்களைத் தெரிந்துகொள்ள உபயோகப்படுமென்பது திண்ணம். ஆதலின், சிவபக்தியிற் சிறந்த புத்திமான்கள் ஒவ்வொருவரும் இதனை விரும்பிக் கைக்கொண்டு படித்து அருணாசலேசுரரின் இன்னருளைப்பெற்று இகபரசாதனங்களை யடைந்து மகிழ்வதோடு இதனை யெழுதிய எனக்கும், அச்சிட்டு வெளிப்படுத்தினோர்க்கும், மேலும் இத்தகைய நூல்களை வெளிப்படுத்துதற்காம் ஊக்கத்தை உண்டாக்குமாறு விரும்புகின்றேன்.

நான் இதனை என் சிற்றறிவிற் கெட்டியவரையில் எழுதி முடித்தேனாகலின், இதிற் சிற்சில பிழைகளும் என் அறியாமையாலோ வேறு காரணத்தாலோ நேர்ந்திருத்தல் கூடும். அவ்வாறு பிழைகள் காணப்படின் அறிந்த உத்தமர்கள் அவற்றை எனக்குத் தெரிவிக்கும் பக்ஷத்தில் நான் வந்தனத்துடன் ஏற்று இப்புத்தகத்தின் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்வேன்.

இந்நூல் வெளிப்படுதற்குக் காரணமா யிருந்தவர்கட்கும், இதனை விருப்பத்துடன் ஏற்றுப் படிப்பவர்க்கும் எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக. சுபம்.

இங்ஙனம்:

வீ. ஆறுமுகன்.

---

OFFICE OF THE R…

உ

சிவமயம்.

# அருணாசலபுராண வசனம்.

## தெய்வ வணக்கம்.

### விநாயகர் துதி.

கலிவிருத்தம்.

"மிக்க வேத வியாசர் விளம்பிய
இக்க தைக்கியை யின்றருள் செய்திட்
முக்கண் வெற்பினை மும்மத வாரியைக்
கைக்க ளிற்றினைக் கைதொழு தேத்துவாம்."

### நடேசர் துதி.

இரட்டை வஞ்சிப்பா.

"முதிருஞ்சுவை மதுரம்பெற மொழியுந்தமிழ் விதன்புகழ்
பதிகம்புனை பவனம்பினர் பவ * பஞ்சன னமலன்கதி
ருதிரும்படி பகிரண்டமு முடையும்படி யிலகும்படி
[illegible]திரும்படி நடனம்புரி யதிருங்கழ லதிருங்கழல்."

### பரசிவ வணக்கம்.

கலிவிருத்தம்.

"உறவொடு பகையறு மொருமுத லவனெவ
னிறுதியி லுலகரு ளிறையவ னவனெவன்
மறைமுடி வினிடம் வளர்பவ னெவனவ
னறிவினி லறிபவ னடியிணை தொழுதனம்."

### அருணாசலேசர் துதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளருந் திருமாலு
மறையி னானும்

---

* பஞ்சனம் - அழித்தல்.

பணிகொண்ட பாதலத்தும் பூதலத்து மீதலத்தும்
    பரிந்து தேட
வணிகொண்ட பிரமாண்ட கோளகைபொற் கோள [கையா
    யழகு காட்டக்
தணிகொண்ட வொருவரையா மொருவரையா மகலாது
    கருத்துட் சேர்ப்பாம்."

இதுவுமது.

"ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச் சிரத்தினில் [வைத்
    துலக மேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப் பவளநெடுஞ்
    சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப் பெருமானை
    மகிழ வேறும்
பெருமானை யருணகிரிப் பெம்மானை யடிபணிந்து
    பிறவி தீர்ப்பாம்."

உண்ணாமுலையம்மை துதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்
    தொழுகுமிரு கடைக்கண் ணாளை
மூரலிள நிலவொழுகப் புழுகொழுக
    வழகொழுகு முகத்தி னாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
    தெரியாத மருங்கு லாளைச்
சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணா
    முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்."

யானைதிறைகொண்ட விநாயகர் துதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"மதமூன்று மாறாக வருங்களிற்று
    முகத்தானை மனத்தி லேதான்



பதமூன்று மருந்தவர்க்குப் பதமூன்றுங்
    கடந்தபதம் பாலிப் பானை
விதமூன்று புரங்கடிந்தா ரளித்தருளு
    மொருமுதலை வேரோ டேசஞ்
சிதமூன்று பிறப்பொழிக்கு மியானைதிறை
    கொண்டவனைச் சிந்தை சேர்ப்பாம்."

சிவசுப்பிரமணியர் துதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"கொந்தாரு மலர்ச்சோலை யருணைநெடுங்
    கோபுரத்திற் குமர வேளை
வந்தாரை வாழ்விக்க வடவீதி
    தனிலுறையு மயிலி னானைக்
கந்தாருங் கடக்களிற்று மகவாற்குத்
    தருநிழலுங் கனக நாடுந்
தந்தானை யலர்கடப்பந் தாரானைப்
    பணிபவர்தா டலைமேற் கொள்வாம்."

மூவர் துதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"வாதுகொண்ட பரசமய கோளரியை
    யடிவணங்கி வன்கற் றூணாற்
றீதுகொண்ட கருங்கடலைக் கடந்தசெழுந்
    தமிழ்க்கடலின் றிருத்தாள் போற்றிக்
காதுகொண்ட விழிப்பாவை திருமணக்கெம்
    பெருமானைக் கால்க ணோவத்
தூதுகொண்ட சுந்தரனைத் தம்பிரான்
    றோழனையாந் துதிசெய் வோமே."

திருவாதவூரடிகள் துதி.

கோச்சகக்கலிப்பா.

"அத்தனார் பெருந்துறைபுக் கரியவினைக் கடல்கடந்து
புத்தனார் மதங்கடிந்து புனிதமா யெபசிவன்

முத்தனார் மாணிக்க வாசகனார் முத்திக்கு
வித்தனார் வாதவூர் வித்தகனார் தாள்போற்றி."

### திருத்தொண்டர் துதி.

#### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"மனையாளை யாற்களித்து மனங்களித்த
வியற்பகையார் மலர்த்தாள் போற்றி
தனையாளும் பெருமானுக் கெச்சிலிடுங்
கண்ணப்பர் சரணம் போற்றி
வினையாள ரறியாத நிருநீல கண்டரடி
விரும்பிப் போற்றி
எனையாளு மினையான்றன் குடிமாற
ரிணையடியை யிறைஞ்சு வோமே."

### இதுவுமது.

"ஐயடிகள் காடவர்கோ னீரடியை
வணங்கிமக வறுத்தெம் மாற்கு
செய்யடிசி லுடன்படைத்தார் திருவடியைத்
தொழுதிரு நீற்றுச் சோழன்
மெய்யடியைப் புகழ்ந்துதெய்வ வுலாச்சொன்ன
சேரனடி விரும்பி யேத்திப்
பொய்யடிமை யில்லாத புலவர்முத
லனைவரையும் போற்று வோமே."

### நந்திதேவர், துர்க்கை, கௌதமர், சண்டேசுரர் ஆகியவர் துதி.

#### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"நந்திதிரு வடியிறைஞ்சி விந்தையடி
புகழ்ந்துமறை நான்கிற் கைந்தாய்
வந்தருளுங் கோதமனார் மலரடியென்
முடிக்குமுடி மாலை யாக்கித்
தந்தையிரு பதஞ்சிதைத்துச் சிதையாத
பதத்திருந்த தண்டி தாளைச்
சிந்தைமிசைக் குடியிருத்தி யருணகிரி
நினைப்பவர்தாள் சென்னி சேர்ப்பாம்."

---

## நூலின் வரலாறு.

ஆதிகாலத்தில் பரமசிவன் கிருபைசெய்து நந்திக்குரைக்க, அவர் மார்க்கண்டேயருக்குச் சொல்ல, அந்த மார்க்கண்டேயர் வேதங்களை ஒழுங்குசெய்த வியாசருக்குரைக்க, அவ்வியாசர் சூதமுனிவருக்குச் சொல்ல, அந்தச் சூதபுராணிகர் குவிந்த மனத்தையுடைய சௌனகாதி ரிஷிகளுக்குக் கூறிய சிவனுடைய பழையபுராணகதைகள் கோடியாகும்; அவற்றுள் முக்கியமான காந்தத்தில் உருத்திரசங்கிதையில் இவ்வருணாசல புராணமென்னும் கதை கூறப்பட்டுள்ளது; இதில், அருணாசலத்தலமகிமையும், பிரம விஷ்ணுக்களுடைய கர்வ மடங்கும்பொருட்டுச் சிவன் அக்கினிமலையான வரலாறும், இணையற்ற தக்கனுடைய யாகத்தை அவர் அழித்ததும், பரமசிவன் உமாதேவியை மணஞ்செய்ததும், அந்தப் பார்வதிதேவியார் சுவாமியின் திருக்கண்களை மூடியதும், மகிடாசுரனை உமாதேவி கொன்றதும், அப்பார்வதிதேவியார் சிவனுடைய வாமபாகத்திற் சேர்ந்ததும், வச்சிராங்கத பாண்டியனுடைய பாவந் தீர்ந்ததும், வல்லாளமகாராஜனுக்குப் பிள்ளைக்கலி நீங்கி முத்தி கிடைத்ததும், அருணாசலத்திலுள்ள தீர்த்தங்களின் பெருமையும், அவ்வருணாசலத்தை வலஞ் செய்வோர் பெறும் பேறும், கதிரவனுடைய கர்வமடங்கி அவனுக்கு முத்தியுண்டான விதமும், பிரதத்தனென்னும் அரசனுடைய சரிதை முதலியனவும், புழுகுபூனையாக விருந்து மூவுலகங்களிலுஞ் சஞ்சரித்து வந்த புளகாதிபனென்னு மரக்கனுடைய சரிதமும் இன்னும் பல விசேஷங்களும் அடங்கி யிருக்கின்றன. இத்தகைய விசேஷங்கள் பொருந்திய அருணாசலபுராணமென்னும் இந்நூலை ஸ்ரீமத் எல்லப்பநாவலர் வடமொழிக் கிணங்கத் தமிழில் செய்யுள் ரூபமாக இயற்றியருளினார். அச்செய்யுட்களைத் தழுவி முருகனருளால் யான் இவ்வசனத்தை எழுதத் தொடங்குகின்றேன்.

முதலாவது

## திருநகரச் சருக்கம்.

பரமசிவன் தரிக்கின்ற வெள்ளிய கங்கையையும், சந்திரனையும், நீறணிந்ததால் வெண்மையாக விளங்கும் அவரது திருவுருவத்தையும் போன்று வெள்ளைநிறத்தோடு விளங்கி, ஆங்கே சிவனை வணங்குதற்பொருட்டுத் தேவேந்திரன் முதலிய தேவர்கள் நெருங்குவதால் அவர்களுடைய கிரீடத்தோடு கிரீடம் மோதுண்டு சப்தத்துடனே பொற்பொடிகளும் இரத்தினப்பொடிகளும் உதிர்ந்து எங்கும் குவிந்து அதனால் மேருகிரியை நிகர்த்துப் பிரகாசிக்கும் கைலையங்கிரியிலே, இந்திரநீலகற்களை ஒன்றோடொன்று சேர்த்துச் சந்து தெரியாமல் சுவரெழுப்பிச் சித்திரமெழுதி அதனடியே மந்திரகிரியைப்போல வயிரத்தூண்களை நிறுத்தி, மரகதத்தினாற் செய்யப்பட்ட உத்திரஞ்சேர்த்து, சிவந்தபவளத்தினாற் செய்யப்பட்ட * போதிகையமைத்து, மாணிக்கத்தினாற் செய்யப்பட்ட † கொடுங்கை சாத்திச் சந்திரகாந்தத் தகடு பரப்பிச் சிங்காரமாகச் சிருஷ்டித்த மண்டபத்தில் ஒருதினம் உயர்வாகிய மழுவும் மானும் பிரம்பும் உடைவாளும் நீங்காத கையையுடையவரும், பவளமலையிற் பொழிந்த சந்திரப்பிரகாசத்தைப் போன்று தேகத்தில் விளங்குகின்ற விபூதியையுடையவரும், சடைமுடியை யுடையவரும், நெருங்கிய மூன்று கண்களை யுடையவரும், பிரகாசிக்கின்ற இடுப்பில் நீங்காத புலித்தோலை யுடையவரும், நான்கு புஜங்களை யுடையவரும், முப்புரியாகிய பூணூலைத் தரித்தவரும், சந்திரனும் கங்கையும் தவழ்கின்ற சடையையுடைய பரமசிவனது கட்டளையைச் சிரமேற்கொண்டு வெள்ளியங்கிரியைக் காக்கின்றவரும், தாமரைமலரை நிகர்த்த நிறத்தையும் விஷம் பொருந்திய கண்டத்தையும் வெண்மையாகிய இடபவாகனத்தையுமுடைய பரமசிவன் சம்பந்தமாகிய சைவசமயமென்னும்

* போதிகை - தாழ்வாரத்தாங்கி.
† கொடுங்கை - உள்வளைந்த கைமரம்.



பயிர் தழைக்குமாறு கருணையாகிய மழையைச் சொரிகின்ற மேகம்போன்றவரும், பஞ்சேந்திரியங்களையும் புறத்திற் றீமையாகிய பொருள்களிற் செல்லவொட்டாமல் அகத்திலடக்கிய சிலாதமுனிவருக்கு உயிர்போன்ற புத்திரராக அவதரித்தவரும், விஷ்ணு முதலிய தேவர்களெல்லோரும் முடி பொருந்தும்படி வீழ்ந்து நமஸ்கரிப்பதனாலே சிவப்பேறித் தாமரை மலர்போன்று விளங்கும் பாதங்களை யுடையவருமாகிய நந்தியெம்பெருமானார், இருமருங்கினும் முத்துக்களிழைத்த சிங்காதனத்தில் நீலரத்தினத்தாற் செய்யப்பட்ட பாதக்குறட்டின்மேலே மலர்போன்ற பாதங்களை வைத்துக்கொண்டு, இனிதாக வீற்றிருந்து, முயலகன் முதுகில் வலப்பாதத்தைவைத்துக்கொண்டு அரிதாகியசித்தாந்தப்பொருளை சனகர், சனாதர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய முனிவர்களுக்கு உபதேசித்தருளிய பரமசிவனைப்போல் விளங்கினார்.

அப்போது, மார்க்கண்டேயர், குற்சர், உரோமசர், குமுதர், குமுதாட்சர், சகடாயர், அகத்தியர், வற்சர், வைசம்பாயனர், கணாசிமுனி, வியாக்கிரபாதர், வாமதேவர், சனகர், சனற்குமாரர், வியாசர், மதங்கர், பதஞ்சலிமுதலிய பலமுனிவர்கள் அவரைச் சூழ்ந்திருந்தார்கள். அங்ஙனம் எல்லோரும் சூழ்ந்திருக்குங்காலத்தில் என்றும் பதினாறென நிலைபெற்ற வயதினையுடைய மார்க்கண்டேயமுனிவர் எழுந்து நந்திதேவருக்கு நமஸ்காரஞ்செய்து அவரை நோக்கி, "சுவாமி! மேகத்தில் தோன்றி விரைவில் மறையும் மின்னலைப்போல ஜன்மங்கள் தோன்றி மறைவதையும், இவ்விதப் பிறப்பிறப்பிற்குக் காரணமாகிய நல்வினை தீவினைகளின் வகைகளையும் எங்களுக்கு விளக்கமாக வுரைத்தருளிய ஒப்பற்ற கடவுளே! இனி நாங்கள் மோக்ஷத்தை யடைதற்குரிய வழியை எங்களுக்குரைத்தருளவேண்டும்," என்று கூறினார். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே நந்திதேவர் மிக்க கிருபையையுடையவராகி அவ்வாறே மோக்ஷத்திற்குரிய மார்க்கங்களை உபதேசிக்கத் தொடங்கினவராய் அம்மார்க்கண்டேய

னை நோக்கி, "முனிவரே! உம்முடைய விருப்பப்படியே நற்கதிகளை யடைந்து மோக்ஷத்தைப் பெறும் மார்க்கத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக: பூவுலகத்தில் கம்பைநதி, கும்பநதி, காவிரி, கோதாவரி, கிருஷ்ணவேணி, பம்பைநதி, வேகவதி, வேதவதி, சரயுநதி, கங்காநதி, தாமிரபருணி, பொன்முகரி, யமுனாநதி, நருமதாநதி, சோணாநதி முதலிய அநேகம் நதிகளுண்டு; இவற்றில் ஸ்நானஞ் செய்தால் அங்ஙனம் செய்தவர்களுடைய பாவங்களெல்லாம் நீங்கும்.

இவையன்றி, இந்தக் கைலாசத்தைக் காட்டினும் சிறப்புடைய காசியென்னும் ஒரு திவ்யஸ்தல மிருக்கிறது; அக்காசியிலும் மேற்கூறிய நதிகளுடன் சேர்த்துக் கூறப்பட்ட கங்கை பெருகிச் செல்கின்றது; அந்த க்ஷேத்திரத்தில் சென்று அங்குள்ள கங்காஜலத்தில் திரிகரண சுத்தியுடன் ஸ்நானஞ் செய்தால் அப்படிச் செய்தவர்களுக்கு மோக்ஷத்திற்கு வழி யேற்படும்; அன்றியும், அவ்வூரில் குற்றமுடைய தேகத்தை விடும் பிராணிகள் மரங்களாயிருந்தாலும், மிருகங்களா யிருந்தாலும், பறவைகளா யிருந்தாலும் அவற்றின் செவிகளில் பரமசிவனுடைய *தாரகப்பிரமோபதேசம் சேர்வதனாலே அவை சிவசாரூப்பியத்தை யடைவது நிச்சயம்; இவைகளே இவ்வாறு அடையுமென்றால் அங்குத் தேகத்தை விடும் மனிதர்கள் நற்பதவி யடைவார்களென்பதைச் சொல்லவேண்டியதில்லை; இன்னும், சர்ப்பம் புற்றைத் தனக்கு இடமாகக் கொண்டிருப்பதைப் பார்ப்போமே யன்றி ஞானிகள் போற்றுகின்ற யோகி, புற்றினிடத்தி லிருப்பதைப் பார்ப்பதருமை; ஆயினும், அவ்வாறு யோகி புற்றினிடமாக விருந்த புண்ணிய தலமொன்றுண்டு; அஃதியாதெனில், காளிங்கனென்னும் பாம்பின்மேல் ஏறி நடனஞ் செய்த விஷ்ணுவுக்கு உயிர்ப்பிச்சை வேண்டி இலட்சுமி பூசை செய்துகொண்டிருந்ததும், கமலாலய மென்னும் பெயரினையுடையதும், வஞ்சம் பொருந்திய மனமுடைய திரிபுராதி

* தாரகப்பிரமம் - பிரணவமந்திரம்.



களை யெரித்த சிவபிரான் வாசஞ் செய்கின்றதுமாகிய திருவாரூரென்னுந் தலமாம். இத்தலத்தில் பிறப்போர் சகல பாவங்களினின்றும் நீங்கி நற்பதவி யடைவர்.

இன்னும், பெருமை பொருந்திய விராட்புருஷனுடைய இதயஸ்தலமாகிய சிதம்பரமென்னும் ஒரு ஸ்தலமுண்டு; இத்தலத்திலுள்ள கனகசபையில் திரிநேத்திரங்களையுடைய பரமசிவன் ஆனந்தத் தாண்டவஞ் செய்வர்; அவருடைய மூர்த்திகரத்தில் ஆயிரத்தி லொருபங்குதான் இக்கைலாய பர்வதத்தி லிருக்கின்றது; இதனால் அத்தலத்தின் மகிமை அளவிடக்கூடாததென்பது நன்கு விளங்கும்; இத்தகைய அழகு பொருந்திய கனகசபையை உள்ளன்புடன் கண்டு தரிசித்தவர்கள் விஷ்ணுவினாலும், பிரமாவினாலும் காணப்படாத முத்தியை யடைவார்கள். இஃதன்றிக் கையிலே சக்கராயுதத்தைத் தரித்த விஷ்ணு பரமசிவனைப் பூஜித்த விருத்தாசலமென்னும் ஒரு ஸ்தலமுண்டு; அந்த ஸ்தலமோ பார்க்குமிடத்துப் பிரணவ சொரூபமாக விளங்கும்; அந்தத் தலத்தில் உயிர்விட்டால் அவ்வாறு உயிர்விட்டவர்களுடைய தேகமழியாது; நிறங் குறையாது; வீக்கமுறாது; கட்டுவிடாது; மற்றப் பக்ஷி மிருகம் முதலியவைகளால் பின்னமடையாது; வெடிபடாது; பின்னும் அத்தேகத்தில் துர்க்கந்தமும் புழுவும் உண்டாகாமல், அது வலக்காது மேலாகக்கிடக்கும். இன்னும் பொய்ம்மையாகிய எருமை முகத்தினையுடைய மகிடாசுரனைச் செயித்த அம்மை இடப்பாகத்தில் நீங்கா திருக்கப்பெற்ற பரிசுத்தராகிய பரமசிவன், 'நமக்குச் செம்மையாகிய இடம் இதுதான்,' என்று எழுந்தருளி யிருக்கப் பெற்றதும், கறுப்பாகிய எருமையின் முகம்போல் விளங்குவதுமாகிய திருக்கேதாரமென்னுந் தலமொன்றுண்டு; இத்தலத்தைத் தரிசிப்பதனால், இம்மையில் ஏற்படும் துக்கமும் மறுமையில் வருகிற துக்கமும், ஞானமில்லாததினாலே உண்டாகின்ற துக்கமுமாகிய எல்லாத் துயரங்களும் நீங்கும்; மூவுலகத்தாருக்கும் எளிதாகப் பாவங்களை நீக்கி நிலையான

ஆனந்தத்தைக் கொடுக்கும் முத்தி ஸ்தானம்போல இது விளங்கும்; இன்னும் மல்லிகார்ச்சுனமென்னும் தலமொன்றுண்டு; அங்கே, பரமசிவன் பிரமராம்பிகையுடனே எழுந்தருளியிருக்கின்றார். அன்னவாகனத்தையுடைய பிரமதேவர் இத்தலத்திற்கு வந்து பக்தியோடு இரண்டுவேளையும் சிவனை வணங்கி அவருடைய அருளைப்பெற்றுத் தேவலோகம் முதலிய எல்லாவுலகங்களையும் படைத்தார்; மற்றைத்திருப்பதியிலிருக்கும் வேங்கடாசலபதியும் தேவர்களும் இந்தத் தலத்தில் * சரமாகவும், † அசரமாகவும் பிறப்பதற்குத் தவஞ்செய்வார்கள்; இங்ஙனம் பிறத்தற்கு அவர்கள் தவஞ்செய்வார்களென்றால் இந்த க்ஷேத்திரத்திற்கு வேறு க்ஷேத்திரங்களைச் சமானமாகக் கூறுதல் முடியுமோ? முடியாது; ஆதலால், இத் தலத்தைத் தரிசிப்போர் அடையும் பலனுக் களவில்லை.

இன்னும், திருக்காளத்தியென்னும் தெய்வீகம் பொருந்திய தலமொன்றுண்டு; இத்திருத்தலத்தில் ஆதிசைவப் பிராமணராகிய சிவகோசரியார் பக்தியோடு அருச்சனை செய்த அறுகு,புஷ்பம் ஆகியவைகளுடனே, தம் கண்ணைப் பிடுங்கிப் பதித்த கண்ணப்பரது காற்செருப்பையும் விருப்பத்துடனே ஏற்றுக்கொண்ட இலிங்கசொரூபமாகிய சிவபெருமான், குளிர்ச்சிபொருந்திய தேனைச் சொரிகின்ற தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியுடனே வாசனை பொருந்திய துளபமாலையையணிந்த மார்பினையுடைய விஷ்ணுவானவர் திருவேங்கடமென்னும் திருப்பதியில் நின்றுகொண்டு தரிசித்து வணங்கும் பொருட்டுக் காளத்தியலைவடிவமாகவும் விளங்குகின்றார். இத்தலத்தை யடைவோர் சிவனருளால் நிச்சயமாக மோக்ஷத்தை யடைவார்கள். இஃதன்றி எட்டுத்திக்கிலுள்ளவர்களும் புகழ்ந்து கொண்டாடுகின்ற தொண்டைமண்டலமென்னும் தெய்வீகம் பொருந்திய நாட்டில், தரிசனஞ் செய்வோருடைய பாவத்தைப் போக்கத்தக்க ஒரு புண்ணிய தல

* சரம்-அசையும்பொருள். † அசரம்-அசையாப்பொருள்.



முண்டு; அஃதியாதெனில், சரஸ்வதியின் நாயகனாகிய பிரமதேவன் சிருஷ்டித்த உலகத்திலுள்ள உயிர்கள் பிழைக்கும்படி முப்பத்திரண்டு அறங்களையும் பரிபாலித்து எந்நாளும் காக்கின்ற காமாக்ஷியம்மையுடனே ஏகாம்பரநாதர் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீகாஞ்சிபுரமென்னுந் தலமாம். இந்தத் தலத்திற்குச் சென்று ஏகாம்பரநாதரைத் தரிசித்து வணங்கித் துதிப்போர் சகல பாவங்களினின்றும் விடுபட்டுப் பேரானந்தத்தை யடைவது நிச்சயம்.

இஃதன்றி இன்னும் ஆனந்தத்தாண்டவஞ் செய்த சிவபெருமானை முற்காலத்தில் பார்வதிதேவியாரும் பிரமனும் விஷ்ணுவும் பூசித்த விரிஞ்சிபுரமென்னும் ஒருஸ்தலமுண்டு. இத்தலத்தி லெழுந்தருளியிருக்கும் சிவன் பெயர் மார்க்கசகாயராம். முன்னொருகாலத்தில் பசுபதிபாச விலக்கணங்களை விரித்துக் கூறுகின்ற பலசாஸ்திரங்களையும் உணர்ந்த சிவநாதனென்னும் ஒரு வேதிய னிருந்தான்; இவனுடைய மனைவி நயனானந்தினி யென்னும் பெயரையும், அருந்ததியுந் தொழத்தக்க கற்பையுமுடையவள்; இவ்விருவருக்கும் சிவசருமாவென்னும் ஒரு புத்திரன் பிறந்திருந்தான்; இவன் மிகவும் சிவபக்தியுடையவன்; இத்தகைய இச்சிறுபாலன் மேற்கூறிய விரிஞ்சிபுரநாதராகிய மார்க்கசகாயருக்கு ஒருதினம் அபிஷேகம் முதலியன செய்தற்பொருட்டுக் கோவிலுக்குச் சென்று பார்க்கச் சிவன் மிக்க வளர்ச்சியுடையவராய்த் தம்முடைய முடி இப்பாலனுக் கெட்டாதபடி நின்றதால் இந்தப் பிராமணச் சிறுவன், 'அந்தோ! நம்முடைய இரண்டு கரங்களாலும் இந்த மார்க்கசகாயருடைய திருமுடியைத் தொடக்கூடாதபடி இவர் மிகவும் வளர்ந்திருக்கின்றனரே! இதனால் இவருடைய சிரசில் அபிஷேகஞ் செய்தற் கேதுவில்லாமலிருக்கின்றதே; இனி நான் என் செய்வேன்?' என்று மனங்கலங்கி வருந்தினான். அப்போது மரகதவல்லியம்மையை இடப்பாகத்திலுடைய மார்க்கசகாயர் இவன் வருந்துவதற்கிரங்கி உடனே தம்முடியை வளைத்தருளினார். அங்ஙனம்

வணக்கவே சிவசருமாவென்னும் சிறுவன் சிவனருளை வியந்து அளவற்ற ஆனந்தமடைந்து அவருக்கு அபிஷேகம் முதலியன செய்து அவரருளாற் பரகதியை அடைந்தான். இத்தகைய கிருபைக்கடலாகிய மார்க்கசகாயர் எழுந்தருளியிருக்கும் இந்த விரிஞ்சிபுரமென்னுந் தலஞ்சென்று அவரைத் தரிசித்தால் பரகதி யடைதற்கு வழியுண்டாகும்.

இன்னும், எப்பொழுதும் வற்றாமற் பெருகிவருகின்ற காவிரிநதியி னிருமருங்கினும் சங்கநிதி, பதுமநிதி ஆகிய இரண்டும் பூவாகவும், தாராகவும் அமைந்து சிவனைப்பூசித்த சீகாழி, திருவையாறு, திருவிடைமருதூர், வளமிகுந்த கும்பகோணம், திருவானைக்கா, விடம் பொருந்திய கண்டத்தையுடைய மாதுருபூதேசுரர் எழுந்தருளியிருக்கின்ற திரிசிரபுரம், இரத்தினகிரி முதலிய பல தலங்கள் நிறைந்திருக்கின்றன; இந்தத் திவ்விய க்ஷேத்திரங்களின் பெருமைகளை யெல்லாம் வேதம் மெய்ம்மையாக விரித்துக் கூறுகின்றது. இவையன்றிப் பெரிய சங்குகள் முழங்குகின்ற வைகைநதிக் கரையில் சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை நடத்தியருளிய மதுரையென்னும் ஒரு தலமுண்டு; இத்தலத்தின் பெருமை எவராலும் அளவிட்டுக் கூறுதல் முடியாது. இஃதன்றித் தென்சமுத்திரக் கரையில் ஜனன துயரத்தைப் போக்கத்தக்க இராமேச்சுரமென்னும் ஒருதலமுண்டு; யுத்தத்தையே தமக்குரிய விளையாட்டாகக் கொண்டு செய்கின்ற இராமர் இத்தலத்திற் சிவனைப் பூசித்து முற்காலத்தில் இராவணனைக் கொன்றதனால் வந்தடைந்த பிரமஹத்தியைத் தீர்த்துக்கொண்டார். இத்தகைய சிறப்புக்களையுடைய இத்தலங்களிலே எவரேனும் இறந்தாலும், பிறந்தாலும், இவற்றிற் சென்று சிவனைத் தரிசித்தாலும், பரிசுத்தமாகிய சிதாகாசத்தில் நிருத்தஞ் செய்யும் மிகுந்த பிரகாச சொரூபராகிய பரமசிவனுக்கு அவருடைய திருவுள்ளங் களிக்கும்படி தூய்மையாகிய தீர்த்தத்தினால் அபிஷேகஞ் செய்தாலும், பொருள்களைச் செலவிட்டுச் சிவா



லயங் கட்டிவைத்தாலும், மலர்கள் மிகுகின்ற பூஞ்சோலைகளை உண்டாக்கினாலும், அவருக்கு உத்தமமான பரகதி யுண்டாவது நிச்சயமாம்; ஆதலால், நீங்களும் இத்தலங்களிற் சென்று சிவனை வழிபட்டுப் பரகதி யடைவீராக," என்று கூறினார்.

இவ்வாறு நந்திதேவர் கூறவே மார்க்கண்டேயர் மீண்டும் அவரை வணங்கி அவருடைய திருமுகத்தை நோக்கி, "சுவாமி! இப்போது தாம் கூறிய க்ஷேத்திரங்கள் அளவிடக் கூடாத பல தலங்களா யிருக்கின்றன; இவ்வாறு அளவிடக் கூடாமலிருக்கின்ற பல நதிகளிலும், தலங்களிலும் சென்று தேவரீர் கட்டளையிட்ட விதமாகவே தீர்த்த ஸ்நானங்கள் செய்து சிவனை வழிபடுவது, சிறப்புப்பொருந்திய தேவர்களாலும், சித்தர்களாலும், முனிவர்களாலும்கூட முடியாது; அங்ஙனம் இவர்களாலேயே முடியாதென்றால் மின்னலைப்போலத் தோன்றி விரைவி லழிந்துபோகும் அற்ப ஆயுளையுடைய மனிதருக்கு அக்காரியம் எங்ஙனம் கைகூடும்; ஒருபோதும் கைகூடாது; ஆயினும், இவர்கள் ஒருசமயம் இக்காரியத்தைச் செய்தாலும் செய்யக்கூடும்; அங்ஙனம் இவர்கள் செய்தாலும் மிருகங்கள், பக்ஷிகள், விருக்ஷங்கள் ஆகியவைகளால் இது செய்த லருமையாம். ஆதலால், புண்ணியாத்மாக்கள் மிக்க பிரயாசையுடன் ஸ்நானஞ் செய்யத்தக்க அந்நதிகளிலும், தரிசிக்கத்தக்க அத்தலங்களிலும் அநேக காலம் ஸ்நானஞ் செய்து சிவனைத் தரிசிப்பதனா லுண்டாகும் பயனை, பிரதக்ஷணஞ் செய்தல், கும்பிடுதல், தரிசித்தல் முதலியவற்றிற் கேதுவாகிய கை, கால், கண் முதலியவை இல்லாதவர்களுக்கும், விவேக சூனியருக்கும், நீசர்களுக்கும், நரகத்தில் வீழத்தக்க பாவஞ் செய்தவர்களுக்கும், மிருகங்களுக்கும், மரங்களுக்கும், மற்று முண்டான எல்லாச் சீவராசிகளுக்கும் நினைத்தமாத்திரத்தில் எளிதில் கொடுக்கத்தக்க ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தை உரைத்தருளவேண்டும்," என்று கூறினார். மற்ற முனிவர்களும் அவ்வாறே கூறினார்கள்.

எமனை ஜெயித்த பெரிய தவத்தினையுடைய மார்க்கண்டேயரும், மற்ற முனிவர்களும் மேற்கூறியவாறு சொல்லித்

துதித்துத் தாமரைமலர்போன்ற தங்களுடைய கைகளால் அந்த நந்திதேவருடைய திருவடிகளைத் தொட்டு வந்தனஞ் செய்யவே, அந்நந்திதேவர் மிக்க கிருபையை யுடையவராகி அவர்கள் விரும்பியவாறே ஒரு புண்ணியஸ்தலத்தைச் சொல்லக் கருதினவராய் அவர்களை நோக்கி, "முனிவர்களே! நீங்கள் விரும்பியபடியே எளிதில் மோக்ஷத்தைத் தரத்தக்க புண்ணிய ஸ்தலமொன்றுண்டு; அதனை உங்களுக்குக் கூறுகிறேன் கேட்பீராக," என்று சொல்லி அவர்களை உட்காரச் செய்து, பின்னர், விஷந்தங்கிய கண்டத்தையுடைய பரமசிவன் எழுந்தருளி யிருக்கப்பெற்ற அருணாசலமென்னுந் தலமே எளிதில் எல்லோருக்கும் முத்தி யளிக்கக்கூடியதென்றும், அதனை அவர்களுக்குக் கூறவேண்டுமென்றும் அத்தலத்தை மனத்திற் சிந்தித்தார். அங்ஙனம் சிந்திக்கவே அவருக்குத் தேகம் பரவசமாயிற்று; உரோமங்கள் சிலிர்த்தன; அவயவங்களெல்லாம் நடுங்கின; இரண்டு கண்களினின்றும் அருவிபோல ஆனந்தக்கண்ணீரொழுகிற்று; அதன்மேல் அவர் அதிகரித்த பக்தியுடையவராய் இருகரங்களையும் குவித்து வார்த்தைகள் தடுமாற அவ்வருணாசலத்தி லெழுந்தருளிய சிவனைத் தியானித்து, 'கங்கையைத் தரித்த சடையையுடைய சங்கரனே! அருணகிரியில் அடியார்க் கருள் செய்யும்பொருட்டெழுந்தருளியபிரபுவே! அக்கினிக்கண்ணையுடையவரே! எங்களை யாட்கொள்ளும் பெருமானே,' என்று கண்களை மூடிக்கொண்டு தோத்திரஞ்செய்து பின்னர் விழித்து மார்க்கண்டேயரை நோக்கி, "நான் முன்னே எளிதில் எல்லோருக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியதென்று சொன்ன ஸ்தலத்தின் பெருமை அளவிடக்கூடியதன்று; அதற்கேற்பட்ட நாமங்களோ அநேகம்; அத்தனை பெயர்களையும் சொல்லுதற்கு நான் சக்தியையுடையவனல்லன்; ஆயினும், அவற்றுள் சில முக்கியமான பெயர்களைக் கூறுகிறேன் கேளும்: அந்த ஸ்தலமானது, சித்திகளைக் கொடுக்கிற கௌரிநகரமென்றும், தேசுநகரமென்றும், அழகிய அருணாசலமென்றும், சிறப்புற்ற சிவலோக நகரமென்



றும், நாகரிகமிகுந்த வாயுநகரமென்றும் கூறப்படும். இன்னும், சத்தபுரிகளாகிய அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் தலங்களை ஒரு தட்டிலும், அந்த அருணாசலத்தை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தால் அருணாசலமே மிகவும் கனமுடையதாக விளங்கும். இவ்வாறு எல்லாத் தலங்களிலும் மேம்பட்டு விளங்கும் இத்தலத்திற்கு மேற்கூறிய பெயர்கள் தவிரப் பின்னும் முத்திநகரமென்றும், ஞானநகரமென்றும், முதன்மைபெற்ற தலேச்சுரமென்றும், சுத்தநகரமென்றும், தக்ஷணகைலாயமென்றும், சோணகிரியென்றும் சில பெயர்களுமுண்டு.

இன்னும், முடிவுகாலத்தி லுண்டாகும் பிரசண்டவாயுவினாலும், ஊழித்தீயாகிய வடவாமுகாக்கினியினாலும், பிரளய வெள்ளத்தினாலும், யுகமுடிவில் பெய்கின்ற சப்த மேகங்களினாலும் எவ்வித கேட்டையும் அடையாதது இத்தலமேயாகும்; சைத்திய முதலிய பிணிகளும் தீமையாகிய இடையூறுகளும் பசிவேதனையும் சேராத தலம் இதுவேயாம்; மகிமை பொருந்திய அநேகம் தவசிகளாலும், பல விஷ்ணுக்களாலும் பூசிக்கப்பட்ட தலம் இதுவேயாகும்; அந்த விஷ்ணுக்களுடைய உந்தியங்கமலங்களில் உற்பத்தியான தொண்ணூற்றாறு பிரமர்களால் பூசிக்கப்பட்ட தெய்வீகம் பொருந்திய தலமும் இதுவேயாம்.

இத்தகைய சிறப்பினையுடைய இத்தலம் இப்பொழுது புதிதாக ஏற்பட்டதன்று; இப்பூவுலகமும் மேலுலகங்களும் ஆகாயவெளியும் என்றைக் குண்டாயினவோ அன்றைக்கே இஃதுண்டாகி யிருக்கின்றது; இன்னு மிது தன்சிறப்பினாலே வேதத்தின் முடியிற் பிரகாசிப்பது. இப்புண்ணிய தலத்தில் எப்பொழுதும் கெடாததன்மையையுடைய ஒரு மலையுண்டு; அம்மலையானது, நெடிய கடலாற் சூழப்பட்ட இப்பூமியிலுள்ளவர்கள் தரிசித்து நற்பயனை யடைந்து வாழும்பொருட்டுத் தெற்குத் திக்கில் என்றும் நிலைபெற்றுப் பிரமாண்ட கோளகைவரை வளர்ந்து நிற்கின்றது.

மற்றைய தலங்களில் இருடிகளாற் பூசிக்கப்பட்ட ஆரிடலிங்கமென்றும், இராக்ஷஸர்களாலே பூசிக்கப்பட்ட இராக்கதலிங்கமென்றும், அசுரர்களாலே பூசிக்கப்பட்ட ஆசுரலிங்கமென்றும், தேவர்களாலே பூசிக்கப்பட்ட தைவிதலிங்கமென்றும், மானுடராலே பூசிக்கப்பட்ட மானுடலிங்கமென்றும் பல லிங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன; இந்த அருணாசலமென்னுந் தலத்திலே மேற்கூறிய மலையே லிங்கமாயமைந்திருக்கின்றது; இந்தமலையானது முதல் யுகமாகிய கிருதயுகத்திலே சிவப்பாகிய அக்கினி மலையாகவும், திரேதாயுகத்திலே மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்திலே மிகுந்த பிரகாசத்தையுடைய பொன்மலையாகவும், கலியுகத்திலே கல்மலையாகவும் திருவுருக்கொள்ளும். இந்த மலையே அருணாசலமென்னுந் திருப்பெயரை யுடையதாம். இஃதிருக்கும் காரணம்பற்றியே இதற் குறைவிடமாயிருக்கும் திருப்பதியும் அருணாசலமென்று கூறப்படுகின்றது.

இந்த அருணாசலமென்னும் மலையோ அளவிடக்கூடாத மகிமையையுடையது; எல்லாச் சீவராசிகளும் கருவற்றுப் போகும்படி யுகாந்தகாலத்தில் மிகுதியானமாரியைப்பொழிகின்ற மேகங்கள் ஏழென்னுங் கணக்கி லடங்கினவைகளாயில்லாமல் ஒவ்வொன்றும் கோடிக்கணக்காகப் பெருகி, ஆயிரம் வருஷம்வரை பனையின் கனிகளைப் போன்று பருத்த மழைத் துளிகளைப் பெய்தாலும் அம்மழையாற் பெருகும் ஜலப்பெருக்கெல்லாம் சிறிய அருவியாகச் சுவறி இம்மலையிலேயே அடங்கிப் போகுமல்லாமல் புறத்தில் சிறிதாவது ஜலம் வெளிப்படமாட்டாது; இன்னும் ஆதிகாலத்தில் விஷ்ணு பன்றியாகியும், பிரமன் அன்னமாகியும் இம்மலையின் அடியையும் முடியையும் தேடிக் காண முடியாதவர்களாய்த் தயங்கினார்கள்; இவர்களே இவ்வாறு அடி முடி காண முடியாத இம்மலையின் உயர்வை அளவிட்டுக் கூறுதல் என்னைப் போன்றவரால் இயலுமோ? ஒருபோதும் முடியாது.

இன்னும் இந்த மலையிலிருக்கின்ற சுனைநீரை ஆகாய கங்கையிலும் சிறப்புடையதாகக் கருதிப் பருகுதற்குச் சூரிய



னுடைய தேரிற் பூட்டிய குதிரைகள் இதனிடத்தே தாவிச் செல்லும்; இஃதன்றி வெள்ளைநிறம் பொருந்திய மேகம் இம்மலை யடிவாரத்தில் தங்க இஃது அம்மேகத்தின்மேற் பிரகாசிக்குந் தோற்றம் எப்படியிருக்குமெனில், மிகவும் அழகு பொருந்திய கைலையங்கிரியின்மேல் இம்மலையானது தங்கியிருப்பதை நிகர்க்கும். குளிர்ச்சி பொருந்திய கார்த்திகை மாதத்தில் இந்த மலையின்மேல் கிருத்திகா தீபமேற்ற அது பிரகாசிக்குந் தோற்றம் எப்படியிருக்குமெனில், பூமிதேவியினுடைய கிரீடத்தில் பதித்த இரத்தினம் பிரகாசிப்பது போன்று விளங்கும். முற்காலத்தில் விஷ்ணுவினாலும் பிரமனாலும் தேடியறிய முடியாத பரமசிவனே இந்த மலையுருவாக அமைந்திருப்பதனாலே உமைக்குத் தந்தையாகிய மலைபரசனானவன் இதனைப் பார்க்கும்போதெல்லாம், 'இத்தனைகாலம்வரை வேறு சாதியாயிருந்த நம்முடைய மருமகன் இப்போது மலையுருவாகி நம் குலத்தையே சார்ந்தான்' என்று மனமகிழ்ச்சி யடைவான். இன்னும், பன்னிரண்டு மாதங்களிலும் சூரிய சந்திரர்கள் மகாமேருவை வலஞ்செய்தல் போலவே இந்த அருணாசலத்தையும் வலமாகப் பிரதக்ஷணஞ் செய்துவருவார்கள். இங்ஙனம் சூரிய சந்திரர்களே இதனைப் பிரதக்ஷணம் செய்து வருவார்களானால் இதன் சிறப்பு என்னால் அளவிட்டுச் சொல்லக் கூடியதாமோ? அவ்வர்று இதன் சிறப்பு முழுவதையும் அளவிட்டுரைத்தல் முடியாது; ஆயினும், தெரிந்தவரை உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று விரும்பியதனால் என் புத்திக்கெட்டியவரையில் இம்மலையின் சிறப்புக்களை எடுத்துக் கூறத் தொடங்கினேன்; இன்னும் இத்தலத்தின் மகிமைகளுள் எனக்குத் தெரிந்த சிலவற்றையும் எடுத்துக் கூறுகிறேன் கேட்பீராக:

இந்த அருணாசலமென்னும் மலைக்குக் கீழ்ப்பக்கத்தில் அர்க்கமலை யென்ற ஒருமலையுண்டு. அதில் ஆயிரங் கண்களையுடைய தேவேந்திரன் தங்கியிருந்து அருணாசலேசுவரரைத் தோத்திரஞ் செய்வான். இவ்வருணகிரிக்குத் தென்பாகத்

மற்றைய தலங்களில் இருடிகளாற் பூசிக்கப்பட்ட ஆரிட லிங்கமென்றும், இராக்ஷஸர்களாலே பூசிக்கப்பட்ட இராக்கதலிங்கமென்றும், அசுரர்களாலே பூசிக்கப்பட்ட ஆசுர லிங்கமென்றும், தேவர்களாலே பூசிக்கப்பட்ட தைவித லிங்கமென்றும், மானுடராலே பூசிக்கப்பட்ட மானுடலிங்கமென்றும் பல லிங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன; இந்த அருணாசலமென்னுந் தலத்திலே மேற்கூறிய மலையே லிங்கமாயமைந்திருக்கின்றது; இந்தமலையானது முதல் யுகமாகிய கிருதயுகத்திலே சிவப்பாகிய அக்கினி மலையாகவும், திரேதாயுகத்திலே மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்திலே மிகுந்த பிரகாசத்தையுடைய பொன்மலையாகவும், கலியுகத்திலே கல்மலையாகவும் திருவுருக்கொள்ளும். இந்த மலையே அருணாசலமென்னுந் திருப்பெயரை யுடையதாம். இஃதிருக்கும் காரணம்பற்றியே இதற் குறைவிடமாயிருக்கும் திருப்பதியும் அருணாசலமென்று கூறப்படுகின்றது.

இந்த அருணாசலமென்னும் மலையோ அளவிடக்கூடாத மகிமையையுடையது; எல்லாச் சீவராசிகளும் கருவற்றுப் போகும்படி யுகாந்தகாலத்தில் மிகுதியான மாரியைப்பொழிகின்ற மேகங்கள் எழென்னுங் கணக்கி லடங்கினவைகளாயில்லாமல் ஒவ்வொன்றும் கோடிக்கணக்காகப் பெருகி, ஆயிரம் வருஷம்வரை பனையின் கனிகளைப் போன்று பருத்த மழைத் துளிகளைப் பெய்தாலும் அம்மழையாற் பெருகும் ஜலப்பெருக்கெல்லாம் சிறிய அருவியாகச் சுவறி இம்மலையிலேயே அடங்கிப் போகுமல்லாமல் புறத்தில் சிறிதாவது ஜலம் வெளிப்படமாட்டாது; இன்னும் ஆதிகாலத்தில் விஷ்ணு பன்றியாகியும், பிரமன் அன்னமாகியும் இம்மலையின் அடியையும் முடியையும் தேடிக் காண முடியாதவர்களாய்த் தயங்கினார்கள்; இவர்களே இவ்வாறு அடி முடி காண முடியாத இம்மலையின் உயர்வை அளவிட்டுக் கூறுதல் என்னைப் போன்றவரால் இயலுமோ? ஒருபோதும் முடியாது.

இன்னும் இந்த மலையி லிருக்கின்ற சுனைநீரை ஆகாய கங்கையிலும் சிறப்புடையதாகக் கருதிப் பருகுதற்குச் சூரியனுடைய தேரிற் பூட்டிய குதிரைகள் இதனிடத்தே தாவிச் செல்லும்; இஃதன்றி வெள்ளைநிறம் பொருந்திய மேகம் இம்மலை யடிவாரத்தில் தங்க இஃது அம்மேகத்தின்மேற் பிரகாசிக்குந் தோற்றம் எப்படியிருக்குமெனில், மிகவும் அழகு பொருந்திய கைலயங்கிரியின்மேல் இம்மலையானது தங்கியிருப்பதை நிகர்க்கும், குளிர்ச்சி பொருந்திய கார்த்திகை மாதத்தில் இந்த மலையின்மேல் கிருத்திகா தீபமேற்ற அது பிரகாசிக்குந் தோற்றம் எப்படியிருக்குமெனில், பூமிதேவியினுடைய கிரீடத்தில் பதித்த இரத்தினம் பிரகாசிப்பது போன்று விளங்கும். முற்காலத்தில் விஷ்ணுவினாலும் பிரமனாலும் தேடியறிய முடியாத பரமசிவனே இந்த மலையுருவாக அமைந்திருப்பதனாலே உமைக்குத் தந்தையாகிய மலையரசனானவன் இதனைப் பார்க்கும்போதெல்லாம், 'இத்தனைகாலம்வரை வேறு சாதியாயிருந்த நம்முடைய மருமகன் இப்போது மலையுருவாகி நம் குலத்தையே சார்ந்தான்' என்று மனமகிழ்ச்சி யடைவான். இன்னும், பன்னிரண்டு மாதங்களிலும் சூரிய சந்திரர்கள் மகாமேருவை வலஞ்செய்தல் போலவே இந்த அருணாசலத்தையும் வலமாகப் பிரதக்ஷிணஞ் செய்துவருவார்கள். இங்ஙனம் சூரிய சந்திரர்களே இதனைப் பிரதக்ஷிணம் செய்து வருவார்களானால் இதன் சிறப்பு என்னால் அளவிட்டுச் சொல்லக் கூடியதாமோ? அவ்வாறு இதன் சிறப்பு முழுவதையும் அளவிட்டுரைத்தல் முடியாது; ஆயினும், தெரிந்தவரை உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று விரும்பியதனால் என் புத்திக்கெட்டியவரையில் இம்மலையின் சிறப்புக்களை எடுத்துக் கூறத் தொடங்கினேன்; இன்னும் இத்தலத்தின் மகிமைகளுள் எனக்குத் தெரிந்த சிலவற்றையும் எடுத்துக் கூறுகிறேன் கேட்பீராக:



இந்த அருணாசலமென்னும் மலைக்குக் கீழ்ப்பக்கத்தில் அர்க்கமலை யென்ற ஒருமலையுண்டு. அதில் ஆயிரங் கண்களையுடைய தேவேந்திரன் தங்கியிருந்து அருணாசலேசுவரரைத் தோத்திரஞ் செய்வான். இவ்வருணகிரிக்குத் தென்பாகத்

தில் தெய்வமலை யென்னும் ஒருமலை யிருக்கின்றது; அதில் சிவந்த கண்களையுடைய யமன் தங்கியிருந்து மேற்கூறிய சுவாமியைத் தோத்திரஞ்செய்வான். இன்னும் இவ்வருணாசலத்திற்கு மேற்பாகத்தில் தண்டமலையென்னும் ஒரு மலையுண்டு; இதில் மகர வாகனத்தி லேறுகின்ற வருணராஜன் தன்னுடைய சிவந்த கைகளைக் கூப்பிக்கொண்டு தங்கியிருந்து இவ்வருணையை நோக்கி வணங்குவான். இஃதன்றி இதற்கு வடக்குப்பக்கத்தில் சூலமலை யென்னும் ஒரு மலையுண்டு; இதிலே எல்லாராலுங் கொண்டாடப்பட்ட குபேரன் தங்கியிருந்துகொண்டு சிவபெருமானைத் துதிசெய்வான். இவையன்றி இன்னும் மற்ற நான்கு திக்குகளிலும் நான்கு மலைகளிருக்கின்றன; அவைகளில் வாயு, அக்கினி, ஈசானன், நிருதி ஆகிய நால்வரும் தங்கியிருந்துகொண்டு அருணாசலநாதனை வணங்குவார்கள். இன்னும் அவைகளைச் சுற்றிலும் பல மலைக ளிருக்கின்றன; அவைகளி லெல்லாம் மற்றத் தேவர்களும், சித்தர்களும், சிறப்புப்பொருந்திய அஷ்டவசுக்களும் இருந்துகொண்டு அருணாசலக் கடவுளைத் தோத்திரஞ் செய்வார்கள்.

இன்னும், தனக்குத்தானே நிகரன்றி வேறு நிகரில்லாத இந்த அருணாசலமென்னும் புண்ணிய தலத்தில் உலகங்களுக்கெல்லாம் தாயாகிய பார்வதிதேவியார் அரிதாகிய தவத்தைச் செய்து அத்தவமகிமையால் பரமசிவனுடைய இடப்பாகத்திற் சேர்ந்தாள். இஃதன்றி மந்திரம், புவனம், தத்துவம் ஆகியவைகளினுருவமாக விளங்கும் இந்த அருணாசலத்தின் அடி முடிகளை விஷ்ணுவும் பிரமனும் பன்றியாகவும், அன்னமாகவும் வடிவெடுத்துத் தேடி அவற்றை அறியமுடியாமையால் தங்களுக்கேற்பட்டிருந்த கர்வம் நீங்கினார்கள்; மிகுந்த கீர்த்தியைப்பெற்ற வச்சிராங்கதபாண்டியன் இவ்வருணாசலத்தைப் பிரதக்ஷிணம் செய்து அதனாலே தன்னுடைய பாவத்தைப் போக்கித் தன்னைக் குற்றமற்றவனாக்கிக்கொண்டான். இவனன்றிப் பெருமை பொருந்திய



கலாதரன், காந்திசாலி ஆகிய இருவரும் இந்தத் தலத்தை வலம் வந்து மோக்ஷமடைந்தார்கள். இன்னும் இவர்களைப் போலவே அநேகம் பேர்கள் இந்தப் புண்ணிய ஸ்தலமாகிய அருணாசலத்தை நினைத்தும், ஆசையோடு தோத்திரஞ் செய்தும், இதன் சிறப்பைக் காதாற் கேட்டும், இதனைத் தரிசித்தும், பாதங்களாலே பிரதக்ஷிணஞ் செய்தும், இத்தலத்திலே நீதிபொருந்திய வேதமார்க்கத்தை யனுசரித்துக்கொண்டிருந்தும், இத்தலத்திலுள்ள மகத்துவம் பொருந்திய தீர்த்தங்களில் முழுகியும், இத்தலத்தில் நற்கருமங்களைச் செய்தும், சோதிசொரூபமாகிய சிவனுடைய பாதங்களைத் தொழுதும், சிவனுக்குத் திருப்பணிசெய்தும், நிலையான மோக்ஷத்தை யடைந்திருக்கின்றார்கள்.

இத்தகைய இவ்வருணாசலத்தலம் தமிழ்நாட்டி லிருக்கின்றது; இப்பதிக்குப் பக்கங்களில் பெண்ணை, செய்யாறு, கமலையென்னும் மூன்று நதிகளும் ஓடுகின்றன; இவை இப்பதிக்கு இடைகலை, பிங்கலை, சுழிமுனை யென்னும் மூன்று நாடிகளுமாம். இந்நதிகளில் ஸ்நானஞ்செய்தால் அளவற்ற நன்மையுண்டாகும், இன்னும் முப்பத்துமுக்கோடி தேவர்களும், முனிவர்களும் இந்த அருணாசலமென்னுந் தலத்திலே தவஞ் செய்வார்கள்; இதற்கு நிகரான தலம் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலு மில்லை," என்று கூறினார்.

இவ்வாறு சிவபக்தியிற் சோர்வில்லாத நந்திதேவர் அருணாசலத்தின் மான்மியத்தைக் கூறியவுடனே மார்க்கண்டேயர் முதலியோர் பக்திமேலிட்டு மிகுந்த சந்தோஷத்தை யடைந்தார்கள். ஆயினும், எல்லாத் தலங்களிலும் இவ்வருணாசலத் தலம் மேன்மையானதென்று சொன்னதற்குக் காரணத்தை அறியாமையினாலே அதனைத் தெரிந்துகொள்ள விரும்பி அவர்களுள் மார்க்கண்டேய முனிவர் மீண்டும் நந்திதேவரை நோக்கி, "சுவாமி! இப்போது மற்ற எல்லாத் தலங்களுக்குஞ் சென்று தீர்த்தமாடிப் பிரயாசையுடன் சிவனைப் பூசிப்பதாலும், சிதம்பரத்தைத் தரிசனஞ் செய்வதா

னும், காசியிலே தேகத்தைவிடுவதாலும், சிறப்புள்ள திருவாரூரிலே பிறப்பதாலும்; பெருமையையுடைய இவ்வருணாசலத்தை நினைப்பதாலும் முத்தி கிடைக்குமென்று இந்தத் தலத்தை எல்லாத் தலங்களினும் உயர்வுடையதாகக் கூறினீர்; இதற்குக் காரணந் தெரியவில்லை; ஆதலால், அதனைக் கூறியருளவேண்டும்'' என்றுரைத்தார்.

இதைக் கேட்டவுடனே நந்திதேவர் மார்க்கண்டேயரை நோக்கி, ''முனிவரே! எல்லாத் தலங்களினும் இத்தலம் உயர்வானதற்குக் காரணத்தை உம்முடைய விருப்பத்தின்படி கூறுகின்றேன் கேட்பீராக: உலகத்தில் ஒவ்வொருவருக்கும் நினைத்தபடி உயர்வான ஜென்மத்தை யடைதலும், நல்ல ஸ்தலத்தில் உயிர்விடுதலும், நல்ல க்ஷேத்திரத்தில் பிறத்தலும் அருமையான காரியங்களாம். சிலர் தங்கள் தங்கள் வினைப்பயனுக்குத் தக்கபடி தங்கள் தங்களுக்கமைந்த விடங்களில் பக்ஷிஜாதிகளாகவும், சிலர் மிருகங்களாகவும், சிலர் மரம் செடி முதலிய தாவரவஸ்துக்களாகவும், கூன் குருடு சப்பாணி முதலியவைகளையுடைய மனிதஜன்மமாகவும், சிலர் அங்கஹீனமில்லாத மனித ஜன்மமாகவும் பிறப்பார்கள். மனிதருடைய பிறப்பின் விதம் இப்படியிருப்பதால் சிதம்பரம் தரிசித்தமாத்திரத்தில் முத்தியை அளிக்கக்கூடியதாயிருந்தாலும் அதனைத் தரிசித்தல் நல்ல நிலைமையிலுள்ள சிலர்க்கு மாத்திரம் அமையுமேயன்றி மற்றையர்க் கமையாது; காசி, தன்னிடம் தேகத்தை விட்டவர்க்கு முத்தியை யளிப்பதாயிருந்தாலும் எல்லோரும் அங்குத் தேகத்தை விடுதல் அருமையாம்; திருவாரூர், தன்னிடம் பிறந்தவர்க்கு முத்தியைக்கொடுப்பதாயிருந்தாலும் எல்லோரும் அங்குப் பிறத்தல் அருமையாம். ஆதலால், எத்தகையரும் இருக்குமிடத்திலிருந்தபடியே நினைத்தமாத்திரத்தில் அவர்களுக்கு நற்பதவியைக்கொடுக்குமாறு பரமசிவக்கடவுள் இத்தலத்தை யேற்படுத்தினார். ஆகையால், இத்தலம் நெடுந்தூரத்திலிருப்பவர்களுக்கும் நினைத்தமாத்திரத்தில் முத்தியை அளிக்கின்றது. அன்றியும், இது,



ஒருபெண் தன் கணவனுக்கன்றி வேறொருவனுக்குப் பெற்ற குண்டகர்களுக்கும், பாவிகளுக்கும், விதவை பெற்ற கோளகருக்கும், நீசருக்கும், கொலை செய்கிறவர்களுக்குங்கூட நினைத்தமாத்திரத்தில் முத்தியை யளிக்கும். இவர்களுக்கே இங்ஙனம் இது முத்திகொடுக்குமென்றால் இத்தலத்திற் பிறக்கும் மிருகங்கள், பக்ஷிகள், தாவரங்கள் முதலியவைகளுக்கு முத்தியளிக்குமென்பதைப்பற்றிக் கூறவேண்டியதில்லை; இன்னும், இத்தலத்திலிருக்கின்ற கற்களெல்லாம் சிவலிங்கங்களானபடியினாலே இது சிவலோகமாம்; இதிலிருக்கின்ற விருக்ஷங்களெல்லாம் கற்பகவிருக்ஷமாய்; இதிலிருக்கின்ற நீரெல்லாம் சிவனுடையசடையிலிருக்கின்ற கங்காஜலமாம்; இத்தலத்திலுள்ளவர்கள் சாப்பிடுகிற உணவுகளெல்லாம் தேவாமிர்தமாம்; இத்தலத்தில் சஞ்சரித்தல் பூமிப்பிரதக்ஷணஞ் செய்ததற்கு நிகராம்; இவ்வூரில் மனிதராற் பேசப்படும் வார்த்தைகளெல்லாம் வேத வாக்கியங்களாம்; இத்தலத்தில் நித்திரை செய்தல் நிஷ்டைகூடிச் சமாதியிலிருப்பதற்கு நிகராம்.

இவையன்றி, காருகபத்தியம், ஆகவனீயம், தக்கிணாக்கினி என்னும் மூன்றக்கினிகளை வளர்ப்பவர்களும்; இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையுணர்ந்தவர்களும்; பிரமயாகம், தேவயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானுடயாகம் என்னும் ஐவகை யாகங்களையும் செய்பவர்களும்; உயர்ந்த தவங்களைச் செய்தவர்களும், மேலான அறங்களைச் செய்தவர்களும்; இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அஷ்டாங்கயோகங்களைச் செய்பவர்களும், இன்னும் மேலான நற்கருமங்களைச் செய்பவர்களும் இவ்வருணாசலத்தை நினையாவிட்டால் அவர்களுக்கு எவ்விதத்தாலும் முத்தியில்லை; ஆகையினாற்றான் தேவர்களாகிச் சுவர்க்கலோகத்திலிருந்தவர்களும் ஞானமுள்ள மானிடராகப் பூமியிற் பிறந்து இவ்வருணாசலத்தைத் தியானித்து முடிவில் முத்தியை அடைகின்றார்கள்.

இன்னும், சிறப்பால் நிகரற்ற சுவர்க்கலோகத்தில் நரை, திரை, மூப்பு ஆகியவை உண்டாகாதபடி அமிர்தத்தை உண்டிருப்பவர்களாகிய தேவர்களும், போகத்தை யனுபவித்தற்குரிய அந்தச் சுவர்க்க முதலிய பலவிடங்களைத் தனித்தனியாள்கின்ற தேவேந்திரன் முதலிய திக்குப்பாலகரும், 'அருணாசலதலத்தில் கிருமியாகவேனும் பிறப்பது சுவர்க்கவின்பத்தை யனுபவித்தலைப் பார்க்கினும் மேலாம்,' என்று கருதி அவ்விதமே இவ்வருணையம்பதியில் பிறக்க விரும்புவார்கள். நூறுயாகஞ் செய்தவர்களுக்கல்லாமல் மற்றையர்க்கு இந்தத் தலத்தில் பிறப்பது அமையமாட்டாது; இன்னும், அவ்வாறு யாகஞ் செய்தவர்களுள்ளும் சிவபெருமானுடைய கிருபையைப் பெற்றவர்களே இத்தலத்திற் பிறப்பார்கள்; சிவனருளைப் பெறுதார் எத்தகையராயினும் இப்பதியிற் பிறக்கமாட்டார்கள். இது நிற்க, சொற்ப விலையுள்ள இரும்பிலும், செம்பிலும், வெண்கலத்திலும், வெள்ளியிலும், வெள்ளைப் பொன்னிலும் பதிக்கப்பட்ட மாணிக்கத்தைப்போல மற்றைத் தலங்களிலுள்ள பரமசிவன் எழுந்தருளியிருப்பர்; இந்த அருணாசலமென்னும் வளம்பொருந்திய தலத்திலோ பொன்னாற் செய்யப்பட்ட தகட்டிற் பதிக்கப்பட்ட இரத்தினம்போல பிரகாசிப்பார்; இக்காரணங்களினாலேயே இத்தலம் மற்ற எல்லாத் தலங்களினும் மேற்பட்டதாகும்.

மார்க்கண்டேயரே! இன்னும் கேளும்: கண்களினாலே முகம் பிரகாசத்தை யடையும்; முகத்தினாலே கண்கள் பிரகாசிக்கும்; இவ்விரண்டின் சேர்க்கையினாலே தேகம் அழகு பெற்று விளங்கும்; இவைபோலவே பரமசிவன் தங்கியிருப்பதனாலே இவ்வருணாசலம் சிறப்படைந்து விளங்கும்; இந்த அருணாசலத்தினால் சிவபெருமானும் சிறப்படைந்து விளங்குவார்; இத்தலத்தினாலும், இதி லெழுந்தருளியிருக்கும் சிவனாலும் எண்ணிக்கையில்லாத மற்ற எல்லா க்ஷேத்திரங்களும் சிறப்படைந்து விளங்கும். எல்லாத் தலங்களும் சரீரமாய்; இவ்வருணாசலத் தலம் அவற்றிற்கு முகமாய்; இதி



லெழுந்தருளியிருக்கும் சுவாமி கண்ணாவர். ஒரு கொடியினது வேரில் நீர் வார்த்தால் அவ்வேரின்மூலம் அக்கொடியும், அதிலுள்ள மணமிருந்த மலர்களும், இலைகளும் அந்நீரைக் கிரகித்துக் குளிர்ச்சியடையும். அதுபோல் இவ்வருணாசலத் தலத்திலே சுவாமிக்கு எவ்வளவாவது குற்றமில்லாத பூசை நடந்தால் காசி முதலாகிய எல்லாத் தலங்களினும் மேன்மையான பூசை நடந்ததாகும்; இத் திருவண்ணாமலையில் பூசை நடவாவிட்டால் மற்றைத் தலங்களில் எவ்வளவு பூசை நடப்பினும் பிரயோசன மில்லையாம்.

இன்னும் உலகத்தார் போற்றுகின்ற இவ்வருணாசலத் தலத்தினும் உயர்ந்தவைகளாக வேறு தலங்களை நினைத்து இதை நாடாமல் அவற்றை நாடி நடந்தவர்கள், எத்தகைய தானம் தர்மம் தவங்களைச் செய்தவர்களா யிருந்தாலும் அத்தானங்களாலும், தவங்களாலும், தருமங்களாலும் அவர்களுக்கு ஒரு பிரயோசனமு முண்டாகமாட்டாது; அவர்கள் நற்குலத்திற் பிறந்தவர்களா யிருந்தாலும் நீசராவார்கள்; நற்குணங்களை யுடையவர்களானாலும் கொடியகுணங்களை யுடையவராவார்கள்; அவர்கள் உயிரோடிருந்தாலும் இறந்தவர்களாவார்கள்; ஒருவர் இவ்வருணாசலத்திற்கு வேறு தலங்களை நிகராகச் சொன்னாலும் மேற்கூறிய தோஷங்களையெல்லா மடைவர்,'' என்று கூறியருளினர்.

*முதலாவது :*

திருநகரச் சருக்கம் முற்றுப்பெற்றது.

---

இரண்டாவது

## திருமலைச் சருக்கம்.

மான், மழு, உடைவாள் ஆகியவைகளைத் தரித்த நந்திதேவர் மேற்கூறியபடி அருணாசலத்தின் பெருமையைச் சொல்லியவுடனே மார்க்கண்டேயர் அதனைக்கேட்டு ஆனந்த பரவசமடைந்து, தேகம் நெக்குவிட்டுருகிச் சிரசின்மேற்

ணைகளைக் கூப்பிக்கொண்டு அந்நந்திதேவருக்குப் பன்முறை நமஸ்காரஞ் செய்து மீண்டும் அவரை நோக்கி, "எம்மை ஆட்கொண்டவரே! அடியேனுக் கருள்செய்த நந்திதேவரே! அடியார்க் கெளியவரே! திருவண்ணாமலை யென்னுந் திருப்பதியின் மகிமைகளையெல்லாம் நீர் சொல்ல அடியேன் கேட்டு அளவற்ற ஆனந்த மடைந்தேன்; இனி, இத்தகைய மகிமை வாய்ந்த தலத்தில் பரமசிவன் அக்கினி சொரூபமாகத் திருவுருவங் கொண்டதையும், அதன் பின்பு மலையுருவானதையும், அந்த மலையின் அடியையும் முடியையும் தேடி அறியக் கூடாமல் விஷ்ணுவும் பிரமாவும் வருத்தமடைந்த விதத்தையும், பின்னர்ச் சிவபெருமான் அவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்தவிதத்தையுங் கேட்கவிருப்புடையனாயிருக்கின்றேன்; ஆதலின், இவ் விஷயங்களையும் எனக்குக் கூறியருளவேண்டும்," என்று மிகுந்த பக்தியோடு கேட்டுக்கொண்டனர்.

மார்க்கண்டேயர் இவ்வாறு கூறியவுடனே நந்திதேவர் அவருடைய விருப்பப்படியே மேற்கூறிய விஷயங்களைச் சொல்வதற் கிசைந்து அவரை நோக்கி, "மார்க்கண்டேயரே! ஒருவன் பஞ்சமா பாதகங்களைச் செய்தற் பொருட்டாவது இந்த அருணாசலத் தலத்தை நினைப்பானாயின், அங்ஙனம் நினைத்ததே உயர்ந்த புண்ணியமாகி அதனால், அவனுக்கு நிலையான முத்தி யுண்டாகுமென்று வேதங்கள் முறையிடுகின்றன; இப்பேர்ப்பட்டவர்களுக்கே நினைத்த விசேஷத்தினால் முத்தி கிடைக்கும் பக்ஷத்தில் அன்போடு நல்ல சொற்களினால் இதனை ஸ்தோத்திரஞ் செய்பவர்களுக்கும் இதன் மகிமையைக் கேட்பவர்க்கும் முத்தியுண்டாகு மென்பதில் என்னதடை? ஆதலால், இதன் மகிமையை நீர் பக்தியோடு கேட்க விரும்புவதனால் உமக்கு என்று மழியாத முத்தி யுண்டாவது திண்ணம்; இதனை உமக்குச் சொல்வதனால் எனக்கும் நன்மையுண்டாம். ஆதலால், உம்முடைய விருப்பப் படியே துக்கத்தையும் மோகத்தையும் நீக்குகின்ற சிவபெருமான் ஒப்பற்ற பெரிய சோதிவடிவமாய்ப் பிரமா விஷ்ணு



ஆகிய இருவர்களின்பொருட்டு ஆகாயத்தை அளாவி மலையாக வளர்ந்த விதத்தையும், யாவருக்கும் சுகத்தைக் கொடுக்கத்தக்க இலிங்கமாகத் திருவுருக்கொண்ட தன்மையையும், இன்னும் மற்ற விஷயங்களையும் எனக்குத் தெரிந்தவரை கூறுகிறேன் கேட்பீராக:.

சர்வசங்கார காலத்தில் கிரமப்படியே சகல வுயிர்களும் பிரமனிடத்தி லொடுங்க, அந்தப் பிரமதேவர் விஷ்ணுவினிடத்தி லொடுங்குவார்; அந்த விஷ்ணு உருத்திரனிடத்தி லொடுங்குவார்; அந்த உருத்திரன் மகேசுரனிடத்தில் ஒடுங்குவார்; அந்த மகேசுரன் சதாசிவனிடத்தி லொடுங்குவார்; அந்தச் சதாசிவன் விந்துவினிடத்தி லொடுங்குவார்; விந்து நாதத்திலொடுங்கும்; அந்த நாதம் சத்தியினிடத்தி லொடுங்கும்; அந்தச் சத்தி பரமசிவத்தி லொடுங்கும்; அந்தப் பரமசிவம் எல்லாங் கடந்த தத்துவமுடிவிலே நிற்கும். இஃது ஒடுக்கத்தின் கிரமமாம்.

இப்படி எல்லாம் ஒடுங்கிய ஒருகாலத்தில் தனியாய் நின்ற பரமசிவம் உலகமுண்டாகவேண்டுமென்று திருவுளங் கொள்ள, அப்போது அச்சிவனிடத்திற் றோன்றிய பராசத்தியினிடத்தில் குடிலையென்னும் சத்தி தோன்றியது; அதினின்றும் பெருமைபமைந்த மற்றத் தத்துவங்களும் முறையே உண்டாயின; பின்னர் பஞ்சகிருத்தியங்களுக்குமுரிய பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் ஆகியவர்கள் முன் ஒடுங்கின முறைப்படியே உண்டானார்கள். பின்னர் விஷ்ணுவின் புத்திரராகிய பிரமதேவர் உலகத்தைச் சிருஷ்டி செய்ய மனத்தி லெண்ணினார்.

அப்படி அந்தப் பிரமதேவர் நினைத்தவுடனே மரீசி, அங்கிரர், புலத்தியர், புலகர், கிருது, அத்திரி, சனபதி என்ற எழு ரிஷிகளும் பிறந்தார்கள். தக்கன் அவருடைய வலக்காற் பெருவிரலிற் பிறந்தான். பிருகு மார்பினிடத்திற் பிறந்தான். தருமதேவதை முகத்திற் பிறந்தது. மேற்கூறிய படி பிரமனிடத்திற் பிறந்த பிள்ளைகள் எழுவரில் மரீசியி

னிடத்திற் காசிபர் பிறந்தார். மேற்கூறிய தக்கன் அறுபது பெண்களைப் பெற்று அவர்களுட் பதின்மூன்று பெண்களைக் காசிபருக்கு விவாகஞ்செய்து கொடுத்தான்; அந்தப் பெண்களுள் மூத்தவளாகிய அதிதிவயிற்றில் முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறந்தார்கள். மேற்கூறியபடி காசிபருக்கு மனைவியான பதின்மூன்று பெண்கள் தவிர மற்றவர்களுள் பத்துப்பேர் தருமனுக்கும், இருபத்தேழுபேர் சந்திரனுக்கும், நால்வர் அரிட்டநேமிக்கும், இருவர் வெகுபுத்திரனுக்கும், இருவர் அங்கிரசுக்கும், இருவர் பிருசாசுவனுக்கும் மனைவியரானார்கள். மேற்கூறியவாறு காசிபர் மனைவியர் பதின்மூன்று பேர்களுள் மூத்தவளாகிய அதிதியினிடம் முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறந்தபின் அந்த அதிதிக்கு இளையவளாகிய சிறப்புற்ற திதியென்பவள் இரணியன், இரணியாக்கன் என்னும் இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். இந்த இருவரில் இரணியனென்பவன், பிரகலாதன், அநுகிலாதன், கிலாதன், சங்கிலாதன் என்னும் நான்கு பிள்ளைகளைப் பெற்றான். இந்த நால்வருள்ளும் பிரகலாதனென்பவன் சிபி, பாட்கலன், விரோசனன் என்னும் மூன்று பிள்ளைகளைப் பெற்றான். இந்த மூவரில் விரோசனனென்பவன் மாவலி யென்பவனைப் பெற்றான். இந்த மாவலி வாணாசுரனைப் பெற்றான். இந்த வாணாசுரன் பரமசிவனைப் பூஜித்து பிரமன் தொழும்படியான உயர்ந்த வாழ்வைப் பெற்றான்.

மலைகளினுடைய சிறகை யறுத்த தேவேந்திரனுக்கு ஆயுதமாம்பொருட்டுத் தம்முடைய முதுகெலும்பைக் கொடுத்துத் தேகத்தை விட்டவராகிய ததீசிமுனிவர், சம்பரன் முதலிய பத்துப் பிள்ளைகளைப் பெற்றார். அந்தப் பத்துப்பேரில் சிங்கிகை யென்பவள் இராகு முதலிய நான்கு பிள்ளைகளைப் பெற்றாள். அவளுக்கிளையவள் மூன்று அசுரர்களைப் பெற்றாள். காலை யென்பவள் காலகேயர்கள் அறுவரையும் பெற்றாள். வினதை யென்பவள் மிகவும் நீண்ட சிறகுகளையுடைய கருடன், அருணன் ஆகியவர்களோடுகூட நான்கு



பிள்ளைகளைப் பெற்றாள். விடத்தை நிகர்த்த கண்களையுடைய கத்துரு என்பவள் பாம்புகளெல்லாவற்றையும் பெற்றாள். அரிட்டை யென்பவளிடத்தில் அரம்பை, ஊர்வசி முதலிய பெண்கள் பிறந்தார்கள். இளையென்பவள் பதினாறுவகையாகிய கந்தருவர்களைப் பெற்றாள். வாள்போன்ற கண்களையுடைய கபிலையினிடத்தில் பத்துப் பிள்ளைகள் பிறந்தார்கள். இன்னும் அங்கிரர், சனபதி என்கின்ற இருவரும் காந்தருவரைப் பெற்றார்கள். அத்திரியென்பவர் சூரியன், சந்திரன் ஆகிய இருவரையும் பெற்றார். புலத்தியர்: இராக்கதர், வானரர், கின்னரர் ஆகியவர்களைப் பெற்றார். புலகர் என்பவர் கிம்புருடரையும், மிருகங்களையும் பெற்றார். சனபதி யென்பவர் பின்னும் அஷ்டவசுக்களைப் பெற்றார். பிருகு என்பவர் கவியென்பவனையும், சவுனகரையும் பெற்றார். இவ்விருவரைப் பெற்றதுமல்லாமல் பின்னும் இலக்குமியையும் பெற்றார். இவர்களுள் கவியென்பவர் சுக்கிரனைப்பெற்றார். சூரியன் ஒருகாலத்தில் தன் மனைவியைச் சேரப் பிரயத்தனப்பட்டபோது அவள் அதற்குப் பொருந்தாமல் பெண்குதிரையாக வடிவெடுத் தோடினாள்; அப்போது சூரியன் ஆண்குதிரையாகி அவளைத் துரத்தினான்; அவ்வாறு துரத்தும்போது அவள் ஓரிடத்தில் திரும்பிப் பார்த்தாள்; அப்போது சூரியன் அவளுடைய இரண்டு நாசிகளிலும் நாதத்தைவிட அதனால் அசுவினிதேவர்களிருவரும் பிறந்தார்கள்; அதன்பின்பு ஸ்தாவர சங்கமங்களாகிய எல்லாம் பற்பல விதங்களாக வுண்டாயின.

இவ்வாறு தேவர்கள் முதலிய யாவரும், மற்ற எல்லாப் பிராணிகளு முண்டாகவே பிரமதேவன், "இந்த வுலகங்களெல்லாம் நம்முடைய சிருஷ்டியினாலல்லவோ உண்டாயின?" என்று மிக்க அகங்காரங்கொண்டு, அவ்வகங்காரத்தினால் வைகுந்தத்திற்கு வலிதிற் சென்று, வண்டுகள் சூழ்ந்த துளபமாலையையணிந்த விஷ்ணுவோடு பகைகொண்டு அந்த விஷ்ணுவை நோக்கி, "விஷ்ணுவே! பதினாலுலகங்களையும்

கரிய மேகங்களையும், சத்த சமுத்திரங்களையும், உயர்வாகிய சக்கரகுல பர்வதங்களையும், மனத்தினாற் படைத்து, இப்பொழுது வாழ்கின்ற எல்லாவுயிர்களையும் உண்டாக்கும் பொருட்டு வலிமையுடைய மரீசி முதலிய இருடிகளையும் பெற்றேன்; பிருகஸ்பதியுடனே மற்ற எல்லாத் தேவர்களும் சந்திரனும், சூரியனும், அசுரர்களும், கந்தருவர்களும், கிம்புருடர்களும், சித்தர்களும், சனகாதர்களும், தேவேந்திரன் முதலிய திக்குப்பாலகர் எண்மரும் என்னுடைய பிள்ளைகள் வழியிற் றோன்றிய பிள்ளைகளா யிருக்கின்றார்கள்; இவர்களெல்லோரும் என்னாலல்லவோ உண்டானார்கள்; ஆதலால் இனி நீ, 'சகலத்துக்கும் நானே கர்த்தா,' என்று கருதும் எண்ணத்தையும், 'என்னுடைய பிள்ளைதான் பிரமன்,' என்பதையும் மறந்துவிடு; உலகத்தை இரக்ஷிப்பதனால் நீ அகங்காரங்கொள்ளக்கூடும்; அந்த அகங்காரத்தையும் விட்டுவிடு; நான் உலகத்தைப் படைக்காவிட்டால் நீ எவ்வாறு உயிர்களைக் காப்பாற்றுவாய்? சுவரில்லாமல் சித்திரமெழுதுவனுண்டோ? நீ ஏதேனும் அகங்காரங் கொள்வாயானால் உன்னை நீக்கிவிட்டு இரக்ஷிக்குந் தொழிலுக்கு வேறொருவனை நியமித்துவிடுவேன்; இன்னும் நீ ஏதேனும் என்னிடம் வீரம் பேசுவாயானால் என்னுடைய புத்திரர்களும் பௌத்திரர்களுமாகிய தேவர் கூட்டங்களை யேவி உன்னைக் கொல்லும்படிச் செய்வேன்; அங்ஙனம் அவர்கள் வளைந்து கொள்வதற்குமுன் என் முன்னே நில்லாமலும் ஒன்றும் பேசாமலும் திருப்பாற்கடலுக்குள்ளே குதித்து மறைந்து கொள்வாயாக; ஞானசொரூபியாகிய பிருகு முனிவரிட்ட சாபத்தினாலே நீ பத்து முறை பூமியிற் பிறந்தாய்; நீ அவ்வாறு பிறந்ததை நன்றாக ஆராய்ந்தறியவில்லையோ? நீ அவ்வாறு பத்துமுறை பிறந்தபோதெல்லாம் நெடியோனாகிய உன்னுடைய உடலைப் படைத்துப் படைத்து என் கைகள் காய்ப்பேறிக் கறுத்துப்போயின; ஏ விஷ்ணுவே! இன்னும் நீ, 'நம்முடைய நாபிக்கமலத்திற்றான் பிரமன் தோன்றினான்,' என்று எனக்கு நிந்தனை வரும்படியாக உன்னைப்பற்றிப்



புகழ்ந்து சொல்லிக்கொள்ளாதே; நான் அவ்வாறு உன்னுடைய நாபிக்கமலத்தினின்றும் பிறந்ததனால் உனக்கொரு பெருமையு மில்லை; அதனால் நீ எனக்குத் தந்தையாகவுமாட்டாய்; ஆதிகாலத்தில் நீ ஒரு தூணினிடத்திலே பிறந்தாயே; அவ்வாறு பிறந்ததனால் அந்தத் தூணுக்கேதேனும் பெருமையுண்டா? அத்தூணுனக்குத் தந்தையாகுமா? அவ்வாறு அந்தத் தூண் உனக்குத் தந்தையாகும்பக்ஷத்தில் நீயும் எனக்குத் தந்தையாவாய்; செந்நிறம் பொருந்திய நெருப்பானது மூங்கிலினிடத்திலிருந்துண்டாகின்றது; அவ்வாறுண்டாயினும் அம்மூங்கிலின் தாழ்மையை நோக்கி அதனை அந்நெருப்பே எரித்தழித்துவிடுகின்றது; அதுபோல நானுன்னிடத்தில் பிறந்திருந்தாலும் உன்னுடைய தாழ்ந்த நிலைமையை உத்தேசித்து உன்னை நானே அழித்துவிடுவேன்,” என்று கூறினான்.

பிரமன் இவ்வாறு கூறவே விஷ்ணு இந்த வார்த்தைகளைக் கேட்டு, வேலாயுதத்தைப் பழுக்கக் காய்ச்சி இரண்டு செவிகளிலும் புகவிட்டாற்போல வேதனையடைந்து மிக்க கோபங்கொண்டு புகை யெழும்படியாகவிழித்துப் புன்னகை கொண்டு, 'இந்தப் பிரமனுக்கு எதனால் இவ்வளவு அகங்காரமுண்டாயிற்று,' என்று ஆலோசித்துப் பின்னர் அவனிடத்திற் சிலவார்த்தைகள் கூறத்தொடங்கினவராய் அவனை நோக்கி, “பிரமனே! நீ வந்த வழியின் உயர்வையும் இழிவாகக் கருதிவிட்டாய்; என்னுடைய நாபியை உன்னுடைய தாயென்று நினைத்து அதனிடத்து விசுவாசம் வைத்தாயில்லை; என்னையும் தந்தையென்ன மதித்தாயில்லை; அன்றியும் என்னைப் பலவாறு நிந்திக்கவும் தலைப்பட்டுவிட்டாய்; உலகத்தில் தந்தைகளா யிருப்பவர்கள் பிள்ளைகள் செய்த குற்றத்தைப் பிழைபார்க்கக்கருதமாட்டார்களென்று கருதி நீ இவ்வாறு பேசினையோ! இது தகாது; நீ பிள்ளையாயிருந்தாலும் இனிமேல் உன்னாற் செய்யப்படும் குற்றங்களை நான் பொறுக்கமாட்டேன்; கோபமிகுந்த மதுவும், யானையைப்போன்ற

வலிமையையுடைய கடவுளும் எனக்குப் பிள்ளைகளா யிருக்கும் அவர்கள் என்னை யிகழ்ந்து என்னோடெதிர்த்த படியினாலே இரக்கமின்றி அவர்களை நான் உடனே கொன்றுவிட்டேன்; எவர்களா யிருந்தாலும் குற்றஞ்செய்தவர்களைத் தண்டிக்காம லிருத்தல் கூடாது; தேகத்தில் ஒருகட்டி உண்டானால் உடனே அதனை யறுத்தெறிந்து உலகத்திலுள்ளவர்கள் சௌக்கியப்படுத்திக் கொள்வார்கள்; அதைப்போல் ஒருவன் தன்னுடைய பிள்ளை தோஷமுடையவனா யிருக்கக்கண்டால்அவனை உடனே நாசஞ்செய்து தன் மனக்கவலையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்; ஆதலால், நீ இனிக் குற்றஞ் செய்வாயானால்உன்னைஉடனேநாசப்படுத்திவிடுவேன்;ஏ பயித்தியக்காரனாகிய பிரமனே! நீ என்னிடம் மிகவும் வீரம்பேசுகின்றாய்; உன்னிடத்தில் என்ன வீர மிருக்கின்றது? சிவன் உன்னுடைய தலைகளி லொன்றைக் கிள்ளியெறிந்த காலத்தில் அந்தத் தலையை மீண்டும் உண்டாக்கிக்கொள்ள வகையறியாதவனாயினாய்; நீ இப்படி வல்லமையற்றவனா யிருப்பதனால் உன்னைத் தலைவனென்று சொல்லுதல் எங்ஙனமுடியும்? நீ இத்தகைய வல்லமையைக் கொண்டுதானோ படத்தையுடைய ஆதிசேடன் முடியிலிருக்கின்ற பூமியைச் சிருஷ்டித்தாய்? பிரமனே! இன்னும், சோமுகாசுரன் உன்னிடத்திலே வேதங்களைப் பிடுங்கிக்கொண்டு போனகாலத்தில், நீ அவற்றைத் திரும்பக் கவரும் சக்தியற்றவனாயினாய்; நானே அப்போது மச்சாவதாரமெடுத்துப்போய் அவ்வசுரனைக்கொன்று வேதங்களை வாங்கிவந்தேன்; அஃதன்றி மிகுந்த சாமர்த்தியமுள்ள அநேகம் அசுரர்களையெல்லாங் கொன்று தேவர்களுக்கும் உனக்கும் ஏற்பட்டிருந்த துன்பங்களை யெல்லாம் நீக்கித் தேவர்களையும் உன்னையும் காப்பாற்றினேன்; இவற்றையெல்லாம் நீ அறிந்திருந்தும் கொஞ்சமும் யோசனையின்றி என்னை நிந்திக்கத் தலைப்பட்டுவிட்டாய்; உன்னை நான் மேற்கூறியபடி கொல்லவேண்டியது அவசியமானாலும், 'எட்டிமரமாயினும் உலகத்தோர், தாம் வைத்த மரத்தை வெட்டத் துணியார்கள்,' என்ற நியாயத்தை யநுசரித்து



உன்னைக் கொல்லும் விஷயத்தில் என் மனம் துணியவில்லை; இல்லாவிடில் இதுவரை உன்னை மாய்த்திருப்பேன்," என்று கூறினார்.

இப்படியே அவர்களிருவருள் ஒவ்வொருவரும் விபரீதமான வார்த்தைகளை நெடுநேரம்வரை பேசிக்கொண்டிருந்து முடிவில் இருவரும்; கோபம் மேன்மேலும் அதிகரித்துவிட்டபடியால், புயங்களைக் கைகளால் தட்டிக்கொண்டு நின்று பூலோகத்திலே குதித்தார்கள்; ஒருவரோடொருவர் நெருங்கினார்கள்; தலை நிமிர்ந்து ஒருவரை யொருவர் கோபத்தோடு பார்த்துக்கொண்டார்கள்; நெருப்புப் பொறிகள் சிதறும்படி கண்களை விழித்துப் பார்த்துக்கொண்டார்கள். இங்ஙனம் பிரமாவும், விஷ்ணுவும், கோபம் மேலிட்டவர்களாய்ப் பல விதமான வீரச்செய்கைகளைச் செய்துகொண்டும், வீராவேசமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டும் வலுமையான சண்டைசெய்யத் தொடங்கினார்கள். அவ்வாறு தொடங்கிச் சண்டை செய்யும்போது அவர்களுடைய வேகத்தினால் மலைகளெல்லாம்நொறுங்கிப்பொடிப்பொடியாய்ப்போயின; அண்டமுகடும் படீரென வெடித்தது; பற்பல கிரணங்களையுடைய சந்திரசூரியர்கள் பயந்தொளித்தார்கள்; ஆதிசேஷன் தலைச்சுமையைப் பொறுக்கமாட்டாமல் உடல்நெளிந்து வருந்தினான்; இமையா நாட்டம் பெற்ற இமையோர்களும், 'ஊழிக் காலம் வந்து உலகம் அழியப்போகிறது,' என்று கருதிக்கண்களை யிமைத்துக்கொண்டார்கள்; நக்ஷத்திரக் கூட்டங்களெல்லாம் உதிர்ந்தன; மேகக் கூட்டங்களெல்லாம் சின்னபின்னமாகச் சிதைந்தன; உலகங்களெல்லாம் அடுக்குக் குலைந்து விழுந்து எங்கும் தூளிகள் எழும்பின; கங்கை முதலான பெரிய நதிகளெல்லாம் தண்ணீரில்லாமல் வறண்டுபோயின; அஷ்டதிக்குகளிலு மிருக்கின்ற யானைகள் திடுக்கிட்டுப் பயந்து கதறின. இவ்வாறு பல விபரீதங்க ளுண்டாகும்படி அவ்விருவரும் சண்டை செய்யுங்காலத்தில் ஒருவரை யொருவர் மேலே எடுத்தெறிந்தார்கள்; மாறிமாறி ஒவ்வொருவரும்

கீழே விழுந்தார்கள்; மறுபடியும் இருவரும் எழுந்து விரைவில் எதிர்த்து நின்று ஒருவரைப் பார்த்து ஒருவர், 'இனி மார்பில் குத்திப் பார்க்கலாம்,' என்று சொன்னார்கள்; அப்படிச் சொல்லி ஒருவரை யொருவர் குத்தி மடியைப்பிடித்திழுத்துச் சூறைக்காற்றைப்போலப் பன்முறை சுழன்று திரிந்தார்கள்; அப்படி அவர்கள் வலமிடமாகச் சுழன்று திரியும்போது அவர்களுடைய தோற்றம் எப்படியிருந்ததெனில், அக்கினிகோளமும், இருளும் ஓரிடத்திற் சேர்ந்து வலமிடமாகச் சுழல்வதுபோ லிருந்தது; இன்னும் அந்தவேளையில் அவர்களுடைய சண்டையின் வேகத்தால் உலகத்தில் ஊர்ந்துபோகின்ற ஜீவன்களும், தவழ்ந்து செல்கின்றவைகளும், நடக்கின்றவைகளும் பறக்கும் ஜீவராசிகளைப்போல ஆகாயத்திற் பறந்தன; நிலையாக நின்ற விருக்ஷங்களும், மலைகளும் சுழன்று திரிந்தன; திரளாக நிறைந்த இந்திரனைகயாகிய தேவதருக்களும் பொடிப்பொடியாய்ப் போயின; எவ்விடத்திலும் அந்தகாரமானது நிறைந்தது; மகாமேருவும் அசைந்தது; சப்த சமுத்திரங்களும் வற்றிச் சேறாய்ப் போயின.

இப்படிப் பிரமாவும், விஷ்ணுவும் சர்வசங்கார காலம் வந்ததென்று பார்த்தோர் சொல்லும்படி சண்டை செய்யும் அந்த வேளையில், தேவர்களெல்லோரும் பயந்து, இந்த விசேடத்தைப் பொன்னுலகாதிபனாகிய தேவேந்திரனிடம் சொல்லும்பொருட்டுச் சென்றார்கள்; அங்ஙனம் அவர்கள் சென்று அவனிடம் சொல்வதற்கு முன்னே, அவனும், இந்தச் சண்டையால் துன்பமடைந்து பயந்து தான் பட்ட கஷ்டங்களை யெல்லாம், அவர்களிடஞ் சொல்லிய பின்னர் அவர்களை நோக்கி, 'நீங்கள் வந்தகாரியம் யாது? யாவும் துன்பப்படும்படி இவ்வாறு உலகமெல்லாம் அதிர்வதற்குக் காரணமென்ன?' என்று கேட்டான்; அவ்வாறு கேட்டவுடனே தேவர்கள், அவனை நோக்கி, 'தேவராஜனே! பிரமாவும் விஷ்ணுவும் கோப மிகுந்தவர்களாய்ப் பூமியில் பயங்கரமான யுத்தத்தைச் செய்கிறார்கள்; அதனால், எல்லா உலகங்களுக்



கும் மிகுந்த கெடுதி விளைந்திருக்கின்றது; எங்களுக்கும் மிகுந்த துன்பம் உண்டாகி யிருக்கின்றது; எங்களுக்குப் பிழைக்கத்தகுந்த மார்க்கம் வேறேயில்லை; இந்த யுத்தம் முடிகிறதாகவுமில்லை; இதனைச் சிவன் நிறுத்தினால் நிறுத்தலாமே யன்றி மற்றெவராலும் நிறுத்துதல் இயலாது; ஆதலால், எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கின்ற அந்தப் பரமசிவனிடஞ் சென்று அவரைத் தொழுது அவர் சமுகத்தில் இந்தக் காரியத்தைச் சொல்வதே சரியாகும்?' என்று சொன்னார்கள்.

இப்படித் தேவர்கள் சொல்லவே தேவேந்திரனும் அவர்கள் வார்த்தைக் கிணங்கினான். அதன்மேல் இந்திரனும் மற்றதேவர்களும் புறப்பட்டுச் சிவலோகஞ் சென்று பரமசிவனைக்கண்டு அவருடைய பரிசுத்தமான தாமரைமலர்போன்ற பாதங்களில் விழுந்து வணங்கி அவர் திருமுகத்தை நோக்கி, "மங்கை பாகனே! மகாமாயையை யுடையவனாகிய விஷ்ணுவும் பிரமாவும் பூலோகத்தில் மிகவும் பயங்கரமான சண்டை செய்கிறார்கள்; அங்ஙனம் அவர்கள் செய்வதனால் எல்லாவுலகங்களிலு முள்ளவர்களுக்கும் எங்களுக்கும் அளவற்ற துன்பங்களுண்டாகி யிருக்கின்றன; ஆதலால், அத்துன்பங்களை நீர் தீர்த்தருளவேண்டும்; அத் துன்பங்கள் அந்தச் சண்டை நின்றால் மாத்திரமே நீங்கும்; அவ்வாறு அச்சண்டையை நிறுத்துதல் எவராலு மியலாது; உம்மால்மட்டுமே அக்காரியம் முடிவுபெறும்; ஆதலால், அச்சண்டை நீங்குதற்கான மார்க்கத்தை நீர் செய்யவேண்டும்; பிள்ளைகளுக்குத் தாயே துணைசெய்வாளேயன்றி வேறு யாவர் உதவி புரிவார்? எங்களுக்கு நீர் தாயைப்போன்றவராதலின், எங்களிடம் இப்போது நேரிட்டிருக்கும் துன்பங்களை மேற்கூறியபடி தீர்த்தருளி உதவிபுரியவேண்டும்; இன்னும் உருண்டு செல்கின்ற வண்டிச் சக்கரம்போல மாறிமாறி வரும் அஞ்ஞானம் பொருந்திய பிறப்பையும் இறப்பையும் அடிக்கடி அடைந்து நாங்கள் வருத்தத்தை அனுபவியாமல் மோக்ஷத்தை அடை

யும்பொருட்டு உமக்கு அடிமையாகி உம்மிடம் அடைக்கலம் புகுந்தோம்; ஆதலால், எங்களுக்கு ஜென்மத்தை நீக்கி மோக்ஷத்தையும் கொடுத்தருளவேண்டும்; இன்னும் அளவில்லாத உம்முடைய கிருபைக் கடலில் குளித்து எங்கள் அஞ்ஞானமாகிய அழுக்கைப் போக்கிக்கொள்ளவும் உம்மிடம் நாங்கள் அடைக்கலமாகப் புகுந்தோம்; அநேகம் புழுக்கள் குடைந்துகொண்டிருக்கின்ற உடற்பாரத்தைத் தாங்கி யிழுக்காகிய அஞ்ஞானத்தை அடைந்திருக்கின்ற எங்களுடைய மயக்கமானது கெடும்படி பிரியத்தோடு கிருபை செய்தருளுகின்ற எங்கள் சுவாமியே! பெரியசமுத்திரத்தில் தினந்தோறும் தவறாது முழுகினும் போகாத மும்மலமாகிய அழுக்கற்றுப்போகும்படிக்கும் உம்மிடம் நாங்கள் அடைக்கலமாக அடைந்தோம்; இனிமேல் வேறே அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை; நீர் எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி எங்களுக்குக் கிருபையைச் செய்ய வேண்டும்," என்று சொல்லி ஸ்தோத்திரம் செய்தார்கள்.

இவ்வாறு தேவர்களெல்லோரும் கூடிவணங்கி ஸ்தோத்திரஞ் செய்யுங்காலத்தில் பரமசிவக்கடவுளானவர் பிரமாவுக்கும் விஷ்ணுவுக்கும் சண்டை நேர்ந்த காரணத்தைத் தெரிந்துகொண்டு, நடுக்கமடைந்த தேவர்களும் முனிவர்களும் பயம் நீங்கும்படிக்கும், சர்ப்பசயனத்தில் நித்திரை செய்கின்ற அந்த விஷ்ணுமூர்த்தியும் தாமரைப்புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும் சண்டையை விட்டு அகங்காரமொடுங்கிப் பகை நீங்கும்பொருட்டும், அடுக்கடுக்காயிருக்கும் அண்டங்களெல்லாம் அடுக்கழியாமலிருக்கும்பொருட்டும் கிருபை செய்யக் கருதி உடனே அக்கினி சொரூபத்தோடு கூடிய ஒரு மலைவடிவமாகி அவ்விருவருக்கு மிடையில் நின்று அவர்களுடைய சண்டையைத் தடுக்கும்படி எழுந்தருளினார்.

இவ்வாறு பரமசிவக்கடவுள் அக்கினிமலையாக வடிவெடுத்துச் சென்று பிரமாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடை



யில் நின்று மிகவும் பயங்கரமான ரூபத்தோடு விளங்கினார்; அப்போது சிவனுடைய சொரூபமாகிய அந்த அக்கினிமலையானது பாதாளலோகத்திலிருக்கிற பாம்புகளெல்லாம் தனக்குச் சல்லிவேராகத் தோற்றும்படி அவ்வுலகத்திற் கப்பாலுஞ் செல்லுமாறு தன்னுடைய அடியைச் செலுத்திப் பூமியிலிருந்து மேற்பாகத்தில் பெரிதாகக் கிளைத்துத் தெய்வலோகத்தையுந் தாண்டிப் பிரமலோகத்து முகட்டையு முடைத்து, அண்ட முகட்டையும் ஊடுருவிச் சென்று, அதற்கப்பாலிருக்கும் பெரிய வெளிக்கு மேலாயிருக்கிற இடம்வரையிலும் வளர்ந்தது; இன்னும் அந்த அக்கினி மலையானது, நெடுந்தூரம் கிரணங்களை வீசுகின்ற சூரியனுடைய தேரிற் கட்டிய குதிரைகள் சஞ்சரிக்கக்கூடாத உலகமெல்லாம் ஓடிக் கிளைத்த நீலமணிபோலும் கரிய இருளையோட்டுவதற்கு ஏற்றிவைத்த பெரிய விளக்கைப்போலப் பிரகாசிப்பதனால், சமுத்திரமெல்லாம் சொல்வதற் கரிய வடவாமுகாக்கினி பரந்ததுபோல எங்கும் பரவியது; சப்தகுல பர்வதங்களெல்லாம் அந்தப் பிரகாசத்தினால் சிவப்புநிறம் பொருந்தி அந்த அக்கினிமலையாற் சொரியப்பட்ட சிவந்த அக்கினிப்பொறிகள்போல் விளங்கின.

இப்படி ஆகாயமளவும் வளர்ந்த வடிவத்தோடு அந்த அக்கினிமலையானது தங்களுக்கிடையில் நிற்கவே அதன் சொரூபத்தைக் கண்ட பிரமனும், வேணுகானத்தைச் செய்கின்ற கிருஷ்ணனாகிய விஷ்ணுவும்பயந்து ஒதுங்கிநின்றார்கள்; நம்முடைய பரமசிவனுடைய சொரூபத்தை ஞானக்கண்களையுடைய பெரியோர்கள் காணுவார்களேயன்றி ஊனக்கண்களையுடைய சாமானியர் அறிவாரோ! மேற்கூறியபடி பயந்தொதுங்கி நின்ற பிரமாவும், விஷ்ணுவும், 'இவ்வளவு தூரந்தான் வளர்ந்திருக்கிறது,' என்று அளவிட்டறியமுடியாத பிரகாசமான அந்த மலையைப் பார்த்து மிகவும் துன்பத்தையுடையவராய்த் தங்கள் அகங்கார மொடுங்கிக் கோபம் நீங்கி யுத்தத்தை நிறுத்தி, 'நாம் இனிச் சண்டை செய்து வெற்றி

யடைந்து அதன்மூலம் நம்முடைய பெருமையை நிலைநிறுத்தவேண்டுமென்னும் அவசியமில்லை; இந்த மலையின் அடியையாவது முடியையாவது முடிவுவரை எவரேனும் தேடிக் கண்டு அதன்மூலம் நம்முடைய வல்லமையை நிலைநிறுத்தலாம்; இம்மலையின் அடியையாவது முடியையாவது நம்மிருவருள் எவர் கண்டு திரும்புகிறவரோ அவரே பெரியவர்; காணமுடியாதவர் சிறியவராவர்,' என்று பேசி முடிவுசெய்துகொண்டு சர்ப்பசயனத்தில் நித்திரை செய்கின்றவராகிய விஷ்ணுமூர்த்தி, 'இந்த மலையின் அடியை நான் அறிந்துவருகிறேன்,' என்று வராகவடிவெடுத்தார். பிரமதேவன், 'நான் இந்த மலையின் சிகரத்தைக் கண்டுவருகிறேன்,' என்று அன்னபக்ஷி வடிவமெடுத்தார்.

இவ்வாறு இருவரும் வடிவெடுத்த பின்னர் அன்னமாகிய பிரமதேவன், அரைக்கணத்திற்கு ஆயிரங்காத வழிவீதம் மேலாகப் பறந்து அந்த அக்கினி மலையின் சிகரத்தை நோக்கிச் சென்றான்; வராகமாகிய விஷ்ணு, படத்தையுடைய ஆதிசேடனால் தாங்கப்பட்ட பூமியை அரைக்கணத்திற்கு ஆயிரங்காததூரம் ஆரும்படித் துளைத்துக்கொண்டு அம்மலையின் அடியை நோக்கிச் சென்றார். அப்படி அவ்விருவரும் செல்லும்போது எப்படி விளங்கினார்களெனில், ஒரு தங்க இராட்டினத்தில் நீரிறைக்கும்போது ஒரே காலத்தில் மேல்நோக்கிச் செல்லும் முத்துக்களிழைத்த ஒரு வெண் பொற்குடம் போலவும், கீழ் நோக்கிச் செல்லும் ஒரு நீலரத்தினக் குடம்போலவும் விளங்கினார்கள்.

இவ்வித தோற்றத்தோடு அவ்விருவரும் செல்லுங் காலத்தில் வராக வடிவமெடுத்த விஷ்ணுவானவர், இப்பூவுலகத்தைக் கடந்து, இதன் கீழிருக்கிற அதலம், விதலம், சுதலம், தலாதலம், மகாதலம், ரசாதலம், பாதாளம் ஆகிய ஏழுலகங்களையும் முறையே துளைத்துக் கடந்துபோய், மகாபலிச் சக்கரவர்த்தி காவலிருக்கிற போகவதிப் பட்டினத்தையும் தாண்டி, அதற்கப்புறம் தேவர்கள் வணங்கும் பிரமசொ



ரூபமாய் விளங்கும் ஆடகேசுரத்தைக் கண்டு கைகளினாலும் சிரத்தினாலும் வணங்கினார்; இவ்வாறு வணங்கி அதற்கப்பால் சென்றும், அம்மலையின் அடியை அவரால் காணக்கூடவில்லை. முன்னே மூன்று உலகத்தையும் அளந்த அவர் இப்பொழுது, ஏழு உலகங்களையும் அளந்து தேடியும் அம்மலையின் அடியை அறிதல் அவரால் சாத்தியப்படாமற் போயிற்று; அவ்வாறாகியும், அவர் மேலும் அடியைக் காணவேண்டுமென்னும் விருப்பத்தால், மேலும் பிரயாசையுடன் தேடிச்சென்றார். அதனால் வராகவடிவமாகிய அவர் முகத்தில் வளர்பிறைபோல்நாளுக்குநாள் வளர்ச்சியுற்றிருந்த இரண்டு கொம்புகளும் தேய்பிறைபோல் குறைந்து மழுங்கிப்போயின; கால்குளம்புகளும் தேய்ந்துபோயின; முகத்தின் நுனியும் கூர்மை மழுங்கிப்போயிற்று. இவ்வாறு அவயவங்களெல்லாம் குறைவுபடவே, அந்த விஷ்ணு மிகுந்த துக்கசாகரத்தி லழுந்தி அந்தத் துக்கத்துடனே ஆயிரம் தேவவருஷகாலம் தேடியும் அந்த மலையின் அடியைக் காணாமையால், 'இது சிவனுடைய செயல்; நம்முடைய அகங்காரத்தை அடக்கும்பொருட்டே சிவன் இவ்வாறு மலைவடிவமாகி நின்றார்; ஆதலால், இந்த மலையின் அடியைக் காணுதல் இனி நம்மால் சாத்தியமாகாது; இப்பொழுது அடியைத் தேடும் முயற்சியைவிட்டுத் திரும்புதலே நலம்,' என்றுறுதிகொண்டு, அந்தச்சிவனைத் தியானஞ்செய்து, தமக்கேற்பட்டிருந்த இளைப்பும் சலிப்பும் நீங்கித் தம்முடைய துக்கச் சமுத்திரத்தையும் ஏழு தலத்தையும் தாண்டித் திரும்பிவந்து முன்னே தமக்கும் பிரமனுக்கும் உண்டான கலகத்தை நீக்கும்படி சிவன் அக்கினி மலையாகத் தோன்றிய அவ்விடத்திற் சேர்ந்து, 'நாமே இம்மலையின் அடியைக் காணமுடியாமல் திரும்பிவந்திருக்கும்போது கேவலம் அன்னவடிவமாகச் சென்ற பிரமன் இம்மலையின் முடியை எவ்வாறு காணப்போகின்றான்; அவன் ஒருபோதும் காணவேமாட்டான்; விரைவில் நம்மைப்போலவே வலிமை குறைந்து மிக்கவும் அயர்ச்சி அடைந்து விரைவாக இங்குத் திரும்பி வருவான்,' என்று நிச்சயம் செய்துகொண்டு, நம்

பாத மனிதர்கள் பார்ப்பதற் கரியவரும், எப்படிப்பட்டவர்களுக்கும் ஆதாரமாக விருப்பவரும், தம்முடைய கண்களாகிய புட்பங்களோடு அழகிய புஷ்பங்களைத் தரிப்பவருமாகிய பரமசிவக்கடவுளைப் பன்முறை வணங்கி உள்ள முருகித் துதித்துக்கொண்டிருந்தார்.

இந்தப்பிரகாரம் விஷ்ணு சிவனை ஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருக்க, முன்னே அந்த அக்கினிமலையின் முடியைத் தேடிக் காணும்பொருட்டு அன்னபக்ஷிவடிவமாகிப் பறந்து சென்ற பிரமன் அரையக்ஷணத்திற்கு ஆயிரங்காதவழி வீதம் கடந்து ஆகாயத்திற் பறந்து சென்று அண்டமுகட்டையுங் கிழித்துக்கொண்டு அப்பாற்போய் ஆயிரம் தேவவருடம் வரையிலும் அம்மலைச் சிரத்தைத் தேடினன். அவ்வாறு மிக்க ஊக்கத்தோடு தேடியும் அம்மலையின் சிரம் அவன் கண்களால் பார்க்கக்கூடாததாயிருந்தது. அம்மலையின் உயரமும் அவன் செல்லச் செல்ல வளர்ந்துகொண்டேயிருந்தது. அப்படியிருந்ததனால், அவன் எப்படியேனும் அக்கினிமலையின் முடியைக் காணவேண்டுமென்னும் ஊக்கத்தோடு மேன்மேலும் வலிமைகொண்டு ஆகாயத்திற் பறந்து சென்றான். அவ்வாறு பறந்து செல்லும்போது அன்னவடிவமாயிருந்த அவனுடைய சிறகுகளெல்லாம் சிதைந்து உதிர்ந்துபோயின; விசையும் அடங்கிப்போயிற்று; அவனுக்கு மிகுந்த துக்கமும் பெருமூச்சும் அதிகப்பட்டன; அங்ஙனம் மனக்கவலை அதிகரித்து அவன் தனியனாகி, 'அந்தோ! நாம் இவ்வளவு காலம் பறந்து தேடிவந்தும் இந்த அக்கினிமலையின் முடியைக் காணக்கூடவில்லையே; இனிமேலும் தேடிச் செல்லலாமென்றால் தேகத்திற் சிறிதும் வலியில்லை; இறகுகளெல்லாம் உதிர்ந்துபோய்விட்டன; இனி யிதற்குமேற் செல்லமுடியாது; நாம் திரும்பிச் செல்லுதலே நலம்; நம்மைப்போலவே அந்த விஷ்ணுவும் அடியைக் காண முடியாமல் திரும்பி வருவானோ; அல்லது அவ்வடியைக் கண்டு திரும்புவானோ; ஒருவாறு அவன், அடியைக் கண்டு



திரும்புவானாகில் நாம் அவனுக்குத் தோற்றுப்போவோமே; நமக்கு இவ்வாறு கவலை நேரும்படி பரமசிவக்கடவுளே செய்திருப்பார்; நம்முடைய அகங்காரத்தை அடக்கும்பொருட்டே அவர் இங்ஙனம் நமக்கெதிரே அக்கினிமலை வடிவமாயினர் போலும்; அதனாலேதான் நம்மால் இம்மலையின் முடியை அறியக்கூடவில்லை; ஐயோ! நாம் இந்த மலையைச் சிவசொரூபமென்று அறியாமற்போனோமே; அப்படி அறிந்திருந்தால் நாம் இத்தொழிலிற் பிரவேசியாமல் நமக்குப் பகையாளியாகிய விஷ்ணுவோடு உறவுகொண்டிருக்கலாம்; அப்படி உறவுகொண்டிருந்தால், இவ்வித துக்கத்திற்கு இடமிராது; அப்படி நாம் உறவுகொள்ளாமல் அவனோடு சபதஞ் செய்துகொண்டு இம்மலையின் முடியைத் தேடிக் காணத் தொடங்கியபடியால் இவ்விதம் அளவில்லாத துக்கத்திற்காளானோம்; என்று இக்காரியத்திற் பிரவேசித்தோமோ அன்றுமுதல் இன்றளவும் துக்கசாகரத்திலேயே மூழ்கியிருக்கின்றோம்; நம்முடைய சிறிய புத்தியினாலேயா, அல்லது பூர்வத்தில் நாம் செய்த பாவத்தினாலேயோ, இப்போது இக்கதிக்காளானோம்; இனி நாம் செய்வது யாது? இப்படியே நாம் விஷ்ணுவினிடஞ் சென்றால் நமக்கு மிக்க அவமானம் நேருமே; அந்த அவமானத்தைச் சகித்துக்கொண்டு உயிர் வைத்திருக்கலாமா; நாம் முடியைக் கண்டு வந்ததாக விஷ்ணுவினிடத்தில் பொய்யையாவது கூறிப் பெருமை அடைவது நலமாகும்; அவ்வாறு செய்வதற்கு நாம் முடியைப் பார்த்ததாக எவரேனும் பொய்ச்சாட்சி கூறினால் மிகவும் உதவியாயிருக்கும்; அங்ஙனம் சாட்சி கூறுவதற்கும் எவரும் துணையில்லையே,' என்று பலவாறு யோசனைசெய்து மிகுந்த துக்கசாகரத்தில் அழுந்தியிருந்தான்.

பிரமதேவன், இவ்வாறு பல யோசனைகளைச் செய்து முடிவாக ஒன்றும் தோற்றாமல் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது அக்கினிமலை வடிவமாக இருந்த அந்தச் சிவனுடைய முடியில் அணியப்பட்டிருந்த தாழம்பூமடலொன்று

தவறிக் கீழ்நோக்கி வந்துகொண்டிருந்தது; அப்படி அது வரும்போது மேற்கூறியவாறு துக்கக்கடலில் மூழ்கியிருந்த பிரமதேவன் அதனை நோக்கி ஆச்சரியமடைந்து, 'எவருஞ் சஞ்சரிக்காத இவ்விடத்தில் தாழம்பூ மடலொன்று வருகின்றதே; இஃதெங்கேயிருந்து வருகின்றது,' என்று ஆலோசித்தான். அப்படி அவன் ஆலோசிப்பதற்கு முன்னே, அந்தத் தாழம்பூ மடலானது அவன் சமீபத்தில் வந்தது. அங்ஙனம் வரவே அதனை அவன் தன்கையினாற் பிடித்தான். அவ்வாறு பிடித்தமாத்திரத்தில் அது பரமசிவனுடைய சிரத்திலிருந்து தவறிவிழுந்து நெடுந்தூரம் கடந்துவந்த பழம்பூவாகையால் மெய்ம்மையான பெருமூச்சோடு அந்தப் பிரமனை நோக்கி, 'என்னைச் சீக்கிரத்தில் விட்டுவிடுவாயாக,' என்று சொல்லிற்று. அவ்வாறு அந்தத் தாழம்பூவானது சொல்லவே, அந்த வார்த்தைகளைக் கேட்ட, பிரமதேவன் அதனை நோக்கி, "ஏ தாழம்பூவே! நீ எங்கிருந்து வருகின்றாய்?" என்று வினவினான். அவன் அவ்வாறு வினவவே, அந்தத் தாழம்பூவானது அவனை நோக்கி, "பிரமனாலும் விஷ்ணுவினாலும் அறியக்கூடாத இந்த மலைவடிவமான பரமசிவனுடைய திருமுடியிலிருந்து நான் தவறி விழுந்தேன்; அவ்வாறு தவறிவிழுந்து நாற்பதினாயிரம் வருஷங்களாகின்றன; இத்தனை வருடங்கள் கழிந்தும் இன்னும் நான் பூமியை அடையவில்லை; அதனால் மிகுந்த வருத்தத்தோடு வருகின்றேன்; ஆதலால் என்னைப் பிடிக்கவேண்டாம்; விட்டுவிடுவாயாக," என்று கூறிற்று.

தாழைமலரானது, இவ்வாறு கூறவே, பிரமதேவன், "நாம் சாட்சி சொல்லுதற்கு ஒருவருமில்லையே என்று கலக்கத்தை அடைந்திருக்கும் இச்சமயத்தில் இத்தாழம்பூ கிடைத்தது நம்முடைய அதிர்ஷ்டவசமேயாம்; இதனை எப்படியாவது சரிப்படுத்திச் சாட்சிகூறும்படி செய்தால் நம்முடைய காரியம் சித்தியாம்; இது சிவனுடைய சிரசிலிருந்து தவறி வீழ்ந்து வருகின்றதாதலால், இதனுடைய சாட்சி மிகவும் உறுதிப்படும்; விஷ்ணுவும் இதன் வார்த்தையை நம்பி நமக்



குத் தோற்றுவிட்டதாக ஒப்புக்கொள்வான்; இப்பொழுது நாம் செய்யவேண்டிய உபாயம் இதைத்தவிர வேறொன்றுமில்லை," என்று ஆலோசித்து, அத்தாழம்பூவை நோக்கி, "சிவனுடைய முடியிலிருந்து தவறி என் நல்வினை வசத்தால் எனக்குச் சமீபத்தில் அடைந்த தாழம்பூவே! உன்னை நான் இப்போது சந்தித்ததற்காகச் சந்தோஷத்தை அடைகின்றேன்; உற்ற சமயத்தில் நீ ஊன்றுகோல்போல வந்து சேர்ந்தனை; துணையின்றிக் கலங்கிய எனக்குத் துணையாகவும் அமைந்தனை; இனி, உன்னால் என் கவலை முற்றும் நீங்கும்; நான் இவ்வாறு உன்னுடைய துணையைப் பெரிதாகக் கருதியிருக்கும்போது நீ என்னைவிட்டு விரைவிற் செல்ல உத்தேசித்து, 'விட்டுவிடு, நான் விரைவிற் செல்லவேண்டும்,' என்று சொல்வது தகுதியன்று; நீ இப்போது எனக்கொரு பெரிய உதவி புரியவேண்டும்; அவ்வாறு செய்வாயானால், உன்னை நான் எக்காலத்திலும் மறக்கமாட்டேன்; உன்னுடைய உறவு நீடித்து நிற்கும்; நான் உனக்கு அன்னியனல்லன்; நான் அன்னபக்ஷிவடிவமாக இருப்பதைப் பார்த்து நீ என்னை அன்னப்பறவை என்று நினையாதே; நான் எவனென்றால், பிரமதேவன்; நானும் விஷ்ணுவும் பகைகொண்டு யுத்தஞ் செய்து முடிவில் எங்களுக் கிடையே அக்கினி சொரூபமாகத் தோன்றிய சிவனாகிய இம்மலையைக் கண்டு போரை நிறுத்தி, நான் இந்த மலையின் முடியையும் விஷ்ணு இதன் அடியையும் தேடிக் கண்டு வரவேண்டுமென்றும், அப்படித் தாங்கள் கருதிச் சென்றதைப் பார்த்து வருபவரெவரோ அவரே பெரியவரென்றும், பார்க்கமுடியாது திரும்பி வருபவர் சிறியவரென்றும் முடிவு செய்துகொண்டோம்; அந்தப்படியே அடியைக் கண்டுவரும்பொருட்டு, விஷ்ணு வராகவடிவமெடுத்துக் கீழ்நோக்கிச் சென்றான்; நான் முடியைக் காணும்பொருட்டு அன்னவடிவமெடுத்து மேல் நோக்கி வந்தேன்; நான் அவ்வாறு வந்து ஆயிரம் தேவவருடங்கள் கழிந்தன; இவ்வாறு பல வருடங்கள் கழிந்தும், என்னால் இதற்குமேல் செல்லமுடியவில்லை; என்னுடைய வலியும் குறைந்து போயி

றது; ஆகலால், இனித் தேடிச் சென்றும் முடியினை விடுத்துத் திரும்பிச் செல்லத் துணிவுகொண்டேன்; ஆயினும், உத்தேசித்துவந்த காரியத்தை நிறைவேற்றாமல், திரும்பிச் செல்வது மிகவும் அவமானத்திற் கிடமாகுமே என்று என் மனம் வருத்தத்தை அடைகின்றது; நீமாத்திரம், எனக்கு உதவிசெய்வாயானால் அந்தவருத்தம் நீங்கிவிடும்; நான் மிக்க கௌரவத்தையும் அடைவேன்; விஷ்ணுவும் என்னைப்போலவே அடியைப் பார்க்க முடியாமல் மனக்கவலையோடு திரும்பி வருவான்; ஆதலால், அவனிடத்தில் நான் இம்மலையின் முடியைக் கண்டுவந்ததாய்ப் பொய் கூறுகின்றேன்; அப்போது நீ, 'இவர் அவ்வாறு கண்டது மெய்தான்,' என்று சாக்ஷி கூறவேண்டும்; அவ்வாறு நீ கூறினால், நீ சிவனுடைய முடியிலிருந்து வந்ததை முன்னிட்டு, உன்னுடைய வார்த்தையை மறுக்காமல்அவன் ஒப்புக்கொள்வான்; அவ்வாறு கொள்ளவே எனக்கு வெற்றியும், அவனுக்குத் தோல்வியும் உண்டாம்; நீ தயவுசெய்து என்னுடைய வார்த்தைக் கிணங்கி, இக்காரியத்தைச் செய்வாயானால் உனக்கு மிக்க புண்ணியமுண்டாகும்; இது வஞ்சனைத் தொழிலென்று கருதி இதனைத் தள்ளாதே; ஒருவருக்குத் துன்ப மிகுந்து உயிர்ச்சேதம் நேருங்காலத்தில், அவருடைய உயிரைக் காப்பாற்றும்பொருட்டுப் பொய் கூறலாமென்று சாஸ்திரம் சொல்லுகின்றது; ஆதலால், மிக்க துன்பமடைந்த என்பொருட்டு இந்தப் பொய்யைக் கூறலாம்; இன்னும், உத்தம சிநேகிதனாயிருப்பவன் தன்னுடைய நேயனிடத்தில், 'விஷத்தை உண்ணு,' என்றாலும் அவன் உண்ணுவான்; அதுபோல, நீ எனக்கு மிகுந்த சிநேகமாகையால் என் சொல்லைத் தட்டாது நான் கோரிய காரியத்தைச் செய்துமுடிக்கவேண்டும்; இனி, நீ வேறொரு ஆலோசனையுஞ் செய்யவேண்டாம்; என் வார்த்தைக் குடன்படுவாயாக," என்று கூறினான்.

இவ்வாறு பிரமதேவன், பல இரக்கமான வார்த்தைகளைச் சொல்லிக் கெஞ்சிக் கெஞ்சி வேண்டியபடியால், அத்



தாழம்பூவானது அவனுடைய வார்த்தைகளை மறுக்க முடியாமல் அவன் நோக்கத்திற் கிணங்கிற்று; அஃது அவ்வாறு இணங்கவே, பிரமதேவன் தன்னுடைய எண்ணம் நிறைவேறினதற்காக மிகுந்த சந்தோஷமடைந்தவனாய், அத்தாழம்பூவினுடனே விரைவாக ஆகாயத்தினின்று மிறங்கிப் பூமியை அடைந்து, மண்ணளந்த, மாயோனாகிய மகாவிஷ்ணு இருக்குமிடத்திற்கு வந்துசேர்ந்தான்.

பிரமன் அவ்வாறு வந்து, சேர்ந்தவுடன், தம்முடைய எண்ணம் நிறைவேறாமல் விசனத்துடன் திரும்பிவந்திருந்த விஷ்ணுவைக் கண்டு, மிக்க மனக்களிப்போடு அவருடைய முகத்தை நோக்கி, 'ஏ விஷ்ணுவே! நான், கொடிப்பொழுதிற்கு நூறாயிரங்காதம்வழி வீதம் கடந்து பறந்து சென்று எல்லோருக்கும் ஆதியாகிய பரமசிவனுடைய வடிவமான இந்தச் சோதிமலையின் முடியைப் பார்த்துத் திரும்பினேன்; என்னுடைய வார்த்தையை உறுதிப்படுத்தும்பொருட்டு இந்தத் தாழம்பூவைச் சாக்ஷியாக அழைத்து வந்திருக்கிறேன்; இது பரமசிவனுடைய சிரசிலிருந்து வந்ததாகையால் இதனிடத்தில் என் வார்த்தை மெய் பொய் யென்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்,' என்று கூறினான். அப்போது விஷ்ணு, தாழம்பூவை நோக்கி, 'பிரமன் சொல்வது உண்மை தானா?' என்று வினவினார்; தாழம்பூவும், 'உண்மைதான்,' என்று கூறிற்று.

இவ்வாறு பிரமதேவனும், தாழம்பூவும் பொய் கூறவே அந்த க்ஷணத்திலேயே அங்கு நின்ற சிவசொரூபமான அக்கினிமலை படீரென்று வெடித்தது; அப்படி அது வெடித்த சப்தத்தினால், இராக்ஷதர்களும், தேவர்களும் திடுக்கிட்டு உயிர் சோர்ந்தார்கள்; திக்குகளிலுள்ள யானைகளெல்லாம் பயந்து சூரியனை உருக்கிச் சாய்த்ததைப்போல இரத்தஜலத்தைக் கக்கின; உலகங்களெல்லாம் நடுக்கமுற்றன. இப்படி எல்லாம் நடுங்கச் செவ்வானத்தின் நிறம் மழுங்கிப்போகும்படியாகவும் முருக்கம் பூவிதழ்நிறம் கருமை அடையும்படியாக

வும், சிவந்து தோன்றுகின்ற தம்முடைய திருவுருவின் மீது விபூதி அணிந்திருப்பதனால் வெளுத்துத் தோன்ற, அம்மலை வெடிப்பில் நின்றும் பரமசிவன் கோபத்துடன் வெளியேறி, முப்புரத்தை முன்னே எரித்த நகை முகத்தில் விளங்கப் பார்த்தோர் அதிசயிக்கும்படி நின்றார். அங்ஙனம் நின்றவர், விஷ்ணுவினிடம் பொய் கூறிய பிரமனைப் பார்த்து, 'ஏ நான்முகனே! நீ இப்போது அகங்காரத்தினால் கூறிய பொய்ம்மொழி மிகவும் நன்றாயிருக்கின்றது; நானொருவன் இருக்கின்றேனென்பதைச் சிறிதும் கருதாமல், என்ன தைரியங் கொண்டு இவ்வாறு பொய்ம்மொழி கூறினை; நல்லது உன்னை நானறிவேன்,' என்று சொல்லிக் கோபக்குறி தோன்ற நகைத்தார்; அவ்வாறு அவர் நகைத்தபோது, அண்டபகிரண்டங்களெல்லாம் கிடுகிடென்று நடுங்கி யொடுங்கிப்போயின; சூரிய சந்திரருடைய பிரகாசம் மழுங்கிப்போயிற்று; சப்த மேகங்களும் மறைந்தன; நிலையான பொருள்களெல்லாம் நிலைகுலைந்தன; குறைந்தவைகளெல்லாம் நிறைந்தன; கூட்டமாகிய திக்குகள் அலைந்தன; வளர்ந்து பரவியிருந்த மரங்களெல்லாம் கரிந்தும் பொரிந்தும் எரிந்தும்போயின; தேவர்களெல்லோரும், 'பிரமதேவன் இப்பொழுதே அழிந்துபோனான்,' என்று பயமடைந்தார்கள். அங்ஙனம் பயமடைந்த அவர்கள், பூமியெல்லாம் மேடிட்டுப் போகும்படி அந்தச் சிவன்மீது புஷ்பமாரி பொழிந்தார்கள். அப்போது மகா விஷ்ணுவுக்குத் துக்கம் நீங்கிச் சந்தோஷம் அதிகரித்தது; பிரமனுக்கு அகங்காரமென்ற இருளானது மனத்தை விட்டு நீங்கிப்போயிற்று; அவன் அளவற்ற அச்சத்தை யடைந்தான்.

அப்படி அவன் அச்சத்தை அடைந்தபொழுது மிகவும் மனத்தெளிவை அடைந்த விஷ்ணுவானவர், அந்த அக்கினி மலையினிடத்திருந்து வெளியேறிய பரமசிவனைப் புகழ்ந்து பாடினார்; அவருக்கு வந்தனஞ் செய்தார்; பரவசங்கொண்டு ஆனந்தக் கூத்தாடினார்; நான்கு திக்குகளிலும் ஓடினார்;



'யாவராலும் தெரிந்துகொள்ள முடியாத இந்தப் புண்ணிய மூர்த்தியை நான் தரிசிக்கப்பெற்றேன்; இவ்வாறு தரிசித்தற்கு நான் என்ன தவத்தைச் செய்தேனோ; என்மீது கிருபை கூர்ந்து எனக்கிப்போது தரிசனங் கொடுத்த இக்கடவுளிடத்தில் என்ன வரத்தைக் கேட்கலாம்,' என்று ஆலோசனை செய்தார்; பின்னர் தமக்குவேண்டிய வரங்களைக் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு விஷ்ணுவானவர் மிகுந்த பக்தியினால் தேகம் உருகிப் பலவாறு துதித்துச் சிவனைக் கொண்டாடவே, அந்தப் பரமசிவக்கடவுள் விஷ்ணுவின் பக்திக்கு மகிழ்ந்து அவர்மீது மிக்க கிருபையுடையவராய் அவருக்குவேண்டிய வரங்களைக் கொடுத்துப் பின்னர் பிரமதேவனை நோக்கி, 'நான்முகனே! நீ இப்போது என் முடியைக் கண்டதாகப் பொய் கூறியபடியால் இன்றுமுதல் உனக்குப் பூவுலகத்திலே கோவிலில்லாமற் போவதோடு நித்திய பூஜையுமில்லாமற் போகக்கடவது,' என்று சாபமிட்டு அதன்மேல் அவனுக்கனுகூலமாகப் பொய்கூறின தாழம்பூவை நோக்கி, 'தாழம்பூவே! நீ இந்தப் பொய்யனாகிய பிரமனோடு சேர்ந்து இவனுடைய வார்த்தைக் கிணங்கிப் பொய்ச் சாட்சி கூறியபடியினாலே உன்னை இன்றுமுதல் தீண்டேன்; நீ என் பூசனைக்குதவாமற் போகக்கடவாய்,' என்று சபித்தார். இவ்வாறு பரமசிவக்கடவுள் மிகுந்த கோபங்கொண்டு பிரமதேவனையும் தாழம்பூவையும் சபிக்கவே, பிரமதேவன் மிகுந்த அச்சமும் கவலையு முடையவனாய்த் தேகம் நடுங்கிப் பூமியில் விழுந்து அப்பரமசிவக்கடவுளை வணங்கி, அவரை நோக்கி, 'நீறுபூத்த நெருப்பைப்போன்ற சொரூபமுடைய சுவாமி! ஆணவமலமென்கின்ற போர்வை மூடிக்கொண்டிருப்பதனாலே அவிவேகியாய்த் திரிகின்ற சிறியேன் உம்முடைய சொரூபத்தை யறியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்; என்மீது நீர் கோபத்தைச் செலுத்துதற்கு உமக்கு நானொரு பொருளோ; உருவமானவரே! அகண்ட வெளியானவரே!

நான்கு வேதங்களானவரே! நான்கு வேதங்களின் அந்தத்தி லிருப்பவரே! ஒப்பற்ற முதல்வரே! என்மீது கோபங் கொள்ளவேண்டாம்; எல்லா நதிகளினு மிருந்து பாயும் நீரெல்லா மொன்றாகக் கலந்து பெருகிய சப்த சமுத்திரங்களும் வெந்நீராய்ச் சுட்டால் அவற்றை யாற்றுதற்கு வேறே குளிர்ந்த நீருண்டோ? இல்லை; அதுபோல எல்லா வல்லமையுமுடைய உமக்கே இத்தகைய கோபம் வரும் பக்ஷத்தில் அதனை ஆற்றுபவ ரெவர்? நீரிவ்வாறு கொண்ட கோபத்தைத் தணிக்காவிடில் உலகத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் எவ்வாறு பிழைக்கும்? முன்னே சமுத்திரத்திற் பிறந்த ஆலகாலவிடத்தை யுண்ட மூர்த்தியே! கோபம் செய்யவேண்டாம்; இளம்பிறையாகியும், பூரணச் சந்திரனாகியும், பெண்ணாகியும், ஆணாகியும், தேனாகியும், புஷ்பமாகியும், மலைகளாகியும், கிருபாமாரியைப் பொழிகின்ற மேகமாகியும், சொல்லாகியும், நாதமாகியும், பின்னும் நானாவித ரூபமாகியுமிருக்கின்ற மூர்த்தியே! உமக்கு நானடைக்கலம்; என்னைக் கோபிக்கவேண்டாம்! வேண்டாம்!! 'ஏ சுவாமி! நான் மிகுந்த வெப்பத்தைக் கொடுக்கின்ற புஷ்பபாணங்களையுடைய உம்முடைய விரோதியாகிய மன்மதனல்லன்; தாருகவனத்து ரிஷிகளால் ஏவப்பட்ட உயர்ந்த தலையையும் ஆறுபோன்ற மதத்தையுமுடைய யானையுமல்லன்; பின்பு அந்த ரிஷிகளால் ஏவப்பட்ட சிவப்பாகிய அக்கினியுமல்லன்; மார்க்கண்டர்பொருட்டு உம்மோடு விரோதம் பாராட்டிய கொலைத்தொழிலையுடைய எமனுமல்லன்; உமக்குப் பகையாகிய திரிபுரங்களுமல்லன்; நானோ மிகச் சிறியன்; நானுமக்கு எம்மாத்திரம்; என்னை ஒரு பொருளாகக்கொண்டு நீர் இப்போது என்மீது கோபம் செய்யவேண்டாம்; யாவராலு மறியக்கூடாத உம்முடைய முடியை அறிதற்பொருட்டு அன்னப்பறவை யுருவமாகிச் சென்று அதனைக் காணமுடியாமல் திரும்பிவந்து விஷ்ணுவினிடத்தில் பொய் கூறியபடியால் இவ்வாறு உம்முடைய கோபத்திற் காளானேன்; பூமியில் எனக்குக் கோவிலும் பூசனையும் இல்லாமற் போகும்படி



யான துர்ப்பாக்கியத்தையு மடைந்தேன்; இவ்வாறு நான் உலகத்தில் பூசனையற்றிருப்பது எனக்குச் சிறப்பாகாது; ஆகலால், என்மீது கிருபைகூர்ந்து, உலகத்தில் எனக்கு எவ்வழியினாலாவது சிறிது நன்மை யுண்டாகும்படி செய்யவேண்டும்,' என்று பலவாறு துதித்து மிகுந்த துக்கத்தோடு அந்தச் சிவனை வேண்டினான்.

பிரமதேவன் இவ்வாறு துக்கத்தோடு துதித்து வணங்கித் 'என்னுடைய குற்றத்தைப் பொறுத்துக் கிருபை செய்யவே வேண்டும்,' என்று பன்முறை கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவே, பரமசிவக்கடவுள், முன்னர் கொதிக்கக் காய்ந்து பின்னர் குளிர்ந்த காற்று வீசக் குளிர்ச்சியடைந்த ஜலம்போல அந்தப் பிரமதேவனுடைய துதியினால் கோபம் தணிந்து, அவனுடைய குற்றத்தை மன்னித்து, அவனுக்குக் கிருபை செய்யக் கருதிச் சந்தோஷத்துடனே அவன் முகத்தை நோக்கி, 'நான்முகனே! நீ பயப்படவேண்டாம்; நீ மிகுந்த குற்றத்தைச் செய்திருந்தாலும் இப்போது உன் துதிக்கிரங்கி அதனை மன்னித்தேன்; என்னுடைய வார்த்தைப்படியே உனக்குப் பூமியில் கோவிலும் பூசையு மில்லாமற்போயினும், இவ்வுலகத்தில் பிராமணர்களுக்குச் செய்கின்ற பூசை உனக்குச் சாரும்படி அநுக்கிரகம் செய்தேன்; ஆதலால், நீ அந்தப் பூசனையைக் கொண்டு பொன்னுருவமா யமைந்த மகாமேருகிரியின் ஆதாரவைக்கொண்ட ஏழு உலகங்களையும் எப்போதும்போல சிருஷ்டி செய்துகொண்டிருப்பாயாக,' என்று கூறியருளினார். சிவன் இவ்வாறு கிருபை செய்யவே, பிரமதேவன், அங்கம் பூரித்து ஆனந்தக் கடலில் மூழ்கினான்.

அதன்மேல் பரமசிவக்கடவுள், பிரமாவையும், விஷ்ணுவையும், கிருபையுடன் நோக்கி, 'அன்பர்களே! உங்களுக்கு நான் இந்தலத்திற் பிரசன்னமாகி வரங்கொடுத்தபடியினாலே இத்தலத்தைச் சுற்றி மூன்றுயோசனை தூரம் வரைக்கும் சுத்தப் பவித்திரமான க்ஷேத்திரமாகக்கடவது; இந்தச் செந்தீமலை சிறிய உருவத்தோடு கூடிய மலையாகக் கடவது;

இத்தலத்திற்கு அருணைபுரி என்று பேராம்; இது பேரின்பம் சிறந்த மோட்சத்தைத் தடையில்லாமற் கொடுக்கும்; உங்களுடைய சண்டையால், துன்பத்தை அடைந்த தேவேந்திரனும், மற்றத் தேவர்களும் அத்துன்பத்தை நீக்குமாறு நம்மை வேண்ட, அவர்பொருட்டு நாம் இவ்விடத்திற் றோன்றி, அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தபடியினாலே, இந்தப் புண்ணிய தலத்தை நினைப்பவர்களுக்கு, அவ்வாறு நினைத்தமாத்திரத்தில் பிறவித் துன்பமானது நீங்கும்; இந்தப் பருவதமு மிந்தத் தலமும், பிரளயகாலத்திலும் நாசமடையாமல் நிலைபெற்றவைகளாகி, வாயு சஞ்சரிக்கின்ற திக்குகளிலுள்ள சராசரங்க ளெல்லாவற்றிற்கும் மோக்ஷத்தைக் கொடுக்கத்தக்கவைகளாக விளங்கும்; இன்னும் பூமியில் அரிதாகிய தவத்தைச் செய்பவர்களுக்கு இனிமையான மோக்ஷத்தைக் கொடுக்க விரும்பி, நாம் சோதிவடிவமாகிய இத்தலத்தில் அவதரிப்பவர்களுக்கு அவர்கள் கோரிய வரத்தை யெல்லாங் கொடுப்போம்; இத்தலத்தில் ஒரு தானஞ் செய்தால் அத்தானமானது ஆயிரமாக விருத்தியாகும்; இன்னு மிந்தத்தலத்தில் பாவமேயுண்டாகாது; இதைச் சந்தேகமாக நினைப்பவர்களுக்கு எப்பொழுதும் மோக்ஷம் கிடைக்கமாட்டாது; இது சத்தியம்,” என்று கூறினார்.

இந்தப்பிரகாரம் பரமசிவக்கடவுள் கூறியவுடனே அங்கு அளவில்லாமல் உயர்ந்துநின்ற அக்கினிமலையானது, ஒரு சிறிய மலையாகக் குறுகி மிகுந்த சோதி எங்கும் பரவும்படிக்குப் பிரகாசித்தது; அவ்வாறு மிகுந்த கிரணங்களோடு அம்மலை பிரகாசித்ததைப் பார்த்துப் பிரமாவும், விஷ்ணுவும் சிவனை வணங்கி, ‘சுவாமி! இந்த மலை தம்முடைய ஆக்ஞைப்படி இப்போது குறுகிற்றாயினும் அளவற்ற பல கிரணங்களோடு கூடிப் பார்ப்பவர் கண்கள் கூசும்படி விளங்குகின்றது; தேவர்களாலும், எங்களாலும், மற்றவர்களாலும் இம்மலையின் சோதியைப் பார்க்க முடியவில்லை; ஆகையினால் இதிற் றோன்றும் சோதிவடிவமாகிய கிரணங்களெல்



லாம் மறைந்து மற்ற மலைகளைப்போல் இதுவும் ஒரு மலையாகத் தோன்றும்படிச் செய்யவேண்டும்,’ என்று கேட்டுக் கொண்டார்கள். அன்னவாகனத்தி லேறுகின்ற பிரமனும், கருடவாகனத்தி லேறுகின்ற விஷ்ணுவும் இவ்வாறு வணங்கிக் கேட்கவே, நின்மலராகிய பரமசிவக்கடவுள், அவர்கள் விரும்பியவாறே அந்த மலையிலுள்ள கிரணங்கள் மிகுந்த சோதியை மறைத்து, அதனை மலைவடிவமாகச் செய்தருளினார். அதன்மேல் பிரமாவும் விஷ்ணுவும் சிவனை நோக்கி, ‘சுவாமி! இதனை எங்கள் விருப்பப்படியே மலைவடிவமாகச் செய்ததைப்பற்றி மிகவும் மனத்திருப்தி அடைந்தோம்; ஆயினும், இஃது அக்கினி மலையாகத் தோன்றியிருந்த தென்பதற் கறிகுறியாக இந்த மலையின் உச்சியில் எந்நாளும் ஒரு பிரகாசம் தெரியும்படியாகக் கிருபை செய்யவேண்டும்,’ என்று கேட்டுக்கொண்டார்கள். அப்படி யவர்கள் கேட்டுக்கொள்ளவே, பரமசிவக்கடவுள், அவ்வாறே செய்வதற் கிசைந்து, அவர்களை நோக்கி, ‘தொண்டர்களே! உங்கள் விருப்பப்படியே வருடந்தோறும் கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நக்ஷத்திரத்தன்று இம்மலையின் உச்சியில் ஒரு பிரகாசம் தோன்றும்படிச் செய்வோம்; அவ்வாறு தோன்றும் அப்பிரகாசத்தைக் காண்பவர்கள், உலகத்தில் பசியும் வியாதியுமில்லாமல் நிலைபெற்று வாழ்வார்கள்; இந்தச் சோதியைக் கண்ட தபசிகளுக்கும் அரிய அரசர்களுக்கும் இடையூறு நீங்கும்; இதைத் தரிசித்துப் பணிந்தவர்களுடைய கோத்திரத்தில் தோன்றியவர்களுக்கு இருபத்தொரு தலைமுறைவரைக்கும் நாம் முத்தி கொடுப்போம்; இன்னும் இறப்பையும் பிறப்பையும் நீக்குதற்கு இம்மலை மருந்தானபடியினாலே இதற்கு மலைமருந்தென்றும் பெயர் கூறப்படும்; இன்னு மிது சிவப்பு நிறம் பொருந்தியிருப்பதனாலே அருணகிரி என்றுங் கூறப்படும்; இதன் பெயரை ஒருமுறை பூமியில் சொன்னவர்களுக்கு பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்த பலனுண்டாகும்,’ என்று கூறியருளினார்.

பரமசிவன் இவ்வாறு கூறவே, பிரமாவும், விஷ்ணுவும் அளவற்ற ஆனந்த சாகரத்தில் மூழ்கினவர்களாய் அவரை

வணங்கி மீண்டும், அவர் திருமுகத்தை நோக்கி, 'அருணாசலேசுரரே! நீரே இவ்விடத்தில் மலைவடிவமாகச் சமைந்தீர்; இவ்வாறு மலையாகிய உமக்கு ஆகாயத்தில் நின்றும் பெய்யாநின்ற மழைஜலமே அபிஷேக தீர்த்தமாகவேண்டும்; மனிதரால் ஜலம் கொண்டுவந்து உமக்கபிஷேகஞ் செய்தல் இயலாது; ஆகாயத்திற் றோன்றும் நக்ஷத்திரக் கூட்டங்களே உமக்கு முத்துமாலையாகவேண்டும்; மனிதரால் வேறு முத்துமாலை கொண்டுவந்து உமக்குச் சூட்டுதல் இயலாது; சூரிய கிரணமே உமக்குத் தீபமாகவேண்டும்; மனிதரால் உமக்கு வேறே தீபம் காட்டுதல் இயலாது; ஆகையினாலே உமக்கு நாங்களும் மற்றவர்களும் அபிஷேகம் முதலானவைகளைச் செய்து பூசனை புரிவதற்கு யோக்கியமாக நீர் இந்த மலையின்கீழ் ஓர் இலிங்கவடிவமாக எழுந்தருளவேண்டும்,' என்று கேட்டுக்கொண்டார்கள். அதன்மேல், அந்த அருணாசலேசுவரர், அவர்களை நோக்கி, 'பக்திமான்களே! உங்கள் விருப்பப்படியே நான் இங்கு இலிங்கவடிவமாக எழுந்தருளுகின்றேன்; நீங்கள் அந்த இலிங்கத்தின் மூலமாக என்னைப் பூசித்து வழிபடுவீராக,' என்று சொல்லி அந்த மலையினுள்ளே தம்முடைய திருக்கோலத்தை மறைத்தருளினார். அவ்வாறு மறைத்தருளியவுடனே எல்லோரும் புகழும்படி அவ்விடத்தில் அந்தப் பரமசிவமூர்த்தியின் கிருபையினாலே ஓர் இலிங்கம் தோன்றிற்று.

அவ்வாறு தோன்றியவுடனே பிரமாவும், விஷ்ணுவும் அந்த இலிங்கத்தைக் கண்டு வணங்கித் தோத்திரஞ் செய்து, புஷ்பமாரி பொழிந்து, தேகம் பரவசமாய்ச் சந்தோஷமடைந்து, ஆனந்தக் கூத்தாடி, உடனே அந்த இலிங்கத்திற்குத் திருக்கோயிலமைக்கக் கருதி மயனென்கிற தேவதச்சனை அழைத்து, அவனால் ஒப்பில்லாத கோபுரங்களும், மண்டபங்களும், அழகு பொருந்திய மதில்களும், அடங்கிய பெரிய கோவிலைக் கட்டுவித்து, ஒருகாலத்து மழியாத வளப்பமுள்ள நகரத்தையும், அதில் முந்நூற்றறுபது வகையாகிய



தீர்த்தங்களையும் உண்டாக்குவித்தார்கள். அங்கே வற்றாத ஜலத்தையுடைய ஆகாய கங்கையே கிணறுகளும் தடாகங்களுமாயின; பஞ்சதருக்களே மரங்களாயின; தேவர்களும் ரிஷிகளும் அந்நகரத்தில் மனிதர் வடிவங்கொண்டு பிறந்தார்கள்; அரம்பாஸ்திரீகளே விஷம்பொருந்திய கண்களையுடைய தாசிகளாகப் பிறந்தார்கள். இவ்வாறு அந்நகரத்தில் மனிதர்களும், மாடமாளிகை கூடகோபுரங்களும், சோலைகளும், தீர்த்தங்களும், வாவிகளும், கூபங்களும், மற்றுமுள்ளவைகளும் உண்டானபின்பு, பிரமாவும் விஷ்ணுவும் அந்நகரத்தை நோக்கி, 'இது பரமசிவன், எழுந்தருளியிருப்பதற்கு யோக்கியமான நகரந்தான்,' என்று சந்தோஷித்து அன்றுமுதல் தினந்தோறும், காலையிலெழுந்து அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களிலே முழுகி, மரவுரி தரித்துக்கொண்டு, சிவந்தசடையைக் கட்டி, விபூதியைத் தேகமெல்லாம் பூசி, உருத்திராக்கமாலை அணிந்து, திருமஞ்சனத்தினாலும், சந்தனத்தினாலும், மற்ற அபிஷேக வஸ்துக்களினாலும் அங்குள்ள சிவலிங்கத்திற்கு அபிஷேகஞ் செய்து, மாலை முதலியவற்றைச் சாத்தி, பக்தியோடு பூசனைபுரிந்து, பலஸ்தோத்திரங்களைப் பாடி, அந்தத் திருவண்ணாமலையைப் பிரதக்ஷணஞ் செய்து வணங்கிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு அருணாசலேசுரரைப் பூசித்துக்கொண்டிருந்த அவ்விருவரும் பதினாலாயிரம் வருடங்கள் வரை அந்நியமத்திலேயே யிருந்து, அந்த வருடங்கள் கழிந்தபின்னர், மிக்க புனிதமுடையவர்களாய், அருணாசலேசுரரை வணங்கி, அவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, தங்கள் தங்கள் பதிகளிற் சென்று தங்கள் அதிகாரங்களைப் பெற்றுச் சிவசிந்தனையோடு சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு பிரமாவினாலும் விஷ்ணுவினாலும் பரமசிவமூர்த்தி ஆலைகொள்ளும்படி அவருக்குரியதாகத் திருவருணாசலத்தலம் அமைந்தபிறகு அவருக்குக் கைலைமலையிலிருக்கவேண்டுமென்னும் விருப்பமொழிந்தது. இது பொன்னுருவமாகவும் அமைந்ததாதலின், இதற்குத் தாழ்வான

அந்த வெள்ளிமலையில் அவருக்கு விருப்பமில்லாமற் போயிற்று. இன்னும் சப்த முத்தித்தலங்களாகிய காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, மதுரை, மாயா, அயோத்தி என்னும் ஏழுதலங்களும், தேவலோகமும், அருணாசலஸ்தலம் உண்டானபின், சூரியன் உதயமானவுடனே பிரகாசமிழந்த நக்ஷத்திரக் கூட்டங்கள்போல ஒளிமழுங்கிப்போயின. விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் தேடி அறிதற்கரிய பரமசிவமூர்த்தி எழுந்தருளப்பெற்ற இத்திருவண்ணாமலையின் சிறப்பு என்னைப்போன்றவரால் எடுத்துச் சொல்லும் தரமுடையதன்று. ஆயினும், நீர் விரும்பிக் கேட்டபடியினாலே எனக்குத் தெரிந்தவரையில் இவ்வருணையின் மகிமையிற் சிறிது உமக்குத் தெரியும்படிக் கூறினேன்; இனி யுமக்குத் தெரியவேண்டியது யாது? மார்க்கண்டேயரே! நீர் விரும்பியதைத் தெரிவிப்பீராயின், இனி அதனைக் கூறுகிறேன்," என்று சொன்னார். நந்திதேவர், இவ்வாறு கூறவே, மார்க்கண்டேயர் சந்தோஷத்துடனே அவரை நோக்கி, "சுவாமி! இப்போது உம்மால் கூறப்பட்ட அருணாசலத்தின் மகிமையைக் கேட்டு அளவற்ற ஆனந்தசாகரத்தில் மூழ்கினேன்; இனி, பார்வதிதேவியார் இமாசலத்தில் அவதாரம் செய்ததையும், சுவாமியை நோக்கித் தவஞ்செய்து அவரிடம் இடப்பாகம் பெற்றதையும் கேட்க விரும்புகின்றேன்; ஆதலின் இந்த விவரங்களையும் எனக்குக்கூறியருளவேண்டும்," என்று கேட்டுக்கொண்டார்.

இரண்டாவது
திருமலைச்சருக்கம் முற்றுப்பெற்றது.

---

மூன்றாவது

## பார்வதிதேவியார் திருவவதாரச் சருக்கம்.

மார்க்கண்டேயர் மேற்கண்டவாறு பார்வதிதேவியார் திருவவதாரமுதலியவற்றைக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே, நந்திதேவர் அவர் விருப்பப்படியே அவ்விஷயங்க-



ளைக் கூறத்தொடங்கினவராய், அவரை நோக்கி, "காலகாலனுடைய கிருபையைப்பெற்று அக்கிருபாவிசேஷத்தினால் ஜீவன்முக்த நிலையை அடைந்த மார்க்கண்டேய முனிவரே! முன்னாளிலே, பிரமனிடத்தில் புத்திரனாகப் பிறந்த தக்கனென்பவன், அரிய தவத்தைச் செய்து உயர்ந்த வரங்களைப் பெற்று மிகவும் பிரசித்தனாக வாழ்ந்து வந்தான். அப்படி வாழ்ந்து வருங்காலத்தில், அவன், சிவபெருமானை நோக்கிப் பற்பல வருடங்கள் வரை செய்தற்கரிய தவத்தைச் செய்து அகிலாண்டகோடிகளையெல்லாம் பெற்றருளிய லோகமாதாவாகிய உமாபரமேஸ்வரி, தனக்குப் புத்திரியாக அவதரிக்கும்படிக்கும், அந்த அம்மையாரைச் சிவபெருமானுக்கு மணம்புரிந்து கொடுத்துத் தான் அவருக்குரிய மாமனாகும்படிக்கும் வரம் பெற்று, அவ்வாறே பார்வதிதேவியார் தனக்குப் புத்திரியாகப் பிறக்க, அந்தப் பார்வதியைப் பரமசிவனுக்கு மணஞ்செய்துகொடுத்தான். அப்படி மணஞ்செய்துகொடுத்த காலத்தில், தக்கன் அகங்காரமுடையவனாய்த் தோற்றியபடியால், பரமசிவமூர்த்தி அவனுடைய அகங்காரத்தை நோக்கி, அங்கிருக்க மனம் பொருந்தாதவராய், அப்போதே திருமணக்கோலத்திருந்தவாறே மறைந்தருளினார். அப்படி மறையக்கண்ட தக்கன் அந்தச்சிவபெருமானைக் கோபித்துப் பலவாறு நிந்தித்தான். அவ்வாறு நிந்தித்த அவன் பின்னொருகாலத்தில், கைலைக்குச் சென்றால் தனக்கு மரியாதை நடக்குமென்று கருதி, உடனே கைலயங்கிரியை அடைந்து, சிவபெருமானுடைய சபைக்குட் புகுந்தான்; அப்போது சிவபெருமான் எழுந்து அவனுக்கு மரியாதை செய்யாமலிருந்தனர்; அதனாலவன் கடுஞ்சினமடைந்து சிவபெருமானைத் தூஷணையாகப் பேசத்தலைப்பட்டான். அவ்வாறு அவன் பேசவே, சிவகணங்கள் கோபித்து, அவனைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள்.

அதன்மேல் மேற்கூறியபடி தள்ளுண்டு சிவசபையை விட்டு வெளியேறிய தக்கன், முன்னினும் மிகுதியான கோபத்

தையும் அவமானத்தையு மடைந்து, உடனே தன்னிருப்பிடஞ் சேர்ந்து, சிவனைப்பார்க்கிலும் தான் மிக்க உயர்ச்சியை அடைய வேண்டுமென்னும் விருப்ப முடையவனாய், அதன்பொருட்டுப் பன்னிரண்டு சூரியர்கள், பதினோரு ருத்திரர்கள், சப்தரிஷிகள், அஷ்டதிக்குபாலகர்கள், நாகர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள், சித்தர்கள், யக்ஷர்கள், தேவர்கள், முனிவர்கள், பிரமன், விஷ்ணு, சரஸ்வதி, இலக்குமி முதலியவர்களையெல்லாம் வசப்படுத்தித் தன்னோடு சேர்த்துக்கொண்டு, அவர்களெல்லோரும் தன்னைச் சூழவிருந்து, எவராலும் நிறைவேற்ற முடியாத பெரிய யாகத்தைச் செய்யத்தொடங்கினான். அவன் அவ்வாறு தொடங்கி யாகஞ் செய்யுங்காலத்தில், பார்வதி தேவியானவள் அவன் அப்படி யாகஞ்செய்வதைக் கேள்விப்பட்டு, அதைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பமுடையவளாய்ப் பரமசிவனிடத்தில், 'சுவாமி! என்னுடைய தகப்பன் செய்யும் யாகத்தைப் பார்த்து வரவேண்டுமென்னும் விருப்பம் என் மனத்தில் உண்டாயிருக்கின்றது; ஆதலால் அங்குப் போய் அதனைப் பார்த்து வரும்படி எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும்,' என்று கேட்க, உடனே சிவபெருமான் பார்வதியை நோக்கி, 'தேவியே! உன்னுடைய தகப்பனாகிய தக்கன் சற்றும் புத்தியில்லாமல், முன்னே என்னைப் பலவாறு நிந்தித்துப் பேசியிருக்கின்றானே; அப்படியிருக்க, நீ இச்சமயம் அவனால் செய்யப்படும் யாகத்திற்குச் செல்லுதல் அழகாமா!' என்று கூறியருளினார். அப்போது பார்வதிதேவியார் அவரை நோக்கி, 'சுவாமி! என் தகப்பன் உமக்கு மிகுந்த அபசாரத்தைச் செய்திருந்தபோதிலும் அடியாள் பொருட்டாக அதனை மனங்கொள்ளாமல் மன்னித்து அங்குப் போய்வரும்படி இப்போது எனக்கு உத்தரவு கொடுத்தருளவேண்டும்,' என்று கேட்டுக்கொண்டனள். அதன்மேல் சிவபெருமான் புன்னகைகொண்டு பார்வதிதேவியாரைப் பார்த்து, 'பெண்ணே! உன்னிஷ்டப்படியே நீ சென்று உன் தகப்பனுடைய யாகத்தைப் பார்த்துச் சீக்கிரம் திரும்பிவந்து சேருவாயாக,' என்று உத்தரவு கொடுத்தருளினார்.



பின்னர் அவ்வாறு உத்தரவு பெற்றுக்கொண்ட பார்வதி தேவியானவள், தன்னுடைய விருப்பப்படியே தன் தகப்பனாகிய தக்கனது யாகசாலைக்குப் போய், அவன் பக்கத்தி லிருந்தவளும், தன்னை வளர்த்த தாயுமாகிய வேதவல்லியைக்கண்டு வணங்கினாள்; அவ்வாறு வணங்கியும் அந்த வேதவல்லியானவள் பார்வதியைத் தழுவி அவளுக்கு உபசாரவார்த்தைகள் கூறாதிருந்தாள். அப்படி யிருக்கவே பார்வதி அவள்மீது வெறுப்புற்று, அவளைத் தள்ளிப் பின்னர் தன் தந்தையாகிய தக்கனைக் கண்டு அவனுக்கு நமஸ்காரஞ் செய்தாள். அவ்வாறு செய்யும்போது அந்தப் பாதகனும் அவ்வந்தனத்தை ஏற்றுக்கொள்ளாமலும் பார்வதிக்கு உபசாரவார்த்தைகள் கூறாமலும் அந்தப்பார்வதியையும் அவளுடைய நாயகராகிய சிவபெருமானையும் பலவாறு நிந்தித்துப் பேசி வாய்க்கு வந்தபடி பிதற்றினான். அவன் அப்படிப் பேசக் கேட்ட பார்வதியானவள் செவிகளை மூடிக்கொண்டு தக்கனை நோக்கி, 'தந்தையே! நான் உம்முடைய யாகத்தைப் பார்க்க விருப்பங்கொண்டு வந்து உம்மையும், என் தாயையும் கண்டு அன்புடன் வணங்கியும் நீங்கள் உபசார வார்த்தை ஒன்றுங் கூறாதிருந்துவிட்டீர்கள்; அன்றியும் நீர், என்னையும் நிந்தித்துப் பேசியதோடு உலகத்திற்கெல்லா முதல்வராகிய என்னுடைய நாயகரையும் மருமகனென்று கருதாமல் மரியாதையின்றி நிந்தித்துப் பேசினீர்; என்னைப் பேசினதால் ஒன்றுந் தோஷமில்லை; அதனை நான் பொறுத்துக்கொள்வேன்; அவரைப் பேசினது மகா பாதகமாகும்; ஆதலால், அதனைச் சிறிதும் சகியேன்; நீர் இவ்வாறு பரமசிவனை நிந்தித்தபடியால் மகாபாதகராவீர்; உம்முடைய இந்த யாகசாலையானது பேய்கள் மகிழ்ந்த சுடுகாடாகப் போகக்கடவது; உம்மோடு சேர்ந்து சிவநிந்தனையைக் கேட்டுச் சகித்திருந்தபடியால் இங்குக் கூடியிருக்கும் தேவர்கள் எல்லோரும் பாதகராய் அழியக்கடவர்,' என்று சபித்துவிட்டு மிகுந்த கோபத்துடன் திரும்பிக் கைலையைச் சார்ந்து கண்ணுதலைக் கண்டு வணங்கினாள்.

இவ்வாறு பார்வதிதேவி திரும்பிவந்து பரமசிவனைக் கண்டு பணிந்தவுடனே, அவர், அந்தப் பார்வதிதேவியார் தக்கனிடம் அவமான மடைந்து மிக்க கோபத்துடன் துக்கங்கொண்டு திரும்பி வந்திருப்பதை யுணர்ந்தார்; அதனால் அவருக்கு அடங்காக் கோபமுண்டாயது; அக்கினியிற் சூடுபோலத் தம்முடன் அபேதமாயிருந்த தேவியாரை அவமானப் படுத்தியதை முன்னிட்டுச் சிவனுக்கு இவ்வாறு கோபம் அதிகரித்தால் அந்தத் தக்கன் பிழைப்பானோ? ஒருகாலு மில்லை. மேற்கூறியபடி தக்கன் நாசத்தை அடைவதற்கேதுவான கோபம் அதிகரித்தவுடனே அந்தச் சிவனுடைய சிரசிற் சூட்டப்பெற்றிருந்த குளிர்ச்சிபொருந்திய சந்திரனும் அக்கினி சொரூபமாய் மிகுந்த உஷ்ணத்தை அடைந்து நெருப்புக்கிரணங்களை வீசத்தலைப்பட்டது. அதனால் அவர் மிகுந்த தாபத்தை அடைந்து, 'இந்தத் தக்கனென்கிற பாவியினாலல்லவோ இத்துன்பம் நேர்ந்தது; இந்தப் பாவியை விரைவில் ஒழித்துவிடுகின்றேன்,' என்று சொல்லி முன்னினுங் கோபம் அதிகரித்து, உடனே ஆயிரம் முகங்களையுடைய உக்கிரவடிவத்தை எடுத்தருளினார். அவ்வாறு வடிவெடுத்தவுடனே அவருக் கதிகரித்த கோபத்தினாலே அவருடைய நெற்றிக்கண்ணினின்றும் அக்கினிப்பொறிகள் சிதறத் தொடங்கின. அச்சமயத்தில், அக்கண்ணினின்றும் ஆயிரம் திருமுடிகளும், செவ்வானம்போன்ற மேனியும், மகா உக்கிரமும், மூன்று கண்களும், சிவந்த ஜடாமுடியும், இரணியனைக் கொன்ற நரசிங்கத்தின் தோலாகிய உத்தரீயமும், புலித்தோலாகிய கச்சையுமுடையவராய், வாயானது நஞ்சைக் கக்கி இடிமுழக்கம்போன்ற சப்தத்தைச் செய்ய, நெற்றிக்கண் கொதிக்கக் கூப்பிய கரத்துடன் எம்மையாளுகிய வீரபத்திரக்கடவுள் தோன்றி, உடனே சிவபெருமானை வணங்கி, அவரை நோக்கி, 'ஐயனே! என்னை யழைத்த காரணமியாது?' என்று வினவினார்.

அப்படி வினவிய வீரபத்திரரை நோக்கிச் சிவபெருமான், 'என்னுடைய குமாரனே! தக்கன் எனக்கு விரோத



மாக யாகஞ் செய்கின்றான்; ஆதலால், நீ உலகத்தைப் பொழியாமல் நெருப்புக்களைக் கக்கும் மேகத்தைப்போலக் கோபக் கனல் சிதறச் சீக்கிரத்திற் சென்று அவனால் செய்யப்படும் அந்த யாகத்தை அழித்துவருவாயாக,' என்று கட்டளையிட்டனர். அவ்வாறு கட்டளையிட்டவுடனே, வீரபத்திரக்கடவுள் சிறிதுந் தாமதியாமல், அக்கணத்திலேயே அதிக சந்தோஷத்துடன் சிவபெருமானுடைய பாதங்களைத் தொழுது, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, பக்கத்தில் நின்ற பூதகணங்களும், பேய்க் கூட்டங்களுஞ் சூழ்ந்து, அவற்றுள் பத்துப் பூதங்கள் அநந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்னும் அஷ்டமாநாகங்களை மாலையாகத் தரித்துநீலவருணமான ஆலவட்டம் வீசிக்கொண்டுவரவும், வெள்ளைச் சட்டை யணிந்த நான்கு பூதங்கள் அஷ்டதிக்குகளினு மிருக்கின்ற ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபௌமம், சுப்ரதீபம் என்னும் எட்டு யானைகளையுங் குண்டலங்களாகத் தரித்துக்கொண்டு, சாமரம் வீசவும், வடவாமுகாக்கினியைப்போல் குடிகொண்டிருக்கும் வயிற்றுப் பசியானது தணியும்பொருட்டு மேகங்களைப் பிழிந்து குடித்து அதனை ஆற்றிக்கொள்ளுகின்ற இரண்டாயிரம் பேய்கள் எக்காளம் பிடிக்கவும், சந்திரனை இரண்டாகப் பிளந்து இரண்டு கடைவாய்களினும் வைத்ததுபோல் விளங்கும் வக்கிர தந்தங்களையுடைய ஆயிரம் பூதங்கள் முத்துக் குடைகளைப் பிடிக்கவும், இறந்திறந்து பிறக்கின்ற அநேககோடி விஷ்ணுக்களுடைய கைகளிலிருந்த சங்குகளை அநேகம் பூதங்கள் வாயில் வைத்தூதிவரவும், இறந்துபோன அக்கினி, வாயு ஆகியவர்களேறுகின்ற ஆட்டுக்கடா கலைமான் ஆகியவற்றின் கொம்புகளை வாயில் வைத்து அநேக பூதங்கள் ஊதிவரவும், மாண்டுபோன பல எமராஜர்களேறிய எருமைக்கடாக்களுடைய கொம்புகளை வாயில் வைத்து அநேக பூதங்கள் ஊதிவரவும், வலிமை பொருந்திய ஆயிரம் யானைகளால் இழுக்கப்பட்ட தேரின்மீதேறிப் புறப்பட்டார்.

அப்படி அவர் தேரின்மேலேறிப் புறப்பட்டபோது சில பூதங்கள் யானைரூபங் கொண்டன; சில பூதங்கள் தேரினுருவங் கொண்டன; சில பூதங்கள் குதிரைவடிவெடுத்தன; சில பூதங்கள் மனிதர்கள் வடிவெடுத்தன; சில பூதங்கள் தேவர் வடிவெடுத்தன; இன்னும் எண்ணில்லாத பல பேய்கள் எண்ணிறந்த பல ரூபங்களை எடுத்தன. இவ்வாறு பூதங்களும் பேய்களும் பற்பல ரூபங்களைக் கொண்டு சூழ்ந்து யுத்தம் செய்யும்பொருட்டு அந்த வீரபத்திரக்கடவுளுடன் சென்றபோது அவருக்கு முன்னே நடந்த பலபூதங்கள் தாகவிடாய் கொண்டு உப்புக்கடல், தேன்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், பாற்கடல், சுத்த நீர்க்கடல் என்னும் சப்த சமுத்திரங்களையும் குடித்து விடாய் தணியாமற்றிரும்பின; சில பூதங்கள், தங்களுக்கு அதிகரித்த பசியினால், பாரமாகிய ஏழுலகங்களையும் சாப்பிட்டும் அந்தப் பசி தணியாமல் கூர்மை பொருந்திய வேலாயுதங்களைப் பிரயோகித்து எமனுடைய நாட்டையுங்கொள்ளைகொண்டன; சில பூதங்கள் சப்த மேகங்களையும் பிடித்துச் சிவந்த தலைமயிரிலே சுற்றிக் கட்டிக்கொண்டன; சில பூதங்கள் அநேக பிரமாண்டங்களைப் புகையும்படி நெருப்பினால் கொளுத்தின; சில பூதங்கள் எட்டுத் திக்குகளிலு மோடி, 'தக்கனுடைய யாகசாலையெங்கே யெங்கே?' என்று தேடின; சில பூதங்கள் கைகளைக் கொட்டிக்கொண்டு பிரசண்ட வாயுவைப்போல வேகமாக வீரபத்திரருக்குப் பின்னே யோடின; சில பூதங்கள் சமுத்திரம் போன்ற மதுவைப் பானஞ்செய்து அதனால் வீரம் அதிகரித்துச் சண்டையில் ஆவலோடு சென்றன; சில பூதங்கள் துள்ளிக்கொண்டு உலகமெல்லாம் சுற்றிவந்தன; சில பூதங்கள், 'நம்முடைய சுவாமியாகிய சிவனை நிந்தை செய்தவனெவன்? அவனை இப்பொழுதே கொல்லுவோம்,' என்று சொல்லிக் கோபநகை செய்தன; சில பூதங்கள் மதுமயக்கத்தால் நித்திரை செய்வதுபோல் தள்ளாடிக்கொண்டு சென்றன; சில பூதங்கள் அன்புடனே சிவஸ்தோத்திரங்களைப் பாடிக்கொண்டு சென்றன.



இவ்வாறு பூதக் கூட்டங்களெல்லாம் பலவிதமான விநோதச் செய்கைகளைச் செய்துகொண்டு நான்குபுறத்திலும் சூழ்ந்துகொண்டு செல்ல, மேற்கூறியபடி தேரின்மேலேறிய வீரபத்திரக்கடவுள் அவ்விடத்தில் நின்றும் புறப்பட்டு, புல்லாங்குழல், சிலம்பு, முரசு, சங்கம், உடுக்கை, பெரியமணி, தவண்டை, மிருதங்கம் முதலிய வாத்திய சப்தங்களுடனே சென்று தக்கனுடைய யாகசாலையைக் கண்டார். அங்ஙனமவர் யாகசாலையிற் போய்ச் சேர்ந்தவுடனே அநேக பூதக்கூட்டங்கள் திரண்டு அந்த யாகசாலையிற் கூடியிருந்த அதிதியினுடைய பிள்ளைகளாகிய தேவர்களைக் கைகளால் வாரி வீசி எறிந்தார்கள். அப்போது மேகவாகனனாகிய தேவேந்திரனும், ஆட்டுக்கடாவின் மேலேறுகின்ற அக்கினியும், எருமைக்கடாவின் மேலேறுகின்ற எமனும், பேய்வாகனனாகிய நிருதியும், மகரவாகனனாகிய வருணனும், மானைவாகனமாகவுடைய வாயுபகவானும், அளகாபுரியை ஆளுகின்ற குபேரனும், எருதை வாகனமாகவுடைய ஈசானனும் ஆகிய அஷ்டதிக்குப்பாலகர்களும், தங்கள் தங்களுக்குரிய தேர்களின்மேலேறி மேற்கூறியபடி தேவர்களை வாரியெறிந்த வீரபத்திருடைய பூதகணங்களோடு எதிர்த்து அக்கணங்களின் தலைவர்கள்மீது பாணம், சூலாயுதம், வேல், உலக்கை, வச்சிராயுதம், மழு, கத்தி ஆகியவைகளைப் பிரயோகஞ் செய்தார்கள். அப்படி அவர்கள் ஆயுதப் பிரயோகஞ் செய்யவே, வீரபத்திருடைய பூதக்கூட்டங்களுள் எட்டுப் பூதங்கள் மிகுந்த வீராவேசத்தோடு முன்னேறிச் சென்று அந்த அஷ்டதிக்குப்பாலகர்களையும் அவர்களுடைய வாகனங்களையும் அம்மானையாடுவதுபோல எடுத்தெறிந்தன. அப்போது அந்தத் திக்குப்பாலகர்கள் கீழே விழுந்து விழுந்து மிகுந்த கஷ்டத்தை அடைந்தார்கள். அப்படி அவர்கள் கஷ்டத்தை அடைந்தும் மீண்டும் தைரியங்கொண்டெழுந்து, அந்த எட்டுப் பூதங்களும் கீழே விழவும், மற்றப் பூதங்களெல்லாம் ஓடிப்போகவும் கடுமையான யுத்தஞ் செய்து வெற்றிமாலையைச் சூட்டிக்கொண்டார்கள். அங்ஙனம் அவர்கள் வெற்றி

மாலையைச் சூடியதைக் கண்ட வீரபத்திரக்கடவுள், உடனே கோபத்தோடு எட்டுப்பாணங்களை அவர்கள்மீது ஏவினார். அந்த எட்டுப்பாணங்களும் மிகுந்த வேகங்கொண்டு சென்று அந்த அஷ்டதிக்குப்பாலகர்மீது பாய்ந்து, அவர்களுடல்களைத் துளைத்து, அவ்வுடல்களுள்ளிருந்த உதிரத்தைப் புசித்துச் சஞ்சரித்தன.

அவ்வாறு செய்யவே தேவேந்திரன் தன் வாகனத்தை விட்டுக் குதித்துக் குயில்வடிவங்கொண்டு ஓடினான்; ஈசானன், குபேரன், நிருதி, வாயு, வருணன் ஆகிய இவர்கள் மிகுந்த தோல்வியடைந்து தங்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு அவமானத்தை யடைந்தார்கள். எமன் உயிர்விட்டான். அக்கினிபகவான் ஏழு கைகளும் அறுபட்டு விழுந்தான். அதன்மேல் அந்த வீரபத்திரக்கடவுள் யாகசாலைக்குச் சமீபத்திற் போய்த் தம்மைக் கண்டு அளவில்லாத பயங்கொண்டிருந்த யாககர்த்தாவாகிய கலைக்கோட்டுமகாரிஷியை, அவருடைய பிராணனும் தேகமும் வேறாகும்படி ஆயுதப்பிரயோகஞ் செய்து கொன்று, அவரின் உடற்றோலை உரித்தெறிந்தார். பார்வதியின் தாயும் தக்கன் மனைவியுமாகிய வேதவல்லியின் இரண்டு காதுகளையும் அறுத்துத் தள்ளிப் பரமசிவனுடைய மாமனாகிய தக்கனிடத்திற் சென்று அவனோடு எதிர்த்தார். அப்படி எதிர்க்கவே தக்கனும் தேவர்களோடு கூடிச் சோமபானஞ் செய்வதை நீக்கித் தனக்கு வீரமே பானமாகும்படி உடனே யாகசாலையிற் புகுந்து யாகத்தம்பத்தைப் பிடுங்கிக்கொண்டு அந்த வீரபத்திரக் கடவுளோ டெதிர்த்தான். அப்படி எதிர்த்தமாத்திரத்தில் வீரபத்திரக்கடவுள், அவ்வாறு எதிர்த்த தக்கனுடைய மலைபோன்ற தலையைக் கீழே விழும்படி அறுத்துத் தள்ளினார்; அச்சமயத்திற் பூதகணங்களிற் சேர்ந்த ஒரு பெரிய பூதம் ஓடிவந்து அந்தத் தலையை அரைநொடியில் தின்றுவிட்டது; பின்னும் அந்த வீரபத்திரர் தக்கன் படையை நோக்கி வலிமை பொருந்திய ஒரு சூலாயுதத்தை விடுத்தார்; அந்தச்



சூலமானது மிக்க வேகங்கொண்டு சென்று மாடுகளிலேறுகின்ற உருத்திரர்களுடைய பிராணன்களையும், அஷ்டவசுக்களின் உயிர்களையும், மருத்துவர்கள் உயிர்களையும், குரங்குகளைப்போல ஒளித்துப் பதுங்கியிருந்த முனிவர்களுடைய உயிர்களையும் போக்கிவிட்டது. பின்னரும் வீரபத்திரர் கடுஞ்சினமடைந்து சூரியனுடைய பற்களும் கண்களும் தெறித்துக் கீழேவிழும்படி அவனை அடித்து, சரஸ்வதியைப் பிடித்து அவளுடைய நாவை இரண்டாகும்படி அரிந்தார். இலக்குமியின் மூக்கை அறுத்துவிட்டார். வீரகண்டாமணியைத் தரித்த தம்முடைய காலினாலே சந்திரனை மிதித்து நசுக்கித் தள்ளினார். அப்போது அவன் உடல் சிதைந்து அந்த வீரபத்திரக்கடவுள் யாகசாலையின் நெருப்பை மிதித்ததனால் ஏற்பட்ட வெப்பம் தீரும்படி தம்முடைய காலில் அப்பிய வெண்ணெய்போற் கட்டுவிட்டு ரூபமில்லாமற்போயினான்.

இவ்வாறு வீரபத்திரக்கடவுளும் பூதகணங்களும் பயங்கரமான யுத்தஞ் செய்தபடியினாலே, பல தேவர்களும் மற்றவர்களும் பற்பலவிதமாக உடல் சிதைந் திறந்தும் மறுபடியும் அவர்கள் பைசாசங்களாகி முன்னிலும் அதிகமான வீரத்தோடு திரண்டு யுத்தஞ் செய்தார்கள். அப்படி அவர்கள் மாயமாகத் தோன்றியெழுந்து சண்டை செய்யவே அவர்களையும் வீரபத்திரக்கடவுளுடைய சேனைத் தலைவர்கள் அடித்துக் கொன்றுவிட்டார்கள். ஆகையால், அந்தத் தேவர் முதலியோர் பேய்களாகியும் அவர்களுக் கேற்பட்ட துக்கம் நீங்கவில்லை; இன்னும் வீரபத்திரர் செய்த கொடிய யுத்தத்தினாலே தக்கனுடைய யாகசாலை முழுவதும் அழிந்து நாசமாயிற்று. ஆயினும், அந்த யாகத்திற்கு உபயோகமாக வைக்கப்பட்டிருந்த சோற்றையும், எள்ளையும், பொரியையும் ஒரு பூதம் வாயிற்கொண்டு நெய்க்குடங்களை எடுத்து மடமடவென்று குடித்து நின்றபடியினாலே அதனுடைய வயிறு ஒரு ஓமகுன்றம்போல அங்கு விளங்கிற்று; அதனுடைய உதராக்கினி யாகத்தீயாக விளங்கிற்று. இஃதன்றி அஷ்டதிக்கு

பாலகரும், அஷ்டவசுக்களும், தலைவராக வந்த குருக்களும், கூட்டமாகிய முப்பத்துமுக்கோடி தேவர்களும் அவ்விடத்தில் இறந்தபோது அவர்களுடைய தேகங்கள் வீணாகப் போகாமல் அவற்றை வீரபத்திரருடைய சேனையிலுள்ள அநேகம் பூதங்கள் எடுத்து விழுங்கிவிட்டபடியினாலே அந்தப் பூதங்களின் வயிறுகளும் தேவர்கள் நிறைந்த யாகசாலையை யொத்துவிளங்கின. இன்னும் கற்பகாலத்திலும் அழிவில்லாத வீரபத்திரருடைய பூதகணங்கள் மிதித்தபடியினாலே அற்பமாகிய தேவர்களுடைய உடம்புகள் நசுங்கி அவற்றினின்றும் பீரிட்டோடிய உதிரமானது யாகத்திற்குச் சொரியும் நெய்யைப்போன்றிருந்தது. பற்பல யட்சர்களுடையவும், சித்தர்களுடையவும் வயிறுகள் பிதுங்கி அவர்களுடைய குடல்கள் வெளிப்பட்டு அங்கே கொடிகளைப்போலச் சிந்திக் கிடந்த தோற்றமானது தக்கன் சர்ப்பயாகஞ்செய்ததை யொத்திருந்தது.

இப்படித் தேவர்கள் முதலிய எல்லோரும் அந்த யுத்தத்தில் இறந்து நாசமாகவே பிரமதேவன் ஒரு பக்கத்தில் மறைந்திருந்துகொண்டு அவர்கள் இறக்க இறக்க மீண்டும் மீண்டும் நொடிப்பொழுதில் அவர்களைச் சிருஷ்டித் தனுப்பிக்கொண்டே வந்தான். அதனால் அவர்கள் அடிக்கடி புதியவர்களாய்த் தோன்றி வீரபத்திரக்கடவுளோடு ஓயாமல் யுத்தஞ் செய்தார்கள். அப்படிச் செய்யவே வீரபத்திரக்கடவுள் அதிசயித்து, 'இவர்களெங்கேயிருந்து வருகிறார்கள்?' என்று ஆலோசித்து, அவர்களை மேற்கூறியபடி பிரமதேவன் படைத்தனுப்பும் இரகசியத்தை யுணர்ந்து, அத்தொழிலை அடியோடு தொலைத்துவிடக் கருதி, மிகுந்த வீராவேசத்தோடு அப்பொழுதே பிரமதேவன் மறைந்திருந்து சிருஷ்டிசெய்யுமிடத்திற்குச் சென்று, அவனைக் கண்டு, 'நான்முகனே! நீ என்னவேலை செய்கின்றாய்? உன்னுடைய சாமர்த்தியத்தை நானறிவேன்;' என்று சொல்லி உடனே ஆயுதத்தைப் பிரயோகஞ் செய்து அந்தப் பிரமனுடைய கைகளை அறுத்துத் தள்ளிப் பின்னும் மூன்று தலைகளையுடைய ஆயுதத்தை எவி அவனுடைய மனத்தி லுண்டான பத்துப் பிரமர்களுடைய தலைகளையும் சிதைத்துப் பூமியில் வீழ்த்தினர்.



இவ்வாறு வீரபத்திரக்கடவுள் பிரமனுடைய கைகளை அறுத்துத் தள்ளிய விதத்தைப் பார்த்து அண்டங்களை விழுங்கி மீண்டும் உமிழ்ந்த முதல்வனாகிய விஷ்ணுமூர்த்தி கடுஞ்சினமடைந்து அவனோடு சண்டை தொடுக்கும்பொருட்டு மேருவை நிகர்த்து விளங்கிய மூக்கையுடைய கருடவாகனத்தின்மேலேறிக்கொண்டுவந்து வீரபத்திரக்கடவுளுக்கு முன்னே நின்று அநேக பாணவருஷங்களை அவருடைய மார்பில் படும்படியாகப் பொழிந்தான். அப்படி அவனால் விடப்பட்ட பாணங்களையெல்லாம் வீரபத்திரக்கடவுள் தம்முடைய கைப்பாணத்தினாலே கண்டதுண்டங்களாக அறுத்தெறிந்தார். அவ்வாறு அறுத்தெறியவே, விஷ்ணு வில்யுத்தம் பண்ணுவதற்குச் சக்தியில்லாதவனாய் மிக்க கோபங்கொண்டு ஒரு கத்தியைக் கையிலெடுத்துச் சுழற்றி வீசினான். அச்சமயத்தில் வீரபத்திரக்கடவுள் ஒரு பாணத்தை எவி விஷ்ணு பிடித்திருந்த கத்தியை ஒடித்தெறிந்து மற்றொரு பாணத்தினால் அந்த விஷ்ணு ஏறியிருந்த கருடனைக் கொன்றுவிட்டார். அங்ஙனம் தன்னுடைய கைக்கத்தியும் வாகனமும் தொலையவே, விஷ்ணு மிகுந்த துக்கங்கொண்டு அதனால் உடல் கருகி உடனே சக்கரத்தை எடுத்து வீரபத்திரர்மீது பிரயோகஞ் செய்தான். அவன் கையினின்றும் விடுபட்ட அந்தச் சக்கரமானது விரைந்து சென்று பரமசிவனுடைய பாதங்களில் விழுந்து பணிந்தது. இஃதிவ்வாறு பணிந்ததற்குக் காரணம் யாதெனில், முன்னொரு காலத்தில் விஷ்ணு தினந்தோறும் ஆயிரம் தாமரைமலர்களைக் கொண்டு அருச்சித்துச் சிவனைப் பூசித்துவந்தான்; அப்படிப் பூசித்துவருகிறபோது அவனுடைய பக்தியைப் பரிசோதித் தறிதற்பொருட்டு அந்தப் பரமசிவன் ஒருதினம் அவன் அருச்சனைக்காக வைத்திருந்த ஆயிரம் தாமரை மலர்களில் ஒன்றை எடுத்து மறை

த்து வைத்தார்; அதன்மேல் விஷ்ணு மற்றத் தாமரை மலர்களை அருச்சித்துக்கொண்டுவந்து ஒரு புஷ்பம் குறைவதை யுணர்ந்து, உடனே வருத்தமுற்று அதற்குப் பதிலாகத் தாமரைமலரை நிகர்த்த தன்னுடைய கண்ணைப் பிடுங்கி அருச்சித்தான். அதனால் பரமசிவன் மிகுந்த சந்தோஷத்தை யடைந்து அவனுக்கு மேற்கூறிய சக்கராயுதத்தைக் கொடுத்தார். அது அவ்வாறு சிவனால் கொடுக்கப்பட்டபடியினாலே அவருக்கு விரோதஞ் செய்யச் சம்மதமில்லாமல் மேற்கூறியபடி அவர் பாதத்தில் விழுந்து பணிந்தது.

இப்படி அந்தச் சக்கரம் தனக் கனுகூலஞ் செய்யாமல் சிவனுடைய பாதத்தில் விழுந்து வணங்கவே, விஷ்ணு மனம் வருந்தி, ‘இனி இந்த வடிவத்தோடு நின்றால் நாம் பிழைக்கமாட்டோம்,’ என்று தன்னுடைய யதார்த்த வடிவத்தை யொழித்துப் பன்றியாகவும் சிங்கமாகவும் வடிவங்களைக் கொண்டு யுத்தஞ் செய்தான். அவ்வாறு செய்வதைக் கண்ட வீரபத்திரக்கடவுள் அந்த உருவங்களை வாளாயுதத்தாலும் வேலாயுதத்தாலும் கொன்றார். அதன்மேல் அந்த விஷ்ணு மிகவும் பயந்து மீனுருவமெடுத்துச் சமுத்திரத்திலே வீழ்ந்தொளித்தான்.

மண்ணையுண்ட மகாவிஷ்ணு மேற்கண்டபடி தோற்று மீன்வடிவங்கொண்டு சமுத்திரத்திற் பாய்ந்து ஒளிக்கவே, முன்னே கைகள் அறுபட்ட பிரமன் நான்குதலைகளும் அறுபட்டிறந்தான். எஞ்சிய தேவர்களும் வீரபத்திரக்கடவுளுடைய தண்டத்தால் அடியுண்டிறந்தார்கள். அவிர்ப்பாகஞ் சாப்பிட்டு மகிழ்ச்சி அடையும்பொருட்டு வந்த முனிசிரேஷ்டர்களும் அந்த வீரபத்திரக்கடவுளால் இறந்தார்கள்; அவ்விடத்திலுள்ள ஓமகுண்டமானது பூதகணங்கள் இறைச்சியை நிறைத்துச் சாப்பிடுவதற் கமைந்த ஒருபாத்திரம்போல் விளங்கிற்று.

இவ்வாறு வீரபத்திரக்கடவுளால் தக்கனுடைய யாகசாலையும், அந்தத் தக்கனும், தேவர்கள், ரிஷிகள் முதலிய



மற்ற யாவரும் நாசமடையவே, அதன்மேல் வீரபத்திரர் கோபம் தணிந்து மனமகிழ்ச்சியுடனே திரும்பிக் கைலாயத்திற்குப்போய்ப்பரமசிவக்கடவுளைக்கண்டு அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி அவரிடத்தில் நடந்த சமாசாரங்களை யெல்லாம் தெரிவித்தார்; அப்படித் தெரிவித்தவுடனே சிவபெருமான், தக்கன் முதலிய எல்லோரும் நாசமடைந்ததை யுணர்ந்து தமக்கேற்பட்டிருந்த கோபமாறி, உடனே பார்வதிதேவியாரோடு அந்த யாகசாலை யிருந்த விடத்திற்குச் சென்று தக்கன் தவிர அங்கிறந்தவர்களெல்லோரையும் உயிர்த்தெழும்படி எழுப்பி, அவர்களை நோக்கி, ‘நீங்கள் எனக்கு விரோதஞ் செய்தமையினாலே இவ்வித கேட்டை அடைந்தீர்கள்; அவ்வாறடைந்தும் உங்கள்மீதேற்பட்ட கிருபையினாலே உங்களை மீண்டும் பிழைப்பித்தேன்; ஆதலால், இனிமேல் நீங்கள், உங்கள் இடங்களுக்குச் சென்று புத்தியோடு பிழைப்பீராக!” என்று கூறினார். உடனே அவர்களெல்லோரும், சிவபெருமானுடைய தாமரைமலர்போன்ற பாதங்களில் வீழ்ந்து பன்முறை வணங்கி மிகுந்த பயபக்தியுடனே அவர் திருமுகத்தை நோக்கி, ‘சுவாமி! அடிமைகளாகிய நாங்கள் அறியாமையாற் செய்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்; இனிமேல் எக்காலத்திலும் உமக்கு விரோதமான காரியத்தைக் கனவிலும் கருதிச் செய்யோம், என்று கூறி விடை பெற்றுக்கொண்டு தங்கள் தங்க ளிருப்பிடஞ் சேர்ந்தார்கள். பின்னர், பார்வதியைப் பெற்ற தக்கன் மிகுந்த சிவநிந்தை செய்தவனானபடியினாலே சிவபெருமான் அவன் நிந்தை செய்ததற்கு அபராத அடையாளமாக அறுபட்டுக் கிடந்த ஓராட்டுத்தலையை எடுத்து அவனுடலில் வைத்துப்பொருத்தி அவனுக்குயிர்கொடுத்து அவனை எழுந்திருக்கும்படி செய்தார்.

அதன்மேல் பார்வதிதேவியார், ‘சிவநிந்தை புரிந்த இந்தத் தக்கனுக்கு நாம் மகளாகப் பிறந்து தாக்ஷாயணியென்னும் பெயருடனிருக்கும்பக்ஷத்தில் உலகத்தார் நம்

மை நிந்திப்பார்கள்; ஆகையினால் நாமிந்தத் தேகத்தை யொழித்து இவனுக்கு மகளென்பதையும் நீக்கி வேறு தேகத்தை யெடுத்துக்கொள்ளவேண்டும்,' என்று கருதி உடனே சிவபெருமானிடத்தில் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்து, அவருடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டு, அதன்மேல் யோகாக்கினியினாலே தன்னுடைய தேகத்தை யொழித்து, மலையரசனும், முன்னே மைநாகனென்கிற பிள்ளையைப் பெற்ற அவனுடைய மனைவியாகிய மேனையும் செய்த தபோமகிமையினாலே அவர்களுக்குப் புத்திரியாயவதரித்து அவர்கள் தவஞ்செய்துகொண்டிருந்த இடத்தில் ஒரு தாமரைமலர்மீது கிடந்தாள். அப்போது தேவர்கள் கற்பகப் பூமாரி பொழிந்தார்கள். அவ்வாறு தேவர்கள் புஷ்பமாரி பொழியத் தாமரைமலர்மீது உற்பத்தியாகிக் கிடந்த பார்வதியை அங்குத் தவஞ்செய்துகொண்டிருந்த மலையரசனும் அவனுடைய மனைவியாகிய மேனையும் கண்டு அளவில்லா ஆனந்தங்கொண்டு அவளை அன்புடனெடுத்தார்கள். அப்படி எடுத்தமாத்திரத்தில் அவர்கள் அடைந்த பெருமைக்கு அளவேயில்லை. சித்தாந்தமாகச் சொல்லப்பட்ட சிவனிடத்தில் ஒன்றுபட்ட அபின்னசத்தியாய்ப் பின்பு அச்சிவனிடத்தினின்றும் பின்னசத்தியென்று வேறுபட்டுப் பின்பு ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தியென மூன்று வகையாகிக் குடிலையினால் உண்டாகிய நாதவிந்துக்களுக்குக் கொழுகொம்பாகியும், சுவாமிக்கு மூத்தாகியும், பரமசிவனிடத்தில் உருத்திரன் - விஷ்ணு - பிரமன் முதலானவர்கள் உண்டாவதற்கு மூலவித்தாகியும், எவ்விடத்தும் நிறைந்த அந்தப் பார்வதியைப் புத்திரியாகப் பெற்ற அவர்களுக்கு மேற்கூறியபடி அளவற்ற பெருமை என்தா னுண்டாகமாட்டாது?

பின்னர் பார்வதியைக் கண்டெடுத்த மலையரசனும், மேனையும் மிகுந்த அன்பு பாராட்டி அவளை இன்பமாக வளர்த்து வந்தார்கள். அவ்வாறு வளர்த்துவரும்போது பார்வதிதேவி, வளர்பிறைச் சந்திரன்போல நாளுக்குநாள் விருத்தியடைந்து, மன்மதன் சிவனை வெல்லும்பொருட்டு வளர்த்துவரும் கரும்பை நிகர்த்து வளர்ந்து, கன்னிப்பருவமடைந்து, பல சாஸ்திரங்களையுங் கற்று, பந்து, கழங்கு, ஊஞ்சல், முதலிய விளையாட்டுக்களைச் செய்துகொண்டு மிகுந்த சந்தோஷத்துடன் தாய்தந்தையரிடத்தில் வசித்துவந்தாள். இப்படியிருக்குங் காலத்தில், வேதங்களை யுணர்ந்த நாரதமகாரிஷி ஒருதினம் மலையரசனிடத்தில் வந்து, உலகத்தை யெல்லாம் வயிற்றி லடக்கிவைத்திருந்த பார்வதிதேவியாருடைய இலக்ஷணத்தைப் பார்த்து, அவளிடம் உண்டாகும் விசேஷங்களை அந்த மலையரசனிடத்தில் சொல்லக்கருதி, உடனே அவனை நோக்கி, 'பருவதராஜனே! உம்முடைய குமாரத்தியினிடத்தில் சில விசேஷங்களுண்டாகப் போகின்றன; அவற்றைக் கூறுகின்றேன் கேளும்: இந்தப் பெண்ணிற்கு இன்னும் சில தினங்களில் நெற்றியின் ஒரு பக்கத்தில் அரைக்கண் தோன்றும்; ஒரு கையிற் சூலமுண்டாகும்; ஒருபக்கத்துத் தனம் மறைந்துபோகும்; பாதிச் சரீரத்தில் பச்சைநிறம் போய்ப் பவளநிற முண்டாகும்; கூந்தலிற் பாதி சடையாகும்; ஒரு கையில் வளைகளில்லாமற் போகும்,' என்று கூறினார்.



பர்வதராஜன் தன் மகளிடத்தி லுண்டாகப் போகும் இந்த விசேஷங்களைக் கேட்டவுடனே, 'பார்வதியே நமக்குப் பெண்ணாகப் பிறந்தாள்; இனி நமக்கென்ன குறை? இவ்வாறு பார்வதியே நமக்கு மகளாக வந்தபடியினாலே பரமசிவன் மருமகனாக வரவேண்டும்,' என்று உள்ளமுருகிச் சந்தோஷித்து மேற்கூறியபடி சிவன் தனக்கு மருமகனாக வேண்டுமென்னும் விருப்பத்தால் அவரைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்கும்போது பூமியின்மீது கங்கையை வேகமாகச் செலுத்திக்கொண்டிருக்கின்ற அந்த இமயமலைச் சாரலில் ஒருபக்கத்தில் ஏதோ ஒரு காரணத்தினால் சிவன் யோகத்தி லிருந்தார். அப்படி இவர்

யோகத்திலிருக்குஞ் சமயத்தில் மலையரசன் இவர் யோகங் கூடியிருக்கும் விசேஷத்தைக் கேள்விப்பட்டு உடனே தன் மகளாகிய பார்வதியையும், சில தோழிப்பெண்களையும் அழைத்துக்கொண்டுபோய்ச் சிவபெருமானைக் கண்டு, அவருக்கு நமஸ்காரம் புரிந்து, 'அவரிடத்தில் பார்வதியையும் தோழிப்பெண்களையும் நிறுத்தி, அவர்களை அவருக்குக் காட்டி அவரை நோக்கி, 'சுவாமி! நீர் யோகஞ்செய்துகொண்டிருக்குங் காலத்தில் உமக்குப் பணிவிடை செய்யும்பொருட்டு என் மகளையும் இந்தப் பெண்களையும் அழைத்து வந்தேன்; ஆகலால், நீர் இவர்களை ஒப்புக்கொள்ள வேண்டும்,' என்று சொல்ல, அவர் அவ்வாறே ஒப்புக்கொண்டார். அதன்மேல் மலையரசன் பார்வதி தேவியைத் தோழிப் பெண்களோடு அவரிடத்தில் விட்டுச் சென்றான். முன்னுரைத்தபடியே சிவபெருமான் யோகத்திலிருந்து தவஞ்செய்துகொண்டு வந்தார். எல்லாத் தேவர்களினு முயர்ந்த விஷ்ணு, பிரமா முதலியவர்கள் தம்மை நோக்கி அழிவில்லாத தவத்தைச் செய்தால் அத்தவத்திற்கு மகிழ்ந்து அவர்களுக்கு வேண்டிய வரத்தைக் கொடுக்கும் பரமசிவன் ஏதோ ஒரு காரணார்த்தமாக மேற்கூறியபடி தவஞ்செய்ய, அக்காலத்தில் மலையரசன் மகளாகிய பார்வதி தன்னுடைய தோழிப் பெண்களோடு சேர்ந்து கனிகள், தருப்பை, புஷ்பம், திருமஞ்சனம் முதலியவைகளைச் சிவனுக்குதவிப் பல பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தாள்.

இப்படியிருக்குங்காலத்தில், தேவர்கள், திரிபுரங்களின் அசுரர்களாகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்துந்மாலி என்னும் மூவர்க்கும் தந்தையாகிய தாரகாசுரனோ டெதிர்த்து யுத்தம் புரிந்து தங்களுடைய ஆயுதங்களெல்லாம் மழுங்கலெய்தத் தோல்வியடைந்து, மனவருத்தத்துடன் பிரமதேவனிடம் சென்று தங்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்ளும்பொருட்டு அவனைக் கண்டு வணங்கினார்கள். அப்போது அந்தப் பிரமதேவன் இந்திரன் முதலிய



தேவர்களுக்கு ஆசனங்களுதவி அவர்களை உட்காரும்படிச் செய்து அவர்கள் முகஞ்சோர்ந்திருப்பதையும், குங்குமம் பூசிய அவர்களுடைய தோள்கள் இளைத்திருப்பதையும், அவர்களின் ஆயுதங்களெல்லாம் மழுங்கிப்போயிருப்பதையும் பார்த்து, அவர்களை நோக்கி, 'ஏ தேவர்களே! உங்களில் இந்திரனுடைய வச்சிராயுதம் ஒடிந்தும், ஈசானனுடைய மழுவாயுதத்தின் வாய் மழுங்கியும், எமனுடைய சூலாயுதம் வளைந்தும், மற்றவர்களுடைய வலிமைபொருந்திய ஆயுதங்களெல்லாம் முறிந்தும், எல்லோருடைய மகுடங்களும் பிடுங்கப்பட்டும், தோள்கள் இளைத்தும், முகங்கள் வாடியும் நீங்கள் மிக்க வருத்தத்தை யடைந்து வந்திருக்கின்றீர்களே; இவ்வாறு வருத்தமடைந்ததற்குக் காரணமியாது?' என்று வினவினன். அப்போது இந்திரன் பிரமனை நோக்கி, 'நான்முகக்கடவுளே! நாங்கள் தாரகாசுரனோ டெதிர்த்து யுத்தம் புரிந்து இவ்விததுன்பத்தையடைந்தோம்; அவன் இவ்வாறு எங்களை மிகுந்த அவமானத்திற் குள்ளாக்கிவிட்டான்; ஆகலால், அவனை எவ்விதத்திலாவது வென்று எங்களுடைய அவமானத்தைத் தீர்த்துக்கொள்வதற்கான ஒரு வழியைப் பற்றி யோசிப்பதற்கு உம்மிடம் வந்தோம்; நீர் ஏதேனும் இதற்குத் தக்கவோருபாயத்தைத் தேடிக் கூறவேண்டும்,' என்றுரைத்தான்.

தேவேந்திரன் இவ்வாறு கூறவே, பிரமதேவன் அவனை நோக்கி, 'தேவர்க்கிறைவனே! இப்போது இயமன், அக்கினி, வாயு, விஷ்ணு ஆகியவர்களாலும், என்னாலும், உன்னாலும் அந்தத் தாரகாசுரனைக் கொல்லுதல் முடியாது; அவன் மிகுந்த வலிமை பெற்றவனாயிருக்கின்றான்; இனிமேல் சிவபெருமானுக்கு மலையரசன் புதல்வியாகிய பார்வதி தேவியாரிடம் சிவசுப்பிரமணியக் கடவுளென்பவர் பிள்ளையாக அவதரிக்கப்போகிறார்;. அவர் அவசியம் அவனைக் கொல்வார்; உங்களுடைய துன்பத்தையும் போக்கி உங்கள் வாழ்வையெல்லாம் நிலைக்கச் செய்வார்; ஆதலால், அவ்வாறு சிவசுப்பிரமணியத்

கடவுள் சீக்கிரம் அவதரித்தற் பொருட்டு, இப்போது யோகத்திலிருக்கும் சிவபெருமான் யோக நீங்கிப் பார்வதியை மணம் புரிந்துகொள்வதற்கான மார்க்கத்தைத் தேடுங்கள்,' என்று கூறினர்,

அதன்மேல் தேவர்களெல்லோரும் பிரமனிடம் விடைபெற்றுக்கொண்டு உடனே அமராவதிக்கு வந்து சேர்ந்து சிவபெருமானுடைய யோகத்தைக் கலைப்பதற்கு அவரிடம் அனுப்பும்பொருட்டு மன்மதனை வரவழைத்தார்கள். அப்பொழுது அவன், விடாயைத் தீர்க்கத்தகுந்த தென்றலாகிய தேரிலேறிவந்து சேர்ந்தான். அவ்வாறு வந்து சேர்ந்தவுடனே அவன் தேவர்களை நோக்கி, 'அமரர்களே! என்னை அழைத்தகாரணமியாது? எவனுடைய தவத்தை அழிக்கவேண்டும்? எந்தப் பெண்களை மயக்கவேண்டும்? எந்தத் துக்கத்தைத் தீர்த்துக்கொள்ளு நிமித்தமாக நீங்களென்னையழைத்தீர்கள்?' என்று வினவினான். மன்மதன் இவ்வாறு வினவவே, தேவேந்திரன் அந்த மன்மதனை இரண்டு கைகளினாலும் இறுகக் கட்டித் தழுவி மிக்க உபசார வார்த்தைகள் கூறிப் பின்னர் அவனை நோக்கி, 'மன்மதனே! இப்போது தாரகாசுரனால் தேவர்களுக்கு மிகுந்த துன்பம் ஏற்பட்டிருக்கின்றது; அந்தத் துன்பத்தைச் சிவனிடத்தில் சுப்பிரமணியக்கடவுள் தோன்றித் தீர்க்கவேண்டும்; அவ்வாறு அவர் பிறப்பதற்குச் சிவன் யோகத்திலிருப்பதால் ஏதுவில்லாமலிருக்கிறது; சிவனுடைய யோகத்தைக் கலைத்துவிட்டால் அவர்மூலம் சிவசுப்பிரமணியக்கடவுள் பிறப்பதற் கேதுவாகும்; ஆதலால், நீ சென்று உன்னுடைய சாமர்த்தியத்தினால் சிவனுடைய யோகத்தைக் கலைத்துவரவேண்டும்; அதன்பொருட்டே யுன்னை யாங்களழைத்தோம்,' என்று கூறினான்.

தேவர்களுக் கதிபதியாகிய இந்திரன் இவ்வாறு கூறியதைக் கேட்டவுடனே மன்மதன் மிகவுந் திடுக்கிட்டுப் பயந்து, 'ஆ தேவேந்திரனே! என்ன வார்த்தை கூறினை; சிவ



பெருமான் பெண்ணுமல்லர்; ஆணுமல்லர்; அலியுமல்லர்; பிறப்பிறப்பில்லாதவர்; காட்சிப்பிரமாணத்தினாலும், ஆகமப்பிரமாணத்தினாலும், கருத்தினாலும் இப்படிப்பட்டவரென்று எவராலும் நிதானித்தறியமுடியாதவர்; இப்படிப்பட்ட பெருமைவாய்ந்தவரும், குளிர்ச்சிபொருந்திய சந்திரனைத் தரிக்கும் முடியையுடையவருமாகிய அந்தச் சுவாமியின் தவத்தையழிக்க எவரால் முடியும்? இன்னும் அந்தச் சிவபெருமானோ குற்றமில்லாத பிரமசாரி; அவரிடமிருக்கும் அம்மையோ கன்னிகை; இவ்விருவருடைய சந்நிதி மகிமையினாலே சகலவுயிர்களும் உண்டாகி விருத்தியாகி, மனத்திலே தோன்றிய அநேக வஸ்துக்கள் மீண்டும் அதனிடத்திலேயே ஒடுங்குவதுபோல மேற்கூறியபடி விருத்தியான சகல வுயிர்களும் மீண்டும் அவரிடத்திலேயே ஒடுங்கும்; உலகத்தில் இந்தச் சிவபெருமான் சங்காரத்தொழில் செய்வதனால் இவரைத் தமோகுணமுடையவரென்று அறியாதவர்கள் சொல்லுவார்கள்; அப்படிச் சொல்வது சரியன்று; அவருடைய அக்குணமானது உயிர்களுடைய இளைப்பையொழிப்பதாகும்; இன்னும் அவருக்கு மற்ற தேவர்களிடத்திலுள்ள மும்மலகுண சம்பந்தமில்லை; அவருடைய சொரூபமும் நெருப்பாகும்; இப்படிப்பட்ட அக்கினி சொரூபமான அவர்மீது நான் புஷ்பபாணங்களைப் பிரயோகித்தால் அவைகள் புகையாய்க் கரிந்து போகும்; ஆகையால் யாவராலுந் தெரியக்கூடாதவரும், உருவமானவரும், அரூபமானவருமாகிய அந்தச் சிவபெருமானை என்னுடைய வல்லமையைக் கொண்டு செயித்தல் முடியாது,' என்று சொல்லி உடனே தன்னுடைய ஸ்தானம் போகப் புறப்பட்டான்.

அப்படியவன் புறப்படவே கற்பகத்தருவினிழலில் வாசஞ் செய்கின்ற தேவேந்திரன், அவன் கையைப் பிடித்துக்கொண்டு அவன் முகத்தை நோக்கி, 'உலகத்தை யெல்லாம் வெல்லும் சாமர்த்தியம் வாய்ந்த அனங்கனே! நீ இவ்வாறு பயந்து செல்வது சரியன்று; விஷ்ணு தம்முடைய

மார்பில் இலட்சுமியை வைத்துக்கொண்டதும், பிரமதேவர் சரஸ்வதியை நாவில் வைத்துக்கொண்டதும், மகாதேவர் தலையிலே கங்கையை வைத்துக்கொண்டதும், உன்னுடைய சாமர்த்தியத்தினாலல்லவா ஏற்பட்டன; இன்னும் சூரியனைச் சாணையில் வைத்துக் கடையச்செய்ததும், எனக்கு ஆயிரங் கண்கள் வரும்படிச் செய்ததும் உன்னுடைய ஆண்மையன்றோ? இப்படியெல்லாம் மகா சாமர்த்தியங்களைச் செய்த நீ இச்சமயத்தில் சிவனிடஞ் செல்ல அதைரியங்கொள்வது அழகாமா? மன்மதனே! நீ சிறிதும் அஞ்சாமல் எங்கள்பொருட்டுக் கங்கையை அணிந்தவர்பாற் சென்று புஷ்பபாணங்களையேவுவாயானால் உனக்கு நிச்சயமாக மிக்க செயமுண்டாகும்; அவ்வாறு நீ சிவனைச் செயித்து அவருக்கு மோகம் உண்டாகும்படி செய்யின் அவ்விடத்தில் குமாரக்கடவுள் தோன்றுவார்; அவர் அசுரர்களைக் கொன்று தேவர்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குவார்; அவ்வாறு தேவர்கள் அடையும் நன்மைக்கு நீயே முதற்காரணமாவாய்; ஆதலால், நான் கூறிய இக்காரியத்தைத் தடையில்லாமற் செய்து தேவர்களுக்கு நன்மையை யுண்டாக்கி மிகுந்த புண்ணியத்தையும் புகழையும் அடைவாயாக; நீ எனக்கு இந்த வரத்தை அவசியம் கொடுக்கவேண்டும்,' என்று இதமாகக் கேட்டுக்கொண்டான். அதன்மேல் மன்மதன் தேவேந்திரனுடைய சொல்லை மறுக்கமுடியாதவனாய் அந்த வார்த்தைகளுக் கிணங்கி, முன்னிருந்த பயம் நீங்கித் தைரியங்கொண்டு அவனை நோக்கி, 'தேவேந்திரனே! நான் அறியாமையால் முதலிற் சிறிது பயமடைந்தேன்; ஆயினும் இப்பொழுது உன்னுடைய வார்த்தைகளினால் எனக்கு மிக்க தைரியமுண்டாகிவிட்டது; சிவனுக்கு மலையே வில்லாக விருந்தாலும், வாசுகியே அதிலேற்றப்படும் நாணியாக விருந்தாலும், விஷ்ணுவே பாணமாக விருந்தாலும் அந்தச் சிவனை என்னுடைய கரும்பாகிய வில்லினாலும், பஞ்சபுஷ்பங்களாகிய பாணங்களினாலும், நீல நிறம் பொருந்திய வண்டுகளாகிய நாணியினாலும், செயித்து உன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிவிடுகின்றேன்; நீ



இனிமேல் கவலை யடையவேண்டாம்,' என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு சிவபெருமானிடம் செல்லப் புறப்பட்டான்.

அப்படி அந்த மன்மதன் சிவனை வெல்லக் கருதிப் புறப்பட்டபோது, பொதியமலையிலிருந்து அவ்விடத்தில் தங்கிய சந்தன வாசனையையும், தமிழ் வாசனையையும் கொண்டு தென்றற்காற்றானது அவனுக்கு உதவியாக வந்தது; வசந்தகாலமாகிய மந்திரியும் வந்துசேர்ந்தான்; சந்திரனும் தன்னுடைய கிரணமாகிய வெள்ளை வலையை நான்கு பக்கமும் வீசினான்; பூங்கொத்துக்களையுடைய இளமையான மாமரங்களிலெல்லாம் குயில்கள் முழங்கின. இன்னும் மல்லிகையரும்பே சங்கமாகவும் அவ்வரும்பின்மேலிருந்து சப்திக்கின்ற வண்டுகள் அச்சங்கத்தை வாயில்வைத் தூதுகின்ற வீரர்களாகவும் விளங்க, மன்மதன் படைகளாகிய பெண்கள் முல்லை, சண்பகம், அசோகு, தாமரை முதலாகிய அளவற்ற புஷ்பங்களையும் தேனையும் நான்கு பக்கங்களிலும் வாரியிறைத்துக்கொண்டு கடினமாகிய இரும்பு, செம்பு, கல்முதலியவைகளும் உருகும்படி இனிமையான கீதத்தைப் பாடிக் குறிஞ்சியாழென்னும் வாத்தியத்தைக் கையிலே கொண்டு வாசித்தார்கள். அவ்வாறு வாசித்த அந்த ஸ்திரீகள் மிகுந்த நக்ஷத்திரங்கள் முகத்தி லிருக்கின்ற புள்ளிகளாகவும், செவ்வானம் ஒரு திலகமாகவும் விளங்குகின்ற ஒப்பற்ற இருளாகிய யானையும், பசுமைபொருந்திய கிளியாகிய குதிரையும் முன்னே நடக்கத் தங்கள் கண்களாகிய கத்திகளை அசைத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.

இவ்வாறு தன்னுடைய பரிவாரங்களாகிய ஸ்திரீகளும், தென்றல் முதலியவைகளும் பக்கத்திற் சூழ்ந்து செல்ல, வளைவாகிய கருப்புவில்லையும், புஷ்பங்களாகிய ஐந்து பாணங்களையும் எடுத்துக்கொண்டு, ஒளிபொருந்திய நெற்றியையுடைய ரதிதேவி கூடவர மீனக்கொடியுடனே மிக்க தைரியத்தோடு சென்ற மன்மதன் பரமசிவக்கடவுள் யோகத்தி

விருக்கின்ற வனத்தைச்சார்ந்து அவ்விடத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த சிவபெருமானைப் பார்த்தான். அப்படிப் பார்த்தமாத்திரத்தில் அவனுக் கேற்பட்டிருந்த தைரியம் சிறிது நீங்கிற்று. அதனாலவன் வெட்கத்தையடைந்து மனம் நடுங்கி, 'இவ்வாறு மிகுந்த யோகத்தி லிருக்கின்ற இவரை நாம் எவ்வாறு வெல்வோம்? இவருக்கு நேரே நாம் வெளியாக நின்று யுத்தஞ் செய்தால் நிச்சயமாக நமக்கு மிகுந்தகேடு விளையும்; ஆதலால், நாம் மறைந்து நின்று தக்க சமயம் பார்த்து இவரோடு யுத்தஞ்செய்யத் தொடங்கவேண்டும்,' என்று ஆலோசித்து ஒரு பக்கத்தில் தன் பரிவாரங்களுடனே மறைந்து சிவபெருமான்மீது பாணப்பிரயோகஞ் செய்வதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்கும்போது, பார்வதிதேவி தன்னுடைய வழக்கப்படியே சிவபெருமானுக்குப் பணிவிடை செய்யும்பொருட்டு அவருக்கெதிரே சென்றாள். அங்ஙனம் செல்லவே முன்னே சமயம் பார்த்துக்கொண்டிருந்த சித்தசன், 'இதுதான் நல்ல சமயம்; சிவனுக் கெதிரே பார்வதியென்னும் பெண்ணிருக்கின்றபடியால் இச்சமயத்தில் நாம் புஷ்ப பாணங்களைச் செலுத்தினால் அவை சென்று பாய்ந்து சிவனுடைய யோகத்தைக் குலைத்து அவர் மனத்தைப் பார்வதிபாற் செல்லும்படிச் செய்யும்,' என்று கருதி உடனே தாமதமின்றிச் சந்தோஷங்கொண்டு தன் கரும்புவில்லை வளைத்து நாணேறிட்டுப் புஷ்பபாணங்களைத் தொடுத்துச் சிவபெருமான்மீது விடுத்தான்.

இவ்வாறு மன்மதன் சண்டை தொடங்கி, 'நாம் மிகுந்த சண்டையைச் செய்வதால் நம்முடைய ஒற்றைக் கரும்புருவமான வில்லானது ஒடிந்துவிட்டாலும் நமக்குத் துணையாக உலகத்தை யீன்றருளிய பார்வதியின் இரண்டு கரும்புருவமாகிய விற்களிருக்கின்றனவாதலால் நமக்கொரு குறைவுமில்லை,' என்று செருக்குற்றுச் சிவபெருமான்மீது பாணங்களைத் தொடுத்து விடுக்கவே, முப்புரங்களையு மெரித்த நகை



யாகிய அம்பையுடைய அந்தச் சிவபெருமான், உடனே யோகங் குலைந்து விழித்துப் பார்த்துத் தம்முடைய யோகங் கெட்டதற்குக் காரணம் மன்மதனுடைய செய்கையேயென் றுணர்ந்து மிகுந்த கோபங்கொண்டு அந்த மன்மதன்மீது தம்முடைய நெற்றிக் கண்ணைச் செலுத்தினார். அவ்வாறு செலுத்தியமாத்திரத்தில் அக்கண்ணிலுள்ள அக்கினியின் கிரணமானது மன்மதனுடைய தேகத்தையெல்லா மெரித்துச் சாம்பலாக்கிவிட்டது. அப்படி மன்மதன், நெருப்பிலகப்பட்ட எருக்கம் பஞ்சைப்போலச் சிக்கிரத்தில் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணால் எரிந்துபோகவே, அந்தப் பயங்கரமான செய்கையைத் தேவர்களும், அஷ்டதிக்குப்பாலகரும் கண்டு மிகுந்த பயங்கொண்டு ஒளித்துக்கொண்டார்கள். அதன்மேல் சிவபெருமான் பூதகணங்களுடன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுக் கைலையைச் சார்ந்திருந்தார். பார்வதி சிவனை நாயகராக அடையக் கருதித் தவஞ் செய்தாள்.

அப்படி யிருக்குஞ் சமயத்தில் மன்மதன் தேவியாகிய இரதிதேவி தன் கணவன் எரிந்துபோனதைப்பற்றி வருந்தி அச்சிவபெருமானிடஞ் சென்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து, தான் அமங்கலியா யிருப்பதை நிவிர்த்தி செய்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டனள். அப்போது சிவன் அவளுக் கிரங்கி அவளை நோக்கி, 'இரதியே! நீ, நமக்குத் திருமணக்காலம் நேரும் வரையில் பொறுத்திரு; அக்காலத்தில் உன் குறையை நிவிர்த்தி செய்தருளுவோம்,' என்று கூறி அவளைத் தேற்றினர். அதன்மேல் பயந் தொளித்த தேவர்களெல்லோரும் மெல்ல அந்தச் சிவபெருமான்பாற் சென்று மிகுந்த பயபக்தியுடனே அவர் பாதங்களைத் தொழுது துதித்துத் தாங்கள் தாரகனால் துன்பமடைந்த விதத்தையும், அந்தத் துன்பத்தைத் தீர்த்தற்பொருட்டுக் குமாரக்கடவுள் தோன்றுவதற் கேதுவாக மன்மதனை யேவி அவருடைய யோகத்தைக் குலைக்கும்படிச் செய்தவிதத்தை

யும் சொல்லி, 'விரைவில் பார்வதிதேவியாரை மணம் புரிந்து குமாரக்கடவுளைத் தோற்றுவித்து எங்களுடைய குறையைத் தீர்த்து இரதிதேவியின் மனக்கவலையையும் ஒழித்தருளவேண்டும்,' என்று தெரிவித்தனர். அவர்கள் இவ்வாறு தெரிவிக்கவே சிவபெருமான், அவர் வேண்டிய வண்ணமே செய்து, அவர்கள் துன்பத்தைத் தீர்த்தருளக் கருதி உடனே அகஸ்தியர் முதலிய சப்த ரிஷிகளையு மழைத்து அவர்களை நோக்கி, 'முனிவர்களே! பார்வதி நம்மையடையக் கருதித் தவஞ் செய்கின்றனள்; ஆதலின், அவளை மணம் புரிந்துகொள்ள இச்சை கொண்டோம்; நீங்கள் இப்பொழுதே பருவதராஜனிடஞ் சென்று, பார்வதியை நமக்கு மணஞ் செய்து கொடுக்கும்படி கேட்டு வாருங்கள்,' என்று கட்டளையிட்டனுப்பினர். அந்தப்படியே அம்முனிவர்கள் பருவதராஜனிடம் சென்று சிவபெருமானுடைய உள்ளக் கருத்தை மெல்லத் தெரிவித்தார்கள்.

அப்படி அவர்கள் சொன்னவுடனே பருவதராஜன், 'நான் இன்றுதான் மகா புண்ணியஞ் செய்தவனாயினேன்; சிவனே எனக்கு மருமகனாக அமைந்துவிட்டபடியால் இனியெனக்கு இதைக் காட்டிலும் வேறென்ன தகுந்த பாக்கியம் வேண்டும்?' என்று சந்தோஷித்தான். அப்போது அவன் பிள்ளையாகிய மைநாகனென்பவன், மணம் பேசும்போது உலகத்தவர் குலமுறை விசாரிக்கும் வழக்கப்படியே பரிகசமாக அந்த முனிவர்களை நோக்கி, 'ரிஷிகளே! எங்கள் பெண்ணாகிய பார்வதியை மணஞ் செய்துகொள்ள விரும்பும் அந்தச் சிவன் எச்சாதியிற் பிறந்தவர்? அவருடைய தாய்தந்தையர் பெயர்களியாவை? குடிப் பெயரென்ன? அவரிருக்கும் ஊரேது? இவ்விவரங்களை யெல்லாம் எனக்குத் தெரிவிப்பீராக' என்று கூறினான். அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட சப்தரிஷிகள் அவனை நோக்கி நகைத்துக்கொண்டு, 'மைநாகனே! அந்தச் சிவனோ எவராலும் அளவிடக்கூடாதவர்; அவர் நல்ல ஜாதியையுடையவர்தாம்,' என்று கூறினார்கள். அதன்



மேல் பருவதராஜனும் அவனுடைய சுற்றத்தாரும் முன்னினும் மிக்க மகிழ்ச்சியடைந்து உடனே சந்திரனைத் தரித்த முடியையுடைய சிவபெருமானுடைய பெயர் நக்ஷத்திரங்களுக்கும் பார்வதி தேவியாருடைய பெயர் நக்ஷத்திரங்களுக்கும் தகுந்த பொருத்தத்தையும், கலியாணஞ் செய்கிற காலத்தையும் ஆராய்ந்து பார்த்து, நிச்சயித்து, விருத்தி பொருந்திய திருக்கலியாண முகூர்த்தவோலையு மெழுதி அதனை அந்த முனிவர்களிடம் கொடுத்து, அவர்களுக்கு மிகுந்த வணக்கஞ்செய்து உடனே மணஞ்செய்து கொடுக்க விசைந்ததைச் சிவபெருமானிடம் தெரிவிக்கும்படி அவர்களை யனுப்பினார்கள். அந்த ஏழு ரிஷிகளும் பருவதராஜனிடம் விடைபெற்றுச் சென்று விரைந்து போய்ச் சிவபெருமானைக் கண்டு அவரிடத்தில் மலையரசன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அவ்வாறு தெரிவித்தமாத்திரத்தில் சிவபெருமான் திருக்கலியாணத்திற் கெழுந்தருளக் கருதியிருந்தார்.

இப்படியிருக்கும்போது முன்னே கூறியபடி சப்தரிஷிகளையு மனுப்பியபின் பருவதராஜன், பார்வதிதேவியாரின் திருக்கலியாண முகூர்த்தங் குறிப்பிட்ட பலமணவோலைகளை யெழுதி அநேகம் தூதர்கள் கையிற் கொடுத்துப் பலவிடங்களுக்குஞ் சென்று அவ்வோலைகளை யளித்துத் தெரிவிக்கும்படி அவர்களை யனுப்பினான். அவ்வாறனுப்பவே அந்தத் தூதர்கள் சப்தகுல பர்வதங்களுக்கும், உயர்ந்த சிகரங்களையுடைய மேருவுக்கும், சக்கரவாளகிரிக்கும், மிகுந்த சப்தத்தையுடைய சமுத்திரத்திற்கும், மகிமை பொருந்திய ஏழு நதிகளுக்கும், தேவலோகம் முதலிய வுலகங்களுக்கும், பூமியிலுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ளவர்களிடத்தில் மணவோலையைக் கொடுத்து அம்மையார் திருமணவிசேஷத்தை அறிவித்தார்கள். அப்படித் தெரிவித்தமாத்திரத்திலே சப்தகுல பர்வதங்களுக்கும், சப்த சமுத்திரங்களுக்கும், பூமிதேவிக்கு மாலைகளைப்போலப் பிரகாசிக்

கின்ற மகிமை பொருந்திய சப்த நதிகளுக்கும், அதிஷ்டானமாகிய தேவதைகளும், சித்தர்களும், சாரணர்களும், முனிவர்களும், தேவர்களும், மற்றவர்களும் கூட்டங் கூட்டமாகச் சந்தோஷத்துடன் புறப்பட்டு மலையரசன் பட்டணத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்படி வந்து சேர்ந்தமாத்திரத்தில் அவர்கள் அங்கே எட்டுத் திக்குகளையும் தேர்களாலும் கொடிகளாலும் வெற்றிட மில்லாமல் நிறைத்துவிட்டார்கள். ஆகாயத்தை விமானங்களாலும், மாலைகளாலும் வெற்றிடமில்லாமல் மறைத்துவிட்டார்கள்; இவர்கள் செய்கை யிப்படியிருக்க அந்நகரத்திலுள்ளவர்கள் அழகிய வீதிகளில் நீண்ட இலைகளையுடைய வாழை மரங்களையும், கமுகமரங்களையும் வரிசை வரிசையாகக் கட்டி அலங்காரஞ்செய்தார்கள்; மலையிலுள்ள புழுகைப் பனிநீரிற் கரைத்துத் தரையை மெழுகினார்கள்; தெருக்களில் தோரணங்களைக் கட்டினார்கள்; அவற்றினிடையே முத்துமாலைகளைக் கட்டித் தொங்கவிட்டார்கள்; ஆகாய கங்காஜலத்தை நிறைத்த பூரணகும்பங்களை ஆங்காங்கே வரிசைபெற வைத்தார்கள்; நூதனமாக இரத்தின விளக்குக்களை யேற்றினார்கள். இவ்வாறு அவர்கள் பலவகைச் சிறப்புக்களையுஞ் செய்து பிரமலோகமும், அளகாபுரியும், தேவலோகமும், வைகுந்தமும், பார்த்து மிகுந்த வெட்கத்தை யடையும்படி அந்நகரத்தைச் சிங்காரித்தார்கள்.

அதன்மேல் இமயமலையிலிருக்கின்ற பல பெண்களும் கூடி நீல இரத்தினதீபம்போலப் பிரகாசிக்கும் பார்வதிதேவியாருக்கு அலங்காரஞ் செய்யத் தொடங்கி அவளை உடனே அழைத்துவந்து, அவருக்குக் கற்பகமலர் வாசனையோடு கலந்த கங்காஜலத்தினால் ஸ்நானஞ் செய்வித்து, இடை துவளும்படியாக இணையற் றுயர்ந்த வஸ்திரத்தை யணிந்து, அந்த அந்த அவயவங்களுக்குத் தகப் பல ஆபரணங்களையும், முத்துமாலையையும் அணிந்து, பரிமளம் பொருந்திய நறுமலர் மாலை சூட்டி, அழகிய நெற்றியிற் றிலதமிட்டு வேதவிதிப்படி கலியாணத்திற்கு முன் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தார்கள்.



இங்கே இவ்வகைச் சிறப்புக்களுடன் பல அலங்காரங்களும், கலியாணத்திற்குமுன் நடக்கவேண்டிய சடங்குகளும் நடந்துகொண்டிருக்க, அங்கே கைலையில், முன்னே வாசனை பொருந்திய புஷ்பபாணங்களைப் பிரயோகித்த மாரனை நெற்றிக்கண்ணா லெரித்து அந்தப் பஸ்பத்தையே தேகத்திற்பூசிக்கொண்ட சுந்தரராகிய சிவபெருமானுக்குப் பிரமன் முதலாகிய தேவர்களெல்லோருங் கூடி மணக்கோலஞ் செய்யத் தொடங்கி முறைப்படி ஸ்நானஞ் செய்வித்து, இடையில் மணத்திற்குரிய சிறப்புவாய்ந்த வஸ்திரத்தை யணிந்து, மார்பில் கற்பகப்பூமாலை சூட்டி, முன்னே யணியப்பட்டிருந்த சர்ப்பாபரணத்தைக் கழற்றிவிட்டு மாணிக்க இரத்தினங்களாலும், பொன்னாலும் சமைந்த ஆபரணங்களை யணிந்து, அவருடைய சடையிற் றரிக்கப்பட்டிருந்த இளம்பிறையைப் பார்த்த நக்ஷத்திரக் கூட்டங்கள் அதனைத் தம்முடைய நாயகனென்று கருதிச் சுற்றிக்கொண்டதை நிகர்த்து முத்துக்கள் பிரகாசிக்கும்படி கிரீடத்தைச் சிரசிலே சூட்டி, அவருக்குக் கண்களாகப் பொருந்தியிருக்கின்ற சூரியர் சந்திரரிருவரும் அவருடைய செவிகளிற் குடியேறினாற்போல விளங்கும்படி இரண்டு காதுகளிலும் பிரகாச மிகுந்த இரண்டு குண்டலங்களை யணிந்து, விஷ்ணு முன்னே வரம் பெற்றுக்கொள்ளும் பொருட்டுத் தம்முடைய கண்களி லொன்றைப் பிடுங்கி அந்தச் சிவபெருமானுடைய பாதத்தில் அருச்சித்தபோது பரவிய அக்கண்ணின் கருப்புச் சோதியானது அப்படியேயிருந்து பிரகாசிப்பதுபோலத் தோற்றும்படி அவர் பாதங்களில் நீலமணிகளாற் செய்யப்பட்ட சிலம்பைப் பூட்டி, இன்னும் பலவித ஆடையாபரணங்களையுமணிந்து மிகுந்த அலங்காரத்தைச் செய்தார்கள்.

அதன்மேல் சகலவிதமான அலங்காரங்களுடனும் சிவபெருமான் விஷ்ணுவின் வடிவமாகிய விருஷபவாகனத்திலேறினார். அப்போது அரம்பா ஸ்திரீகளெல்லோருங் கூடி மஞ்சளாலத்தி யெடுத்தார்கள்; விஷ்ணு, சிவபெருமான்

முன்னே வந்து அவரை வணங்க அப்போது சிவபெருமான் அந்த விஷ்ணுவை நோக்கிக் கிருபையுடனே செவ்வாம்பல் மலர்போலும் திருவாயைத் திறந்து, 'விஷ்ணுவே! வருவீராக,' என்று முகமலர்ச்சியோடு கூறினார். தாமரைமலரிலிருக்கின்ற பிரமதேவன் வந்து அந்தச் சிவனுடைய பாதங்களில் நமஸ்கரிக்கச் சிவபெருமான் அவனுடைய வணக்கத்திற்கும் மகிழ்ந்து, இரத்தின மிழைத்த கிரீடத்தைச் சற்றே அசைத்துச் சிரக்கம்பம் செய்தார்; தேவேந்திரன் வந்தனஞ் செய்யப் புன்சிரிப்புக் கொண்டார்; மற்ற தேவர்களெல்லோரும் வந்து வணங்க அவர்களைக் கிருபைக் கண்ணினாலே பார்த்தருளினார். இவ்வாறு தேவர்களுக்கு நல் வார்த்தை கூறிப் புன்சிரிப்புக்கொண்டு அவர்களைக் கிருபைக் கண்ணாலே பார்த்தருளிய அந்தச் சிவபெருமான், சடையில் தரித்த கங்கா ஜலத்தினால் பிறையானது கொழுந்துவிட்டு அரும்பாகிப் புஷ்பித்ததென்று சொல்லும்படி தலைக்குமேல் வெள்ளைக்குடை நிழலைச் செய்யவும், அலை வீசுகின்ற கங்கையின் நுரையும், சந்திரனும் சேர்ந்து விழுந்தாற்போல இரண்டு வெண்சாமரங்கள் வீசவும், இலக்குமி நாயகராகிய விஷ்ணு, பாக்கு வெற்றிலை முதலியவை வைக்கப்பட்டிருக்கும் அடைப்பையை எடுத்துக்கொண்டு ஒரு பக்கத்தில் வரவும், கற்பகத்தருவுக்குத் தலைவனாகிய தேவேந்திரன் படிக்கம் எடுத்துக்கொண்டு வரவும், பிரமன் சமீபத்தில் நின்று ஆலவட்டம் வீசவும், தும்புரு, நாரதர் ஆகிய இருவரும் வந்தனஞ் செய்து இருபுறத்திலும் நின்று சங்கீதம் பாடவும், எமன் தங்கத்தினால் செய்யப்பட்டிருக்கிற பாதக்குறடுகளைக் கையால் எடுத்துக்கொண்டு வரவும், வாயு பகவான் திக்குகளெட்டிலும் பரவும்படி அகிற்புகை, சாம்பிராணிப்புகை முதலியவைகளை வெளிப்படுத்தும் தூபகலசங்களை ஏந்திவரவும், விருஷபத்திலேறுகின்ற ஈசானன் உடைவாள் எடுத்துக்கொண்டு வரவும், சூரிய சந்திரர்கள் விளக்குக்களைத் தாங்கிவரவும், அநேகம் தேவகன்னியர்கள் வஸ்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளைத் தூக்கிக்



கொண்டுவரவும், நாகலோகத்துப் பெண்கள் நவமணிகளிழைத்துச் செய்யப்பட்டிருக்கும் ஆபரணங்களைச் சுமந்துகொண்டுவரவும், கின்னரர் கிம்புருடர் ஆகியவர்கள் வீணை வாத்தியஞ் செய்துகொண்டு வரவும், நான்கு வேதங்களும் சமீபித்து, 'சிவபெருமானே எல்லாருக்கும் பெரியவர்,' என்று புகழவும், சந்திரர், சூரியர் ஆகிய இருவருந் தவிர மற்றைய கிரகங்களாகிய அங்காரகன், புதன், பிருகஸ்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய எழுவர்களும்; தரன், துருவன், சோமன், ஆபச்சைவன், அனலன், அனிலன், பிரத்தியூசன், பிரபாசன் ஆகிய அஷ்டவசுக்களும், முனீசுரர்களும் களிகூர்ந்து பக்கத்திற் சூழ்ந்து வரவும், நாகலோகத்தார்களும், வித்தியாதரர்களும், தேவர்களும், அந்தச் சிவபெருமானுடைய திருக்கோலத்தைக் கண்டு, சந்தோஷத்தை யடைந்து பக்தியினால் மனமுருகி வரவும், ஏகாதசருத்திரர்கள் இரண்டு கைகளினாலும் புஷ்பங்களை வாரியிறைத்துக்கொண்டு வரவும், இலக்குமியும், சரஸ்வதியும் பனிநீர் தெளிக்கவும், திக்குப்பாலகருடைய தேவிமார்கள் அவரவர்களுடைய திசைகளில் நின்று சேவிக்கவும், பிராமணி, உருத்திராணி, நாராயணி, வாராகி, கௌமாரி, காளி, இந்திராணி ஆகிய சப்தமாதர்கள் சோபனம் பாடவும், கரும்பினிரசத்தைப்போல மதுரம்பொருந்திய வார்த்தைகளையுடைய நீரரமகளிர் வாழ்த்துக் கூறவும், வித்தியாதர மாதர்கள் பல்லாண்டு சொல்லவும்; பெரியமணி, பேரிகை குடவாத்தியம், மத்தளவாத்தியம், காகளம், தவண்டை, மல்லரி, சல்லரி, சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கவும், நடந்து செல்லும் தெய்வமாதர்களின் காற்சிலம்புகள் கலீர் கலீரென்று சப்திக்கவும், எட்டுத்திக்கிலும் நெருங்கிச் சிவபெருமானைப் பார்க்கவருகின்ற கூட்டங்களை நந்திதேவனாகிய நான் பிரம்பாலடித்து விலக்கும் சப்தம் பரவவும் விருஷபவாகனத்துடனே கைலையங்கிரியை விட்டுப் புறப்பட்டு அதன் அடிவாரத்தில் இறங்கினார். அப்படி யிறங்கியமாத்திரத்தில், அந்தச் சிவபெருமானுடைய சேனையின் முன்னணியானது

இமையபருவதத்தை யடைந்தது. அப்போது, ஆகாயத்திலும், பூமியிலும் எள்ளிடுதற்கும் இடமில்லாமல் விமானங்கள் நெருங்கின; பின்னர், விஷ்ணுவின் அம்சமாகிய விருஷபமானது சிவபெருமானைத் தூக்கிக்கொண்டு வழிமுழுதுங் கடந்து இமயபருவதராஜன் பட்டணத்திற் போய்ச் சேர்ந்தது.

அப்படி விருஷபமானது கொண்டுபோய்ச் சேர்க்கத் தம்முடைய சேனைகளுடனே சிவபெருமான் இமய பருவதத்தில் எழுந்தருளியமாத்திரத்தில் அந்த மலையி லிருக்கின்ற பெண்களெல்லோரும் அவருடைய அழகைப்பார்த்து, 'பார்வதி செய்த தவத்திற்கு ஒரு குறைவு மில்லாமல் இன்று பலன் சித்தியாயிற்று,' என்று கூறினார்கள். அவர்களுள் இன்னும் சில பெண்கள், 'யுத்தத்திற்கு வந்த மன்மதனை இந்தச் சிவன் எரிப்பதற் குதவியாயிருந்த கண் எதுவோ அந்தக் குரூரமான கண்ணைக் கவனித்துப் பாருங்கள், அது எத்தன்மையுடையதா யிருக்கின்ற தென்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்,' என்று கூறினார்கள்; சில ஸ்திரீகள், 'மன்மதன் தேகத்தோடு கூடியவனா யிருந்தபோதும், இவர் யோகத்திலிருந்ததினால், உலகத்திலுள்ள சனங்களெல்லோரும் போகவிகாரமில்லாமல் அயர்ந்திருந்தார்கள்; இப்போது மன்மதன் தேகமழிந்து, இவர் போகத்தில் விருப்பங்கொண்டபடியினாலே சகலருக்கும் போகத்தில் இச்சை யுண்டாயிற்று; ஆகையினால், எல்லோருக்கும் மோகத்தையும் மோகமின்மையையும் உண்டாக்குகிறவர் இந்தச் சிவனையன்றி வேறொருவருமில்லை,' என்று கூறினார்கள்; இன்னும் சில ஸ்திரீகள், 'மாயஞ் செய்கின்ற கருப்புவில்லைக் கையிற்றரித்த மன்மதனுடைய அழகு இந்தச் சுவாமியினுடைய அழகில் ஆயிரத்தி லொருபங்குமிராது; அதினாலேதான் இவர் அவனை யிகழ்ந்து தம்முடைய நெற்றிக் கண்ணால் எரித்துவிட்டார்; தவத்தின் தன்மையை ஆராய்ந்துணர்ந்த உத்தமர்கள் இப்படிச் செய்வார்களோ,' என்று பேசிக்கொண்டார்கள்.



இவ்வாறு பல ஸ்திரீகளும் சிவபெருமானைப் பார்த்துப் பலவிதமாகப் பேசிக்கொள்ள அவர் மலையரசன் பட்டணத்திற்குட் புகுந்தவுடனே அந்த மலையரசன் சுற்றத்தார் முதலியவர்களும், அவனுக்கு மருகாகிய சிவபெருமானுடைய சேனையிலுள்ளவர்களும், மிகுந்த ஆசையோடுங் கூடினவர்களாய் ஒருவருக்கொருவர் எதிர் சென்று ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டார்கள். ஆதியுமந்தமு மில்லாதவரும், எவராலும் அளவிடப்படாதவருமாகிய சிவபெருமான், பிரமன் கையைப் பிடித்துக்கொண்டு விருஷபவாகனத்திலிருந்து கீழேயிறங்கினார். இப்படிச் சிவபெருபான் வாகனத்தை விட்டிறங்கினவுடனே, அங்குள்ள அநேகம்பெண்கள் ஆலத்தியெடுக்கவும், திக்குப்பாலகர் எண்மரும் இருபுறத்திலும் நடந்தொதுங்கிவரவும், தேவர்களுக்குத் திலதம் போன்றவராகிய விஷ்ணுவினுடைய* இரண்டு கைகளின்மேலும், தம்முடைய ஒரு கையைச் சேர்த்து மிருதுவாக நடந்து இரத்தினங்களாற் செய்யப்பட[illegible]ய மண்டபத்திற்குட்புகுந்து அருமையாகிய அம்[illegible]தி லிடப்பட்டிருந்த ஆசனத்தி லெழுந்தருளினார். [illegible]தவியமல் பார்வதிக்குத் தோழிகளாக அமைந்த சிறந்த அழ[illegible]குள்ள மாதர்கள் தாமரைமலர்போலும் சிவந்த தங்களுடைய கைகளினாலே அந்தப் பார்வதியைத் தாங்கி அழைத்துக்கொண்டுவந்து சிவபெருமானுக்கு வலப்புறத்தி லுட்கார வைத்தார்கள்.

இந்தப்பிரகாரம் சுவாமியும் அம்மனும் கலியாண மண்டபத்தில் எழுந்தருளியவுடனே பிரமதேவன் கலியாணச் சடங்கை விதிப்படி முடிக்கத்தொடங்கி, அதற்கு வேண்டிய காரியங்களை நடத்தி, மந்திர ஜெபத்தோடு அக்கினியிற் பொரி சொரிந்து, நெய்யாகுதிசெய்ய, என்னை யாட்கொண்ட சிவபெருமான் கிரமப்படி அம்மையாரை மணமுடித்துக்கொண்டு, முன்னமே ஏழுலகங்களையும் ஈன்றருளிய அந்தப் பார்வதிதேவியாரைக் கரத்திற் பிடித்துக்கொண்டு அக்கினியை மூன்றுமுறை வலமாகச் சுற்றிவந்து, வெண்மை

பொருந்திய சங்கமுழங்கவும், நான்குவேதங்களும் சப்திக்கவும், நான்கு புறங்களிலும் சூழ்ந்த தேவர்களும், ரிஷிகளும் புஷ்பமாரியைப் பொழியவும், ஓர் ஆசனத்தி லெழுந்தருளினார். அப்போது அங்குக் கூடியிருந்த எல்லோரும் அவருக்கு வந்தனஞ் செய்தார்கள். பார்வதிதேவியார் தமது தந்தையையும் தாயையும் வணங்கினார்.

அதன்மேல் சிவபெருமான் மணக்கோலத்துடன் மிக்க மகிழ்ச்சி யடைந்து எல்லோரிடத்தும் அன்பைச் செலுத்தியிருப்பதைக் கண்டு தேவர்களும், பிரமனும், விஷ்ணுவும், மற்ற யாவரும் கூடி அவருடைய பாதத்தில் வீழ்ந்து வணங்கி, 'சுவாமி! இச்சமயத்தில் தம்முடைய மணக்கோலத்தைக் கண்டு எல்லோரும் ஆனந்தக்கடலில் மூழ்கியிருக்க, இரதிமாத்திரம் தன்னுடைய கணவனை யிழந்து கவலையுடனிருப்பது தகுதியன்று; ஆகலால், தாம் முன்னே அவளுக்குக் கூறியபடி மன்மதனை எழுப்பிச் சந்தோஷத்தை யுண்டாக்க வேண்டும்,' என்றுகேட்டுக்கொண்டார்களதை அரன், அப்படியே இறந்துபோன மன்மதனை வரவழைத்து; ரதி தவிர மற்றவர்களுக்குத் தோற்றாமல் அரூபியாயிருக்கும்படி அவனுக்குக் கட்டளையிட்டு, இரதிக்குத்தாம் வாக்களித்தபடியே மகிழ்ச்சியை உண்டாக்கினார். பின்னர் எல்லோரும் வணங்கி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். அதன்மேல், பார்வதிதேவியாரும், பரமசிவக்கடவுளும், ஒருவர்மீதொருவர் மிக்க அன்புகொண்டு ஒருமித்த மனதுடன் கூடி இன்பத்தை அனுபவித்து, வலிமை பொருந்திய யானைமுகத்தினையுடைய விக்கினேசுரரையும், சிவசுப்பிரமணியரையும் பெற்றார்கள்; அந்தக் குமாரர்களிருவரும் சுகமாக வளர்ந்து நல்ல பருவத்தை யடைந்தபின்னர், சிவபெருமான் சுப்பிரமணியருக்குப் பகைவரஞ்சத்தக்க வேலாயுதத்தைக் கொடுத்துத் தாரகாசுரனைக்கொன்று தேவர்களுக்குச் சுகத்தை யுண்டாக்குமாறு கட்டளையிட்டு அவரையனுப்ப, அந்தக் குமாரக்கடவுள் அவ்வாறே சென்று



அந்தத் தாரகாசுரன்மேல் வேலாயுதத்தை யேவி அவனைக் கொன்று தேவர்களுக்கு வாழ்வையும் சந்தோஷத்தையும் கொடுத்தருளி மீண்டு வந்து தம்முடைய தந்தையாகிய சிவபெருமானையும், பார்வதிதேவியாரையும் கண்டு வணங்கி அவர்களிடம் தாரகனைக் கொன்று வெற்றியடைந்த விதத்தைக் கூறி அவர்களுக்கு மகிழ்ச்சியை யுண்டாக்கினார். அதன்மேல் முப்புரங்களை எரித்தவராகிய சிவபெருமான் மயில் போன்றசாயலையுடைய பருவதராஜன் புத்திரியோடும், யானைமுகக்கடவுளோடும், சுப்பிரமணியரோடும் இமயகிரியை விட்டுப் புறப்பட்டுத் தேவர்களும் முனிவர்களும் கண்டுகளிக்குமாறு கைலாயத்தில் எழுந்தருளியிருந்தார்," என்று கூறினார்.

மூன்றாவது

பார்வதிதேவியார் திருவவதாரச் சருக்கம் முற்றுப்பெற்றது.

---

நான்காவது

## பார்வதிதேவியார் திருக்கண் புதைத்த சருக்கம்.

முன் சருக்கத்தில் கூறியபடி, பார்வதிதேவியார் திருவவதாரம், சுப்பிரமணியர் தாரகனைக் கொன்றவிதம் முதலியவைகளைச் சொல்லி முடித்தபின்பு, நந்திதேவர் மற்ற விஷயங்களையும் கூறத் தொடங்கினவராய் மார்க்கண்டேயரை நோக்கி, 'மார்க்கண்டேய முனிவரே! இப்போது, மின்னல்களோடு கூடிய மேகங்கள் தவழ்ந்து சஞ்சரிக்கின்ற இமய பருவதத்தின் தபோமகிமையினாலே மேனாதேவியிடமாக எங்கள் தாயாகிய பார்வதிதேவியார் அவதரித்த விதத்தையும், அவரைப் பரமசிவன் மணம்புரிந்த விதத்தையும், அவரிடம் சுப்பிரமணியக்கடவுள் தோன்றித் தாரகனைச் சங்கரித்த விதத்தையும் கூறினேன்; இனி, அந்தப் பார்வதிதேவியார் பொன்போலும் சடையையுடைய சிவபெருமான் கண்களை இரண்டு கைகளினாலும் மூடியதையும், அதனாலுண்டான

பாவத்தை அந்தத் தேவியார் சிவபெருமானைப் பூசித்துத் தீர்த்துக்கொண்ட விதத்தையும் கூறுகிறேன் கேட்பீராக: மேற்கூறியபடி சிவபெருமானும் பார்வதிதேவியும் கைலையங்கிரியிற் றங்கிச் சந்தோஷமாக வாழ்ந்து வருங்காலத்தில், பல திருவிளையாடல்களைச் செய்யத்தொடங்கிச் சில சமயம் ஊடல் கொண்டும், பின்னர் அதனைத் தீர்த்துக்கொண்டும், ஒருவர்மீதொருவர் மாலைகளைச் சூடி மகிழ்ச்சியடைந்தும், வீணை வாத்தியம் முதலிய பல வாத்தியங்களை வாசித்தும், வேதசாஸ்திரங்களைத் தேவர்களும் முனிவர்களும் பக்கத்திலிருந்து சொல்லக்கேட்டும், அவற்றின் பொருளைச் சிலருக்குக் கூறியும், பலமுறை சதுரங்க முதலியன ஆடியும், அவற்றால் வெற்றியையும் தோல்வியையும் அடைந்தும், அழகிய பல ஆபரணங்களை ஒருவர்மீதொருவர் அணிந்துகொண்டும், இன்னும் பலவிளையாட்டுக்களைச்செய்துகொண்டும் பொழுது போக்கி வந்தார்கள். அப்படி ஆனந்தத்துடன் விளையாடிப் பொழுது போக்கிவருங்காலத்தில் ஒருசமயம் எங்கள் தாயாகிய பார்வதி சிவபெருமானை வணங்கி, அவர் திருமுகத்தை நோக்கி, 'சுவாமி! சந்திரன் சூரியன் ஆகிய இருவரும் யாவர்?' என்று வினவினள். அதற்குச் சிவபெருமான், பார்வதியை நோக்கி, 'அழகிய கோவைக்கனிபோலும் வாயையுடைய பெண்ணே! அந்த இருவரும் நம்முடைய கண்கள்,' என்று கூறினர். அதைக் கேட்டவுடன், பார்வதி தேவி, 'அப்படியானால் நான் அந்த இரண்டு கண்களையும் மூடி உலகத்திலுண்டாகும் விசேஷங்களைப் பார்க்கிறேன்,' என்று சொல்லி வேடிக்கையாக அந்தச் சுவாமியினுடைய கண்களை இரண்டு கைகளாலும் மூடினள்.

அவ்வாறு சிவபெருமானுடைய கண்களைப் பார்வதி தேவி மூடியமாத்திரத்தில், இருட்கூட்டத்தை யுருக்கிப் பூசினதுபோல திக்குகளெல்லாம் இருண்டன; மலைகளெல்லாம் குற்றமற்ற நீலகிரியைப்போல கருமைநிறத்தை யடைந்தன; மணிகள்பொருந்திய நதிகளெல்லாம் யமுனாநதிபோலக் கறு



த்தன; பிரமாவும், விஷ்ணுவும், முனிவர்களும், அஷ்டவசுக்களும், பொன்னுலகவாசிகளும், தேவேந்திரனும், கட்புலனற்று ஒன்றுந் தெரியாமல் பிறவிக் குருடர்கள்போலிருந்தார்கள்; பசு, காளை முதலிய மிருகங்களும், பக்ஷிகளும், கண்ணொளியற்றன; துறவறம் இல்லறம் ஆகிய இரண்டும் ஒளிந்தன; மற்ற எல்லாத் தொழில்களும் கெட்டன; தேவர்களும் மனிதர்களும், இராக்ஷதர் நிறம்போலக் கறுத்தார்கள்; தெய்வலோகத்திலுள்ள இந்திரன் வாகனமாகிய வெள்ளையானையும் கரிபோலக் கறுத்தது; கெடுதலில்லாத பிரமனுடைய வாகனமாகிய அன்னமும் காகம்போல் கருமையை அடைந்தது.

இப்படி யெல்லா வஸ்துக்களும் தேவர் மனிதர் முதலிய எல்லோரும் கறுப்படைந்து எல்லாத் தொழில்களும் கெடவே, தேவர்கள் முதலிய எல்லோரும், மிகுந்த பயங்கொண்டு உடனே மும்மூர்த்திகட்கும் முதல்வராகிய சிவபெருமானிடத்திற் சென்று, 'சுவாமி! உலகமெல்லாம் இருள் மூடிக்கொண்டபடியினாலே உயிர்களெல்லாம் மிகுந்த சஞ்சலத்தை யடைகின்றன; ஆதலால், இந்தத் துன்பத்தை நீக்கியருளவேண்டும்,' என்று முறையிட்டார்கள். அப்போது சிவபெருமான் அவர்களை நோக்கி, 'நீங்கள் பயப்படவேண்டாம், விரைவில் இத்துன்பத்தைத் தீர்க்கிறேன்,' என்று சொல்லிக் கையமைத்து, உடனே பன்னிரண்டு கோடி சூரியர் உதயமானதுபோலப் பிரகாசிக்கும்படி தம்முடைய நெற்றிக் கண்ணைத் திறந்தார். அப்படித் திறக்கவே, ஏழுலகங்களிலும் நிறைந்திருந்த அந்தகாரமானது நீங்கியது. அப்போது, சிவனுடைய கண்களை மூடிய பார்வதி தன் கைகளை அவர் கண்களினின்று மெடுத்துவிட்டாள்; அதன்மேல் பரமசிவனிடத்தில், பிராமணர் வளர்க்கும் யாகாக்கினிபோல் மூன்று கண்களும் விளங்கின. பின்னர், பார்வதி, சிவனுடைய கண்களை மூடியதனால் தனக்குப்பாவமுண்டானதாகக் கருதி மிகவும் பயங்கொண்டு பரமசிவக்கடவுளை நோக்கி, 'நெடிய சூலத்தையுடையவரே! எமனை மார்பிலே யுதைத்த

மலர்போன்ற திருப்பாதங்களை யுடையவரே! ஆத்திமாலையை யணிந்த சடையை யுடையவரே! ஏழுலகங்களிலும் இருள் நிறையும்படி உம்முடைய கண்களை மூடியதனால் நான் மிகுந்த பாவத்திற்காளானேன்; ஆதலால், தவத்தைச்செய்து அப்பாவத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும்; நானவ்வாறு தவஞ் செய்தற்குப் பூமியில் ஒரு தகுதியான இடத்தை நீரே குறிப்பிட்டுரைக்கவேண்டும்,' என்று கூறினாள். அவ்வாறு பார்வதி யுரைக்கச் சிவன், 'பெண்ணே! நீ கருதியபடி என் கண்களை மூடியதனால் தோஷமில்லையென்று நினைக்கிறேன்; ஆயினும், உன் கருத்தின்படியே ஒருவாறு சிறிது தோஷம் ஏற்பட்டிருந்தாலு மிருக்கக்கூடும்; ஆதலால், அந்தத் தோஷம் நீங்கும்பொருட்டும் உலகத்திலுள்ள உயிர்களின் பாவங்கள் நீங்கும்பொருட்டும் நீ விரும்பியவாறே தவத்தைச் செய்வாயாக; அங்ஙனம் தவஞ்செய்தற்கு மதுராபுரி, மாயாபுரி, காசி, அவந்தி, துவாரகை, அயோத்தி ஆகிய இவைகளில் சிறந்த காஞ்சீபுரமே யோக்கியமானதாம்; அங்குச் சென்று நமக்குப் பூசனை புரிந்து தவத்தைச் செய்வாயானால் உன் கருத்து நிறைவேறும்,' என்று கூறினார்.

சிவபெருமான் இவ்வாறு கூறியவுடனே, பார்வதி அவரை வணங்கி, அவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, வீரலட்சுமி குடை பிடிக்கவும், ஜயலட்சுமி பொன்னடைப்பை தாங்கிவரவும், அருந்ததியும் இலக்குமியும் இரண்டு பக்கங்களிலும் நின்று இரத்தினங்களிழைத்த சாமரங்களை வீசவும், நான்கு திக்குக்களிலும் சந்திரப் பிரகாசத்தை வீசும் முத்துப்பல்லக்கி லேறிப் புறப்பட்டு யாவரும் விரும்புகின்ற தருமமானது பெருகும்பொருட்டு ஜலம் பெருகுகின்ற கீர்த்தியையுடைய கங்காதீரத்தை அடைந்தாள்; அவ்வாறு அங்குச் சேர்ந்தபின் தன்னிடத்தே இறந்துபோன உயிர் மீண்டும் பிறக்காமலு மிறக்காமலும் முத்தியை யடையும்படி செய்கின்றபரமசிவசொரூபமாகிய காசிப்பதியிற்சேர்ந்து விசுவேசருடைய பாதங்களைப் போற்றி அவரைப் பூஜித்து அங்



நகரத்து மன்னனுடைய வேண்டுதற்படியே அந்நகரத்திற்றங்கி, மழையில்லாமல் வருந்திய சிவராசிகள் பிழைக்கும் பொருட்டுப் பலநாள்வரை அறத்தை வளர்த்துப் பின்னர் தேன் பொருந்திய மலர்மாலையைத் தரித்த அத்தேசத் தரசனிடத்தில் விடைபெற்று அவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் தொண்டைமண்டலத்தைச் சேர்ந்தனள்; அப்படி அங்குச் சேர்ந்த பின்பு அந்நாட்டில் மேகங்கள் தவழுகின்ற மேற்பாகத்தையுடைய பலாமரங்களிலுள்ள பழங்கள் வாய்விள்ளுவதாலும், வாழைப்பழங்கள் கனிவதாலும் புதிய தேனொழுகிப் பெருக்கெடுத்து வாய்க்கால்களின் வழியாக ஓடிப் பாய்கின்ற கழனிகளைக் கடந்து, காதுகளிலணியப்பட்டிருக்கும் குண்டலங்கள்வரை தாவிச் செல்கின்ற கண்களையுடைய பெண்கள் நாட்டியஞ் செய்வதைப் பார்த்து அதனைப் பழகி அப்பழக்கத்தினால் இளமையாகிய மயில்கள் சோலையிற்றங்கி நடனஞ் செய்கின்ற சிறப்பையுடைய காஞ்சிபுரமென்னும் நகரத்தை யடைந்தனள். அவ்வாறு அப்பட்டணத்திற்குட் புகுந்தவுடன், பார்வதி அந்நகரத்தின் சிறப்பை நோக்கினள். அப்போது அந்நகரத்தில் கற்களையும், மரங்களையும் உருகச் செய்து மனிதர்களுடைய உள்ளறிவையும் கெடுக்கின்ற விசாலமாகிய கண்களையுடைய பெண்கள் தங்களுடைய சிலம்பணிந்த தாமரைமலர்போலும் பாதங்கள் சிவக்கவும், நூல்போன்ற இடையானது வளையவும், ஏறிவிளையாடுகின்ற இரத்தினமிழைத்த மேலுப்பரிகைகள், அரம்பைகள் விளையாடுதற்குரிய மலைகளைப்போல அமைந்திருந்தன; சிவாலயத்தின் கோபுரத்தில் நாட்டப்பட்டிருந்த கொடிகளின் கொம்புகள், கற்பகவிருக்ஷத்தில் படர்ந்திருக்கும் காமர்வல்லிக்கொடியானது படருதற்கு நாட்டப்பட்ட கொழுகொம்புகளைப் போன்றிருந்தன. இப்படிப் பலவகை விசித்திரங்களும் பொருந்திய அந்நகரத்தின் சிறப்போ அளவிடக்கூடாதது; அந்நகரத்தில் பரதநாட்டிய மாடுகின்ற மயிலுக்கு நிகராகவும் சூஸ்திரக் கயிற்றின் வழியாக ஆடுகின்ற சிங்காரம் பொருந்திய பாவைக்குச் சமானமாகவும் விளங்கிச் சூதவிளையாட்

டைச் செய்கின்ற உடுக்கைபோன்ற இடையினையுடைய பெண்கள், புருடர்களோடு பஞ்சணையிற்படுத்துப் புரளுகின்றகாலத்தில், தாங்கள் அணிந்திருந்த இரத்தினாபரணங்களுறுத்தக் கோபித்து அவ்வாபரணங்களைக் கழற்றி எறிய அவை சமுத்திரத்திற் சேர்ந்து நிறைந்தபடியினாலேதான் அது இரத்தினாகரமெனப் பெயர் பெற்றது.

இத்தன்மையாகிய சிறப்பினையுடைய காஞ்சிபுரத்தில் மேற்கூறியபடி பார்வதிதேவி புகுந்து அங்குள்ள சிங்காரங்களைப் பார்த்தபின்னர் பல வீதிகளையும் கடந்து ஒப்பற்ற மாவிருக்ஷத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதரைக் கண்டு வணங்கி, நெருப்பையொத்த கொடிய பாவங்கள் நடுங்கி ஓடிப்போகும்படிப் பெருக்கெடுத்து வருகின்ற கம்பைநதிபக்கமே போய், ஓரிடத்தில் அலங்காரமாக மணலைக் குவித்து இலிங்கரூபமாக்கிப் பக்தியோடு அதற்குப் பூசனை புரிந்து தவத்தைச் செய்துகொண்டிருந்தாள். அப்படி அவள் தவஞ்செய்துகொண்டிருக்கும்போது எம்பெருமானாகிய பரமசிவக்கடவுள் அவளுடைய தவத்தின் உறுதியை அறியக் கருதித் தம்மிடத்திலுள்ள கங்கையை யேவி அந்தக் கம்பைநதியில் பெருகி வந்து அவளுடைய தவத்திற் கிடையூறு விளைக்கும்படிச் செய்தனர். அச்சமயத்திற் கங்கை சிவனுடைய கட்டளைப்படி கம்பைநதியில் பெருகிவரத் தலைப்பட்டபடியால் அந்தக் கம்பைநதியானது பூமியில் அகத்திய முனிவர் கமண்டலம் கவிழ்ந்ததனால் பெருகிய காவிரியோ! அந்த முனிவர் ஆதிகாலையில் ஆசமனஞ்செய்து உமிழ்ந்த சமுத்திரத்தின் பெருக்கோ! குற்றமற்ற தவத்தைச் செய்யும் பகீரதனுக்காகச் சன்னுமுனியானவர் காதின்வழியாக விடப் பெருக்கெடுத்துவந்த கங்காநதியோ! என்று சொல்லும்படி மிகவும் பெருகி யிரண்டு கரைகளிலும் மிகுந்த அலைகளுடன் தாவி விரைவாகச் சென்றது. அப்படிச் செல்லும்போது பார்வதி, மணலால் இலிங்கமுண்டாக்கிப் பூசிக்கும் இடத்திலும் சலம் பாய்ந்தது. அதனால் அவள் இலிங்கத்



திற்கு அபாயமுண்டாகுமென்று பயந்து உடனே ஆசையினால் தன் கணவனைக் கட்டிக்கொள்பவள்போல வளையலணிந்த இரண்டு கைகளாலும் அந்த இலிங்கத்தைக் கட்டி மார்போடு சேர்த்தணைத்துக்கொண்டாள். அப்படித் தழுவிக்கொண்டமாத்திரத்தில் அந்த லிங்கத்தி லெழுந்தருளியிருந்த பரமசிவக்கடவுள் அவளுடைய பக்திக்கிரங்கி மன முருகிக் குழைந்தார். அச்சமயத்தில் அவருடைய கிருபாகடாக்ஷத்தினாலே பார்வதிதேவியின் கவலை தீரும்படி அன்னங்களால் சூழப்பட்ட அந்தக் கம்பைநதியின் பிரவாகமானது அருணாசலத்தை ஒருவேளை நினைத்தவர்களுடைய வினைகள் சாராமல் இரண்டுபட்டோடுவதுபோல் இரண்டாகப் பிரிந்து அந்த லிங்கத்தைச் சுற்றிக்கொண்டோடியது. அதன்மேல் பார்வதிதேவி லிங்கத்தைத் தழுவியிருந்த கைகளை நீக்கிப் பக்கத்தில் பிரகாசிக்கின்ற ஆபரணங்களை யணிந்த அநேகம் பெண்கள் சூழப் புஷ்பமாலையும் சந்தனமும் அந்த லிங்கமாகிப் சிவபெருமானுக்கணிந்து அவரை வணங்கினாள். அப்போது மாவடுப்போன்ற கண்களையுடைய அந்தப் பார்வதி தன்னுடைய நாயகரது மார்பை மற்றப் பெண்கள் தொடாமலிருக்கும்படி தடுக்கும்பொருட்டு வைக்கப்பட்ட குறிகள்போல அந்த மூர்த்தியினுடைய மார்பில் அவள் கட்டித் தழுவியதனாலேற்பட்ட தழும்புகள் விளங்கின.

பின்னர் பரமசிவன் பார்வதிக்குத் தரிசனங்கொடுக்கத் திருவுளங்கொண்டு அரிமர்த்தனபாண்டியன் அடித்த அடியினால் ஏற்பட்ட தழும்பையுடைய தோளும், மூன்று காலத்திலும் வணங்குகின்ற தேவர்களுடைய கிரீடங்கள் அழுத்தியதனால் ஏற்பட்ட தழும்புகளையுடைய திருவடிகளும், மேற்கூறியபடி மேகம்போன்ற கூந்தலையுடைய பார்வதி தழுவியதனாலேற்பட்ட தழும்பையுடைய மார்பும், திருநீறணிந்த மார்பும் விளங்கும்படி அந்த அம்மையாருக்கு முன்னே விருஷபவாகனத்தில் எழுந்தருளிநின்றார். அச்சமயத்தில் ஆகாயத்தில் தேவர்களெல்லோருங் கூடிப் புஷ்பமாரி

பொழிந்தார்கள்; தேவதுந்துபி முழங்கிற்று; வேதகோஷங்க ளுண்டாயின. இவ்வாறு பல மங்கலச் செய்கைகளெல்லாம் நிகழ, தேவேந்திரனும், விஷ்ணுவும், மற்றத் தேவர்களும், பார்வதியைத் தொழுதார்கள்; அழகிய கொவ்வைக் கனிபோலும் வாயையுடைய அம்மையும் சிவபெருமானை வணங்கிநின்றாள். மூன்றாம்பிறைச் சந்திரன்போல் விளங்குகின்ற நெற்றியையுடைய பார்வதி, விருஷபவாகனத்திலெழுந்தருளிய சிவனுக்கு முன்னே சென்று மேற்கூறியபடி வணங்கவே சுவாமியானவர், அவளை நோக்கி, 'உனக்கு வேண்டிய வரம் யாது?' என்று வினவினார். அதற்கு அம்மையார், 'சுவாமி! நான் தம்முடைய கண்ணை மூடியதனால் எனக் கேற்பட்ட பாவத்தைப் போக்கி உமது இடப்பாகத்தைக் கொடுத்தருளவேண்டும்,' என்று கூறினாள். அதைக் கேட்டவுடன் சிவபெருமான் அம்மையாரை நோக்கி, 'பார்வதியே! நீ என் கண்களை மூடியதனாலேற்பட்ட பாவம் இத்தலத்தி லென்னைப் பூசித்த விசேஷத்தினாலே நீங்கிவிட்டது; உன்னுடைய விருப்பப்படியேயெனது இடப்பாகத்தை நீ பெறவேண்டுமானால், நான் சொல்லுகிறபடி செய்; இந்தப் புண்ணிய தலத்திற்குத் தென்பாரிசத்திலே ஒரு நகர மிருக்கின்றது; அதைநினைத் தமாத்திரத்திலேயே முத்தியுண்டாகும்; அங்கே முற்காலத்தில் நாம் பிரமன், விஷ்ணு ஆகிய இவர்களின்பொருட்டு ஜோதிவடிவமாகத் தோன்றி, அவ்விருவரும், அடியையும் முடியையும் தேடிய காலத்தில் பிரமனுக்கு முடியையும், விஷ்ணுவுக்கு அடியையும் காட்டாமல் மேலுலகத்திலும் கீழுலகத்திலும் ஒரே வடிவமாக வியாபித்து நின்றோம்; அக்காலத்தில் நாம் அவர்களிடத்தில் பூமியி லிருப்போர்க்குப் பின்னே மலையுருவமா யிருப்போமென்று கூறியபடியே இப்போது அத்தலத்தில் மலையுருவமாயிருக்கின்றோம்; அவ்விடத்திற்கு நீ வந்து நம்மைப் பூசிக்கும் பக்ஷத்தில் உன் விருப்பப்படியே உனக்கு இடப்பாகத்தைக் கொடுத்தருள்வோம்,' என்று கூறினார். பரமசிவன் இப்படிக் கூறவே பார்வதிதேவி அவரை நோக்கி, 'சுவாமி! முன்னே



காசிமுதலிய க்ஷேத்திரங்களினும் இக்காஞ்சி அதிக மகிமையுடையதென்றும், இதில் தவஞ்செய்தால் என் பாவம் நீங்குமென்றும் உரைத்தருளினீர்; இப்போதோ இத்தலத்தினும் விசேஷமுடையது அருணாசலமென்றும், அதில் உம்மைப் பூஜித்தால் இடப்பாகந் தருவதாகவும் கூறுகின்றீர்; இதனால் அத்தலமே எல்லாத் தலங்களினும் விசேஷமுடையதென்று தெரிகிறது; ஆயினும், அதினும் மிகுந்த சிறப்புடைய தலமொன் றிருந்தாலு மிருக்கக்கூடும்; அப்படியேதேனு மிருந்தால் அதனையுங் கூறியருளவேண்டும்,' என்று சொன்னாள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சிவபெருமான், பார்வதியிடத்தில், 'பெண்ணே! இவ்வுலகத்தில் இதற்கு மேற்பட்ட தலம் வேறொன்று மில்லை; இன்னும், நமக்குச் சமமான தெய்வமும், பஞ்சாக்ஷரத்திற் கொப்பான மந்திரமும், சைவசமயத்திற்கு நிகரான சமயமும், பொல்லாத பாவங்களை யெல்லாம் தீர்க்கும் இந்த அருணாசலத்திற்கு நிகராகிய தலமும் இல்லை; இவ்வுண்மையை ஐயமறத் தெரிந்துகொள்வாயாக,' என்று சொல்லி உடனே கைலாயத்திற் கெழுந்தருளினார்.

அதன்மேல் பூங்கொம்பைநிகர்த்த பார்வதிதேவியானவள் சிவபெருமானை நோக்கி, 'சுவாமி! நான் இப்போது அறியாமல் வினவிய வார்த்தைகளைப்பற்றி மனவருத்தங் கொள்ளாமல் என் குற்றத்தை மன்னித்தருளவேண்டும்,' என்று கூறி வணங்கி அவரிடம் விடை பெற்றுக்கொண்டு, சுப்பிரமணியர், கணபதி, சப்தகன்னியர்கள், வயிரவர், சிவகணங்கள் முதலியவர்களெல்லோரும் தன்னைச் சூழ்ந்துவரவும், இலக்குமி கவரி வீசவும் பல்லக்கி லேறிக் கம்பைநதியை விட்டுப் புறப்பட்டுக் காஞ்சிபுரத்தையுங் கடந்து சென்றாள். அப்படிச் சென்ற அந்தப் பார்வதி பின்னர், பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகவும், பட்டுப்போன மரங்களும் தளிர்த்துத் தேனோடு கூடிய புஷ்பங்களைச் சொரியவும், பாறைக்கற்களும், பெரிய மலைகளும், கரைந்துருகவும்

வெண்டாமரைமலரில் வாசஞ்செய்கின்ற சரஸ்வதி தோத்திரஞ் செய்யவும், இரண்டுகாத தூரம்போய் அருணாசலத்திற்குச் சமீபத்தில் ஒரிடத்தி லிறங்கினாள்; அச்சமயத்தில் சூரியன், 'நீலம்போன்ற கையையும் மரகதம்போன்ற வடிவத்தையும், தாமரைமலர்போன்ற உள்ளங்கைகளையும், உள்ளங்கால்களையுமுடைய பார்வதிதேவியார் பரமசிவனிடத்தில் நம்மை யாரென்று வினவி அவருடைய கண்களை மூடியபடியால் பாவத்தை யடைந்து அவரைப் பிரிந்து இவ்விதம் வருத்தமுற்றனள்; இதற்குக் காரணம் நாமே; ஆதலால், நாம் உயிரை விட்டுவிடுவது நலம்,' என்று கருதி மேற்குக்கடலில் வீழ்பவன்போல அதற்குட்புகுந்து மறைந்தான். அவ்வாறு சூரியன் அஸ்தமிக்கவே, சுப்பிரமணியர் அவ்விடத்தில் அம்மை தங்கியிருப்பதற்காக ஒரு வாழைப்பந்தலை அமைத்தார். அதன்பின்பு பார்வதி அந்தப் பந்தலிற் றங்கி சுப்பிரமணியரைப் பார்த்து, 'குமாரனே! நீ யெனக்கு உன்னுடைய பன்னிரண்டு கைகளும் வருந்தும்படி வாழைப்பந்தலை யமைத்து எனக்கு மனமகிழ்ச்சியை யுண்டாக்கினாய்; ஆயினும், இன்னும் நீ என்பொருட்டுச் செய்யவேண்டிய வேலையொன்றிருக்கின்றது; அஃதியாதெனில், யான் சந்தியாவந்தனஞ் செய்தற்குப் பரிசுத்தமான ஜலம் வேண்டும்; ஆதலினால், உன்னுடைய வேலாயுதத்தை யேவி அதன்மூலம் ஜலத்தை வரவழைப்பாயாக,' என்று கூறினாள். அப்படிச் சொன்னமாத்திரத்திலே ஜலம் கொண்டுவரும்பொருட்டுச் சுப்பிரமணியர் பக்தியோடு வேலாயுதத்தை யேவினார். அந்த வேலாயுதமானது வழியில் ஏழு மலைகளிலிருந்து தவஞ்செய்த போதவான், புத்திராண்டன், புருகூதன், போதன், பாண்டாங்கன், சோமன், வாமன் என்னும் ஏழு அந்தணர்களையும், அந்த ஏழுமலைகளையும் துளைத்துக்கொண்டு சென்று நல்ல தண்ணீர்க் கடலுக்குப் போய் அங்கிருந்து தான் சென்ற வழியே வரும்படி அந்த ஜலத்தைக் கொண்டுவந்தது; அந்த ஜலமானது சிவப்பு நிறத்தோடு ஒரு ஆறாகப் பாய்ந்தது; அப்படிச் சிவந்த ஜலத்தோடு அவ்வாறானது



பாய்ந்தபடியால், அதற்குச் சேயாறு என்று பேராயிற்று. அதன்மேல் சுப்பிரமணியரால் வரவழைக்கப்பட்ட அந்த ஆற்றிலே பார்வதிதேவி சந்தியாவந்தனம் முதலியவைகளை முடித்துக்கொண்டு அந்த வாழைப்பந்தலில் தங்கியிருந்தனள். அப்போது, சுப்பிரமணியர் அந்த அம்மையை வணங்கி அவளை நோக்கி, 'அம்மையே! இந்த ஆற்றுநீர் சிவப்பாயிருக்கவேண்டிய காரணமென்ன?' என்று வினவப் பார்வதிதேவி அவருக்கு அதன் விசேஷத்தைச் சொல்லத் தொடங்கினவளாய் அவர் திருமுகத்தை நோக்கி, 'மைந்தனே! முற்காலத்திலே அனந்தமாபுரமென்னும் பட்டணத்தில் தோன்றிய ஏழு பிராமணர்கள் அறியாப்பருவத்தில் அளவற்ற தீவினைகளைச் செய்து, பின்னர் நல் விவேகந் தோன்றித் தங்கள் பாவந் தீரும்பொருட்டு இலைகளையே உணவாக உண்டு அன்னவாகனத்தையுடைய பிரமதேவனை நோக்கிப் பலநாள் அருந்தவம் புரிந்தார்கள். அப்படித் தவஞ் செய்யும்போது பிரமன் ஒரு சமயம் அவர்களுக்கு முன்னே தோன்றி, 'பாவிகளே! நீங்கள் முன்னே அளவற்ற பாவச் செய்கைகளைப் புரிந்திருக்கின்றீர்கள்; ஆதலால், அந்தப் பாவங்கள் இப்பொழுது தீரமாட்டா; நீங்கள் எழுவரும் ஏழுமலைகளில் தங்கி இன்னும் விதிப்படி கடுந்தவஞ் செய்யுங்கள்; நீங்கள் இப்படித் தவஞ்செய்துகொண் டிருப்பீர்களானால் பின்னொரு காலத்தில் பார்வதிக்கு ஜலம் வேண்டிய நிமித்தத்தால் சுப்பிரமணியர் வேலாயுதத்தை யேவுவார்; அந்த வேல் உங்களையும் நீங்க ளிருக்கும் மலைகளையும் துளைத்துக்கொண்டு செல்லும்; அப்படி அது துளைத்தமாத்திரத்திலே உங்களுடைய சடைகளோடு கூடிய சிரங்களும், பாவங்களும் பொடிப்பொடியாகப்போம்,' என்று கூறிச்சென்றார். அப்படியே எழுவரும் தவஞ்செய்துகொண்டிருந்தார்கள். பிரமன் சொற்படி ஜலத்தின்பொருட்டு நீ இப்போ தேவிய வேலாயுதம் அந்த ஏழுபேர்களையும் அவர்களிருந்த மலைகளையும் துளைத்துக்கொண்டு செல்ல, அது சென்ற வழியே இந்த ஜலம் புரண்டு வந்தபடியால் அவர்களுடைய இரத்தத்தோடு கலந்து

இவ்வாறு சிவந்துபோய்விட்டது; இதனால் உனக்கொரு குற்றமுமில்லை,' என்று கூறினாள். இந்த விவரத்தைக் கேட்டுச் சுப்பிரமணியர் சந்தோஷித்துத் தாயை வணங்கியிருந்தார்.

இப்படி யிருக்கும்போது முன்னே அந்தச் சுப்பிரமணியக்கடவுளுடைய வேலாயுதத்தால் பிளக்கப்பட்ட அந்த முனிவர்களுடைய இரத்தஞ் சிதறியதனால் ஆகாயமெல்லாம் சிவந்ததுபோலச் செவ்வானம் படர்ந்தது; சிறிது நேரத்திற்குள் இருளும் வந்து மூடியது; அப்படிப் பாவிய இருளானது எப்படி யிருந்ததெனில், ஒருவன் முந்திய ஜன்மத்திற் செய்த பாவம் மறு ஜென்மத்தில் அவனைப் பற்றிக் கொள்வதுபோல பார்வதி சிவனுடைய கண்களை மூடிய காலத்தில் உண்டான பேரிருளானது மீண்டும் வந்து அத்தலத்தில் அவளைப் பற்றிக்கொண்டதுபோன்றிருந்தது. ஆகாயத்தில் நக்ஷத்திரக்கூட்டங்களெல்லாம் நெருக்கமாகப் பிரகாசித்தன. அவ்வாறு அவை பிரகாசித்த தோற்றம் எப்படி யிருந்ததெனில், தேவர்கள், 'பார்வதியோ ஒரு வாழைப்பந்தரின் கீழிருக்கின்றாள்; ஆகையால், இவளுக்கு அழகிய முத்துப்பந்தலைச் சமைப்போம்,' என்று கருதி மேலே முத்துப்பந்தலிட்டதுபோன்றிருந்தது. அதன்மேல், மாலைக்காலமென்னும் துர்க்கை, இருட்டாகிய மகிடாசுரன் தலையையறுத்துச் செவ்வானமாகிய இரத்தக்கோலத்துடனே சந்திரனாகிய ஸ்படிகலிங்கத்தைக் கொண்டதுபோலச் செவ்வானம் படர்ந்த மாலைக்காலத்திற் றோன்றிய இருளானது நீங்கச் சந்திரனுதயமாகி அவ்விரவெல்லாம் சஞ்சரித்து விடியுந்தருணத்தில் மேற்குத்திக்கில் அஸ்தமித்தான். அதன்மேல் பார்வதிதேவி சிவபெருமானுடைய இரண்டு கண்களையும் புதைத்த மாத்திரத்தில் நான்கு திக்குகளிலும் பாவிய இருளெல்லாம் நீங்கும்படி தோற்றிய அவருடைய நெற்றிக்கண்ணைப்போலச் சிவந்த பிரகாசத்தையுடைய சூரியன் கிழக்குத்திக்கில் உதயமானான்.

அவ்வாறு சூரியோதயமானவுடனே அங்கு வாழைப்பந்தரிற் றங்கியிருந்த பார்வதிதேவி யெழுந்து கங்கைக்குச் 



சமானமாகிய அந்தச் சேயாற்றில் காலைக்கடனை முடித்துக்கொண்டு பொன்மயமான பல்லக்கிலேறி வேதகோஷ்டம் முழங்க அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சென்று, பங்கப்படுத்துகின்ற மும்மலங்களைத் தீர்க்கும் அடியார்களுடைய பாவமாகிய பஞ்சுமலையை யெரிக்கத்தக்க நெருப்புமலையாய் விளங்கிய திருவண்ணாமலைக்குச் சமீபத்திற் சேர்ந்து அதனைப் பார்த்துச் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துக் கொண்டாள்; அதன்மேல் அந்த அம்மையார், அத் திருவண்ணாமலையைச் சார்ந்த பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய நான்கு நிலங்களையும் தாண்டி மருதநிலத்திற் சேர்ந்தாள். அப்படி யவள் இந்த நான்கு நிலங்களிலும் செல்லும்போது அந்த அந்த நிலங்களிலுள்ள மனிதர்கள், அந்த அந்த நிலங்களுக்குரிய தெய்வங்களுக்குச் சிறப்பு முதலியன செய்து தங்கள் தங்களுக்குரிய தொழில்களை நடத்திக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்திருந்தார்கள். அந்த விசேஷங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு பார்வதிதேவியார், மேற்கூறியபடி மருதநிலத்திற் சேர்ந்தபோது அந்நிலமானது மிகவும் சிறப்புற்று விளங்கியது. அந்நிலத்திலுள்ள வயல்களில் நதிஜலமானது பாவிப்பாய ஒரு பக்கத்தில் மள்ளர்கள் எருமைக்கடாக்களை ஏரிற் பூட்டிக் கலப்பையால் உழுது தொளியாக்கி நடும்பருவமாக வளர்ந்திருந்த நாற்றை நற்றினத்திலே பிடுங்கிப் பள்ளியரைக் கொண்டு நடும்படிச் செய்து மகிழ்ச்சி யடைந்து மருதநில தெய்வத்தைத் துதித்தார்கள். மற்றொரு பக்கத்தில் செழிப்பாக வளர்ந்திருந்த பயிர்களுக்குப் பள்ளியர் களையெடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்படி யவர்கள் களையெடுக்குங்காலத்தில் அவர்கள் கண்ணிழலைக் கண்ட சேற்கெண்டைகள் அவற்றைத் தம்மினமென்று கருதி அவர்கள் பக்கத்தில் வந்து சூழ்ந்து, பின்னர் அவர்கள் புருவநிழலைப் பார்த்து வில்லென்று கருதிப் பயந்தோடிக்கொண்டிருந்தன. ஆசையைத் தருகின்ற அவர்களுடைய முகத்தைப் பார்த்த வண்டுகள், அதனைத் தாமரைப்பூவென்று நினைத்து அவர்களுக்குச் சமீபத்தில் வந்து சூழ்

ந்து அவர்களுடைய நாசியின் வடிவத்தைப் பார்த்துச் சண்பகப்பூவென்று கருதி உடனே திரும்பி ஓடிக்கொண்டிருந்தன. அப்பள்ளியரால் பறிக்கப்பட்ட களைகளை வாரி வரப்பில் போட்டுக்கொண்டு திரிந்த மள்ளர்கள் கட்குடிவெறியினாலே அந்தப் பள்ளியர்களுடைய கணைக்கால்களை வரால்மீன்கள் என்று நினைத்துப் பிடித்து அவை மீன்கள் அல்லவெனத் தெரிந்து வெட்கத்தை யடைந்து அவற்றைவிட்டு மீண்டும் அவர்களுடைய புறங்கால்களை ஆமைகளென்று நினைத்துப் பிடித்து அவமானத்தை அடைந்துகொண் டிருந்தார்கள். அப்படி யவர்கள் அவமானத்தை அடையும் அவ்விடத்தில் மலர்ந்து நிறைந்திருந்த தாமரைப்புஷ்பங்களும் நீலோற்பல மலர்களும், 'நாங்கள் இந்தப் பள்ளியருடைய முகத்திற்கும் கண்ணிற்கும் தோற்றுப்போனோம்,' என்று தங்கள்மேல் விழும் வண்டுகளிடத்தில் சொல்லிக் கண்ணீர் விட்டழுவதுபோலத் தேனைச் சொரிந்துகொண்டிருந்தன. அங்குள்ள தடாகங்களின் நீரிலே எருமைகள் விழுந்து கலக்க, அதில் வாசம் செய்துகொண்டிருந்த இளமையாகிய அன்னங்களும் நாரைகளும் பயந்து பறந்துபோய்ப் பக்கத்திலுள்ள சோலைகளில் சேர்ந்துகொண்டிருந்தன. பிரகாசம் பொருந்திய ஆபரணங்களையுடைய மள்ளர்கள் மருதநிலப் பறையை வாசிக்க அதற்கேற்பப் பள்ளியர்களுடைய கூந்தலிற் பொருந்தியிருந்த வண்டுகள் புள்ளாங்குழலிசை போன்ற இசையைச் செய்துகொண்டிருந்தன. மற்றொரு பக்கத்தில் நீர்வளத்தினாலே நெற்பயிர்கள், பூமிதேவியின் தேகத்தில் மயிர்க்கூச்செறிந்ததுபோல் செழிப்படைந்து வளர்ந்து கிளிகளின் சிறகைப்போலப் பச்சைநிறமுற்றுத் தொண்டைக் கதிராய் முற்றிக் கூவுகின்ற கோழிக்கழுத்துப்போல நிமிர்ந்து, 'பார்வதி தவஞ்செய்வதற்குரிய தலம் இதுதான்,' என்று சொல்லித் தலைசாய்த்துக் காட்டுவதுபோலத் தலை வளைந்து விளைந்து கிடந்தன. மற்றொரு பக்கத்தில் அவ்வாறு விளைந்து கிடந்த நெற்கதிர்களை மள்ளர்கள் பதம்பார்த்தறுத்துக் கட்டிச் சுமையாக்கிக் களங்களிற் கொண்டுபோய்ப்



போட்டுத் தேவேந்திரன் உலகத்தோடு போர்செய்ய எழுந்த மலைகளைப்போலத் தோற்றும்படிப் போர்களை வேய்ந்து பின்னர் நற்றினங்களில் அவற்றைப் பிரித்துதறிச் சூரியனுடைய குதிரைகளைப்போன்ற எருமைக்கடாக்களை விட்டு மிதிக்கும்படிச் செய்து வைக்கோலை வேறுபடுத்தி, நெல்லைத் தூற்றி யெடுத்து மந்தரகிரிபோலக் குவித்து அங்கு வந்த யாசகர் முதலியோருக்குக் கொடுத்து அதில் மீதியானதைத் தங்கள் தங்கள் வீடுகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதச் சிறப்புக்களையுடைய அந்த மருதநிலமானது, ஒழுங்காய் மொய்த்துச் செல்கின்ற வண்டுக் கூட்டங்களின் வரிசைகள் கட்டுகின்ற சங்கிலிகளாகவும், இரத்தினம்போன்ற நெற்கதிர்கள் சாமரையை நிகர்த்த காதுகளாகவும், ஒழுகுகின்ற மதுத்துளிகள் மதநீராகவும் அமையத் தேவேந்திரனேறுகின்ற ஐராவதமென்னும் யானையைப்போல விளங்கிற்று.

இப்படி விளங்கியதும், வண்டுகள் இசை பாடுகின்ற தாமரைப்புஷ்பங்கள் நிறைந்ததும், இன்னும் பலவிதச் சிறப்புக்களை யுடையதுமாகிய அந்த மருதநிலத்தில், பார்வதிதேவி மேற்கூறியபடி புகுந்த பின்பு அங்குள்ள விசேஷங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு அம்மருதநிலத்தூர்களைக் கடந்து அருணைபம்பதிக்குட் சென்று வடக்குவீதியிலெழுந்தருளிப் பின்னர் அருணாசலேசருடைய பாதாரவிந்தங்களைக் கண்டு வணங்கும்பொருட்டு ஆகாயத்தை யளாவிய கொடிகளையுடைய தேர்கள் நிற்கும் கிழக்கு வீதியில் வந்தாள். அப்போது வச்சிராங்க ளிழைக்கப்பட்ட சுவாமி ஆலயத்தின் கோபுர சிகரமானது, அதற்கு நேரே சந்திரன் வரும்போது அதனுடைய பிரகாசத்தினாலே அவன் தன்னிடத்துள்ள களங்கத்தை நீக்கிக்கொள்ளுமாறு விளங்கிற்று. இன்னும் அக்கோபுரத்தில் இழைக்கப்பட்ட மாணிக்கங்கள், சூரியன் அதற்கு நேரே வரும்பொழுது அவனுடைய தேரிற் பூட்டிய பச்சைக் குதிரைகளெல்லாம் தங்களுடைய பச்சை நிறம்

மாறிப் பவள நிறமாகத் தோற்றும்படி விளங்கின. அங்கு வேறு வேறாகி மேருவை நிகர்த்துத் தோற்றுகின்ற மேடைகள்மேலும், மேகங்கள் சஞ்சரிக்கின்ற மதில்கள்மேலும் இழைக்கப்பட்டிருந்த நீலரத்தினங்களின் பிரகாசத்தினால் ஆகாயத்திலிருக்கும் கங்கையானது யமுனையைப்போல் கறுப்புநிற மடைந்து தோற்றியது. சமுத்திர கோஷத்தைப் போல வாத்தியங்கள் முழங்க நிருத்தமாதர்கள் நாட்டியஞ் செய்கின்ற மேல் உப்பரிகையில் இழைக்கப்பட்டிருக்கும் பச்சைரத்தினங்களின் கிரணங்களைப் புல்லென்று நினைத்துச் சூரியனுடைய ஏழு பச்சைக்குதிரைகளும் கௌவி மருட்சியை அடைந்து சென்றுகொண்டிருந்தன.

மேற்கூறியபடி கிழக்கு வீதியில் வந்த பார்வதி இவ்வகைச் சிறப்புக்களை யெல்லாமுடைய அந்த வீதியைத் தாண்டி அழகு நிறைந்த கோவிலுக்குட் புகுந்து, மகா உத்தமரும், என்னை யாட்கொண்டவரும், ஞானசொரூபருமாகிய அருணாசலேசுரரைக் கண்டு நமஸ்கரித்து மிகுந்த பக்தியுடன் உருக்கத்தை யடைந்து திரும்பித் தலைச்சுரமென்கிற மலைச்சாரலை அடைந்தாள்; அங்கே ஊசியிலே ஒரு காலின்விரலை யூன்றிக்கொண்டு ஒரு காலைமடித்து மூக்குநுனியிலே கண்களைச் சேர்த்துக்கொண்டும்,பஞ்சாக்கினியை வளர்த்துப் பிரகாசமான அமுததாரணை செய்து பிரமரந்திரத்தின் வழியாக வருகிற அமிர்தத்தை உண்டும், அநேகம் கோடிபேர் விசுவாமித்திரனைப் போலக் கடுந்தவம் புரிந்து கொண்டிருந்தார்கள். ஆணவம்,காமியம், மாயை யென்கின்ற மும்மலங்களையும் நீக்கி நல்வினை தீவினை யிரண்டையும் விட்டுச் சமநிலையை அடைந்து மனமிறந்து தற்போதங் கெட்டு எல்லாம் சிவமயமெனக் கருதி மோக்ஷம் பெற விரும்பி மற்றோர் ஆசையுமின்றிச் சிவஞானம் பெற்ற அநேகங் கோடி ஞானிகளு மிருந்தார்கள். ஆகமங்கள் சொன்ன விதிப்படிச் சிவனைப் பூசித்துத் தேவர்களுக்கெல்லாம் முதல்வனாகிய அந்தச் சிவபிரானுடைய பஞ்சாக்ஷர மந்திரத்தைப்



பக்தியுடன் ஓதி மனமகிழ்ந்து அநேகங் கோடிபேர் கிரியைகளை நடத்திக்கொண்டிருந்தார்கள். இன்னும் அநேகங் கோடிபேர்கள் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று சொல்லப்பட்ட அஷ்டாங்கயோகங்களின் வகைகளை அறிந்து தேகக்கிரமத்தோடு அவைகளை முயன்று செய்துகொண்டிருந்தார்கள்.

இப்படிப் பலரும் யோகம், தவம் முதலிய பல செய்கைகளைச் செய்துகொண்டிருக்கும்போது, அங்குச் சென்ற பார்வதி அவர்களைப் பார்த்து அதிசயித்துப் பின்னர், மாமரச் சோலைகளாற் சூழப்பட்ட சுனைகளையும் அருவிகளையும் பார்த்துக்கொண்டுபோய் மற்றொரு பக்கத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த கௌதமருடைய ஆச்சிரமத்திற்குச் சென்றாள். அவ்வாறு அம்மை சென்ற மாத்திரத்திலே அந்தக் கௌதமருடைய மனைவியாகிய அகலிகையும், அவர் புத்திரராகிய சதானந்தரும் வந்து பார்வதியைப் பணிந்தார்கள். அங்ஙனம் வணங்கியமாத்திரத்திலே பார்வதிதேவி அவர்களை ஆசீர்வதித்து அவர்களிடத்தில், 'வேதங்களை யுணர்ந்த முதல்வரான கௌதமரிஷி எங்கே யிருக்கின்றார்?' என்று வினவ, சதானந்தர், அம்மையை நோக்கி, 'அம்மையே! என்னுடைய பிதாவாகிய கௌதமர்: புஷ்பம், தருப்பை முதலியவற்றைக் கொண்டுவருவதற்கு வெளியே சென்றிருக்கின்றார்; அறியாச் சிறுவனாகிய என்னுடைய குடிசைவீட்டில், க்ஷணப்போது தாங்களிருந்தால் அவரை யுடனே அழைத்து வருகின்றேன்,' என்று சொல்லி அவளுடைய பாதங்களில் விழுந்து வணங்கி அவளிடம் விடைபெற்றுக்கொண்டு கௌதமரிடஞ் சென்றார். அப்படி யவர் செல்லும்பொழுது கௌதமர்: பிருகுமுதலிய ரிஷிகளோடு திரும்பித் தம்முடைய வனத்திற்குச் சமீபத்தில் வந்துகொண்டிருந்தார். அப்போது அங்குப் பார்வதி சென்றிருந்த விசேஷத்தினாலே அவ்விடத்தில் புஷ்பமில்லாம லிருந்த மரங்களும் புஷ்பித்துக் கற்பக விரு

78040

க்ஷங்கள்போலத் தோன்றின. அவ்வாறு அவை விளங்கிய விசேஷத்தைப் பார்த்தவுடனே, கௌதமர், 'இங்கே முன்னர் மலரில்லாமலிருந்த மரங்களும் மலருடையவைகளாய்த் தோற்றுகின்றன, இது நம்முடைய வனமோ வேறு யாருடையதோ?,' என்று சந்தேகப்பட்டு நான்கு திசைகளையும் நோக்கினார். அவரோடு கூடவந்த பிருகு, பராசரர், அத்திரி முதலிய ரிஷிகளும் அவ்விசேஷத்தை நோக்கி, 'இந்த வனம் முன்னிருந்ததுபோ லில்லாமல் மலராத விருக்ஷங்களும் மலர்ந்து மிகவும் சிறப்புடையதாய்த் தோற்றுகின்றது; எவரேனும் பெரியோர்கள் வந்தால்மாத்திரந்தான் இவ்வித விசேஷமுண்டாகும்; ஆதலால், இங்கே யெவரேனும் உத்தமர்கள் வந்திருக்கவேண்டும்; அப்படி யிங்கே வந்தவர் யார்?' என்று கௌதமரிடத்தில் வினவினார்கள். அச்சமயத்தில் மேற்கூறியபடி சென்ற சதானந்தர், கௌதமரைக் கண்டு நமஸ்கரித்தார். அப்படி வணங்கியமாத்திரத்தில், கௌதமர் சதானந்தரை நோக்கி, 'மைந்தனே! இவ்விடம் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது விசேஷமுடையதாகக் காணப்படுகிறது; இதற்குக் காரணமியாது?' என்று கேட்டார். அதற்குச் சதானந்தர், "பிதாவே! பிரமன் முதலாகிய பஞ்சகர்த்தர்களையும் தன்னிடத்தி லுண்டாக்கிய பராசத்தி நம்முடைய ஆச்சிரமத்தில் வந்திருக்கின்றனள்; அவள் வந்த விசேஷத்தினாலேயே இவ்விடம் முன்னிலும் சிறப்புடையதாகத் தோற்றுகின்றது," என்று கூறினார். இவ்வாறு சொன்னவுடனே, கௌதமர், மிகவும் சந்தோஷித்த மனமுடையவராய், "வேதங்கள் தேடுதற்கரிய அம்மையோ நம் குடிசைக்கு வந்தாள். இவள் இவ்வாறு வருதற்கு நாம் என்ன தவத்தைச் செய்தோமோ!" என்று சொல்லி உடனே 'அவள் வந்தாள்! என்ற நல்வார்த்தையைக் கூறிய தம்முடைய புத்திரராகிய சதானந்தரைக் கட்டியணைத்து உச்சிமோந்து அவருக்கு உபசார வார்த்தை கூறினார். ஆனந்த மிகுதியால் அங்கு மிங்கு மோடினார். திருக்கூத்தாடினார். தேக பரவசமடைந்தார். அம்மையைப் புகழ்ந்து பாடினார்.



கையில் வைத்திருந்த தருப்பையைக் கீழே எறிந்துவிட்டு, "என்னுடைய பாவம் வேருடனே நாசமாயிற்று," என்று கூறினார். பக்கத்தில் நின்ற அத்திரி முதலாகிய ரிஷிகளும் இரண்டு கைகளையும் கூப்பித் தலைமேல் வைத்துக்கொண்டு கூத்தாடினார்கள்.

பின்னர் கௌதமரும் மற்ற ரிஷிகளும் சந்தோஷத்துடனே விரைந்து சென்று பார்வதியிருக்குமிடத்தைச் சார்ந்து அவளைக் கண்டு அவளுடைய பாதத்தில் வீழ்ந்து பக்தியுடன் வணங்கி எழுந்து நின்று அவளை நோக்கி, "தாயே! நீ கன்னிகையென்றும் சிவபெருமான் நித்திய பிரமசாரியென்றும் சிருஷ்டிகாலந் தொடங்கி யிதுவரைக்கும் வேதங்களெல்லாஞ் சொல்லிக்கொண்டிருக்கின்றன. அப்படியிருக்க உன்னிடத்தில் உலகங்களிலுள்ள எல்லாவுயிர்களுந் தோன்றி உன்னைத் தாயென்று கூறிப் புகழ்கின்றன. இப்படிப்பட்ட உன்னுடைய பெருமையை யெவரறியவல்லவர்? இன்னும் நீ, நித்தியமாக விருக்கின்ற சிவபிரானை முதலில் உண்டாக்குவாய், அச்சிவனிடத்திலே சத்தியாகவும் வருவாய்; இவ்வாறு சத்தி, சிவன் என்கின்ற இரண்டு தன்மைகளைக் கொண்டு உயிர்களையெல்லாம் பெறுவாய்; அத்துவித சொரூபமுமாவாய்; இத்தகைய உனது சொரூபத்தை எவரறிபவர்? இன்னும் பரமசிவக்கடவுளானவர் சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிரமா என்னும் ஐந்து கருத்தாக்களாகத் தோன்றுங்காலத்தில் நீ மனோன்மணி, மகேசுவரி, உருத்திரி, இலக்குமி, வாணி என்னும் பஞ்சசத்திகளாகத் தோற்றுவாய்; அப்படித் தோன்றுவதுமல்லாமல், அந்தச் சிவன், எந்த எந்தச் சமயத்தில் எந்த எந்த வடிவங்களைக் கொள்வாரோ அந்த அந்த வடிவங்களுக்குத் தக்க உருவங்களை நீயும் கொள்வாய்; இப்படிப்பட்ட உன்னுடைய பெருமையை யாரறிய வல்லவர்கள்?" என்று நெஞ்சமுருகித் தோத்திரஞ் செய்தார்கள். பின்னர் கௌதமர் தனியே பார்வதியைப் பார்த்து, "தாயே! பிரமன், அஷ்டதிக்குப் பாலகர்

முதலியவர்களுடைய சிரசுகளிலும் வைத்தற்கருமையான தங்களுடைய இரண்டு பாதங்களும் அடியேனுடைய புன்மையாகிய சிறு குடிசையிற் படுதற்கு யான் என்ன தவத்தைச் செய்தேனோ? தாங்கள் இங்கு வந்ததற்குக் காரணமியாது? அடியேனா லாகவேண்டிய காரியமியாது? அதைத் தெரிவித்தால் அடியேன், அக்கட்டளைப்படி நடத்தற்குச் சித்தமாயிருக்கின்றேன்," என்று கூறினார்.

கௌதமர் இவ்வாறு கூறியவுடனே இளங்கொடி போன்ற இடையினையுடைய பார்வதி, கௌதமரை நோக்கி, 'என்னுடைய குமாரனாகிய கௌதமனே! சுப்பிரமணியன், கணபதி ஆகியவர்களைப் போலவே நீயும் எனக்கொரு புத்திரன்; எனக்கொரு குறை வந்தால் கணபதி, சுப்பிரமணியன் ஆகியவர்களிடத்திலாவது உன்னிடத்திலாவது சொல்லி அதனைத் தீர்த்துக்கொள்வேன்; இஃது என்னுடைய வழக்கம்; ஆதலால், இப்போது உன்னால் ஒரு காரியத்தை முடித்துக் கொள்ளக் கருதி இங்கு வந்தேன்; நீ அதனை நிறைவேற்றி வைக்கவேண்டும்,' என்று சொல்லிப் பின்னர் தான் பரமசிவன் கட்டளைப்படியே பூலோகத்திற்கு வந்ததுமுதல் நடந்த விசேஷங்களையும், தான் தவஞ்செய்யக் கருதி வந்ததையுங் கூறி அதற்குத் தக்கவுதவிபுரியவேண்டுமென்றுந் தெரிவித்தாள். அவ்வாறுதெரிவித்தவுடனேகௌதமர் அம்மையை நோக்கி, 'தாயே! தங்கள் கட்டளைப்படியே அடியேன் தங்களுக்குப் பணிவிடைபுரியச் சித்தமா யிருக்கின்றேன்; உலகத்தில் தாங்கள் தவஞ்செய்யக் கருதி வந்திருக்கும் இத்தலம் மிகவுஞ் சிறப்புற்றதாகும்; இதன் பெயர் தலேச்சுரமாம்; இதில் ஒரு புண்ணியத்தைச் செய்தால் அது பலவாக விருத்தியடையும்; ஆதலால், தாங்கள் இத்தலத்திலமர்ந்து மெய்ம்மையாகிய தவத்தைச் செய்தால், வெண்மை 'நிறம் பொருந்திய விருஷபவாகனத்திலெழுந்தருளும் பரமசிவக் கடவுள் வந்து தங்கள் விருப்பப்படியே தங்களுக்கு இடப்பாகங் கொடுத்தருளுவார்; அம்மையே! இன்னும், விஷ்ணு,



பிரமன், அஷ்டவசுக்கள், தேவேந்திரன் முதலியவர்களும், பல முனிவர்களும் இங்கே தங்கள் தங்களுக்குத் தகுதியான இடங்களை யேற்படுத்திக்கொண்டு தவஞ்செய்து நினைத்த சித்திகளை யடைந்திருக்கின்றார்கள்; ஆதலின், இப்போது தாங்கள் நோக்கிவந்த இந்த இடமும் காலமும் உத்தமமானவைகளாம்; இவ்விடத்தில் செய்யும் தவத்தால் சித்திபெறுவது நிச்சயம்; இங்கே தங்களுடைய தவத்திற்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் அடியேன் ஏற்படுத்துகின்றேன்; தாங்கள் தவஞ் செய்வதற்கு முயலலாம்,' என்று கூறினார். பார்வதிதேவி அவ்வாறே அங்குத் தவஞ்செய்வதற் கிசைந்தாள்.

அதன்மேல் கௌதமர் அங்கே கூடியிருந்த முனிவர்களுக்கெல்லாம் பிரியவசனங் கூறி அவர்களை யனுப்பிவிட்டு உடனே அருணாசலத்திற்குக் கிழக்குத் திக்கில் ஒரு புதிய பன்னசாலையை அம்மை தவஞ் செய்தற்கு யோக்கியமாக அமைத்தார். அவ்வா றமைத்தவுடன் பார்வதி அதிலமர்ந்து சத்தமாதர்களையும் புறக்காவலாக வைத்து, நான்கு வாயில்களையும் எட்டுவயிரவர்கள் காக்கவும், விநாயகர் சுப்பிரமணியர் ஆகிய இருவரும் தன் இரண்டு பக்கத்திலிருந்து காக்கவும், துர்க்கை உட்பக்கத்தைக் காக்கவும் செய்து, வாசனை மிகுந்த புட்பங்களைச் சூட்டுகின்ற கூந்தலைச் சடைசெய்து தொங்கவிட்டுத் தோள்களிலும் கழுத்திலும் காதுகளிலும் உருத்திராக்கமாலைகளைத் தரித்து, ஆடுகின்ற பாம்புரிபோலிருக்கின்ற பட்டாடை யுடுப்பதை விடுத்து மரவுரி தரித்து, ஜயத்தைக் கொடுக்கின்ற திருநீற்றைச் சர்வாங்கத்திலுமணிந்து, நெருப்பிற் காய்ந்து பளபளவென்று பிரகாசிக்கும் ஊசியில் ஒரு காற்பெருவிரலை யூன்றி, அல்லும் பகலும் பரமசிவனை மனத்திற் றியானித்து, எவரும் செய்தற்கரிய பெரிய தவத்தைச் செய்தாள்.

இவ்வாறு உலகமாதாவாகிய பார்வதி, மிகவுஞ் சிறிய கொடியை நிகர்த்த இடைவளைந்து வருந்த ஊசியின்மே

னின்று கடுந்தவம் புரியவே அவளுடைய கஷ்டமான தவ
நிலையைக் கண்டு சரஸ்வதி மனவாட்ட மடைந்து களைத்து,
நெஞ்சந் துடித்துக் கண்ணீர் வடித்து இரண்டு கண்களையும்
மூடிக்கொண்டாள்; இலக்குமியும் சஞ்சலமடைந்து அழுது
கொண்டு தரையில் விழுந்தாள்; மற்ற சீவராசிகளும் மனங்
கரைந்துருகின. இதைப்பற்றி விரிவாக ஏன் கூறவேண்டும்!
உலகமுழுதுமே அம்மை தவத்தின் கஷ்டத்திற்காக மனம்
வருந்தியது. தாயானவள் ஒரு வருத்தத்தை யடைந்ததாகத்
தோற்றும்பக்ஷத்தில் அவள் வயிற்றிலுள்ள கருவாகிய
சீவன்களெல்லாம் ஏன்தான் வருத்தத்தை யடையமாட்டா!
எல்லாச் சீவராசிகளும் அம்மை தவநிலையைக் கண்டு இவ்
வாறு வருந்தினும், அவள் சிறிதும் வருத்தத்தை யடைய
வில்லை; தாமரையை வாட்டுகின்ற முன்பனிக்காலத்திலும்
வாடாமலிருக்கும் தாமரைமலரைப்போல அவளுடைய முகம்
செழிப்புற்று விளங்கியது; பின்பனிக்காலத்தில் அதிக சீத
ளம் பொருந்தியவிடத்தில் சஞ்சரிக்கும் மீனானது அப்
போது மழை பெய்தால் எவ்வித சந்தோஷத்தை யடையு
மோ அவ்வித சந்தோஷத்தை அவளுடைய மனமானது
அடைந்திருந்தது; அப்படி அவள் அத்தவத்தால் நேருங்
கஷ்டத்தைச் சிறிதும் கருதாமல், 'சிவபெருமான் வந்து நம
க்கு இடப்பாகந் தரும்வரையில் நாம் இத் தவத்தை விடுவ
தில்லை,' என் றுறுதிகொண்டிருந்தாள்.

இப்படி யிருக்குங்காலத்தில் அன்னவாகனத்தை
யுடைய பிரமனும், வலிய சர்ப்பத்தில் நித்திரை செய்கின்ற
விஷ்ணு முதலிய தேவர்களும், வேதகோஷம் முழங்கப்
பார்வதி தவஞ்செய்யு மிடத்திற்குச் சென்று அவளைக் கண்டு
வணங்கினார்கள். பார்வதி அவர்களுக்கு உபசார வார்த்தை
கள் கூறி, 'நீங்கள் எதைக் கருதி இங்கே வந்தீர்கள்?' என்று
வினவினாள். அவ்வாறு வினவவே அந்தத் தேவர்கள் அம்மை
யை நோக்கி, 'தாயே! மகிடாசுரனால் நாங்கள் மிகுந்த துன்
பத்தை யடைந்துகொண்டிருக்கின்றோம்; ஆதலால், அவனை



யொழித்து எங்கள் துன்பத்தை நீக்கியருளவேண்டும்,'
என்று கூறினார்கள். பார்வதி அவ்வாறே செய்வதாக அவர்
களுக்கு வாக்களித்து, உடனே துர்க்கையை அழைத்து, 'நீ
மகிடாசுரனைக் கொன்று இந்தத் தேவர்களுக்குச் சந்தோஷ
த்தை யுண்டாக்குவாயாக,' என்று கட்டளையிட்டனள். அவ
ளும் அவ்வாறே செய்வதாகச் சொல்லி அம்மையை வணங்கி
னாள். அதன்மேல் விஷ்ணு முதலிய தேவர்கள் மிகுந்த
சந்தோஷத்துடன் பார்வதியை வணங்கி அவளிடம் விடை
பெற்றுக்கொண்டு தங்களிருப்பிடஞ் சென்றார்கள்." என்று
கூறினார்.

நான்காவது

பார்வதிதேவியார் திருக்கண் புதைத்த சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஐந்தாவது:

## பார்வதிதேவியார் இடப்பாகம் பெற்ற சருக்கம்.

நந்திதேவர் முன் சருக்கத்திற் கூறிய விஷயங்களைச்
சொல்லி முடித்துப் பின்னர் மேல் நடந்த விஷயங்களைக்
கூறத்தொடங்கினவராய் மார்க்கண்டேயரை நோக்கி, '''முனி
வரே! இப்போது பார்வதிதேவியார் கௌதமருடைய ஆச்
சிரமத்திலிருந்து தவஞ்செய்தது முதலிய விஷயங்களைக்
கூறினேன்; இனி அவள் மகிடாசுரனைத் துர்க்கையால்
கொல்லுவித்ததையும், சிவனிடம் இடப்பாகம் பெற்றதையும்
கூறுகிறேன் கேட்பீராக: அக்காலத்தில், முன்னே தேவர்க
ளால் கூறப்பட்ட மகிடாசுரன் நீலகிரியிலுள்ள மகிடபுரத்தில்
வாசஞ்செய்துகொண்டிருந்தான். இவன் எப்பேர்ப்பட்டவ
னெனில், எல்லாரினும் மேலான பராக்கிரமத்தை யுடைய
வன்; விஷத்தை நிகர்த்த குணமுடையவன்; உயிர்களைக் கவ
ரும் எமனுக்கும் எமனானவன்; கொழுந்துவிட்டு மேலெழுந்
தெரியும் வடவைக்கனலையுஞ் சுடத்தக்க வெம்மையை

யுடையவன்; அளகாபுரியிலுள்ள குபேரன் தரித்திரத்தை
யடையும்படி அவனுடைய செல்வங்களை யெல்லாம் தன்
னுடைய வலிமையால் கைப்பற்றியவன்; விஷ்ணுவுக்குச்
சயனமா யமைந்த ஆதிசேடனுடைய தலையையும் வாலையும்
சேர்த்து ஒரு கையிற் பிடித்து அவனைக் கவணாக்கி, விஷ்ணு
வைக் கல்லாக்கிச் சுழற்றியெறிந்து விளையாடக்கூடியவன்;
ஆட்டின்மே லேறிவரும் அக்கினியைக் கீழே தள்ளிவிட்டு
அந்த ஆட்டைக் கைப்பற்றி, நெருப்பைப்போன்று சிவந்த
மயிரையுடைய தன் பிள்ளைகளுக்கு ஏறி விளையாடக்கொடுப்ப
வன்; சந்திரனைக் கையாற் பிடித்து அவனுடலை நெருக்கிப்
பிழிந்து அதிலிருந் தொழுகும் அமிர்தத்தைப் பானம் பண்
ணுஞ் சூரத்தன்மை பொருந்தியவன்; தேவேந்திரனுடைய
வெள்ளையானையைக் கைப்பற்றி அதன்மேலேறி ஊர்வலம்
வரத்தக்க பராக்கிரமத்தை யுடையவன்; ஏழு பச்சைப் புரவி
கள் பூட்டிய சூரியனுடைய தேரிலேறிப் பவனி வருபவன்;
நிருதியைச் சுமக்கின்ற ஆளியைக் கைப்பற்றி அதன்மேலும்
ஏறிச் செல்லக்கூடிய திறமை வாய்ந்தவன்; நிணமும் இரத்த
மும் இடைவிடாது படிந்திருக்கின்ற ஒப்பற்ற வாளாயுதத்தை
யெடுத்து எல்லாச் சீவன்களையும் கொல்லத்தக்க கொடுமை
வாய்ந்தவன்; இவன் எருமைக்கடாமுகத்தை யுடையவனா
யிருந்ததனால், தென்றிசைத்தலைவனாகிய எமன் இவனுக்கஞ்
சித் தன்னுடைய எருமைக்கடாவாகனத்தி லேறாமலிருந்
தான்; எமனே இவனுக் கிவ்வாறு அஞ்சியிருந்தானென்றால்
இவனுடைய வல்லமை நம்மால் எவ்வாறளவிட்டுக் கூறமுடி
யும்? இன்னும் இவன் ஒருகாலத்தில் சோதிசொரூபமாய்
விளங்கும் சிவபிரான் வசிக்கும் கைலாயத்தையும் சாயச்செய்
தான்; மீன்களைப் பிடித்துண்ண விரும்பிச் சமுத்திரத்தையும்
தூர்த்துச் சலமில்லாமல் வறும்படிச் செய்தான்.

இத்தகைய வல்லமை பொருந்திய மகிடாசுரன் மேற்
கூறிய மகிடபுரத்திலே மயனென்னுந் தெய்வத்தச்சனா லியற்
றப்பட்ட இரத்தினமாளிகையில் தங்கிப் பிரமதேவன் தினந்



தோறும் அறுசும் அக்ஷதையுங் கொடுக்க மகிழ்ச்சிகொண்டு
வாழ்ந்துவருங் காலத்திலே அந்த அசுரனுடைய உணவுக்
காக மாமிசந் தேடவிரும்பி அவனுடைய பணிவிடைக்காரர்க
ளாகிய ஆயிரம் அசுரர்கள் ஒருதினம் ஆயுதபாணிகளாகி
யானை முதலிய மிருகங்களைக் கொல்லுதற்குக் காட்டிற்குச்
சென்றார்கள். அவ்வாறு வேட்டையாடச் சென்ற அந்த ஆயிர
மசுரர்களும் பலவிடங்களுக்கும் போய் முடிவில் பார்வதி
தேவியார் மேற்கூறியபடி தவஞ்செய்துகொண்டிருந்த வனத்
திற் புகுந்து பலவித கொடுமைகளைச் செய்தார்கள். அங்ங
னம் அவர்கள் செய்யவே அங்குக் காவலாகவிருந்த அஷ்ட
வைரவர்களும் அவர்களுடைய கொடுமையைக் கண்டு மனஞ்
சகிக்காமல் உடனே கோபங்கொண்டு அந்த ஆயிர மசுரர்
களையும் வதை செய்துவிட்டார்கள். அப்படி அந்த ஆயிரம்
பேரும் இறக்கவே அவர்களுடன் சென்றிருந்த தூதர்கள்
விரைந்தோடி மகிடாசுரனைக் கண்டு அவனுடைய பாதங்
களில் வீழ்ந்து வணங்கி, மேற்கூறியபடி வேட்டைக்குச்
சென்ற ஆயிரமசுரர்களும் இறந்துபோன விவரத்தையும்,
பார்வதி தேவியார் தவஞ்செய்யும் விசேஷத்தையும் அவனி
டம் தெரிவித்தார்கள்.

அங்ஙனம் தெரிவித்த மாத்திரத்திலே தன்னுடைய
வீரர்களிறந்ததற்காக அந்த மகிடாசுரன் அளவில்லாத கோப
த்தை யடைந்தான்; அதனால் அவன் முகத்தில் கோபச்சிரிப்
புண்டாயிற்று; அவனுடைய இரண்டு கண்களும் நெருப்புப்
பொறிகள் சிதறச் சிவந்தன; அவன் கொண்ட கோபாக்கினி
யால் அண்ட கோளமும் கிறுகிறென்று சுழன்றது; அஷ்ட
திக்குகளிலுள்ள யானைகளும் தலை குனிந்து சோர்ந்தன;
தேவர்களெல்லோரும் நடுக்கத்தை யடைந்தார்கள்; எமனும்
பயங்கொண்டு மறைந்தான்; ஆலகால விஷமும் குளிர்ச்சி
யடைந்தது; இவ்வாறு பல விபரீதங்க ளுண்டாகும்படி
அவன் கோபிக்கவே அச்சமயத்தில் அவன் பக்கத்தில் நின்ற
நிகும்பாசுரனென்னும் படைத்தலைவன் உடனே அவனை வண

ங்கி அவன் முகத்தை நோக்கி, "எங்களிறைவ! நம்முடைய
வீரர்களைக் கொன்றவர்கள் பொருட்டு நீர் கோபங்கொள்ள
வேண்டாம்; உமக்குஅவர்கள்எம்மாத்திரம்? அந்தஅற்பர்கள்
பொருட்டு நீர் ஆத்திரங்கொண் டெழவேண்டாம்; நான் இப்
பொழுதே சென்று அந்தப் பார்வதி தவஞ்செய்யும் வனத்தி
லிருக்கின்ற எல்லோரையும் நாசப்படுத்தி வருகின்றேன்,"
என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு தன்
னுடைய பெரிய சேனைகளுடன் புறப்பட்டான்.

அப்படி அவன் புறப்பட்டபோது, கிழக்குக் கடலா
னது மேற்குக் கடலுடன் எதிர்த்துச் சண்டை செய்யப்
புறப்பட்டது போலப் பெரிய தேர்களும், யானைகளும்,
குதிரைகளும், காலாட்படைகளும் நிறைந்த அவனுடைய
சேனையானது விளங்கிற்று. அந்த நிகும்பாசுரனோ, மகா
மேருவுக்கும் அகஸ்தியர் வசிக்கின்ற பொதியமலைக்கும்
மத்தியில் ஒரு கரிய மேரு எழுந்ததென்று சொல்லும்படி
விளங்கினான். இவ்வகைத் தோற்றத்தோடு புறப்பட்ட அவன்
அச்சமயத்தில், ஆயிரம் பச்சைக் குதிரைகள் பூட்டிய தேரி
லேறி, முன்னே சமுத்திரம்போல் பெருகி யிருக்கும் யானை
மத நீரை அங்கெழும்பிய புழுதிகள் படிந்து சுவறச் செய்ய,
விரைவாக அத்தேரையும் சேனைகளையும் நடத்திக்கொண்டு
பார்வதிதேவியார் தவஞ் செய்துகொண்டிருந்த வனத்தை
யடைந்தான்.

அத்தருணத்தில் கொழுந்துவிட் டெரியும் நெருப்பை
நிகர்த்த கொடுமையையுடைய அசுரப்படைகள் அநேகம்
மலைகளைப் பிடுங்கி, பார்வதி தவஞ் செய்யுமிடத்தை நோக்கி
யெறிந்தன. அப்படி மலைகளைப் பிடுங்கி யெறிந்துகொண்டு
அசுரப்படைகள் நிகும்பாசுரனோடு செல்வதைக் கண்டமாத்
திரத்தில் பார்வதியிட மிருக்கின்ற, தாக்கணங்கு, நோக்
கணங்கு என்னும் இருவரும் ஆயுதபாணிகளாகப் புறப்பட்டு
அவ்வசுரப்படைகளுக் கெதிரே சென்று அவற்றைத் தடுத்
தார்கள். அப்படி அவர்கள் தடுக்கவே அவர்களுடன் சண்



டன், உருத்திரன், சோமன், கபாலி, சங்காரன், கோதண்
டன், வீதன், சித்திராங்கதன் ஆகிய எட்டு வயிரவர்களும்
சேர்ந்து, யானைகளைக் கொல்லுகிற சிங்கங்கள்போல அண்ட
கோளமதிரும்படி கர்ச்சித்து, நிகும்பாசுரனும், அவனுடைய
சாரதியும், தேரும் தவிர மற்ற அசுரப்படைகளை யெல்லாம்
நொடிப்பொழுதில் கொன்று குவித்துவிட்டார்கள். இவ்
வாறு எட்டு வயிரவர்களுடைய ஆயுதங்களினாலும், தாக்
கணங்கு, நோக்கணங்கு என்னும் இரண்டு பெண்களினாலும்
தன்னுடைய படை முழுவதும் இறந்துபோனதைப் பார்த்த
வுடனே நிகும்பாசுரன், கடுஞ்சின மடைந்து, தன்னுடைய
நெடிய தேரை வேகமாகச் செலுத்தித் தாக்கணங்கின்
எதிரே நிறுத்தி, அவளுடைய முகத்தில் அளவில்லாத
பாணங்களை யேவினான். அப்படி யேவினவுடனே தாக்கண
ங்கு கண் சிவந்து கடுங்கோபமுற்று உடனே அவனால் ஏவப்
பட்ட பாணங்களை யெல்லாம் தன்மேற் பாயவொட்டாமல்
விலக்கி, அந்த நிகும்பனுடைய சாரதியைக் கொன்று, அம்பு
தொடுத்த அவன் கைகளையும் தலையையும் அறுத்துத் தள்ளி
உடலைக் கீழே வீழ்த்தி அவனைக் கொன்றாள். அத்தருணத்
தில், எட்டு வயிரவர்களாலும், தாக்கணங்கு நோக்கணங்கு
என்னும் இரண்டு பெண்களாலும் உடலறுபட்டு வீழ்ந்திறந்த
அசுரர்களுடைய உயிர்கள் உடலை விட்டு நீங்கி வேகமாகச்
செல்வதுபோல எங்கும் இரத்தவெள்ளம் பெருகி வேகமாகப்
பாய்ந்தோடியது; தினந்தோறும் மாமிசத்தைத் தின்று
கூத்தாடுகிற பேய்களைப்போல அந்த இரத்த வெள்ளத்தில்
கவந்தங்கள் கூத்தாடிச் சென்றன. மேற்கூறியபடி நிகும்பா
சுரன் இறந்தவுடனே வயிரவர்களும், தாக்கணங்கும், நோக்
கணங்கும் வெற்றிக் கறிகுறியாகிய தும்பை மாலையைச்
சூடிக்கொண்டார்கள்.

அதன்மேல் சில தூதுவர்கள் விரைந்தோடி நிகும்பனும்
மற்றைய அசுரர்களும் இறந்துபோன செய்தியை மகிடாசுர
னிடம் தெரிவித்தார்கள். அப்படி அவர்கள் தெரிவித்த

வுடனே மகிடாசுரன் கைமேற் கையை அறைந்து அளவற்ற கோபமடைந்து பற்களை நெறநெறவென்னக் கடித்து உடனே பக்கத்திலிருந்த கயிடவன் முகத்தை நோக்கி, "ஆ! ஆ!! என்ன ஆச்சரியம்! காட்டிற் சஞ்சரிக்கின்ற சிறிய பேய்களும், கணங்களும் நம்முடைய பெரிய சேனைகளைக் கொன்று விட்டன; இச்செய்கையைக் காட்டிலும் நமக்குக் கேவலம் வரும்படியான செய்கை இனி வேறென்ன விருக்கின்றது; நம்முடைய எதிரிகளை நாம் இப்பொழுதே நாசப்படுத்தி நமது கௌரவத்தைக் காப்பாற்றுவிடில் சிவன், பிரமன், விஷ்ணு முதலியவர்கள் நமக்கு அடங்கி நடப்பார்களோ? ஒருபோதும் நம்மை மதிக்கமாட்டார்கள்; ஆதலால், நான் இப்பொழுதே சென்று நம் பகைவரை நாசப்படுத்தி வாகை மாலை புனைந்து வருகின்றேன்," என்று சொல்லி, கோபச் சிரிப்புடன் தாமதமின்றி ஆயிரம் யானைகள் கட்டிய தேரி லேறி யுத்தத்திற்குப் புறப்பட்டான். அவ்வாறு மகிடாசுரன் தேரேறிப் புறப்பட்டவுடனே பதினொருகோடி யானைப் பலத்தையுடையவராகிய காந்தன், நீலன், முதுகான், குருதி, அண்டன், நீசகன், சண்டன், முண்டன், மதுகயிடவன், தீக்கண்ணன், புகைக்கண்ணன், மாலி ஆகிய பன்னிருவரும் தங்கள் தங்கள் இரதங்களிலேறி அந்த மகிடனுடன் வீராவேசத்தோடு புறப்பட்டார்கள்; பின்னும், காலகேயர்களும், நிவாதகவசர்களும், யானைமுகத்தையுடையவர்களும், குதிரை முகத்தை யுடையவர்களும், எருமைமுகத்தை யுடையவர்களும், நெருப்பெரிந்துகொண்டிருக்கிற முகத்தை யுடையவர்களும், புலிமுகத்தை யுடையவர்களும், சிங்கமுகத்தை யுடையவர்களுமாகிய அசுரர்கள் நிறைந்த ஆயிரம் வெள்ளம் காலாட்படைகளும் புறப்பட்டன; இவையன்றி ஐந்நூறு வெள்ளம் குதிரைப்படைகளும், இருநூற்றைம்பது வெள்ளம் யானைப்படைகளும், நூற்றிருபத்தைந்து வெள்ளம் தேர்ப்படைகளும் புறப்பட்டன. இப்படி இவைகள் புறப்பட்டவுடனே பேய்க்கூட்டங்களும், பருந்தின் கூட்டங்களும், காக்கைக் கூட்டங்களும், நரிக்கூட்டங்களும், யுத்த



களத்தில் மிகுந்த மாமிச உணவுகப்படுமென்று கருதிச் சந்தோஷங்கொண்டு இவற்றுடன் புறப்பட்டன. வீரர்களாற் பிடிக்கப்பட்ட வெள்ளைக் கொடிகள் எங்கும் ஆகாயத்தில் அன்னங்களைப்போல் அசைந்தாடின; சங்கம், இரணபேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கின. இவ்விதச் சிறப்புக்களுடனே மகிடாசுரன் சென்று பார்வதிதேவியார் தவஞ்செய்துகொண்டிருந்த காட்டிற் சேர்ந்தான்.

அங்ஙனம் அவன் சேர்ந்தமாத்திரத்தில் அங்கே வாசஞ்செய்துகொண்டிருந்த முனிவர்கள் அவனையும் அவனுடைய படைகளையும் கண்டு பயந்து விரைந்தோடிப் பார்வதியிடம், "அம்மையே! நாங்களுன் அடைக்கலம்; இதோ மகிடாசுரன் வந்தான்; இனி நாங்கள் பிழைப்பதரிது; எங்களை நீ காக்க வேண்டும்," என்று கூறி அவளுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள். அப்போது பார்வதி அவர்களை நோக்கி, "முனிவர்களே! அஞ்சவேண்டாம்; இந்த அசுரனைத் தொலைத்து உங்களை நான் காக்கின்றேன்," என்று தைரிய வார்த்தை கூறி அவர்களுடைய பயத்தை நீக்கி, உடனே பக்கத்தில் நின்ற துர்க்கையை நோக்கி, "அணங்கே! நீ இப்பொழுதே சென்று உன்னுடைய சத்தியினாலே இந்த மகிடனைக் கொல்வாயாக," என்று கட்டளையிட்டனள். அங்ஙனம் கட்டளையிட்ட மாத்திரத்தில் துர்க்கை யுத்த கோலங்கொண்டு சிங்கவாகனத்திலேறிப் புறப்பட்டாள். அவள் புறப்பட்டவுடனே அருணநாயகி யென்பவள் அவளுக்கு முன்னே சென்றாள்; காளி, தந்துமியென்கிற இருவரும் அவளுக்குப் பின்னே சென்றார்கள்; பார்வதியின் கணங்களும் மதங்கி, சண்டி என்கிற சத்திகளும், மற்ற சத்திகளும் பக்கத்திற் சென்றார்கள். வயிரவர்கள் ஞாளிவாகனத்திலேறிச் சென்றார்கள்; அபிராமி முதலிய மாதரெழுவரும் தங்கள் தங்கள் வாகனங்களிலேறிச் சென்றார்கள்; தூசிப்படைகளும் நெருங்கிச் சென்றன; இவர்கள் சென்ற வேகத்தினாலே தூளிகளெழும்பி ஆகாயத்தை மறைத்தன.

இப்படித் துர்க்கையுடனே சென்ற சேனைகள் வீராவேசத்தோடுபோய் மகிடாசுரனுடைய சேனைகளோடு அப்பொழுதே எதிர்த்துக் கடினமான யுத்தம் புரிந்தன. அவ்வாறு யுத்தஞ் செய்யவே, உலக்கைகளாலும், மலைகளாலும், வில் வாள் முதலிய ஆயுதங்களாலும், கைகளினாலும் கோபத்துடனே போர்செய்த மகிடாசுரனுடைய படைகளில் பாதிச் சேனைகள் ஒரு நொடிப்பொழுதில் நாசமாய்விட்டன. அப்படி நாசமாகவே மகிடாசுரனும், அவனுடைய படைத்தலைவர்களும் கடுஞ்சின மடைந்து மலைகளைப்போ லெதிர்த்துத் துர்க்கையின் சேனைகளோடு மிக்க தைரியத்துடனே போர் புரிந்து அவற்றைப் பின் தள்ளினார்கள்; அழிந்தவைபோக மீதியாயிருந்த அசுரனுடைய பாதிச் சேனைகளும் அச்சமயத்தில் திறமையோ டெதிர்த்துச் சமர்செய்தன. அங்ஙனம் மகிடாசுரனும் அவனுடைய படைகளும் கடுமையாகப் போர் புரிந்த மாத்திரத்தில் துர்க்கையின் சேனையிலுள்ள துந்துபி, காளி, மதங்கி, சண்டி யென்கிற நான்கு சத்திகளும் தோற்றார்கள்; சூலி, நீலகண்டி, வராகி, கௌமாரி, நாராயணி, இந்திரை, அபிராமியென்னும் சப்தமாதர்களும் யுத்தஞ்செய்ய முடியாமல் காட்டி லொளித்தார்கள். சுவர்ண வாகனத்தை யுடைய வயிரவர்களும் தோல்வியுடைந்தார்கள்.

இவ்வாறு இவர்கள் தோல்வியடையவே துர்க்கை மனந் தளர்ந்து உடனே உமாதேவியை நோக்கி, "அம்மையே! இனி நீதான் துணை புரியவேண்டும்," என்று தியானித்தாள். அங்ஙனம் தியானிக்கவே பார்வதி தேவி அச்சமயத்தில் அறுபத்துநான்குகோடி யோகினிகளை யேவி அசுரன் படைமீது நெருப்பு மழையைச் சொரியும்படி கட்டளையிட்டனள். அவ்வாறே அந்த அறுபத்துநான்குகோடி யோகினிகளும் புறப்பட்டு ஆகாயத்திற் றங்கி ஆர்ப்பரித்து அசுரன் படைமீது நெருப்பு மழையையும், இடிமழையையும் சொரிந்தார்கள்; அப்போது தோற்றோடிய துர்க்கையின் சேனைகளும் தைரியங்கொண்டு திரும்பிவந்து போர் புரிந்தன. மேற்



கூறியபடி யோகினிகள் நெருப்பு மழையைச் சொரிந்ததனால் அசுரனுடைய எஞ்சிய சேனைகளும் எரிந்துபோயின; அப்படி அவைகள் எரிந்து நாசமாகியும் அந்த மகிடாசுரனுடைய சேனைத்தலைவர்கள் மட்டும் நாசமடையாமல் முன்னிலும் அதிகக் கோபங்கொண் டெதிர்த்து யுத்தஞ் செய்தார்கள். அங்ஙனம் அவர்கள் எதிர்த்துப் போர் புரியும்போது துர்க்கையின் சேனைகளிலுள்ளவர்களும் வீரத்துடனெதிர்த்துப் போர்செய்து அவர்களுள் அபிராமியென்பவள், அருசிகனென்னு மசுரனைக் கொன்றாள்; வாரணியென்பவள், காந்தனைக் கொலைசெய்தாள்; சண்முகி யென்பவள், காமனென்னு மசுரனைத் தொலைத்தாள்; நாரணி யென்பவள், நாகனைக் கொன்றாள்; காளி யென்பவள், மிண்டனை வதைபுரிந்தாள்; வராகி, சண்டனை மடித்தாள்; நீலகண்டி, மதுவென்னு மசுரனை மாய்த்தான்; இந்திராணி, நீலனென்பவனைக் கொன்றாள்; துந்துபியென்பவள், சோணிதலூணனை தண்டாயுதத்தாலடித்துக் கொன்றாள்; சங்கத்தைக் கையிற் றரித்த அருணசலை யென்பவள் அக்கினிக்கண்ணனை வீழ்த்தினாள்; சுந்தரி யென்னும் சத்தி, கயிடவனையும் புகைக்கண்ணனையும் சாய்த்தாள்.

இப்படி ஒவ்வொரு சத்தியும் ஒவ்வொரு அசுரனைக் கொன்றபின் முடிவில் நெய்யைச் சொரிகின்ற நிணம்படிந்த வேலாயுதத்தைக் கையிற் றாங்கிய துர்க்கை, சில அசுரர்களுடன் நின்ற மகிடாசுரனை யெதிர்த்தாள். அப்போது வெப்பம் பொருந்திய எருமைக்கடா முகத்தையுடைய அவ்வசுரன் அளவற்ற ஆயுதங்களைத் துர்க்கையின்மீதும், அவளைச் சார்ந்தவர்கள்மீதும் ஏவினான். அப்படி யேவவே சப்த மாதர்களும் தங்களாயுதங்களினாலே அந்த ஆயுதங்களை யெல்லாம் நாசப்படுத்திவிட்டார்கள். அத்தருணத்தில் சிங்க வாகனத்தின் மேலிருந்த துர்க்கை ஜெயத்தின் கறிகுறியாக அந்த மகிடாசுரனுக் கெதிரே நின்று, தன்னுடைய கையிலிருந்த வெற்றிச் சங்கத்தை வாயில் வைத்து மகாமேருவும் அசையும்படி முழக்கினாள். அவ்வாறு துர்க்கையானவள்

சங்கத்தொனி செய்தமாத்திரத்திலே மகிடாசுரனோடு எஞ்சி நின்று யுத்தம் புரிந்த அசுரர்களெல்லோரும் மயங்கி வீழ்ந்து விட்டார்கள். பின்னர் அந்த மகிடாசுரன் தனித்தவனாகித் துர்க்கையுடன் போர் புரிந்தான்; துர்க்கையும் அவன்மீது அளவற்ற பாணங்களை யேவிக் கடுஞ்சமர் விளைத்தாள். இப்படி இருவரு மெதிர்த்துத் தாங்கள் அருமையாகிய வரத்தினால் பெற்ற பாணங்களை ஒருவர்மீதொருவர் விடுத்துப் போர் செய்யுங்காலத்தில் துர்க்கை எந்த எந்தப் பாணங்களை யெடுத் தேவினாலும் அவற்றை யெல்லாம் மகிடாசுரன் அந்த அந்தப் பாணங்களுக்குத் தகுதியான பாணங்களை விடுத்து அவற்றையெல்லாம் அறுத்துத் தள்ளிக்கொண்டிருந்தான். அதன்மேல் துர்க்கை இரண்டு அர்த்தசந்திர பாணங்களை யெடுத்து அவனுடைய சிரத்தில் அழுந்தும்படியாக விடுத்தனள். அவ்விரண்டு பாணங்களும் வேகமாகச் சென்று, உருக்கின செம்புநீர்போல இரத்தஞ் சிதறும்படி அந்த அசுரன் தலையிற் பாய்ந்து அழுந்தி வளைந்து இரண்டு கொம்புகள் போலத் தோன்றின. அதன்மேல் மகிடாசுரன் சில பாணங்களை யேவி ஜெயங்கொண்டவளாகிய துர்க்கையின் கையிலிருந்த வில்லை இரண்டாக முறித்தான். அப்படி ஒடிந்த வில்லினால் துர்க்கை மகிடனுடைய நெற்றியில் பலங்கொண்டடித்தாள். அந்த அடியானது சிவபெருமானுடைய நெற்றிக்கண் நெருப்பைப்போல மகிடனுடைய நெற்றியில் சுறீரெனத் தாக்கியது. மீண்டும் துர்க்கை தன் வில்லொடிந்ததற்காகப் பொறுக்காமல் மிக்க கோபங்கொண்டு கொதித்தெழும்பும் எமனைப்போல் விளங்குகின்ற ஒரு சக்கராயுதத்தை யேவி அந்தப் பாவியாகிய மகிடாசுரனுடைய தலையை அறுத்துத் தள்ளினாள். அவ்வாறு துர்க்கை சக்கராயுதத்தை யேவி அவனுடைய தலையை அறுத்துத் தேகம் சின்னபின்னமாகும்படி அவனை வீழ்த்தியும் அவன் பூர்வகாலத்திற் செய்த தபோபலத்தினால் சாகாதவனாய் மும்மதங்களைப் பொழிகின்ற ஒரு பெரிய யானை யுருவங்கொண்டு மீண்டும் உயிர்பெற்றெழுந்து துர்க்கையுடனெதிர்த்தான்.



அப்படி மகிடாசுரன் யானை வடிவங்கொண்டெதிர்த்த வுடனே துர்க்கை தன்னுடைய வாகனமாகிய யாளியை யேவ அது பாய்ந்து அந்த அசுரனாகிய யானையின் உச்சியைப் பிளந்து மூளையைத் தோண்டி யெடுத்துத் தின்றது. அவ்வாறு செய்தும் அவ்வசுரன் சாகாமல் தண்டாயுதத்தை யெடுத்துத் துர்க்கையின்மேல் வீசினான். உடனே பேய்களுக்குத் தலைவியாகிய துர்க்கை கூர்மை பொருந்திய வேலாயுதத்தை அவன்மீது விடுத்தாள். விஷத்தைக் கக்கிக்கொண்டிருக்கிற அந்த வேலாயுதமானது வேகங்கொண்டு சென்று பாய்ந்து அந்த யானையின் உடலைத் துளைத்தது. அங்ஙனந் துளைக்கவே, அநேகமாயிரம் வண்டுகள் கூடி உள்ளே துளைக்கக் கூடாகி வலியற்றுக் கீழே சாயும் ஒரு அத்திமரத்தைப் போல அந்த யானை மண்மேற் சாய்ந்து மாண்டது. அப்படி யானை மாண்டும் அசுரன் மாளாமல் மீண்டும் குதிரை வடிவங்கொண்டு துர்க்கையினெதிரே சென்று அவளைத் தண்டாயுதத்தாற் சுழற்றி யடித்தான். துர்க்கை தன் கத்தியினால் அந்தத் தண்டாயுதத்தையும்; அக்குதிரையின் சிரசையும் அறுத்துத் தள்ளினாள்.

அதன்மேல் அந்த மகிடாசுரன் தன்னுடைய மாயையினால் நெருப்புருவங்கொண்டும், ஜலப்பிரளய மிகுந்த கங்கையின் வடிவெடுத்தும், இருட்டின் வடிவங்கொண்டும், பிரமனுருவெடுத்தும், இலக்குமி நாயகனாகிய விஷ்ணு வடிவங்கொண்டும், இன்னும் பலவிதமான பயங்கர ரூபங்களைத் தாங்கியும் துர்க்கையுடனெதிர்த்து அவளைப் பலவிதமாக மயக்கினான். இப்படி அவன் மாயா விநோதங்களைச் செய்யவே துர்க்கை மனங்கலங்கி, "இந்த அசுரன் தன்னுடைய மாயையின் வல்லமையினாலே பல வடிவங்களைக்கொண்டு நம்மைக் கலங்கும்படிச் செய்கின்றான்; நாம் என்ன உபாயஞ் செய்தாலும் இவனுயிர் போகிறதில்லை; இதற்கென்ன செய்யலாம்? இனி நமக்குப் பார்வதிதேவி உபாயஞ் சொல்லவேண்டுமேயன்றி நம்மா லொன்று மாகாது," என்று தனக்குத்

துணைபுரியும்படி பார்வதியைத் தியானித்தாள். அங்ஙனம் தியானிக்கவே ஆகாயத்தில், "ஏ துர்க்கை! இந்த மகிடாசுரன் பலவிதமான வடிவங்களைக் கொண்டுவரும்போதெல்லாம் நீ கலங்காமல் ஒவ்வொரு வடிவத்தையும் நாசஞ்செய்வாயானால் முடிவில் ஒரு சமயம் இவன் தன்னுடைய எதார்த்த வடிவமாகிய எருமைமுக வடிவத்தை யெடுப்பான்; அப்படி எருமைமுக வடிவத்தை எப்பொழுது கொள்வானோ அப்பொழுது இவனுடைய தலையை அறுத்துக் கீழே தள்ளி உன்னுடைய பரிசுத்தமாகிய பாதங்களாலே இவன் தேகத்தை மிதிப்பாயானால் இவனிடத்திலிருக்கிற மாயை நீங்கிவிடும்; இவனும் நாசமாகிவிடுவான்," என்று அசரீரி வாக்குண்டாயிற்று. இதைக் கேட்டவுடனே துர்க்கை மனந் தேறித் தைரியங்கொண்டாள்.

பின்னர் அசரீரி கூறியபடியே மகிடாசுரன் அநேக விகாரமான ரூபங்களைக்கொண்டு துர்க்கையுடன் எதிர்த்து முன்னிலும் மிக்க வல்லமையோடு போர்புரிந்தான். அப்படி அவன் பல வடிவங்களைக்கொண்டு வரும்போதெல்லாம் துர்க்கை ஒவ்வொரு வடிவத்தையும் சூலாயுதத்தினாற் குத்தி நாசப்படுத்தினாள். முடிவில் அந்தக் கொடியனாகிய மகிடன் தன்னுடைய பழைய எருமைக்கடா முகவடிவத்தைக்கொண்டு வந்தெதிர்த்து அநேக மாயுதங்களைத் துர்க்கையின்மீது பிரயோகித்தான். அச்சமயத்தில் துர்க்கை அந்த ஆயுதங்களையெல்லாம் விலக்கித் தன்னுடைய வாளாயுதத்தாலே அவனுடைய தலையை வெட்டித் தள்ளி உடலைப் பாதங்களினால் மிதித்தாள். உடனே அசுரனிறந்தான். அவனிடந் தங்கியிருந்த மாயையும் நீங்கிற்று. துர்க்கையின் பாதத்தை நினைத்தமாத்திரத்திலேயே அப்படி நினைத்தவனுடைய ஆணவம், மாயை, காமியம் என்கிற மும்மலங்களும் நீங்கிவிடும். அப்படியிருக்கும்போது அந்த அம்மையினுடைய பாதங்களே மகிடாசுரனுடைய தேகத்திற் பட்டால் அவனுடைய மாயை நீங்குவது அருமையோ?



மேற்கூறியபடி மகிடாசுரன் துர்க்கையின் பாதங்களால் மிதிக்கப்பட்டிறந்தவுடனே ஆகாயத்தில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்களெல்லோரும் மிக்க சந்தோஷங்கொண்டு புஷ்பமாரி பொழிந்தார்கள்; மகிடாசுரனும் அம்மையின் சர்ல்பட்டிறந்த விசேஷத்தினாலே மோக்ஷத்தை யடைந்தான். அப்போது தலையறுபட்டிறந்த அந்த மகிடனுடைய கழுத்தில் ஒரு ஸ்படிகலிங்க மிருந்தது. அதைக் கண்டவுடனே துர்க்கை அதிசயித்துக் கையினா லெடுத்துக்கொண்டு உமாதேவியிடஞ் சென்று அவளுடைய பாதங்களைத் தொழுது நடந்த காரியங்களை யெல்லாம் அவளிடம் சொல்லி ஸ்படிகலிங்கத்தையும் அவள் கையிற் கொடுத்தாள். பார்வதியும் அதனைப் பிரியத்தோடு வாங்கினாள். வண்டுகள் மொய்க்கப்பெற்ற கூந்தலையுடைய பார்வதிதேவி அவ்வாறு வாங்கவே, சுவாமி அம்மையின் கையைவிட்டு நீங்க இஷ்டமில்லாமல் அக்கையிலேயே உட்கார்ந்துகொண்டதுபோல அவ்விலிங்கமானது மீண்டும் எடுக்க வாராமல் அம்மையின் கையிலேயே ஒட்டிக்கொண்டது. அப்படி ஒட்டிக்கொள்ளவே உமாதேவி மிக்க ஆச்சரியங்கொண்டு அருகிலிருந்த கௌதமரை நோக்கி, "ரிஷியே! இந்த லிங்கம் என் கையை விடாமற் பற்றிக்கொண்டதற்குக் காரணமியாது?" என்று வினவினாள்.

அம்மை அவ்வாறு வினவவே, தேவேந்திரனுக்கு ஆயிரங்கண் கொடுத்தவராகிய கௌதமர் அதன் விசேஷத்தைக் கூறத் தொடங்கினவராய்ப் பார்வதியை நோக்கி வணங்கி வாய் பொத்திக்கொண்டு, "அம்மையே! இந்த ஸ்படிகலிங்கம் தம்முடைய கையை விடாமற் பற்றிக்கொண்டதற்குரிய காரணத்தைத் தெளிவாகக் கூறுகிறேன் கேட்பீராக: இப்போதிறந்த மகிடாசுரன் முற்காலத்தில் வரமுனியாயிருந்தவன்; அந்த வரமுனி ஒருகாலத்தில் தம்முடைய ஆச்சிரமத்திலிருக்கும்போது அகத்தியர் முதலாகிய ஐம்பது ரிஷிகள் கூடி அந்த வரமுனியைப் பார்க்கும்பொருட்டு அவருடைய

ஆச்சிரமத்திற்குச் சென்றார்கள். அப்போது அந்த வாமுனி, தம்முடைய தவமிகுதியால் கர்வங்கொண்டு மேற்கூறிய முனிவர்களுக்கு மரியாதை செய்யாமலும், அவர்களை உபசரியாமலு மிருந்தார். அதனால் அந்த முனிவர்கள் கோபங்கொண்டு அந்த வாமுனியை நோக்கி, 'ஏ முனியே! நீ இப்போது அகங்காரத்தால் எங்களை அவமதித்தபடியால் எவரும் பார்த்து அருவருக்கத்தக்க எருமைக்கடா முகத்தையுடைய அசுரனாகப் பிறக்கக்கடவாய்,' என்று சபித்தார்கள். அந்த அரிய தவத்தினையுடைய ஐம்பது முனிவர்களும் இவ்வாறு சபிக்கவே, வாமுனி பயந்தெழுந்து அவர்களுக்கு வணக்கஞ் செய்து, அவர்களை நோக்கி, 'முனிவர்களே! நான் அறியாமையினால் உங்களை அவமதித்து இக்கொடிய சாபத்தைப் பெற்றேன்; நீங்கள் என்னுடைய குற்றத்தைப் பொறுத்து என்மேற் கிருபைசெய்து இந்தச்சாபம் நீங்குதற்கான மார்க்கத்தைக் கூறவேண்டும்,' என்று கேட்க, அதற்கு அம்முனிவர்கள் வாமுனியைப் பார்த்து, 'ரிஷியே! எங்களுடைய சாபம் வீண்போகாது; இதனை நீ அநுபவித்தே தீரவேண்டும்; நீ எங்களுடைய சாபப்படியே எருமைக்கடா முகத்தையுடைய அசுரனாகப் பிறந்துழல்வாய்; அப்படி நீ அசுரனாய்த் திரியும்போது பின்னொருகாலத்தில் உமாதேவி சிவபெருமானுடைய இடப்பாகத்தைப் பெறவேண்டி அருணைக்கருகில் தலைச்சுரமென்னுந் தலத்தில் தவஞ்செய்வாள்; அப்படிச் செய்யுங்காலத்தில் நீ அவளுக்கு விரோதியாவாய்; அவள் துர்க்கையை யேவி உன்னைக் கொல்லும்படிச் செய்வாள்; நீ துர்க்கையா லிறக்கும்போது உன்னுடைய சாபம் நீங்கப்பெற்று மோக்ஷத்தை யடைவாய்,' என்றுரைத்தார்கள். அதன்மேல் அந்த வாமுனி அவர்களுடைய சாபப்படியே இந்த மகிடாசுரனாகப் பிறந்தார். இந்த மகிடன் அவ்வாறு பிறந்த பின்பு மிகவும் பலமுடையவனாய்ச் சஞ்சரித்து எல்லோருக்கும் மிக்க துன்பங்களைச் செய்துகொண்டிருந்தான். அப்படி யிருக்கும்போது இவன் ஒருதினம் வேட்டையாடும் பொருட்டு வனத்திற்குச் சென்று இரையொன்று மகப்படா



மல் பசியினால் வருந்தித் திரிந்தான். அப்போது அவ்வனத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த மன்னதரிஷி யெதிர்ப்பட்டார்; அவர் கையில் இந்த இலிங்க மிருந்தது. அவரைக் கண்டமாத்திரத்தில் இந்த மகிடாசுரன் இந்த இலிங்கத்துடனே எடுத்து விழுங்கிவிட்டுத் தன்னிருப்பிடஞ் சேர்ந்தான்; இந்த இலிங்கம் இவனுடைய கண்டத்தில் சிக்கியிருந்தது. அப்படி இந்த இலிங்கம் இவன் கழுத்தில் தங்கியிருந்தபடியினாலேயே இவன் அசுரனாய்க் கொடுமை செய்துகொண்டிருந்தாலும் மிக்க பெருமையுடையவனாயும், பலமுடையவனாயு மிருந்தான். இலிங்க மிருந்த விசேஷத்தினாலே இவன் கொடியனானாலும் சிவசொரூப முடையவன்; அங்ஙனம் சிவசொரூபமாயிருந்த இவனைக் கொன்றபடியினாலே உமக்குச் சிறிதுபாவஞ் சம்பவித்தது; அந்தப் பாவத்தினாலேயே இந்த இலிங்கம் உம்முடைய கையில் ஒட்டிக்கொண்டது; அம்மையே! கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, கோதாவிரி, காவிரி, சிந்து, சிதேவி, சோணநதி என்னும் நவதீர்த்தங்களிலும் மூழ்கினால் இந்தப் பாவம் உம்மை விட்டு நீங்கும்; இலிங்கமும் உம்முடைய கையை விடும்," என்று கூறினார்.

மிகவும் பக்தி நிறைந்த கௌதமர் இவ்வாறு கூறி முடித்தவுடனே ஆகாயத்தில், "இந்தப் பாவம் தீரும்படி மூழ்குதற்கு ஒன்பது தீர்த்தங்களும் இவ்விடத்திற்கு வரும்; ஆகையால், அவற்றை இப்பொழுதே வரும்படிச் செய்க," என்று ஒரு வார்த்தை பிறந்தது. அதைக் கேட்டவுடனே பார்வதி, துர்க்கையின் மலர்முகத்தை நோக்கி, "பெண்ணணங்கே! உன்னுடைய கையி லிருக்கின்ற வாளினால் இவ்விடத்திலுள்ள பூமியைப் பிளந்து கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களும் தோன்றும்படிச் செய்யக்கடவாய்," என்று கட்டளையிட்டனள். அவ்வாறு கட்டளையிடவே ஜெயம் பொருந்திய சங்கத்தைக் கையிற் றரித்தவளாகிய துர்க்காதேவி பார்வதியை வணங்கி உடனே தன் கையிலிருந்த வாளாயுதத்தைப் பூமியில் வீசி யெடுத்தாள். அங்ஙனம் வீசி

யெடுக்கவே அவ்விடத்தில் ஒரு மடுவுண்டாய் அதில் மேற்கூறிய ஒன்பது தீர்த்தங்களும், மற்றுமுள்ள நதிகளும், நல்ல சுவைபொருந்திய ஜலம் நிறைந்த பல தடாகங்களும் உண்டாயின. அப்படி யுண்டாகவே உமாதேவி தன்னுடைய பாவம் நீங்கும்படி அத் தீர்த்தங்களிலே ஒரு மாதம் வரைக்கும் விதிப்படி ஸ்நானஞ் செய்தாள். அவ்விதம் ஸ்நானஞ் செய்த மகிமையினாலேயே அவளுடைய பாவம் நீங்கிற்று; அவள் கையைப் பற்றிக்கொண்டிருந்த இலிங்கமும் பிடிப்பு விட்டு நீங்கியது. அதன்மேல் உமாதேவி மனமகிழ்ந்து தேவர்கள் துதிக்க அந்தத் தீர்த்தக்கரையில் வந்து அருவமாயும், உருவமாயும் விளங்கும் ஒப்பற்ற சிவபெருமானை அங்கெழுந்தருளச்செய்து அவருக்கு, 'என் பாவந் தீர்த்தார்,' என்று திருநாமஞ் சூட்டிப் பக்தியுடனே அர்ச்சனை புரிந்து, ஒன்பது தீர்த்தங்களுமுண்டாகிய அச்சுனை வாளினாலுண்டான விசேஷத்தினாலே அதற்குக் கட்கதீர்த்தமென்று பெயரிட்டுவிட்டுப் பின்னர் அருணாசலத்தில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனை வணங்கும்பொருட்டுக் கௌதமர் முதலியவர்களுடனே பொன்மயமாகிய கோவிலை நோக்கிச் சென்றாள்.

அங்ஙனஞ் சென்ற பார்வதி, வாசனை பொருந்திய தாமரைமலரி லிருக்கின்ற பிரமனுடைய பெயரால் வழங்கும் பிரமதீர்த்தத்திலே மூழ்கி, விபூதி தரித்துச் சிவந்த கைகளைச் சிரமேற் கூப்பிக்கொண்டு தன்னுடன் வந்த கௌதமருடைய சொற்படியே கோவிலுக்குச் சென்று அமிர்தம்போன்ற இனிமை யுடையவராகிய சுவாமியைத் தரிசித்து, பூமியிற் றேகம் படியுமாறு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தெழுந்து தேகம் பரவசமாகப் பாடியாடி மனமுருகிக் களிகூர்ந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்து கோவிலை வலம்வந்து தன்னுடைய குறைகளையெல்லாம் சுவாமியினிடம் கூறித் துதித்துப் பின்னர் கார்த்திகை மாதத்தில் ஆகமப்படி சுவாமிக்குத் திருவிழா நடத்தி அக்கினி நேத்திரத்தையுடைய அந்தப்



பரமசிவக்கடவுளைப் பணிந்தாள். அவ்வாறு பணிந்தமாத்திரத்தில் அருணகிரியின்மேல் ஒரு சோதியுண்டாக அதில் பலகோடி சூரியப்பிரகாசம்போலச் சிவபெருமான் தோன்றிப் பார்வதியை நோக்கி, "பெண்ணே! நீ இம்மலையை வலம் வருவாயாக," என்று சொல்லி மறைந்தனர். அகலிகையென்னும் பெண்ணைக் கல்லாக்கிய கௌதமரிஷியும் சுவாமி கூறியதைக் கேட்டுப் பார்வதியிடத்தில், "அம்மா! சுவாமியின் திருவாக்கின்படியே மலையை வலஞ்சுற்றி வருவாயாக," என்று கூறினார்.

அதன்மேல் பார்வதிதேவி, வேதகோஷ்ட முழங்கவும், முரசு, துந்துமி, மத்தளம், சல்லரி, குடமுழா, எக்காளம், மல்லரி முதலிய வாத்தியங்கள் சப்திக்கவும் இரண்டு கைகளையும் சிரமேற் கூப்பிக்கொண்டு அருணாசலமலையை வலஞ்சுற்றிவரும்பொருட்டு நடந்தாள். அங்ஙனஞ் செல்லும்போது அரம்பை, ஊர்வசிமுதலிய தெய்வமாதர்கள் அம்மையாருக்கு முன்னே நடனமாடிச் சென்றார்கள்; மலையரமகளிரெல்லோரும், அம்மை நடக்கும்போது அவளுடைய பாதங்கள் பூமியிற் படிந்து வருந்தாம லிருக்கும்பொருட்டு புஷ்பங்களைக் குவியல் குவியலாகக் கொண்டுவந்து நடக்கும் வழியிற் கொட்டினார்கள்; கருப்பஞ்சாறுபோலத் தித்திக்கும் வார்த்தைகளையுடைய நீரரமகளிரெல்லோரும் அம்மைக்குச் சாமரங்களை வீசினார்கள்; நாகலோகத்துப் பெண்களெல்லோரும் இரத்தின தீபங்களைக் கையிலேந்திக்கொண்டு முன்னே சென்றார்கள்; செந்தாமரை மலரிலிருக்கின்ற இலக்குமியும், இந்திரன் மனைவியாகிய இந்திராணியும், வெண்டாமரை மலரிலிருக்கின்ற சரஸ்வதியும் வழியிற் கிடக்கும் முட்களையும் கற்களையும் தள்ளிக்கொண்டு சென்றார்கள்; பூமிதேவி அம்மைக்குக் கைலாகு கொடுத்துச் சென்றாள்; தேவஸ்திரீகளும், முனிவர்களுடைய ஸ்திரீகளும் புஷ்பங்களிலிருந்து அருவிபோற் பாய்ந்து கால்வழுக்கும்படி பாயும் தேன் சேற்றை ஒதுக்கித் தள்ளி மகரந்தங்களை அவ்விடங்களிற் கொட்டிக்

கெட்டிப்படுத்திச் சென்றார்கள்; கங்கையானவள், அம்மையை நோக்கி, "தேவி! இந்தப் புஷ்பங்களின்மேல் நடந்தாலும் அடியில் தரை யிருப்பதால் உம்முடைய பாதங்கள் வருந்தும், சுவாமியின் அருளைப் பெறுவதற்காக அவ்வேதனையைச் சகித்துக்கொண்டு வரவேண்டும்," என்று உபசார வார்த்தைகள் கூறிக் கைகூப்பி வணங்கிச் சென்றாள்.

இங்ஙனம் பலவகைச் சிறப்புக்களுடனே பார்வதிதேவி சென்று அக்கினி திசையைச் சார்ந்து அக்கினிமலையை எதிர்முகமாக நோக்கித் தொழுது பிறகு தெற்குத்திசையையும் நிருதி மூலையையுந் தாண்டி மேற்குத்திசையை அடைந்தாள். அப்போது சிவபெருமான் விருஷ வாகனத்தின்மே லெழுந்தருளி வந்து அம்மைக்குத் தரிசனங் கொடுத்துச் சென்றார். அவ்வாறு தரிசனங்கொடுத்த சமயத்தில் உமாதேவி அந்த அருணாசலேசுவரரது பாதத்தை வணங்கி, அதன்மேல் மேற்குத் திசையையும் வாயுதிசையையுந் தாண்டி வடதிசையைச் சார்ந்து அவ்விடத்திலும் சிவபெருமானைத் தொழுது பின்னர் அவ்வடக்குத் திசையையும் ஈசானதிசையையும் கடந்து கிழக்குத்திசைக்கு வந்தாள். அவ்வாறு அவள் அந்த ஜோதிமலையைச் சுற்றிவந்தது எப்படியிருந்ததெனில் இமாசலத்தில் சுவாமி அந்தப் பார்வதியைக் கலியாணஞ் செய்த காலத்தில் அவள் ஓமாக்கினியை வலம் வந்ததுபோலிருந்தது.

இவ்வாறு உமாதேவி அருணகிரியை வலமாகச் சுற்றிக் கிழக்குத்திக்கில் வந்தமாத்திரத்தில், பானுகம்பனென்பவன் தன்னுடைய சலஞ்சலமென்னும் சங்கத்தை ஆயிரங் கைகளினாலுமெடுத்து வாயில் வைத்து முழக்கிப் பேரொலியைச் செய்யவும், விஷ்ணு, தனது பாஞ்சசன்னியமென்னும் சங்கத்தை வாயில் வைத்தூதி முழக்கவும், நாரதர் வீணை வாசிக்கவும், தேவதுந்துமி முழங்கவும், தேவர்களெல்லோரும் ஆகாயத்திற் கூடி நின்று புஷ்பமாரியைச் சொரியவும், கற்றையாகிய சடையிற் றரிக்கப்பட்ட இளம்பிறையின் சந்



திரிகை பிரகாசிக்கவும், தாம் ஆபரணமாகத் தரித்த சர்ப்பத்தின் சிரசிலுள்ள இரத்தினம் மிகுந்த பிரகாசத்தை வீசவும், உலகமாதாவாகிய பார்வதிதேவிக்குத் தம்முடைய பாதிச் சரீரத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும்பொருட்டு நேர்பாதியிற் பிடித்த * எற்று நூல்போலப் பூநூல் மார்பிற் பிரகாசிக்கவும், பிறப்பில்லாத மூர்த்தியும்; வேதங்களாலு மளவிட்டறியப்படாதவரும், இறப்பில்லாதவருமாகிய பரமசிவன் விருஷபவாகனத்தி லெழுந்தருளி அம்மையாருக் கெதிரில் தோற்றினார். உடனே பார்வதி அந்தச் சுவாமி பாதங்களைத் தொழுது வணங்கினாள்.

அப்போது சுவாமி, பார்வதியை நோக்கி, "உமையே! நீயும் நானும் ஆணும் பெண்ணுமாகி உலகத்தில் பற்பல சீவராசிகளை வெவ்வேறாக உண்டாக்கினோம்; ஆவிடையாரும் இலிங்கமு மானோம்; நமக்குள் நீயென்றும் நானென்றும் வேறாகிய பேதமில்லை; மரமும் அதற்குள்ளே யிருக்கும் வயிரமும்போல நாமிருவரும் எப்பொழுதும் ஒன்றாகச் சேர்ந்திருப்போம்; நீயோ தக்கன் மகளாகப் பிறந்த பிறப்பை நீக்கி நம்மை அடையும்பொருட்டாகப் பர்வதராஜ புத்திரியாக இமயபர்வதத்தில் வந்து பிறந்தாய்; அங்ஙனம் பிறந்து நம்மை மணம் புரிந்தும் பின்னர் நம்முடைய இடப்பாகத்தைப் பெற விரும்பி இங்குவந்து அருந்தவமும் புரிந்தனை; உன்னுடைய தவத்திற்காக மகிழ்ந்து நான் இப்போதுனக்கு இவ்விடத்தில் உன்னிஷ்டப்படியே இடப்பாகங் கொடுக்கவிரும்பினேன்; ஆதலால், நம்முடைய இடப்பாகத்தைச் சேர்ந்திருக்கக்கடவாய்," என்று சொல்லிச் சந்தோஷத்துடனே உமையை வாமபாகத்திற் சேர்த்துக் கையினால் அணைத்துக்கொண்டார். அப்படி அணைத்துக்கொண்ட மாத்திரத்திலே இருவர் தேகமும் உருகி ஒரு தேகமாயின. இவ்வாறு சுவாமியி

* எற்று நூல்-மரங்களை அளவிட்டறுப்பதற்குத் தச்சர்கள் மையிற் றோய்த்து நேராக இழுத்துப் பிடித்து விரலா லெற்றி அடையாளமிடும் நூல்.

னுடைய பாதித்தேகமும் அம்மனுடைய பாதித்தேகமும் உருகி ஒரு தேகமானபோது, அத்தேகத்தில் ஒரு பக்கத்திற் சிவந்த சடையும், ஒரு பக்கத்திற் கரிய கூந்தலும், ஒரு பக்கத்திற் கொன்றைமாலையும் ஒரு பக்கத்தில் வேறு புஷ்பமாலையும், ஒரு பக்கத்திற் குழையும், ஒரு பக்கத்தில் நீலோற்பலபுஷ்பமும், ஒரு பக்கத்தில் வீரகண்டாமணியும் ஒரு பக்கத்தில் சிலம்பும், ஒரு புறத்தில் பச்சை நிறமும், ஒரு புறத்தில் பவளநிறமும், ஒரு புறத்தில் கச்சணிந்த தனமும், ஒரு புறத்தில் அழகான மார்பும், ஒருபுறம் அபயஸ்தமும், ஒரு புறம் வரதாஸ்தமும் விளங்கின.

இப்படி விளங்கினமாத்திரத்திலே தேவர்களெல்லோரும் சுவாமியும் அம்மனுமாகிய அவ்வுருவத்தைத் துதித்துச் சுவாமிக்கு வணக்கம் புரிந்தார்கள். இக்கதையைப் படித்தவர்களும் செவியாற் கேட்டவர்களும் சந்தன விருக்ஷங்கள் சூழப்பெற்ற பொதியமலையி லிருக்கின்ற அகத்தியமுனிவரைப்போன்று தமிழில் வல்லமையுடையவராவர்; புத்திர சந்தானத்தோடும் மிகுந்த பாக்கியத்தோடுஞ் சுற்றத்தாரோடும் உலகத்தில் நெடுங்காலம்வரை சந்தோஷமாக வாழ்வார்கள்; தங்களிடம் பந்தமாகச் சூழ்ந்துகொண்டிருக்கிற தீவினையைத் தள்ளி முடிவில் மோக்ஷத்தையு மடைவார்கள்,’’ என்று சொல்லி முடித்தார்.

ஐந்தாவது

பார்வதிதேவியார் இடப்பாகம் பெற்ற சருக்கம் முற்றுப்பெற்றது.

---

## ஆறாவது
## வச்சிராங்கதபாண்டியச் சருக்கம்.

நந்திதேவர் மேற்கூறியபடி பார்வதி இடப்பாகம் பெற்ற சரிதத்தைக் கூறியபின் அதனைக் கேட்டு மகிழ்ந்த மார்க்கண்டேயர் எழுந்து நந்திதேவரை வணங்கி அவர் திருமுகத்தை நோக்கி, ‘‘சுவாமி! இப்போது தாம் கூறிய



படி அம்மையார் இடப்பாகம் பெற்ற சரித்திரத்தை நானும் மற்றரிஷிகளும் கேட்டு அங்கம் பூரிக்க ஆனந்த சாகரத்தில் மூழ்கினோம்; இனி இந்த அருணாசலத்தை வலஞ் சுற்றியதால் வச்சிராங்கத பாண்டியன் சுவர்க்கமடைந்த கதையைக் கேட்க விரும்புகிறோம்; ஆதலின் அதனைக் கூறவேண்டும்,’’ என்று கேட்டுக்கொண்டனர். அவர் இப்படி விண்ணப்பஞ் செய்யவே நந்திதேவர் அவரிஷ்டப்படியே அக் கதையைச் சொல்லத் தொடங்கினவராய் மார்க்கண்டேயரை நோக்கி, ‘‘முனி சிரேஷ்டரே! உம்மிஷ்டப்படியே அக் கதையைக் கூறுகிறேன் கேளும்: சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தர்களுடைய நாடுகளில், மணம் பொருந்திய சந்தனவனத்திற் சஞ்சரித்து, இனிமை பொருந்திய தமிழ்ச்சுவையோடு கலந்து, நெடுநாளாடிப் பழகிய மயில்போன்ற மாதர்களுடைய நடைபோன்ற மிருதுவான நடை வாய்ந்து, குளிர்ச்சி விரவிய தென்றற்காற்றானது வீசுகின்ற சிறப்பினையுடைய வைகையாறு பாயப்பெற்றதும், அவ்வைகைக் கரையில் பார்க்கும் ஆடவர்க்கு வெம்மையைச் செய்யும்படியாகிய கண்களையுடைய பெண்களின் இடையைக் கண்டு மின்னலென்று நினைத்து அழகிய தாழைகள் மலரக்கூடியதும், மான் பார்வைபோலும் மருண்ட பார்வையையுடைய மாதர்களின் கூந்தலை நோக்கி இருளென்று நினைத்து முல்லைச் செடிகள் மலருஞ் செழிப்பை யுடையதுமாகிய வளம் பொருந்திய பாண்டிநாடானது மிகவுஞ் சிறப்புற்றதென்பது உலகறிந்த விஷயம். இந்நாட்டை முற்காலத்தில் ஆண்டுவந்த பாண்டியர்களுக்குள்ளே வச்சிராங்கதபாண்டியனு மொருவன்; இவன் எப்பேர்ப்பட்டவனெனில், மற்ற எல்லாப் பாண்டியர்களினும் மேம்பாடுடையவன்; அரசர்க்கரசனானவன்; தேவேந்திரன்மீது வளையென்னு மாயுதத்தை யேவி அவனுடைய முடியைச் சிதறும்படி செய்தவன்; தனது வெற்றிக் கறிகுறியாக அஷ்டதிக்குகளிலு மிருக்கின்ற யானைகளின் முகத்தில் தன்னுடைய மீனக்கொடியை எழுதி வைத்தவன்; மன்மதனைப்போன்ற தேகக் கட்டழகு வாய்ந்தவன், ஆக

ங்களை யெல்லாம் படித்துணர்ந்த விவேகத்தையுடையவன்; இடப்பாகத்திற் பார்வதியை வைத்த சிவபெருமான்மீது நீங்காத பக்தியையுடையவன்; பாகைப்போலத் தித்திக்கின்ற சொற்களையுடைய ஸ்திரீகள் விரும்பும் நெடிய புயங்களையுடையவன்; தேவலோகத்திலும், பூமியிலும், இமயபர்வதத்தினிடத்திலும் தன்னுடைய கீர்த்தியை நாட்டினவன்; சிவபெருமான் சடையிற் சூட்டப்பெற்றிருக்கும் ஆத்தி மலர் மாலையினது வாசனையைத் தன் மனத்தில் மறவாமல் நினைத்துக்கொண்டு பூமியைக் காப்பவன்; தங்கள் குலத்திற்குத் தலைவனாகிய சந்திரனை முடியில் தரித்த சிவனுடைய பாதங்களைச் சிரசால் வணங்குகிறவன்; தருமத்தை எப்பொழுதும் மறவாமல் பாதுகாக்கக்கூடியவர்களில் முதன்மைபெற்றவன்; பத்துத் திக்குகளிலும் பரவும்படி வெண்மையான கீர்த்தியின் வித்தைவாரி யிறைத்த தன்மைபோல வெள்ளிய முத்துக்கள் இறைக்கப்பட்டுக் கிடக்கும் முற்றத்தையுடையவன்; தாவரசங்கமமாகிய எல்லாப் பொருள்களும், எல்லாச் சீவராசிகளும் சந்தோஷத்தை யடையும்படி நீதியோடு அரசு செலுத்தி வருபவன்; வீரகண்டாமணியைத் தரித்த பாதங்களை யுடையவன்; யுத்தத்திற் றோல்வியடையும் அரசர்களைச் சிறையிலிடுவதுபோலத் தன் கொடைக்குத் தோற்ற மேகத்தையும் ஒரு காலத்திற் பிடித்துத் தன் நோக்கப்படி நடக்குமாறு சிறையிலிட்டவன்.

இத்தகைய ஜெயத்தையும், சிறப்புக்களையுமுடைய வச்சிராங்கதபாண்டியன், மன்னுயிர்களை யெல்லாம் தன்னுயிரைப்போலப் பாதுகாத்து அரசு செலுத்திவருங் காலத்தில் ஒருநாள் வேட்டையாடக் கருதி இரதம், கஜம், துரகம், பதாதியென்னும் நால்வகைப் படைகளுடனே பட்டத்துக் குதிரையின்மேலேறி வடதிசையிற் சென்று ஓரடவியிற் புகுந்து வேட்டையாடத் தொடங்கினான். அவ்வாறு தொடங்கி வேட்டையாடும்போது அவனேறியிருந்த குதிரையினுடைய வீரத்தைக் கண்டு, சந்திரனைப் பார்த்த இருட் கூட்



டம் நீங்கி யோடுவதுபோல நீண்ட துதிக்கையையுடைய யானைக்கூட்டங்கள் அஞ்சி யோடின; அவன், அம்புலியென்னும் பெயரினையுடைய சந்திரகுலத்திற் பிறந்தவனானபடியினாலே அந்த அம்புலியென்னும்பெயர்க்குத்தக இறுமாப்பையுடைய புலிகளை யெல்லாம் கொன்றான்; இன்னும் அவன் ஆறிலொரு (கடமை) கொள்பவனாதலாலே அப்பெயர்க்குத் தக வழியி லெதிர்ப்பட்ட பல (கடமை) மிருகங்களையுங் கொன்றான்; பின்னும் அவன் சேர (மானுடைய) இனமாகிய படையை ஜெயித்தவனானபடியினாலே அப்பெயர்க்குத்தக (மானினங்களையுங்)கொன்றான்; அன்றியும் அவன் கலை(சாஸ்திர)க் கூட்டங்களை வளர்த்துக் கைக்கொண்டவனானபடியினாலே அப்பெயர்க்குத் தகக் கலைக் (கலைமான்) கூட்டங்களையும் வளைத்துக் கைக்கொண்டான்.

இவ்வாறு அந்த வச்சிராங்கதபாண்டியன் பல மிருகங்களையுங் கொன்று குவித்து முடிவில் தன்னுடைய நால்வகைப் படைகளையும் விட்டு நீங்கித் தனியனாய்க் குதிரையிலேறியபடியே ஒரு புழுகுபூனையைக் கண்டு வேகமாக அதனைத் துரத்திச் சென்றான். அங்ஙனந் துரத்திச் செல்லவே அந்தப் புழுகுபூனையானது அருணாசலத்தை வலமாகச் சுற்றி யோடியது; வச்சிராங்கதபாண்டியனும் குதிரையைப் பின்னே நடத்திக்கொண்டு அம்மலையைச் சுற்றிவந்தான். அப்படி வரும்போது மலையைச் சுற்றி முடிந்தவுடன் விரைந்தோடின புழுகுபூனை அந்தப் பாண்டியனுடைய கண்ணுக் கெதிரே, விஷத்தை யுண்டவர்கள் மயங்கி விழுவதுபோல மயங்கி வீழ்ந்திறந்து தன் தேகத்தை விட்டு உடனே ஒரு வித்தியாதரவடிவம் பெற்று விஞ்சையர் துதிக்க அழகிய விமானத்திலேறி யமர்ந்து ஆகாயத்திற் பிரகாசித்தது. அத்தருணத்தில் அரசன் ஏறியிருந்த குதிரையும் அவன் பக்கத்தில் விழும்படி காலிடறிக் கீழே விழுந்து புழுகுபூனையைப் போலவே யிறந்து தேகத்தைவிட்டுச் சித்திரக்காரராலும் எழுத முடியாத திவ்வியவித்தியாதரரூபம் பெற்று ஒரு புஷ்ப

விமானத்திலேறி வானத்தில் விளங்கியது. கீழே விழுந்த வச்சிராங்கதபாண்டியனோ, இராவணன் கைலயங்கிரியைப் பெயர்த்தெடுத்தகாலத்தில் சிவபெருமானால் நசுங்குண்டு அதனடியிலிருந்தபடியே வருந்தினதுபோல அருணாசலத்தினடியிற் கிடந்து வருந்தினான். அவன் இவ்வாறு வருந்திக் கிடக்க, முன் கூறியபடி மிருக தேகங்களைவிட்டு வித்தியாதரராகிய இருவரும் தாங்கள் முந்தின ஜென்மத்திற் கொண்டிருந்த காந்திசாலி, கலாதரன் என்னும் பெயர்களை யுடையவர்களாய் ஒருவர்மீதொருவர் மிக்க நண்புகொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்து ஒருவரையொருவர் கட்டியணைத்து உச்சி மோந்து ஒருவர்க்கொருவர் உபசார வார்த்தைகள் கூறி ஆனந்தசாகரத்தில் மூழ்கினார்கள்.

இப்படி அவ்விருவரும் சந்தோஷ மடைந்துகொண்டிருக்கும்போது, தன் சத்துருக்க ளடையுந் துக்கத்தைக் காட்டிலும் அதிகமான துக்கத்தை யடைந்து வருந்திய பாண்டியன், அவர்களைப் பார்த்து அதிசயித்து, "நமக்கு இக்கதி நேர்ந்ததற்கும், புழுகுபூனையும் குதிரையு மிறந்து இவ்விதம் திவ்விய தேகம் பெற்றதற்கும் காரணம் யாது?" என்று பலவாறு யோசித்தான். அப்படி யோசித்துக்கொண்டிருக்கும்போது, வித்தியாதரர்களாகிய அவ்விருவரும் விமானத்திலேறியபடியே துணையில்லாமல் வருந்திக்கொண்டிருக்கும் பாண்டியனிடத்தில் வந்து அவனைப் பார்த்து, "வழுதியே! நீ பயப்படவேண்டாம்," என்று சொல்லிக் கையமர்த்தினார்கள். அவர்கள் அவ்வாறு சொல்லவே, பாண்டியன் சிறிது தைரியங் கொண்டவனாய்ச் சந்தோஷித்து அவர்களுடைய திருமுகத்தைப் பார்த்து, "நீதி பொருந்திய நண்பர்களே! நீங்களிருவரும் யாவர்? உங்களுக்கு மிருக ஜன்மம் வந்ததற்குக் காரணமியாது? இப்போது மீண்டும் இந்த வித்தியாதர தேகத்தை எதனால் பெற்றீர்கள்?" என்று வினவினான்.

அப்போது, அவர்களுட் கலாதரனென்பவன் பாண்டியனை நோக்கி, "நெற்கள் மிகுந்து விளைகின்ற மதுரைக்கு நாயக



னே! நாங்கள் முன்னே வித்தியாதரர்களா யிருந்தவர்கள்; என்பெயர் கலாதரன்; என்பக்கத்தில் நிற்கும் நண்பன்பெயர் காந்திசாலி; நாங்களிருவரும் முந்திய ஜன்மத்தில் காமனும், அவன் தம்பியாகிய சாமனும்போல இணைபிரியாத நேயமுடையவர்களாகிச் சஞ்சரித்தோம்; அப்படி யிருக்கும்போது ஒரு நாள் முன் செய்த எங்களுடைய ஊழ்வினை வசத்தால் நாங்கள் மகாமேருவின் சாரலுக்குச் சென்றோம்; அவ்வாறு சென்று தாருவாசமுனிவரின் ஆச்சிரமத்தினருகே, அவர் சிவபூஜைக்குப் புஷ்பம் பறிக்கும்பொருட்டுப் பூஞ்செடிகளை வைத்துத் தண்ணீர் சொரிந்து அவரால் வளர்க்கப்பட்டிருந்த நந்தவனத்திற் புகுந்து விளையாடினோம்; அப்படி விளையாடும் போது காந்திசாலியாகிய இவன் அங்குள்ள அழகிய புஷ்பச் செடிகளை மிதித்துச் சிதைத்தான்; நான் அவைகளிலுள்ள மேன்மையான புஷ்பங்களைப் பறித்தேன். இப்படி நாங்களிருவரும் செய்துகொண்டிருக்குங் காலத்தில் தாருவாசரிஷி, திடீரென வந்து எங்களையும் எங்களுடைய செய்கைகளையும் பார்த்து, மனங்கொதித்துக் கண்களில் நெருப்புப்பொறிகள் சிதறச் சடையவிழ்ந்து விழ, முத்துக்களைப்போல முகத்தில் வியர்வையுண்டாக, பவளம்போன்ற இதழ் துடிக்க, உத்தரீயம் நழுவிவிழ அதனை யடிக்கடி எடுத்து மேலுயர்த்திப் போட்டபடியே மிகுந்த கோபங்கொண்டு எங்களைப் பார்த்துப் பற்களை நெறநெறவென்னக் கடித்து, "பாபாத்மாக்களே! நீங்க ளியாவர்? சிவப்பாகிய சூரியகிரணமும் என்னுடைய பயத்தினாலே இந்த நந்தவனத்திற் புகமாட்டாது; தென்றற் காற்றும் வண்டுகளுங்கூட ஒருபோதும் இச்சோலையி லணுக மாட்டா; இச்சோலையிலோ செடிகளிலுள்ள இலைகள் உதிர்வதுமில்லை வாடுவதுமில்லை; செடிகள் நாசமடைவதுமில்லை; அத்தகைய இந்த நந்தவனத்தில் நீங்கள் புகுந்தது தகுமோ? இடபவாகனத்திலேறும் சிவபெருமானுடைய பூஜைக்குப் புஷ்பம் பறிக்கும்பொருட்டு இந்த நந்தவனத்தை மிக்க பிரியத்தோடு விக்கினமில்லாமல் வளர்த்து வருகின்றேன்; இவ்வாறு இது சிவனுக்குரியதா யிருக்கின்ற தென்பதைச்

சிறிது முணராமல் இதில் நீங்கள் புகுந்து புஷ்பங்களைப் பறித்தது மின்றிச் செடிகளையும் நாசஞ் செய்தீர்கள்; இவ்வாறு அடாத செய்கைகளைச் செய்த உங்களுக்கு நான் இப்போது சாபங்கொடாமல் விடேன்,” என்று பயங்கரமான வார்த்தைகளைக் கூறிச் செடிகளை மிதித்துச் சிதைத்த இந்தக் காந்திசாலியை நோக்கி, “அடா பாவி! நீ சிறிதும் அறிவின்றி அரன் பூஜைக்குரிய அருமையான செடிகளை மிதித்துச் சிதைத்தபடியால் குதிரையாகப் போகக்கடவாய்,” என்று இவனுக்குச் சாபங் கொடுத்துவிட்டுப் பின்னர் புஷ்பம் பறித்தவனாகிய என்னை நோக்கி, “அடா சிவத்துரோகி! நீ சிவனுக்குரிய புஷ்பங்களைத் தொட்டுப் பறித்தபடியினாலே புழுகுபூனையாய்க் காட்டில் திரிந்துழலக்கடவாய்,” என்று எனக்குச் சாபங் கொடுத்தார்.

இவ்வாறு அவர் கோபித்துச் சாபங் கொடுத்தவுடனே நாங்களிருவரும் பயந்து நடுங்கி மிகுந்த தவத்தையுடைய அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவரை நோக்கி, ‘ஞான விளக்கே! கிருபைக் கடலே! பக்தருக் கிதஞ் செய்யுஞ் செல்வமே! நாங்கள் அறியாமையால் இப்போது தகாச் செய்கைகளைச் செய்து உம்முடைய கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளானோம்; இனி இந்தச் சாபத்தை நாங்கள் அநுபவித்தே தீரவேண்டும்; ஆயினும், இந்தச் சாபம் எப்போது எங்களைவிட்டொழியு மென்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றோம்; ஆதலால், எங்களுக்கு இச்சாபம் நீங்கும் காலத்தைக் கூறியருளவேண்டும்,” என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டோம். நாங்கள் அவ்வாறு வணக்கத்துடன் கேட்கவே, துருவாசமுனிவர் கோபந் தணிந்து சிறிது கிருபையுடன் எங்களை நோக்கி, “வித்தியாதரர்களே! நீங்கள் என்னுடைய சாபப்படியே குதிரையும் புழுகுபூனையுமாகி உலகத்தில் சஞ்சரிப்பீர்கள்; அவ்வாறு சஞ்சரிக்கும்போது ஒரு காலத்தில் திருவண்ணாமலையை வலஞ் சுற்றிவருவீர்கள்; அப்படி எப்போது அம்மலையை வலம் வருவீர்களோ அப்போது



இச்சாபம் நீங்கப்பெற்று மீண்டும் வித்தியாதரராகி நற்கதியை அடைவீர்கள்; அவ்வாறு நீங்கள் அருணகிரியைப் பிரதக்ஷணஞ் செய்தல் பாண்டிநாட்டரசனா லுண்டாகும்; அந்த மலையைப் பிரதக்ஷணஞ் செய்வோர் அடையும் நன்மைக் களவேயில்லை; சிவன் வடிவமாகிய அம்மலை மிக்க மகிமையுடைய தென்பதை விளக்கும்பொருட்டு ஒரு சிறிய கதை சொல்லுகிறேன் கேட்பீராக: ‘அருணையென்னும் அக்கினி மலைவடிவமாய் நின்ற சிவபெருமான் ஒருகாலத்தில், தமக்கு வருணனால் கொடுக்கப்பட்ட வாசனை பொருந்திய மாம்பழத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும்போது, அவருடைய பிள்ளைகளாகிய விநாயகரும், சுப்பிரமணியரும் அதனைப் பெற விரும்பிக் கேட்க, அவர் அவ்விருவரையும் நோக்கி, ‘பிள்ளைகளே! நீங்கள் இன்றைக்குள் உலக முழுவதையும் சுற்றிவரவேண்டும்; அங்ஙனஞ் சுற்றி வருவதில் உங்களில் எவன் முன்னே வருபவனோ அவனுக்கே இக்கனியைக் கொடுப்பேன்,’ என்று கூறினார்.

இவ்வாறு கூறியவுடனே சுப்பிரமணியர், ‘நமக்கோ மயில்வாகன மிருக்கின்றது; இதிலேறி உலகத்தை விரைவில் சுற்றிவந்துவிடலாம்; நம்முடைய தமையனால் அவ்வாறு விரைந்து வரமுடியாது; ஆதலால், நாமே மாங்கனியைக் கைப்பற்றலாம்,’ என்று கருதி உடனே மயில்வாகனத்திலேறி அதனை விரைவாக நடத்தி, சப்த சமுத்திரஞ் சூழ்ந்த பூமி முழுவதையுஞ் சுற்றிவந்தார். யானை முகத்தினையுடைய விநாயகக்கடவுளோ தம்முடைய சூக்ஷ்ம புத்தியினால், ‘நம்முடைய தந்தையினிடத்திலேயே உலகமெல்லாம் அடங்கியிருக்கின்றது; இவரைச் சுற்றிவந்தால் உலகத்தைச் சுற்றி வந்ததுபோலாம்,’ என்று கருதித் தம் தந்தை வடிவமாகிய அருணையை வலமாகச் சுற்றிக் காலால் நடந்துவந்து சிவபெருமானை வணங்கினார். அப்போது அக்கினிமலை வடிவமான எம்பெருமான் மகிழ்ந்து விக்கினேசுவரரைத் தழுவிக் கொண்டு அவருக்கு வேண்டிய வரங்களையும் மாங்கனியை

யுங் கொடுத்தார். பின்னர் மயில்வாகனத்தி லேறிச் சென்ற சுப்பிரமணியர் பூமியையெல்லாம் சுற்றிவந்து சிவபெருமானைக் கண்டு வணங்கி மாங்கனியைக் கேட்டனர். அத்தருணத்தில் சிவபெருமான் அவரை நோக்கி, 'குமாரனே! உன் தமையன் காலால் நடந்து அக்கினிமலை வடிவமாகிய நம்மை வலஞ்சுற்றி முன்னமே வந்துவிட்டான்; நம்மைப் பிரதக்ஷணஞ் செய்வது பூமிமுழுவதையும் பிரதக்ஷணஞ் செய்வதற்குச் சமானமாகும்; ஏழுலகங்களையும் வலஞ் செய்வதாலும், பற்பல தவங்களைச் செய்வதாலும் ஏற்படும் பலன் நம்மைப் பிரதக்ஷணம் செய்யும் பலனுக் கீடாகமாட்டாது; சிவந்த அக்கினிமலை வடிவமான நம்மைத் தினம் வலம் வந்தவர்கள் பிரமன், விஷ்ணு, பார்வதி முதலியவர்களைக் காட்டிலும் அதிக சிரேஷ்ட முடையராவார்; உன்னைக்காட்டிலும் மேலானவராவார்; என்னிலுஞ் சிறந்தவராவார்; குற்றமில்லாத தேவர்களுங்கூட நம்முருவாகிய இம்மலைக்குப் பூஜை பண்ணாமல், இதனை வலஞ்சுற்றி வந்தவர்களையே சிரேஷ்ட முடையவர்களாகக் கருதி அவர்களுக்கே பூஜை செய்வார்கள்; அப்படி அவர்களுக்குச் செய்யும் பூஜையானது நமக்குச் செய்ததேயாகும்; அவர்கள் மனங் கூசும்படி அவர்களுக்குச் செய்த தீங்கானது நமக்குச் செய்த தீங்காகும்; இத்தகைய மலைவடிவமான நம்மை விநாயகன் பிரதக்ஷணம் செய்தபடியினாலே அவனையே விசேஷமுடையவனாகக் கருதி அவனுக்கே மாங்கனியைக் கொடுத்துவிட்டேன்; அவனுக்கேற்பட்ட சூக்ஷ்மபுத்தி உனக்கேற்படாமல்போய்விட்டது; நீ இப்போது பூமி முழுவதையும் சுற்றிவந்தும் ஒரு பயனுமில்லாமற் போய்விட்டது,' என்று கூறினார். இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சுப்பிரமணியர் வெட்கத்தை யடைந்து மௌனமுற்றிருந்தார்; இக்கதையினால் நீங்கள் அந்த அருணாசலத்தின் மகிமையை உணர்ந்துகொள்ளலாம்,' என்று சொல்லிப்போனார்.

அதன்மேல் அவருடைய சாபப்படியே நாங்களிருவரும் குதிரையும் புழுகுபூனையு மாயினோம். அவ்வாறான



பின்பு குதிரையாகிய காந்திசாலி உம்மிடத்தில் வந்து சேர்ந்தான்; புழுகுபூனையாகிய நான் இங்கே காட்டிற் சஞ்சரித்தேன். நீர் இன்று இந்தக் காந்திசாலியின் அம்சமாகிய குதிரைமேலேறிப் புழுகுபூனை வடிவமாயிருந்த என்னைக் கண்டு துரத்தினீர்; நான் பயந்து இந்த மலையை வலமாகச் சுற்றி ஓடிவந்தேன்; குதிரையா யிருந்த காந்திசாலியும், நீர் அவன்மேலேறி அவனைச் செலுத்த உம்மைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்னே ஓடிவந்தான். துருவாசரிஷி கூறியபடியே நாங்களிருவரும் இப்போது இவ்வாறு இம்மலையை வலஞ்சுற்றி வந்தபடியால் எங்களுடைய சாபம் நீங்கப்பெற்று முந்தின வித்தியாதரதேகத்தை யடைந்து விமானத்தி லேறினோம்; நீர் இவ்வளவு மகிமையையுடைய இந்த அக்கினி மலையை எங்களோடு பிரதக்ஷணஞ் செய்தீரானும் காலினால் நடக்காமல் குதிரைமேலேறி வந்தபடியால் ஒரு நன்மையையும் அடையாமல் கீழே விழுந்து வருந்துதற் கேதுவாயிற்று; ஆயினும், இந்த மலைவடிவமாகிய அருணாசலேசுரரைப் பூஜித்துப் பக்தியுடனே இந்த மலையைப் பிரதக்ஷணஞ் செய்வீரானால் இத்துன்பம் நீங்கிப் புண்ணிய தேகம் பெற்றுச் சுவர்க்கத்தை யடைவீர்," என்று கூறினான். வச்சிராங்கதபாண்டியன் அதிசயித்து அவ்வாறே செய்வதாகச் சொல்லி அந்தக் கலாதரனையும், காந்திசாலியையும் புகழ்ந்தான். அப்பொழுதே அவ்விருவரும் பாண்டியனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தங்களிருப்பிடஞ் சென்றார்கள்.,

அதன்மேல் பாண்டியன் அங்குத் தனியே தன் சேனைகளின் வரவை எதிர்நோக்கி யிருந்தான். அப்படி யிருக்கும்போது இரதகஜ துரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளுடனே அச்சேனைகளிலுள்ள வீரர்களும் அந்த அரசனேறி வந்த குதிரையி னடிச்சுவட்டைப் பற்றிக்கொண்டே வந்து அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்படிச் சேனைகள் வந்து சூழவே, தென்னமரங்களும், கமுகமரங்களும், வாழைமரங்க

ளும், கரும்பின் சாற்றினாலே செழிப்புடன் வளரும் வளத்தினையுடைய பாண்டிநாட்டிற் கிறைவன், தான் தனித்திருந்ததனாலேற்பட்ட வருத்தம் நீங்கினான். அப்படி வருத்தம் நீங்கிய பின்பு அவன் மந்திரிகளிடத்தில், அங்கே நடந்த விசேஷங்களையெல்லாங் கூறி உடனே தன் குமாரனாகிய இரத்தினாங்கதபாண்டியனை வரவழைத்து அவனுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகஞ் செய்து அவனை நோக்கி, “மைந்தனே! நான் இங்கேயிருந்து அருணாசலேசுரரைப் பூஜித்து மலைப் பிரதக்ஷணஞ் செய்யவேண்டும்; ஆதலால், நீ நமது நாட்டிற்குச் சென்று நீதி தவறாமல் செங்கோல் செலுத்தி எனக்குச் சிவபூஜைக்குரிய திரவியங்களைத் தினந்தோறும் அனுப்பிக்கொண்டிருப்பாயாக,” என்று கட்டளையிட்டான்.

அவன் அவ்வாறே செய்வதாகச் சொல்லி வச்சிராங்கத பாண்டியனை வணங்கி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு நால்வகைச் சேனைகளுடனே புறப்பட்டு மதுரைமாநகர்க்குச் சென்றான்; மந்திரி முதலியவர்களும் அவ்வரசனிடம் விடை பெற்றுச் சென்றார்கள். அப்படி எல்லோரும் சென்றபின் வச்சிராங்கதபாண்டியன் அருணையம்பதியில் தங்கிச் சிவ பூசனைக்குரிய காரியங்களிற் பிரவேசித்தான். அங்ஙனமிருக்கும்போது மதுரைக்குச் சென்ற இரத்தினாங்கதன், மனுநீதி தவறாமல் அரசுபுரிந்து குடிகளிடம் ஆறிலொருகடமையாகக் கொண்ட திரவியங்களையும், கடலிற் குளித்து வாரியெடுக்கப்பட்ட முத்துக்களையும், சத்துருக்கள் வைத்து வணங்கிய திறைப்பொருள்களையும் தினந்தோறும் யானைகளிலேற்றிச் சிவபூஜை செய்வதற் குபயோகமாகும் பொருட்டுத் தன் தந்தையாகிய அந்த வச்சிராங்கதபாண்டியனுக்கு அவன் சொற்படியே அனுப்பிக்கொண் டிருந்தான். வச்சிராங்கதன் அப்பொருள்களைப் பெற்று அவற்றினுதவியால் சந்திரனைச் சடையிற்றரித்த அருணாசலேசுவரருக்குரிய பூசனைகளையும், திருப்பணிகளையும் மிகுந்த பக்தியுடனே செய்துமுடித்தான்.



அவ்வாறு அவன் அருணாசலேசுவரர்க்குப் பூஜையும் திருப்பணியும் செய்து முடித்தபின்பு அவருடைய தரிசனையைக் கருதித் தவஞ்செய்யும் இச்சையுடையவனாய்க் கௌதமருடைய ஆச்சிரமத்திற் கருகே ஒரு பக்கத்திற் சேர்ந்து பன்னகசாலை ஒன்றியற்றி அதிலமர்ந்து, பாவத்தை யெல்லாந் தீர்க்கின்ற நீலகண்டராகிய அருணாசலேசுரர் மகிழக் கூடிய தவத்தைச் செய்து முடித்துப் பின்னர் சுபதினத்தில் அருணகிரியைப் பிரதக்ஷணஞ் செய்தான். அவ்வாறு அவன், கிரியை வலஞ்சுற்றி வந்தவுடனே, வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவர்க் கெதிரே தோற்றாத பரமசிவன் அவனுக் கெதிரில் வந்து தரிசனங் கொடுத்தார். அங்ஙனந் தரிசனங் கொடுத்தமாத்திரத்தில் அவர் சடையி லணியப்பட்டிருந்த இளஞ்சந்திரனையும், கருணை பொழிகின்ற அவருடைய கண்களையும், நீலமணிபோல் பிரகாசிக்கின்ற கண்டத்தையும், நான்கு கைகளையும், அவருடைய மலர்போன்ற கரங்களிற் றங்கிய மானையும், மழுவையும், அவர் விருஷப வாகனத்தி லெழுந்தருளி யிருக்கும் தோற்றத்தையும் வச்சிராங்கத பாண்டியன் பார்த்து, ‘என்னுடைய பாவப்பிணிப்பு அடியோ டறுபடுங் காலம் இன்றைக்கு வந்துற்றது,’ என்றுரைத்து உடனே சிவபெருமானுடைய பாதங்களை நோக்கி வீழ்ந்து வணங்கி யெழுந்து கைகட்டி வாய்பொத்தி மிகுந்த பயபக்தியுடனே ஸ்தோத்திரஞ் செய்யத் தொடங்கினவனாய் அவருடைய சன்னிதானத்தை நோக்கி, “அண்ணாமலை யென்னும் பெயரையுடையவரே! இளமையாகிய விருஷபவாகனத்தையுடையவரே! அழகுள்ள சடையில் குளிர்ந்த கங்கையைத் தரித்தவரே! என்னை அடிமைகொள்ளும் மூர்த்தியே! நெற்றிக்கண்ணுடையவரே! மயக்கமுடையவர்களும், பாவங்களைக் கடக்காதவர்களுமாகிய பாவிகளா லறியப்படாத கைலாயத்தி லிருப்பவரே! உண்ணாமுலையாகிய பார்வதியின் தலைவரே! தீவினையுடையேனாகிய நான் உம்மை மதியாமல் குதிரைமே லேறி இக்கிரியைச் சுற்றிவந்ததனால் மிக்க துன்பத்தை யடைந்தேன்; அறியாதவனாகிய அடியேன் செய்த

அக்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்,'' என்று பல வாறு துதித்தான்.

பொய்யில்லாதவனாகிய வச்சிராங்கதபாண்டியன் இவ்வாறு வணக்கத்துடன் துதிக்கவே, சிவபெருமான் அவனுடைய துதிக்கிரங்கி அவன்மேல் மிகுந்த பக்ஷமுடையவராய் அவனை நோக்கி, ''வச்சிராங்கதபாண்டியனே! நீ குதிரைமேலேறிக் கிரிப்பிரதக்ஷணஞ் செய்ததாகிய குற்றத்தைச் செய்திருந்தாலும் இப்போது நமக்கு மிகுந்த பக்தனாய்விட்டபடியினாலே அக் குற்றத்தை மன்னித்து உனக்கு நல்வரங் கொடுக்க மனமிசைந்தோம்; நீ பூர்வஜென்மத்தில் தேவேந்திரனாயிருந்தாய்; அப்படி யிருக்குங்காலத்தில் நம்மை மதியாமல் அலக்ஷியஞ் செய்து நம்மீது வச்சிராயுதத்தைப் பிரயோகித்தாய்; அப்பாவத்தினாலே பூலோகத்தில் மானிடனாகப் பிறந்து இவ்வாறு துன்பத்தை யடைந்தாய்; ஆயினும், இப்போது நீ நமக்குச் செய்த பூசனையால் அப்பாவமும் நீங்கிவிட்டது; ஆகையால், இனி இந்த மானிடதேகத்தைவிட்டு மீண்டும் தேவசரீரம் பெற்றுத் தேவர்க்கிறைவனாகிப் பொன்னுலகஞ் செல்லக்கடவாய்,'' என்று வரங்கொடுத்து மறைந்தருளினார். அதன்மேல் வச்சிராங்கதபாண்டியன், சிவபெருமான் வரங்கொடுத்தபடியே இவ்வுலகத்தை விட்டு நீங்கி உம்பர் நாயகனாகிச் சுவர்க்கலோகம் சேர்ந்தான்.

அருணாசலத்தின் மகிமையோ இத்தன்மையுடையதாகும்; இத்தலத்தை நினைப்பவரும், மரணவாதனை யடையாமல் சிவனுடைய ரூபத்தைப் பெறுவார்கள்; நாள்தோறும் திரிகாலத்திலும் இக்கதையைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் சிவகதியிற் சேர்வார்கள்; இக்கதையில் ஓரெழுத்தை ஓதினவர்களும் கூட சிவசாயுச்சிய மடைவார்கள்; இவர்களே இங்ஙன மடைவார்களென்றால், மேற்கூறியபடி இக்கதையைத் தினந்தோறும் முக்காலத்திலும் படிப்பவரும் கேட்பவரும் சிவகதி பெறுவார்களென்பது ஆச்சரியமோ?''



என்று சொல்லி முடித்தார். நந்திதேவர் இவ்வாறு கூறி முடித்தவுடனே, எமனை வாடும்படிச் செய்த தவமுடையவராகிய மார்க்கண்டேயர் அவரை நோக்கி, ''கிருபைக்கடலே! இன்று உம்மால் இக்கதையைக் கேட்டபடியினாலே நான் புண்ணியமுடையவனானேன்; இனி இப்பலனால் பரகதியையும் அடைவேன்,'' என்று கூறி அவருடைய பாதத்தில் விழுந்து வணங்கினார்.

ஆறாவது
வச்சிராங்கதபாண்டியச் சருக்கம்
முற்றுப்பெற்றது.

---

ஏழாவது
## வல்லாளமகாராச சருக்கம்.

முன் சருக்கத்திற் கூறியபடி வச்சிராங்கதபாண்டியனுடைய சரித்திரத்தைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து நந்திதேவரைத் துதித்து வணங்கிய மார்க்கண்டேயர் மீண்டும் அவரை நோக்கி, ''சுவாமி! இன்னும், அருணாசலத்தின் மகிமையைப்பற்றிய சரித்திரங்களைக் கூறியருளவேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டனர். அவ்வாறு தெரிவிக்கவே நந்திதேவர் அவர் விருப்பத்திற் கிணங்கி, அருணாசலத்தின் மகிமை விளங்குவதாகிய வல்லாளமகாராஜன் சரித்திரத்தைச் சொல்லத்தொடங்கினவராய் அந்த மார்க்கண்டேயரை நோக்கி, ''முனிவரே! இப்போது உமக்கு வச்சிராங்கதபாண்டியனுடைய சரித்திரத்தை யெடுத்துக் கூறினேன்; இனி வல்லாளமகாராஜனுக்குச் சிவபெருமான் பிள்ளையாக வந்த சரித்த கதையையுங் கூறுகிறேன் கேட்பீராக:

மாணிக்கம், மரகதம், வயிரம், வைடூரியம், கோமேதகம், புட்பராகம், இந்திரநீலம், முத்து, பவளம் என்னும் ஒன்பதுவகை இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகளும், ஆகாயத்தையளாவி உயர்ந்து திக்திப்பாகிய

கனிகளை உதிர்க்கும் தருக்களும், மலர்ச்சோலைகளும் நிறைந்திருக்கப்பெற்றதும், அருந்ததிக் கொப்பான கற்பும் பொற்பும் வாய்ந்த உத்தமஸ்திரீகள் வாசஞ்செய்யக்கூடியதுமாகிய அருணைப்பதியிலே முற்காலத்தில் வல்லாளனென்னும் அரசன் செங்கோல் நடாத்திவந்தான். அவன் எப்பேர்ப்பட்டவனெனில், மிகுந்த சத்திய வாக்கியம் பொருந்தியவன்; உலகத்திலுள்ள சகல வுயிர்களையும் தன்னுயிர்போலக் கருதிப் பாதுகாப்பவன்; அக்கினி வமிசத்தி லுதித்தவன்; (அதாவது சேரகுலத்தினன்) ஜெகதீசனாகியபரமசிவக்கடவுளுடைய தாமரைமலர்போன்ற இரண்டு பாதங்களையும் தினந்தோறும் திரிகாலத்திலும் துதிசெய்பவன்; அக் கடவுளுடைய திருப்பணி புரிவதற்கே ஜென்மமெடுத்தவன்; பிறர் பொருள் மீது இச்சை கொள்ளாதவன்; தன் மனைவியர் தவிர மற்ற பெண்களைத் தாய்மார்களாகவும், தமக்கையர்களாகவும், தங்கையர்களாகவும் கருதும் இயற்கையுடையவன்; குடிகளிடத்தில் அன்புடனே ஆறிலொரு கடமை வாங்கும் தருமகுணமுடையவன்; கறைமிடற் றண்ணலாகிய அருணாசலேசுரருடைய ஆலயத் திருப்பணியை மனக்களிப்போடு நடத்தும் மேன்மை யுடையவன்; எப்பொழுதும் மனத்தை விட்டகலாத சிவபக்தியை யுடையவன். இவனுடைய ஆஞ்ஞையால் புலியும் பசுவும் ஒரு துறையிற் சேர்ந்து சந்தோஷத்துடன் நீர் பருகிப் பகையின்றி யுறவுபூண்டு விளையாடும்; வேதாகமங்களை யுணர்ந்து, மற்றையர்க் குபதேசிக்கும் அந்தணர்கள் செய்யும் வேத பாராயணத்தை அந்நகரத்திலுள்ள யாவரும் பக்தியுடனே கேட்பார்கள்; ஆதியானவராயும், ஒப்பற்றவராயும் விளங்கும் கடவுளாகிய அருணாசலேசுரருடைய திருவருளைப் பெறும்பொருட்டு, அந்நகரத்திலுள்ள ஆடவர்கள், வீதிகடோறும் வரிசைவரிசையாக மகரதோரணங்களையும், மாவிலைத் தோரணங்களையும், விருஷபத்துவஜங்களையுந் தூக்கிக்கட்டிப் பரிமளமிகுந்த புஷ்பங்களால் அலங்காரஞ் செய்வார்கள்; மங்கையர்கள், வாசனை கலந்த ஜலத்தைத் தெளித்து, விசித்திரமாகிய கோலங்களை யிடுவார்கள்; இன்னும் அவ் வருணையம்பதியைச் சேர்ந்த நாட்டில் மாதமும் மாரி தவறாமற் பொழிய, எந்நாளும் குறையாது பயிர்கள் செழிப்புற்று வளர்ந்து விளையும்; அந்நகரத்தில் யாவரேனும் பசித்து வருவார்களாயின், அங்குள்ளவர்கள் அவர்களைப் பிரிய வசனத்தோ டழைத்து, உபசரித்து, கைத்தல், புளித்தல், கார்த்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல் என்னும் அறுசுவைகளோடு கூடிய உணவை அவர்களுக்குத் திருப்தியாக அளிப்பார்கள்; பின்னும் தவத்திற் சிறந்தவர்கள் வரின், அவர்கள் சொற்படியே அவர்களுக்குரிய குற்றேவல்களைப் புரிந்து, அவர்கள் விரும்பிக்கேட்ட வஸ்துக்களையெல்லாம் குறைவில்லாமல் கொடுத்து, அவர்களுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வார்கள்; இஃதன்றி, ஸ்ரீ அருணாசலேசுரருடைய ஆலயத்தில் எங்கும் பிரகாசிக்கும்படி திருவிளக்குகளேற்றி அக்கடவுளை என்றும் பக்தியுடனே பூசித்து வருவார்கள்.



இவ்வாறு அந்நகரத்து மாந்தர்கள் நடக்கும்படி தன் ஆஞ்ஞையைச் செலுத்தி மேற்கூறிய குணங்களுடன் வல்லாளமகாராஜன் அரசு புரிந்துவருங் காலத்தில் அவனுக்கு எல்லாச் சிறப்புக்களும் அமைந்திருந்தும் புத்திரபாக்கியமொன்றுமாத்திர மில்லாமலிருந்தது. அதனால் அவன் ஒரு தினம் விசனமுற்றுத் தனித்திருந்து, "ஆண்டவனருளால் நமக்கு எல்லாச் சிறப்பும் பொருந்தியிருந்தும் நாம் கையினாலெடுத்தணைத்து உச்சிமோந்து முத்தமிடவும், இனிய மழலைச்சொற்களைக் கேட்டானந்திக்கவும், பிற்காலத்தில் நம் பெயரை விளக்கவும் புத்திரபாக்கிய மில்லாமற்போயிற்றே" என்று வருந்தி உடனே தன் மந்திரிகளை யழைத்து, அவர்களை நோக்கி, "அமைச்சர்களே! நான் சகல செல்வங்களையுமுடையவனா யிருந்தும், புத்திரனில்லாப் பாவியா யிருக்கின்றேன்; புத்திரனற்ற இல்வாழ்க்கையால் என்ன பயனுண்டாகும்? எத்தகைய சிறப்புடையவனாயினும் புத்திரனில்லாதவனுக்கு நற்கதி கிடைக்கமாட்டாதென்று சாஸ்திரங் கூறு

கின்றதே; அதன்படி சந்ததியற்ற எனக்கு உயர்பதவி கிடைக்கமாட்டாதே; நான் என்செய்வேன்; நான் இங்ஙனம் பிள்ளையில்லாப் பாவியாவதற்கு என்ன பாவத்தைச் செய்தேனோ; ஜெகதீசனாகியும், உமாநாயகனாகியும் நம்மை ஆட்கொள்ளும்பொருட்டு எழுந்தருளியிருக்கும் அருணாசலேசுரருக்கு அடியேனாற் செய்யப்பட்ட பூசனையில் ஏதேனும் குறைவுண்டோ; நான் நடத்திய மனுநீதியில் ஏதேனும் மாறுபாடுண்டோ; அல்லது நங்கடவுளுக்கு அருச்சனை செய்யும்பொருட்டுக் கொய்தமலர்களில் ஏதேனுங்குறைவுண்டோ; எனக்கொன்றும் விளங்கவில்லை; இனி யான் எப்படியேனும் புத்திரபாக்கிய முண்டாவதற்கு வழியைத் தேடவேண்டும்; இதற்கென்ன செய்யலாம்? நீங்களெல்லோரும் ஆலோசித்து எனக்கொரு யோசனை சொல்வீராக," என்றுரைத்தான்.

அவன் இவ்வாறு கூறியவார்த்தைகளைக் கேட்டு மந்திரிமார்கள், அவனுடைய மனந்தேறும்படி அவனை நோக்கி, "எங்களிறைவரே! நீர் இதைப்பற்றி மனங் கலங்கவேண்டாம்; நம்மை ஆட்கொள்ளும்பொருட் டெழுந்தருளியவரும் சகலபுவன கர்த்தாவும், சர்வாந்தரியாமியும், திரிநேத்திரமுடையவரும், அடியார்களுடைய இருதயத்தில் குடிகொண்டிருப்பவருமாகிய அருணாசலேசுரரைத் தரிசிக்கும்பொருட்டு நம்பதியை நாடிவரும் ஆதுலர், அந்தணர், சாதுக்கள் முதலியவர்கள் எதைக் கேட்டபோதிலும் அதை இல்லையென்னாமல் அவர்களுக்கு உள்ளன்போடு உதவுவோமாயின் அந்த ஈசுரனுடைய கிருபாகடாக்ஷத்தினாலும், மேற்கூறியவர்களுக்குப் பொருளீயும் புண்ணிய விசேஷத்தினாலும் உமக்குப் புத்திரனுண்டாவன்," என்றுரைத்தார்கள். அப்படியுரைத்தவுடனே வல்லாளமகாராஜன் அவ்வாறே செய்தற்கிசைந்து, அம்மந்திரிகளை நோக்கி, "புத்தியிற் சிறந்த அமைச்சர்களே! நீங்கள் கூறியது மிகவும் உத்தமமான செய்கை; அவ்வாறே செய்வோம்; நீங்கள் இப்பொழுதே சென்று எவ்வளாளரையழைத்து அவரால், 'ஸ்ரீ அருணாசலேசுரரெழுந்தருளி



யிருக்கும் இப்பதியின்கண் வந்தவர்கள் விரும்பிக் கேட்ட பொருள்களையெல்லாந் தடையின்றிக் கொடுப்போம்; நற்றவர்களே! அந்தணர்களே! ஆதுலர்களே! விரைந்து வாருங்கள்,' என்று கையினா லழைப்பதுபோல ஆகாயம்வரை யுயர்ந்து பட்படவென் றசைந்தாடும்படி தானக்கொடியை நாட்டி, என்பெயர் எங்கும் சிறக்கும்பொருட்டு, இவ் விசேஷத்தைக் கூறி இடியும் வெட்கும்படியான பேரொலியையுடைய முரசத்தை முழக்கும்படிச் செய்வீராக," என்று கூறினான்.

அப்போது மந்திரிமார்கள் அரசனைப் பார்த்து, "நெடிய கடல்சூழ்ந்த இப்பூவுலகமெங்கும் கீர்த்தியைப் பரப்பிய எங்க ளரசரேரே! நாங்கள் கூறியபடியே நீரும் செய்வதற்கிசைந்து முரசறைவிக்கும்படி கட்டளையிட்டுவிட்டீர்; அதில் கவனிக்கத்தக்க விஷயமொன் றிருக்கின்றது; நாங்கள் அதைப்பற்றி யோசிக்காமல் கூறிவிட்டோம்; பிறர் கேட்டதையெல்லாந் தருவதாக நாம் முரசறைந்துவிடுவோமானால், அவர்கள் எதைக் கேட்டபோதிலும் அவ்வாறு கேட்டதைக் கொடுக்கக் கட்டுப்பட்டவர்க ளாய்விடுவோம்; அப்படி நாம் கட்டுப்பட்டுவிட்டால் வந்தவர்கள் கேட்டவைகளை யெல்லாம் கொடுத்தே தீரவேண்டும்; அவ்வாறு இங்கே வரும் சிவனடியார்களும் தபசிகளும், பாவலர்களும் கேட்டதையெல்லாம் நம்மால் அவர்களுக்குக் கொடுக்கமுடியுமோ? நமக்கிங்கே கிடைக்காத வஸ்துக்களை அவர்கள் கேட்டால் நம்மால் எவ்வாறு கொடுக்கமுடியும்? இதைப்பற்றிச் சற்றுயோசித்து முரசறைவிக்கவேண்டும்," என்று கூறினார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே வல்லாளமகாராஜன், "மந்திரிகளே! நாம் இவ்விஷயத்தை ஆரம்பத்தில் எப்படிப் பேசினோமோ அப்படியே செய்யவேண்டும்; இனி அதில் எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது; இங்கே வருபவர்கள் இவ்வுலகத்திலுள்ள பொருள்களையே கேட்பார்கள்; இவ்வுலகிலில்லாத பொருள்களை அவர்கள் கேட்பதற்கும் நாம் கொடுப்பதற்கும் நியாயமில்லை; நாம், கேட்ட பொருள்

களை யெல்லாங் கொடுப்போமென்றால் அப்பொருள்கள் நாம்
வசிக்கும் உலகத்திலுள்ள பொருள்கள்தாமென்பது சொல்
லாமலே விளங்கும்; ஆதலால், நீங்கள் இதைப்பற்றிச் சிறி
தும் யோசிக்கவேண்டாம்; இவ்வுலகத்திலுள்ள பொருள்
களில் எதை அவர்கள் கேட்டபோதிலும் அதை நம்மால்
கொடுக்கமுடியும்; தாமதமின்றி நீங்கள் சென்று நான்
சொன்னபடியே செய்வீராக,'' என்று கட்டளையிட்டான்.
உடனே மந்திரிகள் சென்று ஏவலாளரை யழைத்து அவர்க
ளால் தானத்திற் கறிகுறியான துவஜத்தை நாட்டுவித்து,
மேற்கூறியபடி, 'அடியார் கேட்ட வஸ்துக்களை யெல்லாந்
தருவோம்,' என்ற வார்த்தையைக் கூறி முரசத்தை முழக்
கும்படிச் செய்தார்கள்.

இவ்வாறு கொடி நாட்டி முரசறைவித்தவுடனே அதனை
யறிந்து, 'ஸ்ரீ அருணாசலேசுரர் வாழும் அருணையம்பதி
யின்கண்ணே வல்லாளமகாராஜன், பிறர் கேட்டதை யெல்
லாந் தருவதாகத் தருமக்கொடி நாட்டி முரசறைவித்திருக்
கின்றான்,' என்று பலர் சொல்லக் கேட்டுத் தானம் பெறும்
பொருட்டு நெடிய கடல்சூழ்ந்த பூவுலகத்திலிருக்கும் விருத்
தர், பிராமணர், தபோதனர், * சோகி, சங்கமர்கள், கழைக்
கூத்தர், பாவாணர்கள், அங்கஹீனர்கள், மற்ற யாசகர்கள்
முதலிய எல்லோரும் கூட்டங் கூட்டமாக வந்து தங்கள் தங்
கள் வறுமை நீங்கும்படி வல்லாளமகாராஜனிடம் வேண்டி
யவைகளைப் பெற்றுக் குறைவின்றி மகிழ்ச்சி யடைந்தார்கள்.
வல்லாளமகாராஜன் இங்ஙனம் இவர்களுக்குப் பொருள்
கொடுத்து வறுமையை நீக்கியதுமன்றி, விவாகஞ் செய்து
கொள்ளப் பொருள் வேண்டுமென்று வந்து கேட்டவர்களு
க்கு, அவர்கள் மனந் திருப்தி யடையும்படி ஆயிரக் கணக்
கான பொன்னைக் கொடுத்தும், ஆபரணம் மண் மனை முதலிய
வற்றைக் † குதுவை வைத்து அவை கடனுக்குள் மூழ்கிப்
போவது தெரிந்து வருந்தி அவற்றை மீட்கும்பொருட்டு
வந்து பொருள் கேட்பார்க்கு இரண்டாயிரக் கணக்கான

* சோகி - பிடாரன். † குதுவை - அடைவு.



பொன்னைக் கொடுத்துதவியும், உபநயனம் நடத்தும்பொரு
ட்டு வந்து பொருள் கேட்கும் வேதாகமங்களை யுணர்ந்த
பெரியோர்களாகிய அந்தணர்களுக்கு முந்நூற்றுக்கணக்
கான பொன் கொடுத்தும், 'ஸ்ரீ அருணாசலேசுரர் எழுந்
தருளியிருக்கும் கோவிலுள் நவமணிகளாலும் சந்திரகாந்தக்
கற்களாலும் அமைக்கப்பட்டுப் பிரகாசம்பொருந்தியிருக்கும்
மண்டபங்களும், சூரியனும் ஒதுங்கிப்போகும்படி ஆகாயத்
தை யளாவி மேகமண்டலம்வரை உயர்ந்திருக்கும் மதில்
களும் * இலப்பட்டிருப்பதால் அவைகளைத் திருத்தஞ் செய்
யப் பொருளுதவி செய்யவேண்டும் மன்னரேறே,' என்று
வந்து கேட்டவர்களுக்கு மிக்க பக்தியோடு இருபதினாயிரக்
கணக்கான பொன்னைக் கொடுத்து அத்திருப்பணியை நிறை
வேற்றி வைத்தும், அழிவடைந்த மடங்களைப் புதுப்பிக்க
வேண்டி வந்து பொருள் கேட்டவர்களுக்கு ஐம்பதினாயிரக்
கணக்கான பொன் கொடுத்துதவியும் அவர்களை மகிழும்
படிச் செய்தான்.

இங்ஙனம் வல்லாளமகாராஜன், கண்ணில்லாதவர்களுக்
கும், சங்கமர்களுக்கும், கைகா லற்றவர்களுக்கும், சோகி
கட்கும், முன்வினைப்பயனாக வெவ்விய ஆபத்து நேர்ந்து வந்த
வர்களுக்கும், மிக்க தரித்திரமென்னும் பிணியால் உடல்
மெலிந்து மனம் வருந்திவந்த † ஆதுலர்க்கும், பின்னுமுள்ள
யாசகருக்கும் அவர்கள் விரும்பியவண்ணம் எப்போதும்
உதவி செய்துகொண்டிருக்கும் விசேஷத்தை நாரதமுனிவர்
கேள்விப்பட்டு, அந்த வல்லாளமகாராஜனைப் பார்க்க விரும்பி
ஒரு தினம் அவனிடம் மிகுந்த கருணையுடனே சென்றார்.
அங்ஙனஞ் சென்ற மாத்திரத்தில் வாயில் காப்போன் அவ
ருடைய வரவை அரசனுக்கறிவிக்க உடனே அவ்வரசன் மிக
வும் பக்தியுடனே சிம்மாதனத்தைவிட்டெழுந்து மந்திரி
‡ சேர்வைக்காரர் முதலியவர்கள் புடைசூழ எதிர் சென்று
அந்த நாரதர் பாதங்களில் வீழ்ந்து பணிந்து, 'அடியேமாகிய

* இலம் - அழிவு. † ஆதுலர் - தரித்திரர். ‡ சேர்வைக்காரன் -
சேனைத்தலைவன்.

எங்களை யாட்கொள்ளும்பொருட்டுத் திருவருள் சுரந்து இங்கெழுந்தருளி வந்த மாதவரே! புண்ணியப்பொருளே!' என்று அவரை நோக்கித் துதித்துப் பேரானந்தத்துடனே கொலுமண்டபத்திற் கழைத்துச்சென்று, பிரகாசம் பொருந்திய இரத்தினங்களாற் செய்யப்பட்ட பொற் பீடத்தில் அவரை உட்காரச்செய்து பின்னர் மிக்க விசுவாசத்துடனே அவரை நோக்கி, "சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவருடைய தபோமகிமையா லவதரித்து, சகல வேத சாஸ்திரங்களையு முணர்ந்து, அழகிய தாமரைபோன்ற கரத்தில், வீணையைக் கொண்டு கானஞ்செய்யும் மேன்மை பொருந்திய முனி சிரேஷ்டரே! நாயினுங் கடையனாகிய இப்பேதைமீது கருணை வைத்து, இங்கே தாங்கள் எழுந்தருளி வந்ததற்கு நேர்ந்த காரணமியாது? அருள்செய்து அடியேனுக் கதனைக் கூற வேண்டும்," என்று வினவினன்.

அதைக்கேட்ட நாரதமுனிவர், வல்லாளமகாராஜனைப் பார்த்து அன்புடனே, "இந்தப் பூவுலகின்கண்ணே மகிமை பொருந்திய முனிவர்களும் புகழத்தக்க ஐம்புல நுகர்ச்சிகளையும் நீக்கி, மாயையை வென்ற மௌனிகளாகிய ஞானிகள் உயர்வாகச் சொல்லுகின்ற சந்திரன், சூரியன், அக்கினியென்னும் மூவரையுஞ் சார்ந்த முக்குலத்தரசர்களுள் முதன்மைபெற்ற * வன்னிகுலத்தி லுதித்த அரசனே! நீ குற்றமற்ற தானஞ் செய்வதில் சிறந்தவனா யிருப்பதாகக் கேள்வியுற்று அந்தத் தானத்தின் பெருமையை நேரிற் கண்டு மகிழ்ச்சி யடையும்பொருட்டும் உன்னுடைய உள்ளக்கருத்தை யறிந்து உனக்குதவி செய்யவும் இங்கு வந்தேன்; நீ எதைக் குறித்து இவ்வாறு தானஞ் செய்துவருகின்றாய்? உன் விருப்பத்தை வெளிப்படுத்துவாயாக," என்றுரைத்தார். அதன்மேல் வல்லாளன் அம்முனிவரிடத்தில், "வேதசாஸ்திரங்களை யுணர்ந்த முனிவர்கள் புகழத்தக்க மகா தபோபலமுடைய நாரதமுனிவரே! இந்த ஏழையினுடைய ஆளுகை

* வன்னி-அக்கினி.



யைப் பிற்காலத்தில் தாங்கிக்கொள்ளவும், என்னுடைய பெயரை விளங்கும்படிச் செய்யவும், எனக்கு நற்கதியைக் கொடுக்கவும் ஒரு புத்திரனில்லாமையால் மனம் வருந்தி அக்குறை நீங்கும்பொருட்டுப் பூங்கூந்தலையுடைய உமையின் பாகனாகிய ஸ்ரீ அருணசலேசுரரின் அடியார்கள் விரும்பிக் கேட்டவைகளை யெல்லாம் இல்லை யென்னாமற் கொடுக்கும் நியமம் பூண்டு தருமக்கொடி நாட்டி, அவ்வாறே சிவனடியார் விரும்பியவைகளை யெல்லாம் தடையின்றிக் கொடுத்து அவர்களை மகிழ்வித்து வருகின்றேன்; இதனால் என் குறைவு நீங்குமோ நீங்கமாட்டாதோ; நம்மை யாட்கொள்ளும் சிவபெருமானுடைய திருவுள்ளக்கருத்தியாதோ யானறியேன்," என்று கூறினான்.

அப்போது, நாரதமுனிவர் அம்மன்னன்மீ திரக்கமுற்று அவனுடைய முகவாட்டம் நீங்கும்படி அவனை நோக்கி, "தரும குணத்திற் சிறந்த வல்லாளமகாராஜனே! உலகத்தில் இரப்பவர்களுக் கில்லையென்னாமல் அவர்கள் விரும்பும் பொருள்களை யெல்லாங் கொடுத்து, முப்பத்திரண்டறங்களையுந் தவறாமல் நடத்திவருபவர்கள் நிச்சயமாகப் புத்திரபாக்கியத்தை யடைவார்களென்று மேன்மைபொருந்திய தரும சாஸ்திரங்கள் கூறுவதல்லாமல் வேதவிதி யுணர்ந்த பெரியோர்களுங் கூறுவார்கள்; நீயோ அத்தகைய அறங்களைக் குறைவின்றி நடத்திவருகின்றாய்; ஆதலால், கங்கையையுஞ் சந்திரனையுஞ் சடையிற் றரித்து, எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவபேதங்களைப் படைத்துக் காத்தருளும் பரமசிவக்கடவுளுடைய கிருபாகடாட்சத்தினாலே நீ மக்கட்பேற்றை யடைவாய்," என்று கூறி ஆசீர்வதித்து அவனிடம் விடைபெற்றுக்கொண்டு அவனுடைய செய்கையைச் சிவபெருமானிடந் தெரிவிக்கக் கருதிக் கைலையங்கிரிக்குச் சென்றார்.

அவ்வாறு வல்லாளமகாராஜனுடைய நன்மார்க்கத்தையும், தரும பரிபாலனத்தையும், [illegible]லையங்கிரியில் எழுந்தருளியிருக்கும் பார்வதி சமேதராகிய ப[illegible]க்கடவுளுக்

குத் தெரிவிக்குங் கருத்துக்கொண்டு சென்ற தவத்திற் சிறந்தவராகிய நாரதமுனிவர், கைலையங்கிரியை யடைந்து அநேகம் சிவகணங்கள் சூழ்ந்து அடி பணிந்து துதித்து நிற்க, கோவில் வாயிலிற்றங்கி, அவர்களுக்குக் கட்டளை விதித்துக்கொண்டிருந்த நந்திதேவரை முதலிற் பணிந்து, அவரனுமதிபெற்று, ஆலயத்திற்குட் புகுந்து, மகா தபோதனர்களும், தேவர்களும், முனிவர்களும், புடைசூழவும், உமாதேவி இடப்பாகத்திற் றங்கிப் பிரகாசிக்கவும் கொலுவீற்றிருந்த சிவபெருமானுடைய திருக்கோலத்தைக் கண்டு அவரடியிற் சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்தெழுந்து, அவரைத் துதித்துப் பின்னர் மிகுந்த பக்தியுடனே அக்கடவுள் சன்னிதானத்தை நோக்கி, "பிரகாச மிகுந்த கைலையங்கிரியில் எழுந்தருளியிருந்து அடியார்க்கருளுந் தேவதேவனே! உம்முடைய உபயசரணங்களுக்கு வந்தனம்; பூவுலகத்தில் ஒரு விசேஷத்தைக் கண்டு அதனை உம்முடைய சன்னிதானத்தில் தெரிவிக்கும்பொருட்டே இப்போதிங்கு வந்தனன்; அதனைக் கூறுகின்றேன் கிருபை செய்து கேட்டருளவேண்டும்: மண்ணுலகத்தில் மிகவும் உயர்ச்சியுற்று விளங்கும் அருணையம்பதியில் வல்லாளனென்னுமரசன் அரசுசெலுத்தி வருகின்றான்; அவனே நன்மார்க்கத்தையே எப்போதும் வளர்ப்பவன்; சத்தியத்தைக் கைவிடாதவன்; செங்கோன் முறை பிசகாதவன்; பாவமாகிய இருளைப் போக்கும் தருமகுணமாகிய பிரகாசமே ஓருருக்கொண்டு வந்தாற்போல உலகில் வதரித்தவன்; பூமியில் வாழும் உயிர்களையெல்லாம் தன்னுயிரைப்போலக் கருதிப் பக்ஷத்துடனே காப்பவன்; அடியார்க் கெளியன்; ஆதிகடவுளாகிய உம்முடைய பாதகமலங்களில் எக்காலத்தும் மனத்தைச் செலுத்தி உம்மைப் பணிந்து துதித்து வாழ்ந்துவரும் மெய்த் * தொழும்பன்; இத்தகைய நற்குணங்களையுடைய இவன், புத்திரபாக்கியத்தை யடையவேண்டுமென்னும் நோக்கமுடையவனாய், அதன்பொருட்டு உம்முடை அடியார் கேட்ட பொருள்களை

* தொழும்பன்-அடிமையாள்.



யெல்லாம் தருவதாகத் தருமக்கொடி நாட்டி முரசறைவித்து, அதன்படியே தன்னிடம் வந்த அடியார் விரும்பியவற்றையெல்லாங் கொடுத்து வருகின்றான்; நீர் அவசியம் அவனிடம் சென்று அவனுடைய பக்தியைச் சோதித்தறிந்து, அவனுக்குக் கிருபை செய்யவேண்டும்," என்று கூறினார்.

அங்ஙனம் நாரதமுனிவர் கூறவே, சிவபெருமான் வல்லாளமகாராஜனுடைய நற்குணங்களையெல்லாங் கேட்டு அவர் கூறியபடி அவனுடையபக்தியைச் சோதிக்கக்கருதி உடனே நாரதமுனிவரை நோக்கி, "முனிவ! நாம் அவ்வாறே செய்வோம்; நீ செல்வாயாக," என்று அவருக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுப் பின்னர் தம்மைத் துதித்துக்கொண்டு நிற்கும் முனிவர்களையும், மற்றத் தேவர்களையும் தங்களிருப்பிடம் போய்ச் சேரும்படி கட்டளையிட்டனுப்பி அதன்மேல் தம்முடைய தோழனும், அளகைக் கதிபனுமாகிய குபேரனை யழைத்து வரும்படி சில கணங்களுக்குக் கட்டளையிட்டனர்; அந்தச் சிவகணங்கள் உடனே சென்று குபேரனிடம் சிவபெருமான் கட்டளையைத் தெரிவித்தார்கள். அவ்வாறு தெரிவிக்கவே, எண்டிசையும் போற்றுகின்ற பெருமையையுடைய அக்குபேரன், அளவிறந்த பொருள்களோடு புறப்பட்டு * அக்குமணிகளையும் சர்ப்பங்களையும் ஆபரணங்களாக வணிந்த சிவபெருமானிடம் வந்து அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவரைப் போற்றிப் பக்கத்தில் நின்றான். அப்படி நிற்கும்போது செவ்வானம் போன்ற தேககாந்தியையுடைய பரமசிவக்கடவுள் அக்குபேரனை நோக்கி, "அளகாபுரிக் கிறைவனே! பூவுலகத்துள்ள அருணையம்பதிக்கிறைவனான வல்லாளமகாராஜனுடைய பக்தியைச் சோதிக்கும்பொருட்டு நாம் சங்கம வடிவங்கொண்டு அங்குச் செல்லுங் கருத்துக்கொண்டிருக்கின்றோம்; ஆதலால், நீயும் நமக்குச் சிறந்த சீடனாக வடிவெடுத்து, அளவற்ற பொருள்களோடு நம்முடனே வரவேண்டும்," என்று கூறினர். அவனும் அவ்வாறே செய்வதாகச் சம்மதித்தான்.

* அக்குமணி - சங்குமணி.

அதன்மேல், கைலாயபதியாகியும், திரிநேத்திரமுடையராகியும், உமாமகேஸ்வரியைத் தம்முடைய தேகத்தில் ஒரு கூறாகக் கொண்டவருமாகிய பரமசிவன், விஷ்ணுவும் பிரமனுங் கண்டு மனத்தில் ஒருநாளு மேற்படாத மகிழ்ச்சி கொண்டு போற்றவும், தேவர்கள் மலர்மாரி சொரியவும், வேதாகமங்களை யுணர்ந்த முனிவர்கள் துதிக்கவும் சங்கமராக வடிவெடுத்தார். அவ்வாறு அவர் சங்கமவடிவங் கொண்ட மாத்திரத்தில் கைலையங்கிரியில் வாசஞ் செய்துகொண்டிருக்கும் சிவகணங்களெல்லோரும் ஆண்டிகளாயினார்கள்; குபேரனும் சிவபெருமானாகிய சங்கமர்க்குச் சீடனாயினான். இவ்வாறு எல்லோரும் சங்கமர்களாக வடிவங்கொண்ட பின்னர் சிவபெருமானாகிய சங்கமரும், மற்றவர்களும், உலகத்தில் இணையில்லாக் கீர்த்தியை அடைந்து விளங்கும் வல்லாளமகாராஜன் தங்கியிருந்த அருணையம்பதியை நோக்கிச் சென்றார்கள்.

அப்படி அவர்கள், சென்று அருணையம்பதியைச் சேர்ந்தமாத்திரத்தில் பசியினால் வருந்தியவர்கள்போல நடித்து அவர்களுட் சிலர், 'அருந்ததியைப்போலக் கற்பிற் சிறந்து, தங்கள் தங்கள் கணவர்களையே தெய்வமாகப் பாவித்துச் சிவனடியார்மீ திரக்கமுற்று நடக்கும் தாய்மார்களில் ஒருவரு மிங்கில்லையோ? பெருமை மிகுந்த சத்தியந் தங்கிய மைந்தர்களில்லையோ? அடியார்கள் பசிநேரமறிந்து அவர்களுக் கன்னங்கொடுப்பா ரில்லையோ? மனுநீதி தவறாத அரசர்களில்லையோ? பக்தியுடனே எங்களை யழைத்துச் சென்று அன்னமிட் டுபசரிக்கும் தனவந்தர்க ளில்லையோ?' என்று கூறிக்கொண்டே தெருக்களில் நடந்தார்கள்; சிலர், 'நாங்கள் செம்பொன்னையும் விரும்போம்; இரத்தினங்கள் பதிக்கப்பெற்றுப் பிரகாசிக்கும் ஆபரணங்களையும் விரும்போம்; பிரகாசமிகுந்த இரத்தினங்களையும் விரும்போம்; முத்துமாலைகளையும் வேண்டோம்; அரசர்கள் அரசாட்சியைக் கொடுத்தபோதிலும் விரும்போம்; எவரேனும் அன்புடனே அறுசுவை பதார்த்தங்களோடு கூடிய அன்ன மளிப்பார்களாயின்



அதைமாத்திரம் விரும்பி யுண்ணுவோம்,' என்று சொல்லி நடந்தார்கள்.

இப்படிப் பலரும் பலவிதமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு செல்ல, அவர்களுடனே சங்கமராகச் சென்ற சிவபெருமான் கொடிய பசியினால் வருந்திப் பலவீதிகளிலும் இரப்பவரைப்போல நடித்துச் சென்று முடிவில் கொவ்வைக் கனிபோன்ற இதழினையுடைய பரத்தையர்வீதியிற் புகுந்து, சேற்கெண்டையைப்போன்ற அழகிய விழியையும் கிளிமொழிபோன்ற இனிய வார்த்தைகளையும், பூரணச்சந்திரன் போன்ற முகத்தையும், வாசனை நிறைந்த மலர்மாலையைச் சூடிய கூந்தலையுமுடைய அந்தப் பரத்தையர்களை யழைத்து, "கணிகைமாதர்களே! உங்களுடனே ஒரு புருஷன் ஓரிரவு கூடி இன்பத்தை யனுபவித்தற்கு நீங்கள் பரியமாக வாங்கும் பொன் எவ்வளவு? அதன் விவரத்தைப் பகருவீர்களாக," என்று வினவினார். சிவபெருமானாகிய சங்கமர் இவ்வாறு வினவவே அவர்கள் அவரை நோக்கி, "வெவ்விய விடம் பொருந்திய சர்ப்பங்களை ஆபரணமாக வணிந்த ஸ்ரீ கைலாசபதியாகிய பரமசிவனைப்போல விளங்கும் சங்கமரே! நாங்கள் தாசிகளா யிருந்தாலும் பொய் வார்த்தைகளை எப்பொழுதும் பேசமாட்டோம்; வஞ்சகமாகிய துரோகசிந்தனைகளையுங் கருதோம்; ஆதலால், எங்களுடைய வழக்கத்தை உண்மையாகக் கூறுகிறோம் கேட்பீராக: நாங்கள் ஓரிரவு ஒரு புருஷனோடு கூடியிருத்தற்கு ஆயிரம்பொன் விகிதம் வாங்கிவருவது எங்களுடைய வழக்கம்; இதிற் குறையின் இணங்கமாட்டோம்; தாழ்ந்த வகுப்பினரையன்றி மற்றையருள் எவர் ஆயிரம்பொன் கொடுத்தாலும் அவர்களுக்கு ஓரிரவு மனைவியா யிருப்போம்; ஒருவர்க் கிசைந்தபின் பதினாயிரம்பொன் கொடுத்தாலும் வேறொருவர்க் கிசையோம்; நீர் இப்பொழுது ஆயிரம்பொன் கொடுத்தாலும் மனமும் மெய்யு மொருமிக்க உம்மோடு கூடி இன்றிரவு உமக் கின்பத்தோடு கழியும்படிச் செய்வோம்," என்று கூறினார்கள்.

அவர்கள் இப்படிக் கூறியவுடனே சிவபெருமானாகிய சங்கமர் அவர்களுள் ஒவ்வொருத்திக்கும் ஆயிரம்பொன் விகிதம் கொடுத்து ஒவ்வொருத்தியிடமும் ஒவ்வொரு பண்டாரத்தைச் சேர்த்து அவர்களை நோக்கி, "நீங்கள் இந்தப் பண்டாரங்களை யன்றி இன்றிரவு வேறெவரையும் விரும்பலாகாது; மற்றையர் எவ்வளவு பொன் கொடுத்தபோதிலும் அதனை வாங்கலாகாது," என்று கட்டளையிட்டு அந்நகரில் ஒரு தாசியேனும் தவறாமல் எல்லாரிடத்தும் பண்டாரங்கள் கூடி யிருக்கும்படிச் செய்து அப் பண்டாரங்களை நோக்கி, 'நீங்கள் இன்றிரவு நீங்கி விடியும்வரையிலும் இவர்களைவிட்டு நீங்காதீர்கள்,' என்று கண்சாடை காட்டிவிட்டுப் பின்னர் நன்மார்க்கத்தை யறிந்த தம்முடைய சீடனாகிய அளகேசனோடு அவ்விடத்தினின்றும் புறப்பட்டு இராஜவீதியிற் புகுந்து, வல்லாளமகாராஜனுடைய அரண்மனையை நோக்கிச் சென்றார்.

அவ்வாறு செல்லவே, அவ் வருணையப்பதியை யாள்பவனும், தனுர்வேத மார்க்கங்களெல்லாவற்றையும் பூரணமா யுணர்ந்தவனுமாகிய வல்லாளமகாராஜன் அவரைக் கண்டு அளவில்லா ஆனந்தங்கொண்டு, உடனே பக்தியுடனெழுந்து எதிர்சென்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்து மரியாதையுடனழைத்துவந்து அழகிய நவமணிகளாற் செய்யப்பட்ட பிரகாசமுள்ள சிம்மாதனத்திலெழுந்தருளச்செய்து அஞ்சலியஸ்தனாய் நின்று அவருடைய திருமுகத்தை நோக்கி, "சுவாமி! தம்மை யிங்கெழுந்தருளச்செய்தது, தமியேன் செய்த தவப்பயனோ! அல்லது ஸ்ரீ அருணாசலேசுரர் வாழும் இவ்வருணையம்பதியில் எளியேனாற் செய்யப்பட்ட நற்கிரியைகளின் புண்ணியப்பலனோ! அடியேன் இன்னதென்றறிகிலேன்; பரமசிவக்கடவுளைப்போல வடிவம்பொருந்திய தம்முடைய தங்கமயமான உபயசரணாரவிந்தங்கள் வருத்தமுறும்படி தாம் இங்கெழுந்தருளியதற் கேற்பட்ட காரணமியாதோ? இங்கு அடியேனாலாகவேண்டிய காரியமேதேனு



முண்டோ? அப்படி யென்னாலாகவேண்டிய காரிய மிருக்கும் பக்ஷத்தில் என்னிடம் தெரிவித்தால் உடனே யான் அதனை நிறைவேற்றித் தேவரீருடைய கருணாகடாட்சத்தைப் பெற்றுக்கொள்கின்றேன்; ஆதலால், தம்முடைய உள்ளக்கருத்தை இப்பொழுது வெளியிடவேண்டும்," என்று கூறினான்.

அப்போது சிவபெருமானாகிய சங்கமர் அவனைக் கிருபையுடனே நோக்கி, "இப்பூமண்டலத்தில் மிகவுங் கீர்த்தி பொருந்திய வல்லாளமகாராஜனே! உன்னுடைய அரசும் செங்கோன் முறையும் நீடூழி காலம் வாழ்க; நான் ஒரு காரியத்தை உத்தேசித்து உன்னிடம் வந்தேன்; அதனைக் கூறுகின்றேன் கேட்பாயாக: முல்லை, அசோகு, நீலோற்பலம், மாம்பூ, *தாமரைமலர் என்று சொல்லக்கூடிய பஞ்சபாணங்களையுடைய மன்மதவாதனையால் யான் இப்போது மிகுந்த துன்பத்தை யடைகின்றேன்; ஆதலால், அந்த வாதனையைத் தீர்த்துக்கொள்ளும்படி எனக்கிப்போதொரு போகமாதை நீ உதவவேண்டும்; சிவனடியார்கள் கேட்டனவெல்லாம் நீ தருவதாக நான் கேள்விப்பட்டதனால் இக்காரியமும் உன்னாலாகுமென் றுறுதிபூண் டிருக்கின்றேன்; நீ என்னிச்சைப்படியே இவ்வுதவியைச் செய்வாயானால் உன் கீர்த்தியானது சப்த சமுத்திரங்களாலும் சூழப்பெற்ற இவ்வையகத்தில் என்றும் பிரகாசிக்கும்," என்றுரைத்தார். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே வல்லாளமகாராஜன் சிவபெருமானாகிய சங்கமரை நோக்கி, "சுவாமி! தாங்கள் இப்போது விரும்பியதைச் செய்வதில் எவ்வித தடையுமில்லை; ஆனால், ஒருபோது மாத்திரம் கூடி நீங்கும் விலைமாதின் சேர்க்கையைக் காட்டிலும், ஒரு நல்ல பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு எப்போதும் அவளுடன் கூடியிருக்கும் சேர்க்கையானது மேன்மை யுடையதாகுமென்று என் மனம் கருதுகின்றது; ஆதலால், ஒரு நல்ல பெண்ணைத் தேடித் தங்களுக்கு மணம்புரிந்து வைக்கின்றேன்; அதற்கிசையவேண்டும்," என்று தெரிவித்தான்.

அவ்வாறு தெரிவிக்கவே சங்கமர், "வல்லாளமகாராஜனே! நீ இப்போது கூறுஞ்செய்தி கொடிய துன்பத்திற் கேதுவானதாம்; நம்மைப்போன்ற சங்கமர் சமுசாரபந்தத்திலகப்படுவது கூடாது; அவ்வாறகப்பட்டுக்கொண்டால் மனமானது ஒரு வழிப்படாமல் பல விகாரப்பட்டலையும்; அதனால் நல் வழியைச் சார்வதற் கேதுவிராது; அன்றியும், மன்மத வாதனையைத் தீர்க்கும் சாமர்த்தியம் தாசிகளுக்குண்டேயல்லாமல் மற்றையரிடத்திற் பொருந்தாது; இன்னும் தாசிகளுடைய சேர்க்கையானால் இந்த வாதனை தீர்ந்தவுடன் அவர்களைவிட்டு நீங்கி நாம் நம்முடைய நல்வழியிற் பிரவேசிக்கலாம்; மணம்புரிந்துகொள்ளும் ஸ்திரீயினிடத்தில் அவ்வாறு நீங்குதல் முடியாது; அவளால் பந்தத்திற்கே ஏதுவாகும்; ஆதலால், நீ எனக்கொரு தாசியையே உதவி என்மையற் பிணியைத் தணிக்கவேண்டும்," என்று கூறினார். அவர் இவ்வாறு கூறவே வல்லாளமகாராஜன் அவருடைய கருத்திற்கிசைந்து அவரைப் பார்த்து, "இல்வாழ்க்கையைக் கடந்து சதாநிஷ்டைசெய்யும் தபோதனர்களுக்கும் ஞானோபதேசஞ் செய்யத்தக்க மகிமைபொருந்திய சங்கமரே! உம்முடைய கருத்தின்படியே நான் அக்காரியத்தைச் செய்கின்றேன்," என்று சொல்லி உடனே அங்கு நின்ற காவலாளரை யழைத்து அவர்களிடத்தில், "நீங்கள் இப்பொழுதே பரத்தையர் வீதிக்குச் சென்று ஒரு நல்ல வடிவமுள்ள பரத்தையைத் தேடிக்கண்டு அவளுக்கு ஓரிரவிற் கேற்பட்ட பொன் தருவதாகச் சொல்லி அவளை இங்கே அழைத்து வருவீராக," என்று கட்டளையிட்டான்.

அவ்வாறு கட்டளையிடவே, அந்தக் காவலாளர்கள் பரத்தையர் வீதிக்கு விரைந்து சென்று, ஒரு அழகிய தாசியை அழைத்து வரும்பொருட்டு ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து பார்த்தார்கள். அப்படிப் பார்க்கும்போது ஒரு தாசியேனும் பாக்கியில்லாமல் எல்லாப் பரத்தையரும் தனித்தனியே ஒவ்வொரு பண்டாரத்தோடு கூடி ஆடல்பாடல்களைச் செய்துகொண்டும், வீணை முதலிய வாத்தியங்களை வாசித்துக்கொண்டும் சரசசல்லாபத்துட னிருந்தார்கள். அவர்கள் அப்படியிருப்பதைக்கண்டு அங்குச் சென்ற காவலாளர்கள், அவர்களுள் ஒவ்வொருத்தியிடமும் அரசன் கட்டளையைத் தெரிவித்தும் எல்லாத் தாசிகளும், 'இன்றைக்கொருவர்க்கிசைந்திருப்பதால் வரமுடியாது,' என்று கூறிவிட்டபடியால் முகவாட்டத்துடன் திரும்பி அரசனிடஞ் சென்று, "மன்னர் பெருமானே! தங்கள் ஆஞ்ஞைப்படியே ஒரு தாசியை அழைத்து வரும்பொருட்டு நம் நகரத்திலுள்ள எல்லாத் தாசிகள் வீட்டிலும் புகுந்து ஒவ்வொருத்தியிடமும் தங்கள் கட்டளையைத் தெரிவித்தோம்; அவர்களெல்லோரும் 'இன்றைக்கொருவரிடம் பணம் வாங்கியிருப்பதால் அவருக்குச் சொன்னவாக்குத் தவறிவரமுடியாது,' என்று சொல்லித் தங்கள் கட்டளையை மறுத்துவிட்டார்கள்; அவர்கள் சொற்படியே ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு புருஷரிருக்கின்றார்கள்; ஆதலால், இன்று தங்களுடைய கருத்தின்படி ஒரு தாசியேனும் அகப்படுவதருமை," என்று கூறினார்கள்.



இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே வல்லாளமகாராஜன் மிகவும் மனங் கலங்கிப் பக்கத்திலிருந்த மந்திரிகளை நோக்கி, "அமைச்சர்களே! இஃதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது; இந்நகரத்தில் இன்று ஒரு தாசியேனு மகப்படவில்லையாம்; இதனால் நாம் சிவனடியாராகிய இந்தச் சங்கமருக்குக் கூறிய வார்த்தை தவறிப்போகக் கூடியதாயிருக்கின்றது; இது, ஜெகதீசனாகிய அருணாசலேசுரரது திருவுளச் செயலோ; இவ்வாறு நாம் உத்தேசித்த காரியம் நிறைவேறாமற் போவதற்கு நாம் என்ன பாவத்தைச் செய்தோமோ; இந்தச் சங்கமரிடத்தில், 'சுவாமி! தாங்கள் விரும்பிய மாது கிடைப்பதரிதாகும்,' என்று சொல்வது தகுதியாமோ?" என்று கூறி வருந்தினான். அவன் அவ்வாறு வருந்திக் கூறிய வார்த்தைகளைக் கேட்ட மந்திரிமார்கள் உடனே அவ்வரசன் முகத்தை நோக்கி, "அரசரேறே! தாங்கள் இவ்விஷயத்திற்காகக் கவலைப்படவேண்டாம்; நாங்கள் இப்பொழுது சென்று

இந்தச் சங்கமர் விருப்பப்படியே ஓர் அழகிய தாசியை எப்படியேனும் அழைத்து வருகின்றோம்; நீர் துன்பத்தை ஒழிப்பீராக," என்று சொல்லி அப்பொழுதே புறப்பட்டுக் கணிகையர் வீதியைச் சார்ந்து ஒவ்வொரு வீட்டிலும் புகுந்து பார்த்து ஆங்காங்கே ஒவ்வொரு பண்டாரம் கூடியிருப்பதைக் கண்டு, காவலாளர்கள் கூறியது மெய்தானென் றதிசயித்துப் பின்னர், 'இந்தத் தாசிகளில் ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு மனிதனிடம் பணம் வாங்கியிருந்தாலும் நாம் அதிகப் பொருள் தருவதாகக் கூறினால் எவளேனுமொருத்தி பொருளாசை கொண்டுவருதல் கூடும்,' என்று கருதி அங்குள்ள பாத்தைய ரெல்லோருக்குங் கேட்கும்படி, "எ கணிகைமாதர்களே! எங்களிறைவரிடம் வந்திருக்கும் சங்கமரைக் கூடி அவருக்குச் சந்தோஷத்தை யுண்டாக்க மனமிசைந்து இப்பொழுது எங்களுடன் வரும் தாசிப்பெண்ணுக்கு இரண்டு கைகளிலும் அணியப்பட்ட கடகங்களும், நவமணிகளாற் செய்யப்பட்ட ஆபரணங்களும், முத்துமாலைகளும், சப்திக்கின்ற பாதச் சதங்கைகளும், அளவிறந்த திரவியங்களும் கொடுப்போம்; அவள் இவற்றையெல்லாம் பெற்றுக் கொண்டு, நெய், பால், தயிர், அறுசுவை பதார்த்தங்கள் முதலியவைகளோடு கூடிய உணவுண்டு எப்பொழுதும் சுகமாக வாழலாம்; ஆதலால் இவ்வாறு வாழ்வதற்குச் சம்மதப் பட்டவள் எங்களுடன் வாலாம்," என்று கூறினார்கள்.

இப்படி அவர்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடனே மின்னலைப்போன்று துவளுகின்ற இடையினையுடைய அக்கணிகைமாதர்கள் அம்மந்திரிகளுக்கெதிரில்வந்து நின்று பணிந்து, "அமைச்சர்களே! நாங்களெல்லோரும் இன்றிரவு விடியுமளவும் பிரியாதிருப்பதாகச் சொல்லி, அதற்குரிய பொன்னை வாங்கிக்கொண்டு, எங்களை நாடிவந்த சிவனடியார்களுக்கு இணங்கிவிட்டோம்; ஆதலால், இன்றைக்குத் தாங்கள் எவ்வளவு திரவியங் கொடுத்தபோதிலும் எங்களில் ஒருத்தியும் வாமுடியாது; அப்படிப் பொருளாசைகொண்டு நாங்



கள் வருவோமானால் சத்தியந் தவறியவர்களாய்விடுவோம்; இந்த அருளைப்பாலியி விருந்துகொண்டு அவ்வாறு சத்தியந் தவறி நடத்தல் நகாது; நாளைக்கானால் தடையின்றி வருவோம்; இதற்காக எங்களுக்கு நீங்கள் அதிக திரவியங் கொடுக்கவேண்டியதில்லை; நீங்கள் அரசன் கட்டளையைத் தெரிவித்தழைக்கும்போது நாங்கள் பொருளைப் பெரிதாகக் கருதமாட்டோம்; உங்களுடைய கிருபை கிடைப்பதே எங்களுக்குப் போதும்; தயவுசெய்து இன்றைக்கு மாத்திரம் எங்களை அழைக்காதிருக்கவேண்டும்," என்று கூறினார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அமைச்சர்கள், 'இனி என் செய்வது?' என்று மனங்கலங்கி அவ்விடத்தை விட்டு நீங்கி அரசனிடம் வந்து தாசிகள் கூறியதைத் தெரிவித்து, 'மன்னர்பெருமானே! இன்றைக்குக் கணிகைமாது அகப்படுவதருமை,' என்று முகவாட்டத்துடன் சொன்னார்கள். வல்லாளமகாராஜன் இவ்வாறு மந்திரிகள் கூறிய வார்த்தையைக் கேட்டு 'ஐயோ! இஃதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது; இந்த அற்பமான காரியத்தை நிறைவேற்ற நம்மால் முடியவில்லையே; இதற்குக் காரணம் யாதோ தெரியவில்லையே; இஃது ஈசனுடைய திருவிளையாட்டோ; எப்படியேனும், ஈசனைப்போலெழுந்தருளியிருக்கும் இந்தச் சங்கமருடைய விருப்பத்தை நிறைவேற்றியே தீரவேண்டும்; ஆதலால், இனி நானே நேரிற் சென்று கொடுக்கக் கூடாததைக் கொடுத்தேனும் ஒரு தாசியை அழைத்து வருகின்றேன்,' என்றெழுந்து விலைமாதரிருக்கும் வீதிக்குட் சென்று, அங்குள்ள பாத்தையரை யழைத்து, "விலைமாதர்களே! நம்பதியை நாடிவரும் சிவனடியார்கள் கேட்டதையெல்லாம் தருவதாகக் கொடிநாட்டி அவ்வாறே வந்தவர்கள் கேட்பதை நான் கொடுத்துவருகின்ற வழக்கத்தை நீங்கள் அறிவீர்கள்; அந்த வழக்கப்படியே இன்று என்னிடம் வந்து பெண்ணாசையைத் தீர்த்துக்கொள்ள ஒரு தாசியைவிரும்பிக் கேட்ட சங்கமரொருவர்க்கு அவ்விருப்பந்தீர, ஒரு போகமாதை உதவ

வேண்டும்; அதன்பொருட்டு ஒரு கணிகைமாதை அழைத்துவரும்படி மந்திரி முதலியவர்களை நான் அனுப்பியும் நீங்கள் வர மறுத்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன்; நீங்கள் அவ்வாறு மறுக்கும் பக்ஷத்தில் நான் சங்கமர்க்குக் கூறிய வாக்குத் தவறிவிடும்; அப்படித் தவறுவது தருமமாகாது; ஆதலால், எப்படியாவது உங்களில் ஒருத்தி வந்து எனக்குதவிசெய்ய வேண்டும்; அவ்வாறு உதவி செய்பவளுக்கு நான், என்னுடைய அரசுக்குரிய இந்த நகரத்தையும் கொடுப்பேன்; யானை, குதிரை முதலிய வாகனங்களையுங் கொடுப்பேன்; வேண்டிய பொன்னையும் தருவேன்; முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்குங் கொடுப்பேன்; அவள் என் ஆளுகைக் குட்பட்ட பூமியைக் கேட்டபோதிலும் என் செங்கோலை அவளுக்குதவி அதனை அவளால் ஆளும்படிச் செய்வேன்; இன்னும், அவளுக்கு நான் பணிவிடையுஞ் செய்வேன்; அவளை நான், என்னுடைய அன்னையென்றுங் கருதுவேன்; இன்னும் அவள் என்னுடைய பிராணனைக் கேட்டபோதிலும் நான் கொடுக்க இசைவேன்," என்று கூறினான்.

இவ்வாறு அரசன் கூறவே, கணிகைமாதர்களெல்லாரும் அவனுடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்து, அவனை நோக்கி, "எங்களை ஆட்கொள்ளும் இறைவரே! நாங்கள் எப்பொழுதும் உம்முடைய ஆஞ்ஞைக்குட்பட்டு நடக்கக் கூடியவர்களே; ஆயினும், இன்று எங்களில் ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு புருஷர்க்கிசைந்து பணம் வாங்கிவிட்டபடியால் நாங்கள் தம்முடைய ஆஞ்ஞைப்படி வரக்கூடாதவர்களாயிருக்கின்றோம்; அப்படி வரக்கூடுமானால், சேவகர்வந்தழைத்தபோதே வந்துவிடமாட்டோமா? இதற்காக மந்திரிமார்களும் தாங்களும் வரவேண்டியதில்லையே; தாங்கள் இவ்வளவு பிரியவசனங்களும் கூறவேண்டியதில்லையே; தாங்கள் விருப்பி யழைக்கும்போது நாங்கள் பொருளையா பெரிதாக நினைப்போம்; நாங்கள் இன்றைக்கொருவருக்கு மிசையாதிருந்தால் தங்கள் கட்டளையைக் கேட்டமாத்திரத்திலேயே வந்தி



ருப்போமே; இவ்விஷயம் தங்களுக்குத் தெரியாததன்றே; நாங்கள் இப்போது பொருளைப் பெரிதாக நினைத்து எங்களுக்குப் பொன் கொடுத்தவர் வருந்தும்படி அவர்களைப் பிரிந்து வருவோமானால் சத்தியந் தவறியவர்களாய் விடுவோம்; உம்முடைய ஆளுகைக்குள்ளிருக்கும் நாங்கள் அவ்வாறு சத்தியந் தவறுதல் நீதியாகுமா? அப்படிச் சத்தியந் தவறினாலும் பாதகமில்லை, நீங்கள் வரத்தான் வேண்டும் என்று நீர் கூறும் பக்ஷத்தில் நாங்கள் வருகின்றோம்; இனிமேல் எங்களுக் கொன்றுஞ் சொல்லத் தெரியாது; உம்முடைய சித்தம் எங்கள் பாக்கியம்," என்று பயபக்தியுடனே உரைத்தார்கள்.

விலைமாதர்கள் இப்படியுரைத்த வார்த்தைகளைக் கேட்டவுடனே வல்லாள மகாராஜன், மறுத்தொன்றுஞ் சொல்ல முடியாமையால் நாணமுற்று, மனங்கலங்கி, முகவாட்டத்துடன் அவ்விடத்தைவிட்டு நீங்கி அரண்மனைக்குச் சென்று தன் மனைவியரிடம் தனக்கு வந்திருக்கும் துன்பத்தைச் சொல்லலாமென்ற நோக்கத்துடன் அந்தப்புரத்தைச் சார்ந்தான். அப்படி அரசன் சென்றவுடனே அவன் மூத்தமனைவியாகிய மல்லமாதேவியும், இளைய தேவியாகிய சல்லமாதேவியும், அவனுடைய பூரணச் சந்திரோதயம் போன்ற முகாரவிந்தம் மிகவும் வாட்டமடைந் திருப்பதைக்கண்டு, அவனிடத்தே நெருங்கிச் சென்று, "நெடியகடல் சூழ்ந்த உலகத்தை ஒரு குடை நிழலில் ஆட்சிபுரியும் வல்லமை பெற்ற எங்கள் நாதரே! எப்போதும் செந்தாமரைப் புஷ்பம் போன்று மிக்க மலர்ச்சியுடன் றோன்றும் தம்முடைய முகமானது இன்று வாட்டமடைந் திருப்பதற்குக் காரணமியாது? ஒருநாளும் இவ்வித வாட்டத்தை யடைந்ததில்லையே; தங்கள் மனத்தில் நேர்ந்த கலக்கமியாது?" என்று வணக்கத்துடனே வினவினார்கள்.

அப்போது வல்லாள மகாராஜன் நடந்த காரியத்தை அவர்களிடம் கூறத்தொடங்கினவனாய் அவர்கள் திருமுகத்தை நோக்கி, "என் பிரிய நாயகிகளே! இன்று ஒரு சங்கமர்

என்னிடத்தே வந்து தமக்கேற்பட்ட விரகநோயைத் தணித்துக் கொள்ளும்பொருட்டு ஒரு கணிகைமாதை அளிக்க வேண்டுமென்று கேட்டார்; நான் அவ்வாறே ஒரு கணிகையைக் கொடுப்பதாக அவருக்கு வாக்களித்தேன்; அதன் மேல் அவ்வாக்கை நிறைவேற்றும்பொருட்டு ஒரு தாசியை அழைத்துவரும்படி சேவகருக்குக் கட்டளையிட்டேன்; அவர்கள் அவ்வாறே சென்றழைக்க நம் நகரத்திலுள்ள தாசிகளெல்லோரும் வேறு மனிதரிடம் பொன் வாங்கிவிட்டபடியால் வரமுடியாதென்று தடைசெய்து விட்டார்கள்; பின்னர் மந்திரிகள் சென்று அளவற்ற பொருளைத் தருவதாகக் கூறியழைத்தும், நானே நேரிற் சென்று அவர்கள் வேண்டியவற்றை யெல்லாந் தருவதாகச் சொல்லியழைத்தும் அவ்வாறே தடை செய்துவிட்டார்கள்; அதனால், இங்கே ஒரு தாசியேனும் கிடைப்ப தரிதாயிருக்கின்றது; நான் சங்கமருக்குக் கூறிய வார்த்தையும் தவறிப்போகக் கூடியதாயிருக்கின்றது; இதைக் கருதி என் மனம் அளவற்ற கலக்கத்தை யடைகின்றது; என்முகம் வாடியிருப்பதற்குக் காரணம் இதுதான்; இனி நான் என் செய்வேன்; எப்படிச் சங்கமருக்குக் கூறிய வார்த்தையை நிறைவேற்றுவேன்,” என்று விசனமுற்றுக் கூறினான்.

அரசன் இவ்வாறு கூறவே, அவனுடைய மனைவியராகிய மல்லமாதேவி, சல்லமாதேவி ஆகிய இருவருள்ளும் இளையவளாகிய சல்லமாதேவி, அவனை நோக்கி, “சங்கமருக்குத் தாசியை அளிப்பேனென்று வாக்குத்தத்தஞ் செய்த எங்களரசே! தங்களுடைய வாக்குத் தவறக்கூடியதாயிருக்கும்பக்ஷத்தில் அவ்வாறு தவறாமல் அதனை நாங்கள் நிறைவேறும்படிச் செய்கின்றோம்; கணவனுக்குத் துன்பம் வந்த காலத்தில் மனைவியர் அதனை நீக்கவேண்டியது முறைமையாகும்; அப்படி நீக்காத பெண்கள் மனைவியராயிருந்தென்ன பிரயோசனம்? தாசி கிடைக்காததைப்பற்றித் தாங்கள் வருந்தவேண்டாம்; சங்கமர் தாசியையே முக்கியமாகக் குறிப்



பிட்டுக் கேட்டிருந்தபோதிலும் இப்போது அந்தத் தாசி கிடைக்காமற் போய்விட்டபடியால் அவளைப்போலவே இனிமை செய்யக்கூடிய வேறொரு பெண்ணை அவருக்குதவலாம்; அவருக்கு எவ்விதத்தாலாயினும் மனத்திற் கினிமை செய்யக்கூடிய பெண்தானே வேண்டும்; ஆதலால், நீர் இப்போது உத்தரவு கொடுக்கும்பக்ஷத்தில் உம்முடைய மனைவியருள் இளையாளாகிய நான் சென்று அவர் விரும்பிய பெண்ணைப் போலவே அவருக் கிதமாக நடந்துகொள்கிறேன்,” என்றுரைத்தாள்.

அவளுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனே வல்லாள மகாராஜன் அடங்கா ஆனந்தங்கொண்டு அப்பெண்மணியை நோக்கி, “என்னருமை நாயகியே! நீ இப்போதெனக்குச் செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறியற்றப்போகின்றேன்; நீ வேறொரு விஷயத்தையுங் கவனியாமல் என்னுடைய வாக்கை நிறைவேற்றிவைத்து என் துன்பத்தை நீக்குவதையே முக்கியமாகக் கருதின உன் புத்தியே புத்தி; நீயே எனக்குத் தகுந்த மனைவியாவாய்; நீ கூறியபடியே செய்; நான் இப்பொழுதே சென்று சங்கமரிடம் இவ்விஷயத்தைத் தெரிவித்து அவருடைய சம்மதியைப் பெற்றுவருகின்றேன்,” என்று சொல்லி உடனே சங்கமரிடம் சென்று, ‘சுவாமி! தங்களுக்குரிய ஒரு பெண்ணைத் தாங்கள் விரும்பிய செய்கைக் கிசைவித்திருக்கின்றேன்; தாங்கள் அவளை ஏற்றுக்கொள்ளலாமே?’ என்றுரைக்க, அவர், ‘அப்படியே ஏற்றுக்கொள்கின்றேன்,’ என்று கூறினர். பின்னர் அரசன் அவரை யழைத்துச் சென்று பள்ளியறையிற் சேர்த்துச் சல்லமாதேவியிடம் அங்கே போய் அவருக் கினிமை செய்யும்படி கட்டளையிட்டனன்.

அரசன் அவ்வாறு கட்டளையிடவே, சல்லமாதேவி, மனத்தில் எள்ளளவுங் கபடமின்றி உள்ளன்போடு, ‘எப்படியேனும் நம்முடைய நாயகர் வாக்குத் தவறாதிருந்தால் போதும்,’ என்று கருதி உடனே, வாசனை வஸ்துக்கள் சேர்

த்தரைக்கப்பட்ட சாந்தர்பூசித் தேய்த்து மணமிருந்த நீரில் ஸ்நானஞ் செய்து, உயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்து பரிமள மிகுந்த நறுமலர்மாலை சூடி, புழுகு கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களையு மணிந்து, தாம்பூலந் தரித்து, சங்கமர்க்கு வேண்டிய புஷ்பம், பனிநீர், சந்தனம், கஸ்தூரி பலகாரவர்க்கங்கள் முதலியவைகளையும், வீணையையும் எடுத்துக்கொண்டு பள்ளியறைக்குட் புகுந்து, இந்திரநீலம், மரகதம் முதலிய இரத்தினங்களாற் செய்யப்பட்டுப் பிரகாசிக்கின்ற மஞ்சத்தில் அமைக்கப்பட்ட மிருதுவாகிய பஞ்சணையில் தங்கியிருந்த அந்தச் சங்கமராகிய சிவபெருமான் பக்கத்தில் நின்று வீணையை மீட்டி வாசித்து இனிமையான கண்டத்தால் சுகமான பாடல்களைப் பாடினாள். அப்போது சிவபெருமானாகிய சங்கமர் தம்முடைய திருவிளையாடலைச் செய்யக் கருதிக் கண்களை மூடிக்கொண்டு ஒரு வார்த்தையும் பேசாமல் மௌனியாகிச், சித்திரப்பிரதமைபோல அசைவற்று யோக நித்திரையிலிருந்தார்.

அவர் அப்படி யிருப்பதைக் கண்டவுடனே சல்லமாதேவி, 'இவர் நடந்து வந்த இளைப்பினாலோ, வேறு எக்காரணத்தாலோ அயர்ச்சி யடைந்திருக்கின்றார்; ஆதலால், இவரை எவ்விதத்தாலாவது எழுப்பி நம்மோடு வார்த்தையாடும்படிச் செய்து இவருடைய விருப்பத்தை நிறைவேற்றி நம் நாயகருடைய சத்தியத்தைக் காப்பாற்றவேண்டும்,' என்று கருதி, மேற்கூறியபடி யோக நித்திரையிலிருந்த அந்தச் சங்கமர்மீது புஷ்பச் செண்டுகளை யெறிந்தும் பனிநீரை அள்ளித் தெளித்தும் அவருடைய நித்திரையைக் கலைக்க முயன்றாள். அவள் இப்படி எத்தனையோ செய்கைகளைச் செய்து அவரை யெழுப்ப முயன்றும் அவர் சிறிதேனும் கண்களை விழிக்காமலும், அவளை நோக்காமலும் முன்னிருந்தபடியே இருந்தார். சல்லமாதேவி, தான் எவ்வளவோ தந்திரங்களைச் செய்தும் அவர் விழிக்காம லிருப்பதைக்கண்டு மனம் வருந்தி, "ஐயோ! கடவுளே! என் நாயகருடைய வாய்மை தவ



றாமலிருக்கும்பொருட்டே நான் இக்காரியத்திற் கிசைந்து வந்தேன்; அப்படி வந்தும் இவர் இப்படி நித்திரையிலிருக்கின்றாரே; நான் எத்தனையோ தந்திரங்களைச் செய்தும் இவர் விழிக்கவில்லையே; எப்படியேனும் என் நாதருடைய கட்டளையை நிறைவேற்றாமற் போவேனாயின் அவருடைய வாய்மை தவறிவிடுமே; நான் என் செய்வேன்; அடியாள் கோரி வந்த காரியத்தை முடிக்காமற் போவது தகுதியன்று; நான் இப்போது இவர்மேல் விழுந்து தழுவியேனும் இவரையெழுப்புகின்றேன்," என்று துணிந்து உடனே அந்தச் சங்கமர் மேல் விழுந்து ஆலிங்கனஞ் செய்யும்பொருட்டுச் சமீபத்தில் நெருங்கினாள்.

அவ்வாறு நெருங்கிய மாத்திரத்தில், அடியார் பக்தியைச் சோதித்து அவர்களுக்கு நல்வரத்தைக் கொடுப்பவரும், ஸ்ரீ கைலாசபதியும், அப்போது சங்கம வடிவமாயிருந்தவருமாகிய சிவபெருமான், மகா பதிவிரதையாகிய அந்தச் சல்லமாதேவி, மிகுந்த ஆச்சரியத்தையும்களிப்பையுமடையும்படி கைக்குழந்தை வடிவமாகிச் சயனத்திற் கிடந்து புரண்டு செங்குமுதம்போன்ற அழகிய வாயைத் திறந்து அழுதார். இந்த ஆச்சரியமான செய்கையைக் கண்டவுடனே சல்லமாதேவி, திடுக்கிட்டுப் பெரிய வியப்பை யடைந்து தன் நாயகனாகிய வல்லாளமகாராஜனுக்கு இவ்விசேஷத்தைத் தெரிவித்தாள். இதனை யறிந்த வல்லாளமகாராஜன் அப்பொழுதே ஆனந்தமும் ஆச்சரியமுமுடையவனாய்ஓடிவந்துதன்னுடைய தாமரைமலர்போன்ற கைகளால் அக்குழந்தையை வாரியெடுத்தணைத்து முத்தமிட்டு உச்சி மோந்து, மிக்க அன்புடனே, 'இஃது என்னை யாட்கொண்டருளும் அருணாசலேசுரருடைய செயலோ!' என்று கூறி ஒன்றுந் தோன்றாதவனாய்ப் பிரமித்து நின்றான்.

அப்படி அவன் ஆனந்தமுற்று ஆச்சரியக்கடலு ளாழ்ந்து நிற்கும்போது, குழந்தை வடிவாயிருந்த ஜெகதீசனாகிய சிவபெருமான் மாயமாய் மறைந்தருளினார். அப்போதே

அவருக்குச் சீடனாயிருந்த அனேகசனம், நாயிகள் விபினரி விருந்தசிவகணங்களாகிய சங்கமருமறைந்தார்கள். அவ்வாறு மறையவே, வல்லாளமகாராஜன், 'இது சிவபெருமானுடைய திருவிளையாடலே,' என நிச்சயித்து அப்போது தன்னுடைய மனைவியாகிய சல்லமாதேவியுடன் அந்தச் சிவபெருமானைத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினவனாய், "சந்திரனைத் தரித்த சடையையுடைய பெம்மானே! எங்களை இவ்வாறு சோதித்து மனங்கலங்கச்செய்வது உனக்கழகாமோ? தேவரீருடைய திருவுளச் செயலை மடைமையுடையோமாகிய யாங்கள் அறியுஞ் சக்தியுடையவர்களாவோமோ? எங்கும் நீக்கமற்றவனே! நிர்மல ஞானனே! உலக நாயகனே! பரஞ்சுடரே! சிவப்பிரகாசா! ஆதாரா! அண்ணாமலைநாதா! உண்ணாமுலை பாகா! கங்கையைச் சிரசிற்றரித்த சோதி சொரூபா! காளகண்டனே! திரிநேத்திரா! அடியவர் துதிக்கும் முதல்வனே! மான் மழுவேந்திய தாமரைக் கையனே! சூலமேந்திய காலகாலா! கபாலி! மறைபுகழ் சீலா! பாவநாசா! காமதகனா! மறையுருவானவனே! பரிசுத்தனே! புலித்தோலுடையானே! புரமெரித்தோனே! நாகாபரணனே! சிரமாலை தரித்தோனே! மார்க்க சகாயனே! மாதவர்க் கனுகூலனே! கிருபாகரனே! பராசத்தியை வாமபாகத்தில் வைத்த தேவதேவனே! மகாநுபாவனே! சர்வத்துக்குந் தாணுவாய் நின்றவனே! ஆபத்பாந்தவனே! அடியாருக்கபயஸ்தங் கொடுப்பவனே! மெய்ஞ்ஞானச் சுடரே! பரிசுத்தம் பொருந்திய உன்னுடைய உபயசரணாரவிந்தங்களுக் கடிமைகளாகிய எங்களைச் சோதித்தற் பொருட்டு எங்களிடம் இவ்வாறு திருவிளையாடலைச் செய்து புதல்வனாகவுந் தோன்றி மறைந்தனை? இவ்வாறு எங்களிடம் வந்து திருவிளையாடலைச் செய்த நீ உன்னுடைய மெய்யுருவத்தைக் காட்டி எங்கள் குறையை நிவிர்த்தித்து எங்களுக்குன் இன்னருளைச் செய்யலாகாதா? இன்னம் எங்களை மனம் வருந்தச்செய்து நீ மறைந்தருளியது நியாயமாகுமா? சுவாமி! நீ எங்கள்மீது இரக்கம்வைத்து எங்கள் குறையை நிவிர்த்திசெய்யாவிடில் நாங்கள் இனி



உய்வதரிதாகும்; பெருமானே! நீ வஞ்சனை செய்யாமல் எங்களை யாட்கொண்டருள்வாய்," என்று பலவாறு துதித்து ஆற்றொணாத் துயரத்துடன் கண்ணீர் விட்டழுது கலங்கினான். சல்லமாதேவியும் அவ்வாறே சிவனைத் துதித்தழுது நின்றாள்.

அவர்கள் இவ்வாறு மனம் வெதும்பிப் பலவிதமான வார்த்தைகளைக் கூறிப் புலம்பி வாய்விட்டழுது கைகூப்பி மெய் சோர்ந்து நிற்கும்போது, மகா மகிமை பொருந்திய தவத்தினையுடைய பெரியோர் போற்றிப் பணியத்தகும் சிறப்புவாய்ந்த சிவபெருமான் வல்லாளன்மீது கருணைகொண்டு அவனுக்கு வரங்கொடுக்கக் கருதிப் பார்வதிதேவியுடனே வெள்ளைநிறம் பொருந்திய விடை வாகனத்திலேறி, அநேகம் சிவகணங்கள் புடைசூழவும், பிரமனும் விஷ்ணுவும் தங்கள் வாகனங்களி லேறிக்கொண்டு வணக்கத்துடனே பின் தொடர்ந்து வரவும், அந்த வல்லாளமகாராஜன், அவனுடைய பத்தினியாகிய சல்லமாதேவி ஆகிய இருவருக்கு மெதிரில் தோன்றித் தரிசனங் கொடுத்தார். அவ்வாறு சுவாமி தரிசனங் கொடுக்கவே, அந்த அரசனுந் தேவியும் அடங்காத ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, சாஷ்டாங்கமாகச் சிவபெருமானை நோக்கிப் பூமியில் வீழ்ந்து வணங்கி யெழுந்து, நாக்குளற, "ஆதிநாயகனாகிய தேவனே சரணம்; உலகத்தில் அடியார்களைச் சோதித்து அவர்களை யாட்கொள்ளும் பூரணனே சரணம்; அருட்பெருஞ் சுடரே சரணம்; கங்கையையுந் திங்களையுஞ் சூடிய செஞ்சடைக்கடவுளே சரணம்; நாங்கள் இன்று உன்னுடைய கிருபா கடாட்சத்தினாலே பாவக்கடலினின்றுங் கரையேறினோம்; பலவாறு நீ எங்களைச் சோதித்து இப்போது எங்களுக்கு நேரில் தோற்றியபடியால் நாங்கள் உன்னுடைய மெய்வடிவத்தையும் பிரத்தியக்ஷமாகத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றோம்; எங்களைப்போன்ற புண்ணியசாலிகள் உலகத்தில் ஒருவருமேயிரார்; சுவாமி! நீ எங்கள்மீது கிருபைசெய்து, எமக்குத் தரிசனங் கொடுத்தது சரியே; இனி நாங்கள் உன்னுடைய தரிசனையைக் கண்டதற்

குரிய பயனாக எங்களுக்குப் புத்திர பாக்கியத்தையு முதவி எங்கள் குறையை நீக்கி யருளவேண்டும்; இதற்காக நாங்கள் பட்டபாட்டிற் களவில்லை; உன்னுடைய அடியார்கள் விரும்பியவற்றையெல்லாங் கொடுத்தோம்; எத்தனையோ தான தருமங்களைச் செய்தோம்; இனிமேலும் எங்களைக் கஷ்டத்திற் குள்ளாக்காமல் எங்கள் விருப்பத்தை நிறைவேற்றவேண்டும்," என்று பயபக்தியுடனே கூறினார்கள்.

அப்போது சிவபெருமான் மனமுருகிக் கருணைநோக்கத்தோடு அந்த வல்லாளமகாராஜனைப் பார்த்து, "அழகுங் கீர்த்தியும் அறமும் பொருந்திய அரசனே! உன்னுடைய பக்திக்காக நாம் மிகவும் மனமகிழ்ச்சி யடைந்தோம்; உன் மீது நமக்கதிகமாக ஏற்பட்ட அன்பினாலேயே நாம் உன்னிடத்தில் இந்தத் திருவிளையாடலைச் செய்தோம்; நீ பிள்ளையை விரும்பியதற்காகவே நாமே உன்னிடத்திற் பிள்ளையாகத் தோன்றினோம்; அப்படி நாமே உன்னிடம் பிள்ளையாகத் தோன்றியபடியால் இனி உனக்கு வேறு புத்திரப்பேறு அவசியமில்லை; உன் அந்தியகாலத்தில் உனக்குப் புத்திரன் செய்ய வேண்டிய கிரியைகளை யெல்லாம் நாமே செய்து முடித்து உனக்கு நற்கதியை உண்டாக்குவோம்; இதனால் உன்னுடைய புகழ் உலகத்தில் என்றென்றும் நிலைநிற்கும்; நீ இனிமேல் கவலையை ஒழிப்பாயாக," என்று கூறி அவனையும் அவனுடைய மனைவியாகிய சல்லமாதேவியையும் வாழ்த்திச் சிவகணங்களுடனே கைலையங்கிரி போய்ச் சேர்ந்தார். அதன் மேல் வல்லாளமகாராஜன் தன் மனைவிமார்களுடனே சந்தோஷமிருந்து அருணையம்பதியில் வதிந்து நீதி தவறாமல் நெடுங்காலம் அரசு புரிந்து, முடிவில் சிவபெருமான், கூறியபடியே அவனுக்குரிய கிரியைகளைச் செய்ய உயர் பதவியை யடைந்தான். அவனுடைய மனைவியரும் சிவனருளால் நற்கதியை அடைந்தார்கள்,''' என்று சொல்லி முடித்தார். இந்தச் சரித்திரத்தைக் கேட்டவுடனே மார்க்கண்டேயர் நந்திதேவரை நோக்கி, "சுவாமி! அருணாசலத்தைப்பற்றி இது



வரை கூறிவந்த சரித்திரங்களிலும் இது மிகவும் மகிமை பொருந்தியது; சிவபெருமானே வல்லாளமகாராஜனுக்குப் பிள்ளையாகத் தோன்றிய இக்கதையைக் கேட்டதனால் நானும் இங்குள்ள மற்றவர்களும் மகா புண்ணியசாலிக ளாய்விட்டோம்; எங்கள்மீது கிருபை கூர்ந்து இச்சரிதத்தைக் கூறிய உமக்கு நாங்கள் என்ன கைம்மா றியற்றப் போகின்றோம்; உம்மைப் பணிவதே நாங்கள் செய்யும் கைம்மாறாகும்," என்று அவரைப் பலவாறு துதித்து வணங்கினர்.

ஏழாவது
வல்லாளமகாராஜ சருக்கம்
முற்றுப்பெற்றது.

---

## எட்டாவது
## தீர்த்தச் சருக்கம்.

### தெய்வ வணக்கம்.

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

"செருமலையுங் களிற்றுமுகப் பிள்ளையிரு பதம்போற்றித்
திரையான் முத்தந்
தருமலையு மொருமலையுங் கொலைத்தமலைக் கிழவனிரு
சரணம் போற்றிப்
பொருமலையு மிரங்கலையு மடியாருக் கொழிக்கவழற்
பொருப்பாய் நின்றெங்
கருமலையுஞ் செம்மலையும் பச்சைமலை மடந்தையையுங்
கருத்துட் சேர்ப்பாம்."

நாம் இனிமேற் சொல்லப்புகும் விஷயம் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டு, போர் செய்கின்ற யானைமுகத்தினை யுடையவரும், சிவபெருமானுக்கு மூத்த பிள்ளையானவருமாகிய விநாயகக்கடவுளின் இரண்டு பாதங்களையுந் தொழுது, அலைகளினாலே முத்துக்களைக் கரையிலொதுக்கி உலகத்தார்க்குத் தருகின்ற சமுத்திரத்தையும், கிரௌஞ்ச

மென்னும் மலையையும் ஒருகாலத்தில் அடக்கி அவற்றின் வலிமையை நீக்கியவரும், பழனிமலை முதலிய மலைகளிலே வாசஞ்செய்தற் குரியவருமாகிய சுப்பிரமணியக்கடவுளின் இரண்டடிகளையும் துதித்து, தம்மைத் தொழும் அடியவர்க்குப் பழவினையினாலேற்படும் துன்பங் காரணமாகவரும் அழுகையையும் மனக்கலக்கத்தையும் நீக்கியருளும்பொருட்டு, அருணையம்பதியிலே அக்கினிமலை வடிவமாய்த் தோன்றி நின்று, அடியேமாகிய எங்களுடைய ஜனனத்திற் கேதுவான கருப்பத்தை மாற்றி எங்களை யாட்கொள்ளும் பெருமையிற் சிறந்தவராகிய பரமசிவக்கடவுளையும், பச்சை நிறம் பொருந்திய மலைமகளாகிய பார்வதியையும் மனத்துட் கொண்டு வணங்குவாம்.

நாம் இதுவரை, சைவபுராணமாகிய ஸ்காந்தத்தில் உருத்திர சங்கிதையிற் சொல்லப்பட்டிருந்த அருணாசல தல மகிமைகளைக் கூறிவந்தோம்; இனி இலிங்கபுராணத்திலே இத்தல மகிமையைப்பற்றிக் கூறப்பட்டிருக்கும் விஷயங்களையுஞ் சொல்லி முடிப்பாம். இவைகளை, ஆதியிலே, பிரமதேவர் சனகரிஷிக்குச் சொல்ல அவர் கேட்டு வேதவியாசருக்குச் சொல்ல, அந்த வேதவியாசர் சூதமுனிவருக் குரைக்க, அந்தச் சூதமுனிவர் பிற்காலத்திலே நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்களுக்குக் கூறினர். இவ்விஷயங்கள் அடங்கிய சருக்கங்களுள், அக்கினிமலை தோன்றியது, பார்வதி இடப்பாகம் பெற்றது முதலிய சரிதங்கள் முன்னே கூறப்பட்டிருக்கின்றமையினாலே அவற்றை நீக்கி, அங்குக் கூறப்படாதனவாகிய தீர்த்தங்களின் மகிமையும், அவற்றில் மூழ்கிச் செய்யவேண்டிய தருமங்களின் விவரங்களும், கிரிப்பிரதக்ஷணத்தின் மகிமையும், இலிங்க மகத்துவமும், சுவாமியை வணங்காதவர் அடைந்த இகழ்ச்சியும், சமயம் பார்த்துச் சுவாமியின் பொருளை அபகரிக்க நினைத்தவர் அடைந்த பாவமும், பழவினையினாலே சிலர் அறியாமற் செய்த பாவமும், அப்படி வந்த பாவங்களை அவர்கள் தீர்த்துக்கொண்ட



முறைமைகளும், சுவாமியினால் மகிழ்ச்சியடைந்த புழுகு பூனையின் சரிதமும், இன்னும் பல விஷயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை மேற்கூறியபடி நான்முகன் சனகருக்குச் சொன்னவிதமாகவே இங்குக் கூறத்தொடங்குவாம்:

முன்னொரு காலத்தில் நான்முகன்பாற் சென்று பல விஷயங்களைக் கேட்டுக்கொண்டிருந்த சனகமுனிவர், அக்கடவுளை வணங்கி அவரிடத்தில், "உலகங்களை யெல்லாம் சிருஷ்டிக்கும் சிறப்புவாய்ந்த பிரமதேவரே! பூலோகத்தில் அருணாசலமென்னுந் தலம் மிகவுஞ் சிரேஷ்டமுடையதென நான் அறிந்தேன்; ஆதலால், இன்னும் அத்தலத்தைப்பற்றிய மகிமைகளைக் கேட்க விரும்புகின்றேன்; தயைசெய்து அவற்றை நீர் கூறவேண்டும்," என்று கேட்டுக்கொண்டனர். அப்போது பிரமதேவர் அவருடைய விருப்பப்படியே அவற்றைச் சொல்லத் தொடங்கினவராய் அவரை நோக்கி, "முனிவரே! அருணாசலத்தின் மகிமைகள் பலவுள; இப்போது அங்குள்ள தீர்த்தங்களின் மகிமையைச் சொல்லிப் பின்னர் மற்றவைகளையுங் கூறுகின்றேன் கேட்பீராக: ஒரு சமயத்தில், உலகத்தாசையற்ற கௌதமரிஷி, அருணாசலேசுராகிய சிவபெருமான் சந்நிதி முன்னே ஒரு வேள்வியைச் செய்யத் தொடங்கி அக்கினியை வளர்க்க, அழகு நிறைந்த சடையையுடைய அந்தச் சுவாமியின் கிருபையால், அக்கினிதேவனைப் போன்ற வடிவம்பெற்ற ஒரு சைவப்பிராமணன் அந்த வேள்வியி லுதித்தனன். அப்படி யுண்டான அந்தப் பிராமணனைப் பார்த்தவுடனே கௌதமர், "நீ அருணாசலேசுரருக்குப் பூசனை புரியக்கடவாய்," என்று அவனுக்குக் கட்டளையிட்டு உபசாரவார்த்தைகள் கூறினார். அவன் அவ்வாறே அருணையீசர்க்குப் பூசனைசெய்யத் தலைப்பட்டான். அதன்மேல், அந்தக் கௌதமர், ஏழு தருப்பைகளை யெடுத்து, ஓமகுண்டத்தின் அக்கினியில் போட்டார். அவ்வாறு போட்டமாத்திரத்திலே கரிய கூந்தலையுடைய இலட்சுமியைப்போன்ற ஏழு

பெண்கள் தேவதாசிகளாகப் பிறந்தார்கள். அவர்கள் அங்ஙனம் தோன்றியவுடனே, கௌதமர் அவர்களை நோக்கி, "நீங்கள் அருணைபம்பதிக் கிறைவராகிய ஈசனுடைய சந்நிதியில் நாட்டியம் புரிந்துவருவீராக," என்று கட்டளையிட்டனர். அவர்கள் அவ்வாறே சுவாமிக்கு நர்த்தனம் புரிந்து வந்ததோடு ஆங்கே பல தடாகங்களையு முண்டாக்கி அந்நகரத்திற்குச் சிறப்புச் செய்தார்கள். அப்படி அவர்கள் உண்டாக்கிய தடாகங்களோடு அந்த அருணையம்பதியில் இன்னும் பல புண்ணிய தீர்த்தங்களு முண்டு; அவற்றின் மகிமையை அளவிட்டுக் கூறுதல் எவரானு மியலாது; ஆயினும் அவற்றுள் சிலவற்றின் மகிமைகளை எனக்குத் தெரிந்தவரையிற் கூறுகின்றேன் :

தேவர்கள் மந்திரங்களைக் கூறி ஸ்தோத்திரஞ் செய்யப்பட்ட அருணையம்பதியிலுள்ள அக்கினிமலைக்குக் கிழக்குத் திக்கில் சமீபத்தில் இந்திரதடாகமொன் றிருக்கின்றது; அது முன்னே இந்திரனா லுண்டாக்கப்பட்டது; அதில் தினந்தோறும் தேவர்கள் வந்து ஸ்நானஞ்செய்து செல்வார்கள்; அதனால் அத்தடாகமானது கற்பகமலர்மாலை வாசனையும், சந்தனக்குழம்பின் வாசனையும் பொருந்தியிருக்கும். இத்தகைய மேன்மை பொருந்திய அந்த இந்திர தீர்த்தத்தில் தைப்பூசத்தன்று ஸ்நானஞ்செய்து, ஒரு கைஜலத்தை * ஆசமனஞ் செய்தால், அவ்வாறு செய்தவர்களுக்குக் கோடி பிரமஹத்தி தோஷங்க ளேற்பட்டிருந்தாலும் அவை அப்பொழுதே தீரும்; இப்படி அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வதனால் எண்ணத்தொலையாத பிரமஹத்தி தோஷங்களும் நீங்குமென்றால் அதன் பெருமையை ஒருவரால் அளவிட்டுக் கூறுதல் இயலுமோ? இந்திரன் முன்னே அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த விசேஷத்தினாலேயே தன்னைப் பற்றியிருந்த தீவினைகளையெல்லாம் நீக்கிக்கொண்டு சூரிய னுள்ளளவும் வாழும் சுகவாழ்க்கையையும் பெற்றுத் தெய்வலோகத்தையுந் தனக்குரியதாக அடைந்தான்.

* ஆசமனம் - சிறுகச்சிறுக நீரை உட்கொள்ளல்.



இன்னும், அருணாசலத்திற்குத் தென் கீழ்த்திசையில் அக்கினிதீர்த்த மொன்றிருக்கிறது; இது அக்கினிதேவனா லுண்டாக்கப்பட்டது; இதில், பங்குனிமாதம் பௌர்ணமியில் ஸ்நானஞ்செய்தால், சேல்மீன்போன்ற கரிய கண்களையும், ஆம்பல்மலர்போலச் சிவந்த வாயையும், சிறந்த கற்பையுமுடைய மாதர்மீது கெட்ட சிந்தனை வைத்ததனா லேற்பட்ட பாவந்தீரும்; தருமமுந் தவமுங் கைகூடும். அக்கினிதேவன், ஒருகாலத்தில் சப்தரிஷிகளுடைய பத்தினிமார்களைச் சேர விரும்பி வருந்த, அவனுடைய கருத்தையறிந்த அவன் மனைவியாகிய சுவாகாதேவி, அந்த சப்தமாதர்களில் அறுவரின் வடிவங்களை யெடுத்துவர, அவன் அந்த மாதர்களென்றே நினைத்துச் சுவாகாதேவியைச் சேர்ந்து, முடிவில் அவ்வித ரூபங்களுடன் வந்தவள் தன்னுடைய மனைவியென் றுணர்ந்து வெட்கிப், பின்னர் மேற்கூறிய சப்தரிஷிகளின் பத்தினிமார்களை நினைத்த தோஷத்தாலுண்டான பாவத்தை அவனால் உண்டாக்கப்பட்ட இந்தத் தீர்த்தத்தில் மூழ்கியே தீர்த்துக்கொண்டான்.

இதுவன்றி, அந்த அருணகிரிக்குத் தெற்குப் பக்கத்தில் எமதீர்த்த மொன்றிருக்கின்றது; இதில் ஸ்நானஞ் செய்தால், அவ்வாறு செய்தவர்களுடைய தேகமானது பொன் வடிவமாகும்; தேகத்திலுள்ள கொடிய வியாதிகளும் தீரும். ஒருகாலத்தில் எமன், வெற்றிபொருந்திய பிரமனை என்னா லேவப்பட்ட ஆயுதம் பட்டதனா லேற்பட்ட தன்னுடைய தேகக்குறைவை இந்தத் தீர்த்தத்தில் மூழ்கியே தீர்த்துக்கொண்டு திடகாத்திரத்தை யடைந்தான்.

நிருதிமூலையிலே நிருதிதீர்த்த மொன்றிருக்கின்றது; இதில் மூழ்கினவர்களுக்குத் தீருதற்கரிய பகைகளெல்லாந் தீரும்; உயர்ச்சிபொருந்திய இந்தத் தீர்த்தத்திலே முன்னர் ஸ்நானஞ் செய்த பலத்தினால் நிருதியானவன், நெருப்பைப் போன்ற கண்களையும், அகன்ற வாயையுமுடைய பேயை அடக்கித் தன் வசமாக்கிக்கொண்டான்.

மேற்குத் திசையிலே வளப்பம் பொருந்திய வருண தீர்த்த மொன்றிருக்கின்றது; இதில் விருப்பத்தோடு மூழ்கினால், அப்படி மூழ்கினவர்களுக்கு ஒன்பதுவகைக் கிரகங்களும் நன்மையைக் கொடுக்கும்; அந்த ஒன்பதுபேருமே தாங்கள் விரும்பியதைப் பெறும்பொருட்டு இதிலே ஸ்நானஞ் செய்வார்கள்.

வாயுதிக்கிலே வாயுதீர்த்த மொன்றிருக்கின்றது; இது மிகுந்த புண்ணியமுடையது; இதில் மூழ்கினவர்களுக்கு எல்லாத் துன்பங்களும் தீரும்.

வடக்குத்திக்கிலே குபேரதீர்த்த மொன்றிருக்கின்றது; இதில் மூழ்கினவர்களிடத்தில் தரித்திரம் நிலைநிற்கமாட்டாது; மிகுந்த குபேரசம்பத்து வந்தடையும்.

இதற்குக் கிழக்கே ஈசானியதிக்கில் அசுவினிதேவர்களால் உண்டாக்கப்பட்ட தீர்த்த மொன்றிருக்கின்றது; இதில் மூழ்கினவர்கள், நீசரைப் பார்க்கிலும் இழிந்த வகுப்பினராயிருந்தபோதிலும் நான்கு வருணங்களிலும் உயர்ந்த வர்ணத்தைச் சார்ந்தவர்களாகிப் பரமசிவனுடைய பாதாரவிந்தத்திற் சேர்வார்கள்.

இஃதன்றி, முன்னே தெற்குத்திசையி லிருப்பதாகச் சொன்ன யமதீர்த்தத்திற்குத் தெற்கில் அகத்திய தீர்த்த மொன்றுண்டு; இதில் புரட்டாசிமாதத்தில் மூழ்கி ஒரு கை ஜலம் உட்கொண்டவர்களிடத்தில் சரஸ்வதியும் இலக்குமியும் நீங்காமற் சேர்ந்திருப்பார்கள்; இதில் மூழ்கினவர்களுடைய சந்திரனை நிகர்த்த முகத்தைப் பார்த்தவர்களும் தமிழிற் சிறந்தவர்களான வித்வான்களாவார்கள்.

முன்னே சொன்ன குபேரதீர்த்தத்தி னருகில் வசிஷ்ட தீர்த்த மொன்றிருக்கின்றது; இதில் வசிஷ்டர் ஐப்பசிமாதத்தில் ஸ்நானஞ் செய்த விசேஷத்தினாலே முனிவர்களுக்கெல்லாம் முதன்மை பெற்றவராயினர்; ஆதலால், இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் மேற்கூறிய ஐப்பசிமாதத்தில் மூழ்



கினவர்களுக்கு சாஸ்திரப் பொருள்களெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும்; அவர்கள் பாவமாகிய கடலையுங் கடந்து நற்கதியை அடைவார்கள்.

இன்னும் அருணாசலத்திலே, கங்கை, வேலாயுதத்தைத் தாங்கிய சுப்பிரமணியர், விக்கினேசுவரர், சூரியன், பார்வதி, வயிரவர், சப்தகன்னியர்கள்,, சந்திரன், அஷ்டவசுக்கள், சரஸ்வதி, மற்றுமுள்ள பல தேவர்கள் ஆகியவர்களா லேற்படுத்தப்பட்டு அவர்கள் ஸ்நானஞ் செய்து நற்கதியை அடைந்த தீர்த்தங்கள் அநேகமுண்டு. அவற்றுள் ஒவ்வொரு தீர்த்தத்தின் மகிமையை வேதங்களாலும் அளவிட்டுக் கூறுதல் அருமையாகும்.

இந்தத் தீர்த்தங்களல்லாமல், மேலும் அருணாசலத்துக்கு வடதிசைக்கண், வேறெந்த நதியையும் இணைசொல்ல முடியாத திருநதியென்னும் ஒரு நதியுண்டு; இதில் மூழ்கிய விசேஷத்தினாலே இலக்குமியானவள் மகாவிஷ்ணுவினுடைய மார்பைச் சேர்ந்திருக்கும் பாக்கியத்தைப் பெற்றாள்.

அருணைக்குத் தென்பாரிசத்தில் நர்மதாநதியும் வணங்கக்கூடிய சிறப்பினையுடைய சோணமென்னும் ஒரு நதியுண்டு; இதில், கங்கை, யமுனை, காவிரி முதலியவர்கள் மூழ்கித் தங்களுக் கேற்பட்டிருந்த துன்பங்களைப் போக்கிக் கொண்டார்கள்.

தெய்விகம் பொருந்திய அருணகிரிக்கு மேற்குப்பக்கத்தில் புண்ணிய நதியென்னு மொரு நதியுண்டு; இதனருகே யுள்ள புண்ணியாற்றூரென்னும் நகரத்திலிருந்த சமனென்னு மரசன் இந்நதியில் மூழ்கிய விசேஷத்தினாலே, தனக்குத் தீங்காக வந்தடைந்திருந்த பெண்ணுருவத்தை நீக்கி நல்ல புருஷ வடிவத்தையும், நற்பேறுகளையும் பெற்றான்.

முன்னே கூறிய திருநதிக்கு வடபாரிசத்தில் சேயாறு என்னும் ஓர் அழகிய நதியுண்டு. இது முன்னே பார்வதியின் ஏவலால் சுப்பிரமணியர் வேலாயுதத்தை யேவி வரவழைக்

கப்பட்ட தீர்த்தம். இதில், பிரகாசமிருந்த வேலாயுதத்தையுடைய அந்த முருகக்கடவுளே ஸ்நானஞ் செய்து, அந்த ஸ்நான விசேஷத்தினாலே அசுரர்களைக் கொல்லும் வலிமையையும், அமிர்தபானஞ் செய்யுந் தேவர்களுக்குச் சேனாதிபதியாகும் சிறப்பையும் பெற்றார்.

இன்னும், அருணாசலேசருடைய ஆலயத்தில் சிவகங்கை யென்னும் ஒரு தீர்த்த மிருக்கின்றது; இதனை ஒருவன் தினந்தோறும் நினைத்தாலும் அப்படி நினைத்தவனுக்கு, கங்கையில் ஸ்நானஞ் செய்வதனா லேற்படும் பலன் கைகூடும்; அநேகம் உருத்திரர்கள் இந்தத் தீர்த்தத்தில் மாசிமாதத்தில் ஸ்நானஞ்செய்த பலத்தினாலே இடபவாகனருடனாய் எல்லாத் தேவர்களினும் மேன்மை பெற்றார்கள்.

இந்தத் தீர்த்தத்துக்குக் கீழ்த்திசையில் சக்கர தீர்த்த மென்னும் ஒரு தீர்த்த மிருக்கின்றது; இதில், சமுத்திரம் போன்ற நிறத்தினையுடைய விஷ்ணு வராகவதார மெடுத்த காலத்தில் மூழ்கி நற்பேறு பெற்றனர்; இந்தத் தீர்த்தத்தை வலமாக வந்தவர்களும், இதில் மூழ்கினவர்களும், இதிலுள்ள ஜலத்தை உட்கொண்டவர்களும் துக்க சாகரத்தினின்று நீங்கிக் கரையேறிச் சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களை யடைந்து என்றும் அழியாச் சுகம் பெற்று வாழ்வர்.

இஃதன்றி, மேற்கூறிய அருணாசலநாதர் கோவிலுக்குப் பக்கத்தில் அக்கினிதிசையில் பிரமதீர்த்தமென்னும் ஒரு தீர்த்த மிருக்கின்றது; இதில் மூழ்கினவர்கள் பிறவிக் கடலில் மூழ்கமாட்டார்கள்; ஆயிரம் பிறப்புக்கள்வரை சேர்ந்த தீவினைகளும் நீங்கப்பெறுவர். இன்னும், இதில் மூழ்கி ஓரணுவளவு தங்கத்தைப் பரதேசிக்குத் தானங் கொடுப்பவர்கள், சப்த சமுத்திரங்களாற் சூழப்பெற்ற இந்தப் பூமி முழுவதையும் சுவர்ணத்தினாலும் நவரத்தினங்களினாலும் நிறைத்து அவைகளையெல்லாம் சிவபக்தருக்குத் தானமாகக் கொடுப்போர் அடையும் பலனிலும் அதிகமான பலனை யடைவார்கள்; இதில் ஸ்நானஞ்செய்து சிவப்புப் பசுவைத் தானஞ்



செய்பவர்கள், மதங்கொண்ட வெள்ளையானைகளால் தாங்கப் பெற்றதும், பொன்மலைபோற் பிரகாசிப்பதுமாகிய விமானத்திலேறி அரம்பை, மேனகை ஆகிய இருவரும் இரண்டு பக்கங்களிலும் நின்று பரிசுத்தமாகிய கவரி வீசச் சிறப்புடனே சென்று, அப்பசுவின் உரோமம் ஒன்றுக்கு ஒரு கற்பகாலம் வீதம் அதன் உரோமங்கள் எல்லாவற்றுக்கும் எத்தனை கற்பகாலம் கூடுமோ அத்தனை கற்பகாலம் வரையிலும் சிவபதத்தி லிருந்து சுகமாக வாழ்வார்கள். காலையில் இந்தத் தீர்த்தத்தில் மூழ்கிக் கருமை நிறமுள்ள பசுவைத் தானஞ் செய்தவர்கள், அழகு பொருந்திய நீலரத்தினங்கள் பதிக்கப் பெற்று, நீலமலைபோல் விளங்கும் விமானத்திலேறிச் சூலாயுதம் பிடித்த பூதகணங்கள் தொடர்ந்து வணங்கிப் பின்னே வரச் சிறப்புடனே சென்று நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் வாசஞ் செய்யுங் கைலாயத்தைச் சார்ந்து களிப்புற்றிருப்பார்கள். இந்தப் புண்ணிய தீர்த்தத்திற் குளித்து வெள்ளைப்பசுவைத் தானமாகக் கொடுத்தவர்கள், ஆயிரம் வெள்ளை யிடபங்களாற் சூழப்பெற்றதும், முத்துக்களினால் அலங்கரிக்கப்பட்டதுமாகிய விமானத்திலேறித் தேவர்கள் கூட்டமாகச் சேர்ந்து வணங்கிவர அலங்காரத்துடனே சிவபதத்திற் சேர்வார்கள். மழை, வெயில் முதலியவற்றைத் தாங்கும்பொருட்டுக் குடையையும், வெயிலின் வெப்பம் முட்கள் முதலியவைகளா லேற்படும் துன்பங்களை யகற்றும் பொருட்டு பாதரட்சையையும் அடியார்களுக்குத் தானமாகக் கொடுத்தவர்களும், ஏறிச்செல்வதற் குபயோகமாகக் குதிரையைத் தானஞ் செய்தவர்களும் இந்திர பதவியிற் சேர்வார்கள். இன்னும் இந்தத் தீர்த்தக்கரையிலிருந்து கன்னிகாதானஞ் செய்தவர்கள் தேவலோகத்திலும், வேண்டியவற்றை யெல்லாம் அநுபவிக்கக்கூடிய போக பூமியிலும், குபேரனுடைய அளகைப் பதியிலும், பிரகாச மிகுந்த பிரமலோகத்திலும், சிற்சில தினங்களிருந்து விரும்பியபோகங்களை யெல்லா மநுபவித்துப் பின்னர் தேவர்களெல்லாரும் தலையாலே வணங்க மேன்மையுடன் சென்று சிவபதவியிற் சேர்ந்து சுகமிருந்து வாழ்வார்கள்.

அருணைப்பதியிலே, இந்த முக்கியமான புண்ணிய தீர்த்தங்களையன்றி இன்னும் அநேகம் தீர்த்தங்களுமுண்டு; அவைகளையெல்லாம் அளவிட்டுச் சொல்லுதல் முடியாது; ஆதலால், இங்கு முக்கியமானவைகளை மாத்திரம் கூறினேன்; இத்தகைய தீர்த்தங்களிலே செய்யுந் தான தருமங்களால் அளவிடக்கூடாத பலனுண்டாகும். உலகத்தில் உத்தமமாகிய தலங்களிற் சென்று, அருமையான கோடி தவசிகளுக்கு இடும் அன்னதானத்தின் பலன், மகிமை மிகுந்த காசியில் பெரியோர்களுக்குப் படைத்த அன்னதானத்தில் ஓரன்னத்தின் பலனுக்கு ஈடாகமாட்டாது; இப்படிப்பட்ட சிறப்பினையுடைய காசியில் கோடி தவசிகளுக்கிட்ட அன்னதானத்தின் பலன், அருணாசலத்தில் சிவனடியாருக்குப் படைத்த உணவில் ஓரன்னத்தின் பலனுக்கு நிகராகமாட்டாது; இன்னும், இந்த அருணாசலத்தில், பசுவின் குளம்படியளவு பூமியைப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்தவர்கள், பரமசிவனுடைய பாதாரவிந்தத்தைச் சேர்ந்து தங்கள் சுற்றத்தாருடனே களித்து வாழ்வார்கள்; சுவாமிக்குப் பெருமை பொருந்திய விருஷபங்களைத் தானஞ்செய்தவர்கள் வேறு உயர்ந்த ரிஷபவாகனத்தி லேறிக்கொண்டு சென்று சிவலோகத்திற் சேர்ந்து அங்குப் பவனி வந்து சந்தோஷித்திருப்பார்கள்; அருணையம்பதியில் சாலை அமைத்தவர்களும், நந்தவனம் வைத்தவர்களும், கிணறுகள் வெட்டியவர்களும், சிவபக்தர்கள் இளைப்பாறியிருத்தற்கு மணற் குன்றுகளையமைத்தவர்களும், குளங்கள் வெட்டினவர்களும் இந்திர பதவியை அடைவார்கள்; ஆலயத்திலுள்ள பள்ளங்களைத் தூர்த்துச் சமப்படுத்தி மெழுகி ஆங்கே விளக்கேற்றி வைத்தவர்களும், அலங்காரஞ் செய்தவர்களும் விஷ்ணுவாகித் திருப்பாற்கடல் மத்தியில் சேஷசயனத்தில் யோக நித்திரை செய்வார்கள்; நீர் வறண்ட கோடைக்காலத்தில் இவ்வருணைப்பதியில் தண்ணீர்ப்பந்தல் வைத்தவர்கள், மேலாகிய தெய்வபதவியில் தேவர்களும் புகழும்படி வாழ்வார்கள்; யானையுரி போர்த்திய சிவனுடைய பக்தருக்கு வஸ்திரங்



கொடுத்தவர்கள், அவ்வஸ்திரத்தின் ஓரிழைக்கு அளவிறந்த காலம் வீதம் அதிலுள்ள இழைகளுக்கெல்லாம் ஏற்படும் காலம்வரை சிவபதத்தி லிருப்பார்கள்; இங்கே ஒரு மடங் கட்டினவர்கள், அம்மடத்திலுள்ள ஒரு மண் துகளுக்கு ஒரு கற்பகாலம் வீதம் அங்குள்ள துகள்களுக் கெல்லாம் எத்தனை கற்பகாலம் கூடுமோ அத்தனை கற்பகாலம்வரை கெடுதலில்லாத மோக்ஷவீட்டில் நிலைபெற்றிருப்பார்கள்; பின்னும், இங்கே திக்கற்றிறந்தவர்க்கு வேதவிதிப்படி ஈமக்கடன் செய்துவைப்போர், அவர்கள் குலத்துடனே நற்கதியிற் சேர்வார்கள்.

இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் இத்தகைய தருமங்களைச் செய்து நற்கதி யடைந்தோர் அநேகர்; ஒரு காகமானது இத்தலத்தின் கோவிற் பலிபீடத்தில் வைத்திருந்த பலியன்னத்தை வாயினால் கிரகிக்கும்போது தன்னுடைய சிறகால் கீழேபடிக்க அவ்விடத்திலுள்ள துகள்கள் நீங்கினமையால் சுவாமி அதனைப் பக்ஷத்தோடு நோக்கி, 'இக்காகம் நம்மீது கொண்ட பக்தியினால் நம் கோவிலிலுள்ள புழுதியை நீக்கிப் பரிசுத்தப்படுத்தியது; ஆதலால், இதற்கு நற்பதவியைக் கொடுக்கவேண்டும்,' என்று கருதி உடனே அதற்கு இந்திரன் வாழ்கின்ற தேவலோக பதவியைக் கொடுத்தருளினார்.

ஒரு பெருச்சாளி கோவிலில் தனக்கு வளை தோண்டும்போது மாணிக்கமொன்று மண்ணிலிருந்து சிதறிச் சுவாமி சந்நிதியில் விளக்குப்போலப் பிரகாசித்தமையால் சுவாமி, 'இந்தப் பெருச்சாளி நமக்குத் தீபமிட்டது; ஆதலால், இதற்கு நற்பதவியைக் கொடுக்கவேண்டும்,' என்று கருதி உடனே அதற்கு ஞானமார்க்கத்தைத் தெரிவித்துத் தமது சாலோக பதவியைக் கொடுத்தருளினார்.

இத்தலத்தில் சிவபெருமானுருவாக விளங்குந் திருமலையில் ஒரு தினம் ஒரு சிலந்திப் பூச்சியானது தன்னியற்கைப்படி நூலிழைத்துப் பின்னலிட அதைக் கண்ட சிவபெரு

மான், 'இந்தச் சிலந்திப்பூச்சியானது நமக்கு வஸ்திரஞ் செய்து கொடுத்தது; ஆதலால் இதற்கு உயர்ந்த பதவியை அருளவேண்டும்,' என்று கருதி உடனே அதனை அரசனாகப் பிறக்கும்படிச் செய்து அவ்வரசனுக்கு நல்லஞானத்தை யுண்டாக்கித் தேகவியோகமானபிறகு விஷ்ணுலோக பதவியைக் கொடுத்தருளினார்.

இன்னும், ஒருவன் இத்தலத்திலே மணலைக் குவித்துச் சிவனுருவாக்கி அவ்வுருவத்தைச் சிவனென்றே நினைத்துப் பூஜித்த புண்ணிய விசேஷத்தினாலே சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களை யடைந்து அந்தச் சிவசொரூபத்துக்கும் தன் வடிவத்திற்கும் பேதந்தெரியாதிருப்பதாகிய சாரூப்பிய பதவியைப் பெற்றான். இன்னும் இத்தலத்திலுள்ள தீர்த்தங்களில் மூழ்கிச் செய்த புண்ணிய விசேஷத்தினாலே நற்கதியை யடைந்தவர்களை யெல்லாம் அளவிட்டுச் சொல்லுதல் எவராலும் முடியாது; இதுவரை நீர் கேட்டுவந்த சரித்திரங்களைக் கொண்டு இத்தலத்திலுள்ள தீர்த்தங்களின் மகிமையையும், இத்தலத்தின் மகிமையையும் உணர்ந்துகொள்வீராக," என்று கூறினார்.

எட்டாவது
தீர்த்தச்சருக்கம் முற்றுப்பெற்றது.

---

ஒன்பதாவது

## திருமலை வலம்புரிதற் சருக்கம்.

நான்முகக்கடவுள் மேற்கூறியபடி அருணையிலுள்ள தீர்த்தங்களின் மகத்துவத்தையும், அங்குச் செய்யப்படும் தருமங்களின் உயர்வு முதலியவைகளையும் விளக்கமாகக் கூறி முடித்தவுடனே சனகமாமுனிவர் மிகுந்த ஆனந்தசாகரத்தில் மூழ்கி அந்தப் பிரமதேவரை வணங்கி அவருடைய திருமுகத்தை நோக்கி, "உலகங்களை யெல்லாம் சிருஷ்டி செய்து மிகுந்த கீர்த்தியையடைந்த நான்முகக் கடவுளே!



இப்போது அருணாசலத்திலமைந்தவைகளும், பொன் போன்ற தாமரைமலர்கள் நிறைந்து பிரகாசிப்பனவுமாகிய புண்ணிய தீர்த்தங்களின் பெருமைகளையும், அங்கியற்றப் படும் தருமங்களின் விசேஷங்களையும் நீர் சொல்லக்கேட்டு மிகவும் மனமகிழ்ச்சி யடைந்தேன்; இனி, பாவங்களை யெல்லாம் போக்கக்கூடிய அருணகிரியை வலஞ்செய்வதா லுண்டாகும் பயன்களையும் அறிய விரும்புகின்றேன்; ஆதலால், எளியேன்மீது கிருபைசெய்து அவற்றையுங் கூறவேண்டும்," என்று கேட்டுக்கொண்டனர். சனகர் இவ்வாறு கேட்டுக் கொண்டமாத்திரத்தில், தாமரைமலராகிய கோவிலில் வாசஞ் செய்கின்றவராகிய அந்த நான்முகக்கடவுள் அவருடைய விருப்பப்படியே அவற்றைக் கூறுதற் கிசைந்து அந்தச் சனகரை நோக்கி, "ரிஷியே! ஒரு கற்பகாலம்வரை அரிதாகிய தவத்தைச் செய்தவர்களும், அருணாசலத்தை வலஞ்செய்வதனாலேற்படும் மகிமைகளை அளவிட்டுச் சொல்லும் சக்தி பெற்றவர்களாகமாட்டார்கள்; ஆயினும், நீர் அவற்றை யறிய மிகுந்த விருப்பங்கொண்டு கேட்கின்றபடியினாலே நான் அவைகளை அறிந்தவரையிற் கூறுகின்றேன்; அற்புதமாகிய அம்மகிமைகளடங்கிய கதையாகிய அமிர்தத்தை உம்முடைய செவிகளாகிய வாயின்வழியாக இன்பத்துடன் உட்கொள்ளக் கடவீராக.

அருணாசலத்தை வலஞ்செய்வது பிறவியென்கின்ற பெரிய சமுத்திரத்தைத் தாண்டிக் கரையேறுவதற் குரிய ஒரு தெப்பமாகும்; அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என்னும் ஏழு வகை நரகங்களிற் புகுதாமல் முத்திவீட்டிற் சேரிச் செல்லுதற் குபயோகமாம் ஏணியாகும்; செய்தற்கரிய தவத்தையும், தருமத்தையும், சம்பத்தையும் விளைவிக்கும் விளைநிலமாகும்; ஒளிபொருந்திய நெற்றிக்கண்ணை யுடையவரும், பார்வதியை இடப்பாகத்தில் வைத்தவருமாகிய சிவபெருமானது மனத்தை மிகவும் சந்தோஷிக்கச் செய்யும்; காசிமுதலாகிய

புண்ணிய க்ஷேத்திரங்களிலிருந்து சிவபெருமானைக் கற்ப காலம்வரை பூஜிப்பதனால் மேற்படும் பலனும், அநேககாலம் தவஞ் செய்வதனா லுண்டாகும் பலனும், குரு சொல்லிய முறைப்படி சமாதியிலிருந்து அடைகின்ற சித்திகளினால் மேற்படும் பலனும், 'அருணாசலத்தை வலம்வரவேண்டும்,' என்று சொல்லுகின்ற ஒரு சொல்லினால் மேற்படும் பலனுக் கீடாக மாட்டா; மிகுந்த பாவங்களைச் செய்த ஒருவனைப் பார்த்து அவனுடைய பாவங்களைப் போக்குதற்கு, மற்றொருவர், 'நீ அருணாசலத்தை வலஞ்செய்,' என்று சொல்லிய மாத்திரத்திலேயே அவன் பிரமஹத்தி தோஷம் செய்திருந்தாலும் அஃது உடனே நீங்கிப்போகும்; தருமதையாற் றினசரியு மதுவைப் பானஞ் செய்திருந்தபோதிலும் அதனால் மேற்பட்ட பாவமும் நடுங்கி யோடிப்போகும்; பிறருடைய பொருளை அபகரித்திருந்தாலும் அதனா லுண்டாகிய பாவமும் அகன்று போகும்; குருத்துரோகஞ் செய்திருந்தாலும் அத்தோஷமும் விலகிப்போகும்.

இன்னும் ஒருவன், 'அருணாசலத்தை வலஞ் செய்ய வேண்டும்,' என்று நினைத்தவுடனே, பலரைக் கொலை செய்யுந் தொழிலுங் கிசைந்து இருந்ததனால் மேற்பட்ட பாவம் சூறைக் காற்றினெதிரி லகப்பட்ட தீபம்போல அவிந்துபோகும்; தந்தையைக் கொன்றதனால் மேற்பட்ட பாவம் கருடனைக் கண்ட பாம்புபோல நடுக்கத்தையடைந் தோடிப்போகும்; குழந்தைகளையும் மாதரையுங் கொன்றதனா லுண்டாகிய பாவமும் நசித்துப்போகும்; தெய்வத்திற்குரிய திரவியத்தைத் திருடியதனால் மேற்பட்ட பாவமும் பயந்தோடிப் போகும்.

'அருணாசலத்தை வலஞ்செய்யவேண்டும்,' என்று நினைத்து ஓரடி யெடுத்துவைத்தவர்க்கு யாகஞ் செய்த பலன் சித்தியாகும்; இரண்டடி யெடுத்துவைத்தவர்க்கு இராசசூய யாகஞ் செய்த பலனுண்டாகும்; மூன்றடி யெடுத்துவைத்தோர்க்கு அசுவமேதயாக பலனுண்டாகும்; நான்கடி யெடுத்துவைத்தவர்க்கு எல்லா யாகங்களின் பலனுமுண்டாகும்;



இன்னும் அருணையைப் பிரதக்ஷிணஞ் செய்கையில் தூக்கி வைத்த ஓரடியின் பலன் பூமிப் பிரதக்ஷிணஞ் செய்த பலனுக்கு நிகராகும்; இரண்டடியின் பலன் சர்வ தீர்த்தங்களினும் ஸ்நானஞ் செய்ததனால் மேற்பட்ட பலனுக்குச் சமமாகும்; மூன்றடியின் பலன் சோடசதானஞ் செய்ததனா லுண்டாகிய பலனுக்கு நிகராகும்; நாலடியின் பலன் அஷ்டாங்கயோகஞ் செய்ததனால் மேற்படும் பலனுக்கொப்பாகும்; இன்னும், இம்மலையை வலமாகச் சுற்றிவரும்பொருட்டு எடுத்துவைத்த ஓரடிக்குப் பூசாபலன்களெல்லாம் சித்தியாகும்; இரண்டடிக்கு இலிங்கப் பிரதிஷ்டைசெய்த பலனுண்டாகும்; மூன்றடிக்கு * தூபிகளையுடைய கோவில்களைக் கட்டியதனால் மேற்படும் பலனுண்டாகும். இன்னும், இவ் வருணாசலத்தை வலமாகச் சுற்றி வரவேண்டுமென்று கருதி, ஓரடி யெடுத்துவைத்தவர்கள் உருத்திரபத மடைவார்கள்; இரண்டடி யெடுத்துவைத்தவர்கள் மகேசுரபத மடைவார்கள்; மூன்றடி யெடுத்துவைத்தவர்கள் சிவலோக பதவியை யடைவதோடு அவர்களுடைய கோடி தலைமுறையிலுள்ள மனிதர்களும் அப்பதவியை அடைவார்கள்.

இன்னும், மிகுந்த நன்மையைத் தருவதாகிய இந்த அருணாசலத்தை வலமாகச் சுற்றிச் சிறிதுதூரம் நடந்தவர்களுக்கு வெள்ளிய கிரணத்தை வீசுகின்ற கைலையங்கிரிக்குச் செல்லுந் தன்மையுண்டாகி அவ்வாறு செல்லுங் காலத்தில் அங்குப் போகும் வழி சீக்கிரந் தொலையும்; அன்றியும், மேற்கூறியபடி இம்மலையை வலஞ்சுற்றி வரும்போது பருக்கைக் கற்களாலும், பூமியிலுண்டான சூரிய வெப்பத்தினாலும் கன்றிப்போன பாதங்களையுடைய பக்தரைக் கண்டால், பாவங்களெல்லாம் எமனென்று கருதிப் பயந்தோடிப்போகும்; இஃதன்றி, இந்த அக்கினிமலையை வலம் வந்தவர்களுடைய பாதத்தி லொட்டிய துகளொன்று, நரகத்தையொத்த தாழ்மையான விடங்களில் காற்றினால் போய்ச்சேரும் பக்ஷத்தில் அவ்விடங்களும் கைலாயத்தைப்போலப் பரிசுத்த முடை

* தூபி = சிகரம்.

யனவாம்; அந்தத் தூசள் மனிதர் தேகத்திற்பட்டால் அவர்களை எப்போதும் பின்பற்றி வருகின்ற பிறப்பு, இறப்பு ஆகிய துன்பங்களும் நீங்கிப்போகும். பிரதக்ஷணஞ் செய்தவர்களுடைய பாததூளி பட்டவர்களுக்கே இவ்வித பலனுண்டாகுமானால், பிரதக்ஷணஞ் செய்தவர்களுக் குண்டாகும் பலனை அளவிட்டுக் கூறுதல் முடியுமோ?

இன்னும் இவ்வருணாசலத்தை வலஞ்செய்தவர்கள் இந்தப் புண்ணியவசத்தினாலே மேற்கூறியபடி பரமசிவக்கடவுள் வாசஞ்செய்கின்ற கைலையங்கிரியைச் சாரும்போது, அவர்களுக்குச் சந்திரன் வெள்ளைக் குடை பிடிப்பான்; சூரியன் விளக்கேந்துவான்; தருமதேவதை கைலாகு கொடுத்துச் செல்லும்; இந்திரன், செல்லும் வழியில் புஷ்பங்களைப் பரப்புவான்; குபேரன் வந்தனஞ்செய்து சமீபத்திற் செல்லுவான்; அஷ்டவசுக்கள் புஷ்பமாரி சொரிவார்கள்; மேனகையும், அரம்பையும், ஊர்வசியும், திலோத்தமையும் வீணை வாத்தியத்துடனே சங்கீதம் பாடி முன்னே நடனஞ் செய்து கொண்டு செல்வார்கள்; கங்கையும் யமுனையும் சாமரம் வீசிக் கொண்டு செல்வார்கள்; பருகத்தகுந்த அமிர்தத்தையும், உடுக்கத்தகுந்த ஆடைகளையும் மேகம் எடுத்துக்கொண்டு எதிரே செல்லும்; இலக்குமி, மலரும், கஸ்தூரியுங் கொண்டு வருவாள்; நான்கு வேதங்களும் புகழ்ந்துகொண்டு முன்னே செல்லும். இன்னும், சேற்கெண்டைகள் குதித்து விளையாடத்தக்க கங்கைமுதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்த பலனும், சிறந்த சிவஸ்தலங்களைத் தரிசித்த பலனும், இவ்வருணாசலத்தை வலஞ்செய்வதாலுண்டாகும் பலனுக் கீடாகமாட்டா.

எப்போதும் தேவர்கள் வணங்கத்தக்க பெருமை வாய்ந்த அருணாசலத்தை வலஞ் செய்தவர்களுடைய பாதமானது, வழியிற் கிடக்கும் பாற்கற்களை மிதித்துச் சிவந்த தன்பயனாகப் பின்னர் அவர்கள் உயர்ந்த பதவியைப் பெற்றிருக்குங் காலத்தில் அவர்களிடம் வரத்தைப் பெறும்பொரு



ட்டு வீழ்ந்து வணங்கும் தேவர்களுடைய மகுடங்களிற் படுவதால் சிவந்து பிரகாசிக்கும். இத்தகைய மகிமையையுடைய அருணாசலத்தை வலஞ் செய்யாதவர்கள் பூமியில் நடந்து திரிவதனால் என்ன பிரயோசனம்? அவர்களுடைய கரிய கண்கள் நன்றாகத் தெரியப்பெற்று என்ன பயன்? அவர்கள் மானிடராகப் பிறந்ததனால் ,என்ன பிரயோசனம்? மேற்கூறியபடி அருணையை வலஞ்சுற்றாமல் இவ்வாறு வீணுக்கு ஜென்மமெடுத்தவர்கள், மாமிசந் திரண்டதும், புழுக்களால் நிறையப்பட்டதுமாகிய தேகத்திற் சேர்ந்தலைந்து முடிவில் நரகத்தில் வீழ்ந்து துன்பப்படுவதை யன்றி வேறொரு பயனையு மடையமாட்டார்கள்.

நல்ல மாதர்களுடைய போகத்தை விரும்பினவர்களும், அரசர்கள் வசியமாக வேண்டியவர்களும், அஞ்சத் தகுந்த பகைகளை யெல்லாம் ஒரு க்ஷணநேரத்தில் நீக்க விரும்பியவர்களும், பால சந்திரன்போன்ற நற்புத்திரர்களைப் பெற விரும்பியவர்களும், ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்துவம் ஆகிய மூவகைக் கருமங்களையும் நீக்க விரும்பியவர்களும், முயலகன்போன்ற இராக்கதர்களையும் பைசாசங்களையும் பூதங்களையும் அடக்கவேண்டியவர்களும், துன்பஞ்செய்யும் வியாதிகளையும் தேகச் சோர்வையும் நீக்க விரும்பினவர்களும், இயலிசை நாடகமென்னும் முத்தமிழ்க் கல்வியை விரும்பியவர்களும், அழகைப்பெற விரும்பியவர்களும், குற்றமற்ற கீர்த்தியை அடைய விரும்பியவர்களும் இந்த அருணாசலத்தைப் பிரதக்ஷணஞ் செய்யவேண்டும்; அங்ஙனம் செய்யின் அவர்களுக்கு மேற்கூறிய விருப்பங்களெல்லாம் நிறைவேறும்.

இன்னும், சிறப்புப் பொருந்திய ஆதிவாரத்திலே இம்மலையை வலஞ்செய்தவர்கள் சூரிய மண்டலத்தைப் பிளந்துகொண்டுபோய்ச் சிவபதத்திற் சேர்வார்கள்; ஸ்திரமாகிய சோமவாரத்தில் வலமாய் வந்தவர்கள் இந்திரன்போலச் சிறப்புற்றுச் சப்த தீவுகளையும் ஆண்டு முடிவில் சிவசாரூப்பியத்தை யடைவார்கள்; மங்களவாரத்தில் வலஞ்செய்வோர்

தாக்குண்டான கடனையும் தரித்திரத்தையும் விட்டு நீங்குவ
தோடு சங்கிலிப் பின்னலைப்போன்று தம்மை விடாமற்
பற்றியிருக்கும் ஏழுவகைப் பிறப்புக்களினின்றும் நீங்குவார்
கள்; புதவாரத்தில் பிரதக்ஷணஞ் செய்தவர்கள், நான்கு
வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், பதினெண் புரா
ணங்களையும், அறுபத்துநான்கு கலைஞானங்களையு முணர்ந்த
வர்களாகி முடிவில் முத்திவீட்டை யடைந்து எப்பொழு
தும் நற்சுகத்துடன் வாழ்வார்கள்; பெருமை பொருந்திய
குருவாரத்திலே வலஞ் செய்தவர்கள், திரிமூர்த்திகளும் புக
ழும்படி தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தலைவராவார்
கள்; குறைவற்ற சுக்கிரவாரத்திலே வலஞ் செய்தவர்கள்,
தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியின் நாயகராகிய விஷ்ணு
வின் பதத்தை யடைவார்கள்; சனிவார உதயத்தில் பிரதக்ஷ
ணஞ் செய்தவர்கள், நவக்கிரகங்களாலும் நற்பலனை யடை
வார்கள்.

சிவராத்திரியிலும், வருஷப்பிறப்பிலும், ஐப்பசிமுதல்
மூன்று மாதங்களிலும் வலஞ்செய்தவர்களுக்கு மேற்கூறிய
பலன்களினும் அதிக பலன் சித்தியாகும்; உத்தராயணத்தி
லும், தக்ஷணாயனத்திலும், மாசிமகத்திலும், * அர்த்தோ
தயத்திலும், சூரியகிரகணகாலத்திலும், † வியதிபாதத்தி
லும், அமாவாசியிலும், பௌர்ணமியிலும், கிருத்திகையி
லும் விரும்பி வலஞ்செய்தவர்களுக்கு மேற்கூறிய பலன்களி
லும் கோடிபங் கதிகமான பலன் கிடைப்பதோடு இஷ்டசித்
திகளெல்லா முண்டாகும்; தினந்தோறும் தவறாமல் வலஞ்
செய்வோர்க் குண்டாகும் பலனை அளவிட்டுச் சொல்லுதல்
முடியாது.

இப்படிப்பட்ட பலன்களை யெல்லாம் தரத்தக்க அருணா
சலத்தை வலஞ் செய்வோர் எவ்விதமான நியமங்களோடு
செல்லவேண்டுமெனில், பிரதக்ஷணஞ்செய்யும் அன்றைக்குப்
பெண்களைச் சொப்பனத்திலும் நினையாமல், ஸ்நானஞ்

* அர்த்தோதயம்-குரு அஸ்தமிக்கச் சூரிய னுதிக்கும் முகூர்த்
தம். † வியதிபாதம் - நித்தியயோகத் தொன்று.



செய்து, பரிசுத்தமாகிய வஸ்திர முடுத்திக்கொண்டு, விபூதி
யணிந்து, முறைப்படி தானங்களைச் செய்து, தாம் ஒருவ
ரிடத்திலும் தானம் வாங்காமல், பூமியிலே காலினால் நடந்து,
கிரியைச் சுற்றியிருக்கின்ற தேவர்களைப் பணிந்து பூஜித்து,
அங்கத்தி லணிகின்ற சட்டையையும் போர்வையையும் நீக்
கிக் குடை பிடித்துக்கொள்ளாமல், கால்களுக்குச் செருப்
பணிந்துகொள்ளாமல், பயத்தையுங் கோபத்தையும் சோகத்
தையும் நீக்கிக் குதிரை யானை முதலிய வாகனங்களி லேறா
மல், தாம்பூலம் தரிக்காமல், போசனத்தையும் வெறுத்துக்
கைகளை வீசாமல், சோர்வில்லாமல், சந்தோஷத்தோடு சிரத்
திற் கைகளைவைத்துக் கூப்பிக்கொண்டு, மாதர்களையும் பாவி
களையும் நீசரையும் அங்கஈனரையும் பாராமல், நடக்கும்
போது அடிகளின் சப்தம் காதிற் கேளாமல், பத்து மாதத்
துக் கருப்பத்தையுடைய இராஜஸ்திரீகள் நடப்பதுபோல
மிருதுவாக நடந்து, பிறப்பிறப்பென்னும் இருவினைகளையும்
நீக்கத் தகுந்த இந்த அக்கினிமலையை எட்டுத் திக்குகளி
லும் வணங்கி, அத் திக்குகளிலிருக்கும் சுவாமிகளையும்
வணங்கி, உருவந்தெரியாமல் கிரிவலஞ் செய்துகொண்டு
வருகின்ற சித்தர்களையுந் தேவர்களையும் மனத்திற் றியா
னித்து, அவர்கள்மீது தங்கள் கைகால்கள் படுமென்றஞ்சி
வழியில் ஒதுங்கிக்கொண்டு, ஆகாயமட்டு மளாவிய இந்த
மலையைப் பொன்போலவும் படிகம்போலவும் இரத்தினம்
போலவும் நினைத்துக்கொண்டாவது, சுவாமி துதிகளைக் கேட்
டுக்கொண்டாவது மௌனமாய்ச் செல்லவேண்டும்.

இவ்வாறு கிரியை வலஞ்சுற்றி வந்தபின், பன்றி வடி
வெடுத்த விஷ்ணுவாலும் அறியமுடியாத அருணாசலேசுர
ருடைய பாதங்களை வணங்கி, அவருக்கும் உண்ணாமுலையம்
மைக்கும் அருச்சனை முதலியன புரிந்து சிறப்புச் செய்து,
மீண்டு தம்மிருப்பிடத்திற்கு வந்து, உயர்ந்த நற்குணத்தை
யுடைய சிவபக்தர்களுடனிருந்து மதுரமாகிய பழங்களையும்
பாலையும் ஆகாரமாக உட்கொள்ள வேண்டும்; அல்லது மாமிச

பதார்த்தம் முதலியன சேர்ந்த அசுத்த ஆகாரங்களை நீக்கிப் பரிசுத்தமான பதார்த்தங்களோடு கூடிய அன்னத்தை உண்ணவேண்டும். இவ்வித நியமங்களை முக்கியமாக இத்தலத்தில் தங்கியிருப்பவர்களே அனுஷ்டிக்கவேண்டும்; நெடுந்தூரத்திலிருந்து வந்தவர்கள், மிகவும் இளைத்துப்போயிருப்பார்களாகையால் தங்களா லியன்றவற்றைச் செய்யலாம்; தங்களால் முடியும்பக்ஷத்தில் எல்லாவற்றையுஞ் செய்யலாம்.

குற்றமற்ற ஞானத்தையுடைய சனகரிஷியே! மிகவும் பக்தியோடு இந்த மலையை வலஞ்செய்து அருணாசலேசுரரைப் பூஜித்து நன்மை யடைந்தவர்களுள் முக்கியமான சிலரையுங் கூறுகிறேன் கேளும்: திக்குப்பாலகர் எட்டுப்பேர்களும் இக்கிரியை வலஞ்செய்து தங்கள் தங்களுக்குரிய எட்டுத் திக்குகளிலும் தங்கள் தங்கள் பேரினாலே இலிங்கங்களை ஸ்தாபித்துப் பூஜை புரிந்து இத்தலத்திலிருந்த நன்மையை அடைந்திருக்கின்றார்கள்; வண்டுகள் கூடி இசை பாடுந் தக்க மலர்மாலையை யணிந்த கூந்தலையுடைய பார்வதி, இக்கிரியை வலஞ்செய்து இதற்குக் கிழக்குத் திக்கில், பவளமலையைப்போல ஓர் இலிங்கத்தை ஸ்தாபித்து பூஜித்துச் சுவாமியின் இடப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தாள்; வச்சிராங்கத பாண்டியன் குதிரைமே லேறிக்கொண்டு இவ்வருணாசலத்தை வலஞ் செய்ததனால் தனக்கு வந்தடைந்த பாவத்தைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு இக்கிரிக்குத் தென்றிசையிலே புழுகணியிறைவனென்னும் பெயரையுடைய ஓர் இலிங்கத்தை ஸ்தாபித்துப் பூஜித்து இம்மலையை முறைப்படி வலம் வந்து தன் பாவம் நீங்க மேலான பதவியை அடைந்தான்; தணியாத பாவங்களை நீக்கிக்கொள்ளும்பொருட்டுப் பிரமனாகிய நானும் இக்கிரிக்கு மேற்பாகத்திலே அணியண்ணாமலையானென்கிற பெயரையுடைய ஓர் இலிங்கத்தை ஸ்தாபித்துப், பூஜைசெய்து நற்பேறு பெற்றேன்; சூரியன், ஒரு காலத்தில் அறியாமையால் இவ்வருணாசலத்தைத் தாண்டிச்



சென்றதனால் வந்த பாவந் தீரும் பொருட்டுத் தன் பெயரால் ஓர் இலிங்கத்தை ஸ்தாபித்துப் பூஜித்துக் கிரிப்பிரதக்ஷணஞ் செய்து நன்மையை அடைந்தான்.

இன்னும் இவ்வருணையம்பதியின் ஆலயத்திலும், மற்ற விடங்களிலும், அநேகந் தேவர்களும், நாகலோகத்தார்களும், முனிவர்களும் பல இலிங்கங்களை ஸ்தாபித்துப் பூஜைபுரிந்து கிரிவலஞ்செய்து அளவற்ற நன்மைகளை யடைந்திருக்கின்றனர்; அப்படி அவர்களால் ஸ்தாபித்துப் பூஜைசெய்யப்பட்ட இலிங்கங்களை இவ்வளவென் றளவிட்டுக் கூறுதல் முடியாது; மேற்கூறியபடி பலராலும் ஸ்தாபிக்கப்பட்ட பரமசிவ சொரூபமான அநேகம் இலிங்கங்கள், இவ்வருணாசலத்தைச் சுற்றிலும் மூன்று காதவழி தூரமட்டும் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரக் கூட்டங்கள்போல நெருங்கி எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன; இத்தகைய இலிங்கங்கள் நிறைந்த அருணாசலத்தின் மகிமையை, பார்வதி, விநாயகர், சுப்பிரமணியர் முதலியவர்களாலும் அளவிட்டுக் கூறுதல் இயலாது; அப்படி அவர்களாலேயே சொல்லமுடியாதென்றால் என்னாற் சொல்லக்கூடுமோ?" என்று கூறி முடித்தார்.

ஒன்பதாவது

திருமலை வலம்புரிதற் சருக்கம் முற்றுப்பெற்றது.

---

பத்தாவது

## ஆதித்த சருக்கம்.

தாதுபரந்த தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவர், மேற்கூறியபடி அருணாசலத்தை வலஞ் செய்வதின் மகிமையைக் கூறி முடித்தவுடனே சனகமுனிவர், மிகவும் மனமகிழ்ச்சியடைந்து அந்த நான்முகனை வணங்கி, அவருடைய மலர்முகத்தை நோக்கி, "வேத முழுதுங் கற்றுணர்ந்தவரே! பிறப்பை நீக்கும் பரிசுத்தராகிய நான்முகக் கடவுளே! நீர் இப்போது கூறிய கிரிப்பிரதக்ஷண மகிமை

யைக் கேட்டு அளவற்ற ஆனந்த சாகரத்தில் மூழ்கினேன்; இனி, நின்மலராகிய அருணாசலேசுரரை மதியாதவர்க்கு வந்த பாவ விவரத்தையும், அவர் பொருளை அபகரிக்க நினைத்தவரடைந்த பாவ விவரத்தையும், அவைகளை அவர்கள் நீக்கிக்கொண்ட விவரத்தையும் கூறியருளவேண்டும்,” என்று கேட்டுக்கொள்ள, நான்முகக்கடவுள் அவ்வாறே அவ்விஷயங்களைச் சொல்லத் தொடங்கினவராய் அந்தச் சனகமுனிவரை நோக்கி, “சனகரே! உம்முடைய விருப்பப்படியே நீர் கேட்டுக்கொண்ட விஷயங்களையும் இனிக் கூறுகின்றேன் கேளும்; குற்றமற்ற முனிவர்கள் வலஞ்செய்து நற்பேற்றை யடைந்துவரும் அருணாசலமென்னும் மலையுடனே, மற்ற மலைகள் நிகராகுமென்று இதனை மதியாமல் நிந்தித்தவர்களுடைய வாயில் புற்றுண்டாகிப் புழுக்கள் நெளிந்து சொரியப் புலால் நாற்றத்தோடு இரத்தஞ் சிதறும்; இவ்வாறு அருணாசலத்தை நிந்தித்த அப்பாவிகளை எமதூதர்கள் கொண்டு சென்று பன்முறை செக்கிற் போட்டாட்டி வருத்துவதோடு, அவர்களுடைய வாய்களை நெருப்பிற் பழுக்கக் காய்ச்சிய கத்தியினா லறுப்பார்கள்; பின்னும், ‘எங்களாண்டவன் மலையை நிந்தை செய்தவர்கள் நீங்கள்தாமோ,’ என்று அதட்டிப் பயமுறுத்தி அவர்களைக் கொதிக்கக் காய்ந்த நெய்யிலுந் தூக்கிப் போட்டு வேகவைப்பார்கள்; அன்றியும், அவர்களைப் பஞ்சாகும்படித் துகைத்து, அரக்கை யுருக்கி அவர்களுடைய வாயிலே விட்டு நஞ்சைப் பருகும்படிச் செய்து தீமையாகிய நரகிலுந் தள்ளுவார்கள்; அந்நரகமும் அவர்களைத் தாங்குதற்கு அருவருப்புக்கொண்டு மிகவும் வருந்தும்; இன்னும் அவர்கள் மேற்கூறியபடி நரகத்தில் வீழ்ந்தவுடனே, ஆசிரியரையும், தாய்தந்தையரையும் கொன்ற பாவத்தால் அங்கு முன்னமே சேர்ந்திருக்கும் பாவிகளும் அவர்களைக் கண்டு, ‘இவர்கள் அருணாசலத்தை நிந்தித்தவர்களாகையினாலே நம்மினும் மகா பாவிகள்; ஆதலின், இவர்களுடைய முகத்தில் விழிக்கலாகாது; இவர்கள் நம்மோடு சரியாயிருக்கலாகாது; இவர்களை இன்னுந் தாழ்ந்தவிடத்திற்



றள்ளுங்கள்,’ என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு கண்களை மூடிக்கொள்வார்கள். எல்லா வுலகங்களையுஞ் சிருஷ்டிசெய்த நானும் சப்த லோகங்களையு முண்ட விஷ்ணுவும் தேடி முடியையும், அடியையும் காணமுடியாத மகிமை பொருந்திய இவ்வருணாசலத்தை,‘மலைதானே,’என்றிகழ்ந்து மேலே கடந்து சென்று முற்காலத்தில் ஒருவன் மிக்க துன்பத்தை யடைந்து பின்னர் அருணாசலேசுரரைப் பூஜித்து அவருடைய கிருபா கடாட்சத்தால் அத்துன்பத்தைத் தீர்த்துக்கொண்டான்; அவனுடைய சரித்திரத்தைக் கேட்பதனால், இம்மலையை மதியாதவர்கள் அடையும் பலன் இன்னதென்பது நன்கு விளங்கும்; ஆதலால், அதனை இப்போது முதலிற் கூறுகிறேன்.

முன்னொரு காலத்தில், நான்கு திக்குகளிலுஞ் சென்று விளங்கும் பிரகாசத்தைத் தனக்குள்ளே யுடையதாய் இப்பூமண்டலத்தில் ஒப்பற்ற வடிவங்கொண்ட இவ்வருணாசலத்தைச் சூரியனானவன் மதியாமல், ‘இது மலைதானே,’ என்று நினைத்து, ஏழு குதிரைகள் பூட்டப்பட்டு விளங்கும் ஒற்றைச் சக்கரத்தையுடைய தனது தேரை இம்மலையின் உச்சியில் மிக்க தைரியத்தோடு நடத்திச் சென்றான்; அப்படி அவன் அகங்காரத்துடன் நடத்திச் செல்லுங்காலத்தில் அத்தேரானது இம்மலைக்கு நேராக மேற்பாகத்தில் வந்தவுடனே மிகுந்த பிரகாசமுள்ள இம்மலையானது திடீரென்று வெடிக்க அவ்வெடிப்பினின்றும் தாங்கமுடியாத வெப்பத்தையுடைய அக்கினியானது புகைந்தெழுந்து அத்தேரிற் பற்றியது; அங்ஙனம் பற்றவே அத்தேரானது, திரிபுரத்தை யெரித்த சிவனுடைய நெற்றிக் கண்ணால் எரிந்த மன்மதனைப்போல எரிந்துவிட்டது; அதிற் பூட்டப்பட்டிருந்த குதிரைகளும் கரிந்து ஜீவனை இழந்தன; சூரியனோ தன்னுடைய சாரதியாகிய அருணன் கால்களை யிழந்திருந்ததுபோலக் கிரணங்களெல்லாவற்றையு மிழந்து, மதிமயக்கங்கொண்டு அங்குக் கிடந்தான்.

இப்படி அவன், தேர் முதலியவற்றை யிழந்து வருந்திக் கிடக்கும்போது, மேலான கதியைப் பெறும்பொருட்டு இம்மலையை வலஞ்செய்துகொண்டு வந்த நான் அவனைக் கண்டேன்; அப்போது அவன் என்னிடத்தில், 'எனக்கு இக்கதி நேர்ந்ததற்குக் காரணமியாது?' என்று வினவினான். அப்போது நான் அவனை நோக்கி, "சூரியனே! மகா மகிமை பொருந்திய ஈசுர சொரூபமாகிய இவ்வருணாசலத்தை நீ சாமானியமான ஒரு மலையென்று கருதி அகங்காரங்கொண்டு இதனை மதியாமல் இதன்மீது உன் தேரைச் செலுத்தினமையினாலே உனக்கு இக்கதி நேர்ந்தது; இனிமேல் நீ வேறு எவ்வழியினாலும் இந்தத் துன்பத்தைப் போக்கிக்கொண்டு நற்கதியடையமாட்டாய்; இவ்வருணாசலத்தைப் பக்தியுடனே பிரதக்ஷணஞ்செய்து அருணாசலேசுரரைப் பூஜித்தால் மாத்திரம் இத்துன்பம் உன்னைவிட்டகலும்; ஆதலால், நீ அவ்வாறே செய்வாயாக," என்று கூறிச் சென்றேன்.

அதன்மேல் அந்தச் சூரியன், தான் மகா மேருகிரியை வலஞ்செய்து வருவதுபோல மிகுந்த பயபக்தியுடனே இவ்வருணாசலத்தைப் பிரதக்ஷணஞ்செய்து, அருணாசலேசுரரை முறைப்படி பூஜித்து அவருடைய சந்நிதியில் நின்று "அடியார்க் கிரங்கும் அரவாபரணனே! அருணைக்கிறைவனே! அடியேன் அறியாமையாற் செய்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்; இப்போதெனக்கு நேர்ந்திருக்கும் துன்பத்தை நீக்கி நற்கதியைக் கொடுத்து என்னை யாட்கொள்ளவேண்டும் பெருமானே," என்று தோத்திரஞ் செய்தான். அவ்வாறு அவன் தோத்திரஞ் செய்தவுடனே, சத்துருக்களைக் கொல்லுகின்ற மழுவை யேந்திய பரமசிவக்கடவுள் அவன்மீதிரக்கமுற்று, இளமை தங்கிய விருஷபவாகனத்தின்மேல் கோடி சூரியப் பிரகாசம்போலெழுந்தருளி அவனுக்கு முன்னே தோன்றி அவனை நோக்கி, "சூரியனே! நீ நம்முடைய சொரூபமாகிய அருணாசலத்தை மதியாமல் அதன்மேல் தேரைச் செலுத்தி மிகுந்த குற்றத்தைச் செய்



திருந்தாலும் இப்போது அதனை வலஞ்செய்து நம்மைப் பூஜித்தபடியினாலே அக்குற்றத்தை மன்னித்தோம்; ஆதலால், நீ முன்னுருவத்தையும், தேர் முதலியவற்றையும் பெற்றுச் சிறப்புறுவாயாக," என்று அனுக்கிரகஞ்செய்து கைலாயத் தெழுந்தருளினார். பின்னர், சிவபெருமானுடைய திருவருளால் சூரியன் தன்னுடைய பிரகாசத்தையும், குதிரைகள் தேர்முதலியவற்றையும் அடைந்து அருணாசலத்தைத் தோத்திரஞ் செய்துகொண்டே அதைவிட்டு விலகிச் சென்றான். அதுமுதல் அந்தச் சூரியன் தேர்மீதேறிச் செல்லும்போதெல்லாம் தனக்கு முன்னேற்பட்ட பயத்தினால் சித்திரை முதல் பங்குனி யீறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு மாதங்களிலும் அக்கினி சொரூபமாகிய இந்த அருணாசலத்தை வலஞ்செய்து சென்றுகொண்டிருக்கின்றான்; அவன் இந்த மலையின் உச்சியிலும் போவதில்லை, இடப்புறமாகச் சுற்றியும் போவதில்லை; இன்னும் அவன் இந்த மலைக்குச் சமீபத்திற் செல்லும்போது இதன்மீது புஷ்பமாரி சொரிந்து இதனைத் தோத்திரஞ்செய்துகொண்டே செல்வான்," என்று கூறி முடித்தார்.

பத்தாவது

ஆதித்த சருக்கம் முற்றுப்பெற்றது.

---

## பதினொன்றாவது

## பிரதத்தராச சருக்கம்.

நான்முகக்கடவுள், அருணாசலத்தை மதியாதவர் அடையுந் தீங்கிற் குதாரணமாக மேற்கூறியபடி ஆதித்தன் கதையைச் சொல்லி முடித்தபின், அருணாசலேசுரர் பொருளை அபகரிக்க நினைப்பவர் அடையுந் தீங்கை விளக்கக் கூடிய பிரதத்தராஜன் கதையைச் சொல்லத் தொடங்கினவராய்ச் சனகமுனிவரை நோக்கி, "ரிஷியே! இனி அருணாசலநாதருடைய பொருளை அபகரிக்க நினைப்பவர் அடையுந் தீங்கிற் குதாரணமாக ஒரு கதையைச் சொல்கிறேன். அருணாசலே

சுராருடைய திரவியத்தில் அணுவளவேனுந் திருடினவர்கள் உடனே மரணமடைந்து, எமலோகஞ் சென்று அக்கினிக் குழியில் விழுந்தவஸ்தைப்படுவதோடு, எமதூதர்கள் வச்சிர வுலக்கை கொண்டடிக்கும் அடியையுந் தாங்கி இருள் நிறைந்த இருபத்தெட்டுக் கோடி நரகங்களிலும் அடைவாக வீழ்ந்து கிடப்பார்கள். அத்திருட்டுக் குடன்பட்டிருந்தவர்களும் இத்தகைய துன்பங்களுக் குள்ளாவார்கள். இன்னும், அருணாசலேசுரரிடத்தில் திருடிப் பூமிக்குள் ஒருவரால் ஒளித்து வைக்கப்பட்ட பொன்னானது, தானிருக்கு மிடத்திற்கு மேலே வந்தவருடைய தேகத்தையுங் கண்டிக்கும்; அப் பொன்னை ஒளித்து வைத்து எடுத்துக்கொண்டவர்களை அஃது, அவர்களுறவோடு கெடுக்கும்; மலையிலும் கடலிலும் சென்று அவர்கள் ஒளித்துக்கொண்டாலும் அவ்விடங்களிலும் விடாமல் தொடர்ந்து அவர்களை வருத்தும்; வேறெவ் விடத்திற்கு அவர்கள் சென்றாலும் அங்கும் அது நிழலைப் போல அவரைப் பின்பற்றித் துன்பப்படுத்தும்; இன்னும், மனிதர் கல்லையுங் கடிக்கலாம்; நெருப்பை யெடுத்து விழுங்கி விடலாம்; விஷங்கலந்த வஸ்துக்களையுஞ் சாப்பிடலாம்; இரும்பையும் புசிக்கலாம்; கள்ளிப்பால் முதலியவற்றையும் பருகலாம்; எதனாலெனில், இப்படி இவற்றை உட்கொள்வதால் தீங்கு நேரினும், உடனே அதற்குத் தக்க மருந்துண்டு அத் துன்பத்தைத் தீர்த்துக்கொள்ள ஏதுவுண்டு; அருணாசலேசுராருடைய பொருளையோ இவ்வாறு சாப்பிடுதல் முடியாது; அதனைச் சாப்பிட்டவுடனே அஃது அப்படிச் சாப்பிட்டவர்களுடைய தொண்டையைப் பிடித்துக்கொள்ளும்; உட்சென்றாலும் தேகத்தைச் சுடும்; அவர்களையுங் கொன்றுவிடும்; இத் துன்பத்தை நீக்கிக்கொள்ள எவ்வித மருந்தும் கிடையாது; இப்படிச் செய்வது மிகுந்த கிருபையையுடைய அருணாசல நாதருடைய பொன்னினது செய்கையாகும்; அந்தப் பொருளைத் திருடினவர்கள் அடையுந் துன்பங்கள் இவைகளாம். அதனைத் திருட முயற்சி செய்தவர்களும், நினைத்தவர்களும் என்ன கதியை அடைவார்களென்றால், அவர்கள் அந்தக்



கணத்திலேயே அழிவார்கள்; அருணாசலநாதருடைய பக்தர்க
ளின் பொருளை அபகரித்து அவர்களுக்குத் துன்பஞ் செய்ய
நினைத்தவர்களோ அளவற்ற துன்பங்களை யடைந்து உடனே
கெடுவார்கள். இப்படி இவர்கள் கெடுவார்களென்பதை நான்
இப்போது உமக்குச் சொல்லும் இந்தக் கதையானது நன்கு
விளக்கும்; ஆதலால், இதனைக் கவனமாகக் கேளும்:

முன்னொரு காலத்தில் பிரதத்தனென்னு மரசன், கங்
கைநதிபாயும் வளம்பொருந்திய காசிதேசத்தை அரசாண்டு
வந்தான்; இவன் எத்தகைய சிறப்புக்களை யுடையவனெனில்,
விலையுயர்ந்த முத்துக்களை ஒதுக்குகின்ற கங்கைத்துறையை
யுடையவன்; தெய்வலோகத்திலிருந்து பூமியிலிறங்கிவந்த
தெய்வேந்திரன் போன்றவன்; ஆண்மையில் சுப்பிரமணியக்
கடவுளை நிகர்த்தவன்; அரசர்கள் வணங்குங்காலத்தில் அவர்க
ளுடைய கிரீடங்கள் பட்டு அவற்றிலுள்ள மணிகள் அழுத்
துவதனால் தேய்ந்து அதிகப் பிரகாசத்தை வீசுகின்ற வீரக்
கழலைத் தரித்தவன்; இடைவிடாது தருமத்தைச் செய்பவன்;
மிகுந்த கீர்த்தியையுடையவன்; தன்னிடத்திலுள்ள களங்
கத்தை யுடைத்துத் தாரையாக ஒழுகவிட்ட சந்திரனை நிகர்
த்து விளங்கும் நீலரத்தினக் காம்பு பொருந்திய வெண்
கொற்றக் குடையை யுடையவன்.

இத்தகைய சிறப்புக்களையுடைய பிரதத்தமகாராஜன்
ஒருகாலத்தில், சோழ நாட்டிற்குச் செல்லக்கருதி, சந்திர
வட்டக்குடை நிழற்றவும், தருமதேவதையானது பகைவர்
களை நோக்கி, 'ஏ சத்துருக்களே! நீங்கள் விரைந்து எங்கள்
பிரதத்தமகாராஜனிடத்தில் வணங்கி உயிர்ப்பிச்சை பெற்
றுக்கொள்ளுங்கள்,' என்று சொல்லி யழைப்பதுபோல இர
ண்டு பக்கங்களிலும் பெண்கள் நின்று வெண்சாமரங்களை
வீசவும், மாக்குநிறத்தையுடைய குதிரைப்படைகள் நெருங்கி
வரவும், சூரிய மண்டலத்தை யளாவிய கொடிகள் நாட்டப்
பெற்ற தேர்ப்படைகள் பூமியில் வெற்றிட மில்லாமற் சூழ
வும், சிந்தூரத் திட்டப்பெற்றுப் புள்ளிகளோடு விளங்கும்

முகத்தையும், தங்கப்பூண் கட்டிய தந்தங்களையுமுடைய யானைப்படைகள் மேகக்கூட்டம்போல நெருங்கிச் செல்லவும், பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கவும், மந்திரிமார்களும் பெரியோர்களும் பக்கத்திற் சூழ்ந்துவரவும் மிக்க அலங்காரத்துடனே தேரின்மீதேறிப் புறப்பட்டான்.

இப்படி இவன் புறப்பட்டதைக் கேள்விப்பட்டவுடனே, 'பகைவர்களுடனே போர்செய்யத்தான் பிரதத்தன் புறப்பட்டுவிட்டான்,' என்று கருதித் தங்களுக்கேற்பட்ட பயத்தினாலே அங்கதேசத்தரசர்கள் புற்றிலேறிக் கொண்டார்கள்; யவனதேசத் தரசர்கள் மலையிற் புகுந்தொளித்துக்கொண்டார்கள்; அவந்திதேசத் தரசர்கள் வில்லின் நாணியைக் கௌவினார்கள்; மற்ற தேசத் தரசர்கள், தாங்கள் கட்டவேண்டிய பகுதிகளைக் கொண்டுவந்து இந்தப் பிரதத்தனிடம் கட்டி வணங்கினார்கள். இங்ஙனம் பகையரசர்களெல்லோரும் பயத்தை யடையும்படி புறப்பட்ட இவன் பலதேசங்களையுங் கடந்து, திருநதியைத் தாண்டி மிகவும் மகிமை பொருந்திய அருணாசலத்தை யடைந்தான்.

அவ்வா றடைந்தவுடன் கங்கையைத் தரித்த சடையையுடைய அருணாசலேசுரரைத் தரிசிக்க வேண்டுமென்னும் எண்ணமுடையவனாய் ஆலயத்திற்குட் புகுந்து அந்தச் சுவாமிக்கு அருச்சனை முதலியன செய்து அவரைத் துதித்து வணங்கினான். அவ்வாறு வணங்கிக்கொண்டு நிற்கும்போது, அங்கே விஷத்தைப்போலுங் கொடுமையையுடைய கூரிய கண்களையும், இரும்பும் உருகும்படி பாடும் சங்கீத வித்தையின் தேர்ச்சியையும், உயர்ந்த பரத நாட்டிய வல்லமையையும் பொருந்திய கோவில்தாசி, ஊர்வசிபோலச் சிறந்த அலங்காரங்களை யுடையவளாய்ச் சுவாமியின் சந்நிதியில் நின்று, கரும்பினிரசம்போன்ற பாடல்களைப் பாடி மயிலும் வெட்கும்படி நாட்டியம் புரிந்தாள். இந்தப் பிரதத்தமகாராஜன் அவ்வாறு நாட்டியம் புரிந்த அவளை உற்று நோக்கினான். அப்படிப் பார்த்தமாத்திரத்தில் இவன் அவளுடைய ஆடலாலும்,



பாடலாலும், உயர்ந்த அழகாலும் மயங்கி அவள்மீது அடங்காப் பிரியங்கொண்டு, அவளை நோக்கி, "இந்தப் பெண்ணரசி அன்னமோ? கிளியோ? தேவாமிர்தமோ? இலக்குமியோ? முற்காலத்தில் அசுரரை அடக்கி அமிர்தத்தைத் தேவருக்குக் கொடுத்த அழகிய மோகினியோ? இரதிதேவியோ? பிரமன் மனத்தினால் சிருஷ்டித்த மேனகையோ?" என்று பலவாறு புகழ்ந்து, அவளைத் தன்னுடைய நகரத்திற்கு அழைத்துச் செல்ல நினைத்தான்.

அப்படி இவன் நினைக்கு முன்னமே, அருணாசலேசுரருடைய மகிமையால் இவனுடைய முகம் குரங்குமுகமாய் விட்டது; அங்ஙனம் இவன் குரங்குமுகத்தை யுடையவனாய் நிற்கவே அவ்விடத்தில் நின்ற எல்லோரும் இவனைக் கண்டு கைகொட்டி நகைத்தார்கள். அப்போது இந்தப் பிரதத்தனுடைய மந்திரிமார்கள் இவ் வதிசயத்தைப் பார்த்து, 'இவ் வாறு நம்மரசனுக்குக் குரங்குமுக முண்டானதற்குக் காரணமியாது? இவர் இங்கு சுவாமிக்குப் பொருந்தாத காரியத்தைச் செய்திருக்கக்கூடும்,' என்று நினைத்து உடனே பிரதத்தனை நோக்கி, 'மன்னர்பெருமானே! நீர் சுவாமிக்கு ஏதேனுங் குற்றத்தைச் செய்திருக்கக்கூடும்; அதனாலேயே உமக்கிவ்வாறு குரங்குமுக முண்டாயிற்று; நீர் என்ன குற்றம் செய்தீர்? அதனை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்,' என்றுரைத்தார்கள். அப்போது பிரதத்தராஜன், தான் நினைத்த நினைப்பை அவர்களிடம் தெரிவித்தான். அதைக் கேட்டவுடனே மந்திரிமார்கள் பிரதத்தனை நோக்கி, "மன்னரே! நீர் அருணாசலேசுரருடைய பொருளாகிய இப்பெண்ணைக் கொண்டுபோக நினைத்தது மிகவும் தப்பான காரியமாகும்; அதனாலேயே உமக்கு இத்தீங்கு நேர்ந்திருக்கின்றது; இனி நீர் மிகுந்த காணிக்கைகளை அருணாசலேசுரருக்குச் செலுத்தி அவரை வணங்கினால் மாத்திரம் உமக்கு நேர்ந்திருக்கும் இத்துன்ப மொழியும்; வேறொரு மார்க்கத்தாலும் தீராது," என்று கூறினார்கள்.

உடனே பிரதத்தராஜன், மலையை நிகர்த்த பல யானைகளையும், வேகமாகத் தாவிச் செல்கின்ற பல குதிரைகளையும் நல்ல இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற சிவிகைகளையும், பிராமணர்களையும், அழகிய பெண்களையும் அருணாசலேசருக்குக் காணிக்கையாகக் கொடுத்து, அபிஷேகம் அருச்சனை முதலியவைகளையும் நடத்தி, அவருடைய சந்நிதியில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்து, 'அடியார்க் கிரங்கும் அருணாசலநாதரே! எளியேன் அறியாமையாற் செய்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்,' என்று தோத்திரஞ் செய்தான். அங்ஙனம் பிரதத்தன் வணங்கவே அருணாசலநாதர் அவன்மீ திரக்கமுற்றுக் கிருபையைச் செலுத்தினார். உடனே அவனுக் குண்டாயிருந்த குரங்குமுகம் நீங்க, முன்னிருந்த அழகிய மனிதமுக முண்டாயிற்று. அதன்மேல் இந்தப் பிரதத்தன் அருணாசலநாதரைப் பலமுறை வணங்கித் தோத்திரஞ் செய்துகொண்டே தான் நாடிய விடத்திற்குச் சென்று அங்குள்ள காரியங்களை முடித்துக்கொண்டு மீண்டு தன் நகரம் போய்ச் சேர்ந்தான்.

சனகரே! அருணாசலேசருடைய பொருளை அபகரிக்க நினைத்தவன் அடைந்த தீங்கு இன்னதென்பதை யுணர்ந்தீரா? இவ்வாறு அவருடைய பொருளை அபகரிக்க நினைப்பவர்களுக்கு இதைப்போன்ற பல துன்பங்கள் நேர்வதோடு முன்னுரைத்த கொடுமையான துன்பங்களு முண்டாவது நிச்சயம்; இப்படி வருந் துன்பங்களை வேறெவ்விதத்தாலும் போக்கிக்கொள்ள முடியாது; பின்னை அவை யெவ்விதத்தால் நீங்குமெனில், அவர்கள் அபகரிக்க நினைத்த பொருளுக்குப் பதின்மடங் கதிகமான பொருள்களை அந்த ஈசனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து, அருச்சனை அபிஷேகம் முதலியனவும் செய்து அவரை வணங்கித் தோத்திரஞ் செய்தால் மாத்திரந் தீரும்," என்று கூறிமுடித்தார்.

பதினொன்றாவது
பிரதத்தராச சருக்கம் முற்றுப்பெற்றது.

---

பன்னிரண்டாவது

## பாவந்தீர்த்த சருக்கம்.

அருணாசலநாதருடைய பொருளைக் கவர நினைப்பவர் அடையுந் தீங்கிற் குதாரணமாக, நான்முகக்கடவுள் பிரதத்தராஜனுடைய சரித்திரத்தை மேற்கூறியபடி சொல்லி முடித்தவுடனே சனகரிஷி அந்த நான்முகக்கடவுளை வணங்கி அவர் மலர்முகத்தை மிகு விருப்போடு நோக்கி, "பிரமதேவரே! நீர் கிருபை கூர்ந்து எனக்கிப்போது கூறிய கதையினால் நான் மிக்க மகிழ்ச்சி யடைந்தேன்; அருணாசலேசருடைய மகிமையையும் நன்குணர்ந்தேன்; இனி, அவருடைய மகிமையால் பாவங்கள் தீரும்படியான விதத்தையுங் கூறியருளவேண்டும்; அவரைப் பணிந்து தங்களுடைய பாவத்தைத் தீர்த்துக்கொண்டவர்களுடைய கதைகளையும் சொல்லவேண்டும்," என்று விருப்பத்தோடு கேட்டுக்கொண்டனர்.

அவர் அவ்வாறு கேட்டுக்கொள்ளவே பிரமதேவர், அவருடைய வேண்டுதலுக் கிணங்கியவராய்ச் சனகரை நோக்கி, "முனிவரே! மனத்தினாலும், வாக்கினாலும், காயத்தாலும், துர்விஷயங்களை நினைத்தும், பேசியும், செய்தும் பலவிதமான பாவங்களைத் தேடிக்கொண்டவர்கள், திருவண்ணாமலையை ஒரு முறை தரிசனஞ் செய்வார்களேயானால், அப்பொழுதே பாவங்களனைத்தும் அவர்களை விட்டகலும்; இவ்வாறு அவை அகலுமென்பதற் கறிகுறியாகச் சில கதைகளையுஞ் சொல்கிறேன், கவனமாகக் கேட்பீராக; முன்னொரு காலத்தில் அஷ்ட வசுக்களும் கூடிப் பெருமை பொருந்திய எனது சபைக்கு வந்திருந்தார்கள்; அப்போது அவர்கள், தங்களுடைய தவத்தின் பெருமையையும், அதினால் வந்த கீர்த்தியையுங் கொண்டாடிச் சந்தோஷித்துத் தங்களைத் தாங்களே புகழ்ந்து பெருமைப்படுத்திப் பேசிக்கொண்டிருந்தார்கள். எவராயினும் தற்பெருமை பேசுவது

மிகவும் இழிந்த செய்கையாதலால், எனக்கு அவர்கள் மீது மிகுந்த கோபமுண்டாயிற்று; அதனால் நான் அவர்களை வெறுப்புடனே நோக்கி, "வசுக்களே! எவ்விடத்திலும், தாம்செய்த தவம், தருமம் முதலியவற்றைப் பெருமைப் படுத்தி எல்லா விஷயங்களிலும் தம்மைப்போற் சிறந்தவரில்லையென்று தற்பெருமை பேசுகின்றவர்களும், அவ்வித தற்பெருமையால் நல்லோரை நிந்திப்பவர்களும், தங்களுக்குப் பொருள் கொடுப்போர் மூடராயிருப்பினும் அவர்களை உயர்த்திக் கூறியும், வறுமையுள்ளார் மிக்க விவேகிகளாயினும் அவர்களைத் தாழ்த்திக் கூறியும் பெரியவர்களைப்போல நடித்துக்கொண்டு அற்பமதியுடன் திரிவோர்களும், விவேகிகளால் இகழப்பட்டு இகத்திலும் பரத்திலும் கிடைக்கும் நற்பயன்களை யிழந்து கடவுளுக்கு விரோதிகளாகி நரகத்திலாழ்ந்து துக்க சமுத்திரத்தில் மூழ்கிக் கிடப்பார்கள்; இது சத்தியம்; இஃது இப்படியிருந்தும் நீங்கள் சிறிதும் விவேகமின்றி அகஸ்தியர் முதலிய பெரியோர்களெல்லாம் நிறைந்திருக்கும் இந்தச் சிறந்த சபையில் உங்களையே பெருமைப் படுத்திப் பேசினீர்கள்; இதற்குத் தக்க துக்கத்தை நீங்கள் அநுபவிக்காவிடில் உங்களுக்குப் புத்தி வராது; ஆதலால், உங்களுடைய தவத்தையெல்லா மிழந்து மிகுந்த துக்கத்தை அநுபவிக்கக்கடவீராக," என்று சாபமிட்டேன்.

இவ்வாறு நான் கோபங்கொண்டு சாபமிட்டவுடனே, அவர்கள் மிகவும்பயந்து நடுங்கி, 'அந்தோ! நாம்தற்புகழ்ச்சி கூறி இத்துயருக் காளானோம்,' என்று வருந்தி உடனே என்னை நோக்கி வணங்கி, 'நான்முகக்கடவுளே! நாங்கள் மதியீனத்தால் அகங்காரங்கொண்டு தற்பெருமை பேசி உம்முடைய கோபத்திற்காளாகி இச்சாபத்திற்குள்ளானோம்; ஆயினும், இனி இச்சாபம் நிவிர்த்தியாகுங்காலம் எப்போதேற்படும்; எங்கள்மீது மிகுந்த கிருபை செய்து அதனைக் கூறியருளவேண்டும்,' என்று கேட்டுக்கொண்டார்கள். அப்படி அவர்கள் கேட்டுக்கொண்டபோது நான் அவர்களை நோக்கி, 'வசுக்களே! இந்



தச் சாபம் இலகுவில் உங்களைவிட்டகலாது; ஆயினும், பரமசிவனுடைய கிருபை எப்போது உங்களுக் கேற்படுமோ அக்காலத்திற்றான் இது தீரும்; ஆதலின், அவரை நோக்கி அரிதாகிய தவத்தைச் செய்து இச்சாபத்தை நிவிர்த்திசெய்து கொள்ளக்கடவீராக,' என்று கூறினேன்.

அதன்மேல் அந்த வசுக்கள் என்னை வணங்கிக்கொண்டு என் சபையை விட்டு நீங்கிக் கங்காதீரத்தையடைந்து ஓரிடத்தில் அந்தக் கங்கைத்துறையிலமர்ந்து தங்கள் சாபம் நீங்கும் பொருட்டுப் பரமசிவக்கடவுளை நினைந்து நெடுங்காலம்வரையிலுங் கடுந்தவம் புரிந்தார்கள். அங்ஙனம் அவர்கள் வருந்தித் தவம்புரியவே, பார்வதியை வாமபாகத்தில் வைத்து மகிழ்ச்சிகொண்டிருக்கும் பரமசிவக்கடவுள் அவர்கள்மீ திரக்கங்கொண்டு ஒருசமயத்தில் இளமைபொருந்திய விருஷபவாகனத்தி லெழுந்தருளிவந்து அவர்களுக்கு முன்னேதோன்றி, அவர்களை நோக்கி, 'வசுக்களே! நீங்கள் விரும்பியது யாது?' என்று வினவினர். அப்போது அவர்கள் அந்தச் சிவபெருமானுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து பயபக்தியுடனே பன்முறை அவரைத் தோத்திரஞ்செய்து அதன்மேல் அக்கடவுளை நோக்கி, 'சுவாமி! தாமரைமலரிலிருக்கின்ற நான்முகக்கடவுள் எங்களுக்குக் கொடுத்த சாபமாகிய துக்கசாகரத்தினின்றும் எங்களைக் கரையேற்றியருளவேண்டும்,' என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் இவ்வாறு கேட்டுக்கொள்ளவே, அன்பர்க்குக் கிருபை மாரியைச் சொரிகின்ற மேகம்போன்றவராகிய பரமசிவக்கடவுள் அந்த வசுக்களை அன்புடன் பார்த்து, 'வசுக்களே! உங்களுக்கு நேர்ந்திருக்கும் சாபமானது நீங்கவேண்டுமானால் நீங்கள் நான் சொல்லுகிறபடி செய்யவேண்டும்; அங்ஙனஞ் செய்தால் இச்சாபம் நிச்சயமாக அகலும்; பூலோகத்தில் நமக்கு மிகவும் விருப்பமாகிய தலேச்சரமென்னும் ஒரு ஸ்தலமிருக்கின்றது; அத்தலத்தில் அருணாசலமென்னும் ஒரு மலையுண்டு; இக்கிரியின் மகிமையோ அளவிடற் கரியதாம்; இம்

மலையையுடைய அப்புண்ணிய தலத்திற்கு நீங்கள் சென்று அதைச் சுற்றிலும் கிழக்குத்திசை தொடங்கி ஈசானதிசை வரையிலுமுள்ள அஷ்டதிக்குகளிலும் திக்குக் கொருவராக விருந்து முறைப்படி தவத்தைச் செய்வீராக; அங்ஙனம் செய்யும்பக்ஷத்தில் நாம், உங்களுக் கேற்பட்டுள்ள அச்சாபத்தை நிச்சயமாகத் தீர்த்தருளுவோம்; அக்காலத்தில் அங்குள்ள அக்கினி மலையாகிய அருணாசலமானது எட்டு முகங்களையுடையதாகி உங்களில் ஒவ்வொருவர்க்கும் எட்டுப் பக்கங்களிலும் காட்சி கொடுக்கும்,' என்று கூறித் திருக்கைலாயத்திற் கெழுந்தருளினார்.

அதன்மேல், முன்னே அசுரர்களையும் அவர் வாசஞ் செய்த திரிபுரங்களையும் நகைத் தெரித்த திறத்தினையுடைய சிவபெருமான் கூறியருளியபடியே அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்னும் அந்த அஷ்டவசுக்களும் அங்கிருந்து புறப்பட்டு மகா மகிமை பொருந்திய அருணையம்பதியை யடைந்து அதைச் சுற்றிலும் எட்டுத் திக்குகளிலும் திக்குக் கொருவராக அமர்ந்து அருமையான தவத்தைச் செய்தார்கள். அப்படி அநேககாலந் தவஞ்செய்தபின்பு ஒருதினம் அருணாசலேசுரருடைய கிருபாகடாட்சத்தினாலே அந்த அக்கினி மலையானது எட்டுத் திக்குக்களிலும் எட்டு முகங்களைக் காட்டி அந்த அஷ்ட வசுக்களுக்கும் காட்சி கொடுத்தது. அங்ஙனங் காட்சி கொடுத்தமாத்திரத்தில் முன்னே சிவபெருமா னுரைத்தபடியே அந்த வசுக்களுக் கேற்பட்டிருந்த பிரமனுடைய சாபமானது நீங்கிற்று; உடனே அவர்கள் முன்னிருந்தபடியே தங்கள் தங்கள் பதவியைப் பெற்றார்கள். சுப்பிரமணியரைப் பெற்ற பரமசிவக்கடவுளானவர் அஷ்டவசுக்களும் செய்த தவத்திற் கிரங்கி மேற்கூறியபடி அவர்களுக்குக் காட்சி கொடுக்கும்பொருட்டு எட்டு முகங்களையுடைய அக்கினிமலை வடிவமாய் நின்றபோது தேவர்களெல்லோரும் ஒன்றாகக் கூடி அந்த மலைவடிவமாகிய சிவ



பெருமானை நோக்கி வணங்கித் தோத்திரஞ்செய்து புஷ்பமாரி பொழிந்தார்கள்.

இஃதன்றி இன்னும், முன்னொரு காலத்தில் இந்திரன் என்னிடத்தில் வந்து, 'நான்முகக் கடவுளே! என்னுடைய உயர்ந்த பதவியை அடையவேண்டுமென்று நினைத்துப் பலர் அருமையான தவத்தைச் செய்கின்றார்கள்; அத்தவம் நிறைவேறாதிருக்கும்படி நீர் ஏதேனும் ஒரு விக்கினத்தைச் செய்யவேண்டும்,' என்று கேட்டுக்கொண்டான்; நான் அவ்வாறே செய்வதாகச் சொல்லி அவனை யனுப்பிவிட்டுப் பின்னர், அவன் கூறிய அத்தவம் நிறைவேறாமற் போகும்படி செய்யும்பொருட்டு, இயக்கலோகத்துப் பெண்கள், தேவலோகத்துப் பெண்கள், நாகலோகத்துப் பெண்கள், பூலோகத்துப் பெண்கள், வரையரமகளிர், நீரரமகளிர் ஆகியவர்களுடைய அழகையெல்லாந் திரட்டியமைத்துக் குளவியானது, தன்னிடத்துள்ள ஒரு விசேஷ சாமர்த்தியத்தால் புழுவின் உடலைக் கெடுத்து வேறொரு தேகத்தைச் சிருஷ்டிப்பது போலத் திலோத்தமை யென்னும் பெண்ணைச் சிருஷ்டித்தேன். அவ்வாறு சிருஷ்டித்து அவளைப் பார்த்தவுடனே அவளுடைய அழகானது என்னுடைய கலங்கா மனத்தைக் கலக்கித் தன்வசஞ் செய்து கொண்டது; அதனால் நான் அவள்மீது அடங்காப் பேராசைகொண்டு முறையையுங் கவனிக்காமல், ஞானம் நிறைந்த புத்தியையும் இழந்து, அஞ்ஞானமாகிய மயக்கத்தை யடைந்து, அவளிடம் என்னுடைய உள்ளக் கருத்தைத் தெரிவித்து என் நோக்கத்திற் கிணங்குமாறு அவளை வேண்டி நெருங்கி, அவளுடைய கரத்தைப் பற்றத் தொடங்கினேன்.

நான் அவ்வாறு நெருங்கவே, அவள் என்னைத் தந்தையென்று கருதி என் கருத்திற் கிணங்காமல், என் கைப்பிடியினின்றுந் தவறி எனக்கு முன்னே ஓரிடத்தில் ஒளித்தாள். அவ்வாறொளித்தும் நான் விடாமல் அவசரத்துடன் நான்கு பக்கங்களிலுந் தேடி முடிவில் அவளைக் கண்டு

கைப்பற்றும் பொருட்டு நெருங்கி யோடினேன்; அப்போது அவள் என் கைப்பிடிக்கு அகப்படாமல் பெண்மான் வடிவெடுத் தோடினாள்; நானும் விடாமல் ஆண் மானாக வடிவெடுத்து அவளைப் பின்தொடர்ந்தேன்; பின்பு அவள் பெண் கிளியாகிப் பறந்து ஆகாய மார்க்கமாகச் சென்றாள்; நானும் ஆண் கிளியாகிப் பின்னே தொடர்ந்து பறந்தேன்; அதன்மேல் அவள், எங்குச் சென்றாலும் நான் பின் தொடர்வதைக் கண்டு, 'இனி இவர் நம்மை விடமாட்டார்; இவருடைய கையி லகப்படாமல் மானத்தைக் காப்பாற்றுவதற்கு என்ன உபாயத்தைச் செய்யலாம்,' என்று வருந்தி மிகவும் வேகமாகப் பறந்தோடினாள்; அப்படிச் செல்லும்போது அருணாசலமானது அவளுடைய கண்ணுக்குத் தோற்றியது; அப்படித் தோற்றவே அவள், 'அருணாசலேசுரரிடத்தில் அடைக்கலம் புகுந்தாற்றான் நம்முடைய மானத்தைக் காப்பாற்றலாம்,' என்று துணிந்து உடனே அவ்வருணையைச் சார்ந்து, அருணாசலேசுரரை நோக்கி, 'விருஷப வாகனத்தில் வருகின்றவரே! கண்களுக்குத் தோற்றாத இடையினையுடைய பார்வதியை வாமபாகத்தில் வைத்துக்கொண் டிருப்பவரே! எல்லாவற்றையும் சுடும் அக்கினி வடிவமானவரே! திருவாலங்காட்டில் நடனஞ் செய்த சுவாமியே! ஆராயப்பட்ட வேதத்தின் முடிமே லொளிரும் சோதியே! உமக்கு நான் அடைக்கலம்; என்னுடைய மானத்தை இச்சமயம் நீர் காக்கவேண்டும்,' என்று இனிமையாகிய குதலைச் சொற்களால் தோத்திரஞ் செய்தாள்.

வாசனைமிகுந்த புஷ்பமாலையையணிந்த கூந்தலையுடைய திலோத்தமை இவ்வாறு தோத்திரஞ்செய்து முறையிட்டவுடனே அருணாசலேசுரர் மிகுந்த இரக்கங்கொண்டு உடம்பெல்லாம் செவிபோல மிக்க ஆவலுடன் அவளுடைய வார்த்தைகளைக் கேட்டு அவளுக்குக் கிருபையைச் செய்யும்பொருட்டுச் சீக்கிரமாகப் பார்வதி வேடுவச்சி வடிவமாகவும், நான்கு வேதங்களும் நாய்களாகவும் தொடர்ந்துவர அந்த



மலையைப் பிளந்துகொண்டு அதினின்றும் ஒரு வேடனாக வெளியேறித் திலோத்தமைக் கெதிரில் தோன்றினார். வளையலையணிந்த கரங்களை யுடையவளாகிய பார்வதியை இடப்பாகத்தில் வைத்த பரமசிவக் கடவுள், அவ்வாறு வேடனாகி வில்லைக் கையி லெடுத்துக்கொண்டு தோன்றிய மாத்திரத்திலே நான் அருணாசலேசுரரால் முந்திப் பட்டபாட்டை நினைந்து மிகவும் பயந்து, 'இங்கே நாம் தீங்கான எண்ணத்தை வைப்போமானால் சுவாமி நம்மை ஒழித்துவிடுவார்; ஆதலால், நம்முடைய கெட்ட சிந்தனையை விட்டுவிடவேண்டும்,' என்று கருதி உடனே, துவளுகின்ற இடையினையுடைய திலோத்தமை மீதுகொண்ட கெட்ட எண்ணத்தையும், அதனாலுண்டாகிய துன்பத்தையும் நீக்கி, வேடன் வடிவமாகிவந்த அச் சுவாமியின் பாதங்களில் வீழ்ந்து பணிந்து, அவரை நோக்கி, 'சுவாமி! அடியேன் அறியாமற்செய்த இக்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்,' என்று கெஞ்சினேன்.

அப்போது கிருபா சமுத்திரமாகிய அருணாசலேசுரர் என்மீது கிருபைகொண்டு என்னை நோக்கி, 'நான்முகனே! இந்தத் திலோத்தமையை நீயே படைத்ததனால் இவள் உனக்கு மகளாவள்; அப்படி மகளாகிய இவள்மீது நீ கெட்ட சிந்தனை வைத்தது மகா பாதகமாம்; இந்தப் பாவமானது கற்பகோடிகாலம் தவஞ்செய்தாலுந் தீரமாட்டாது; ஆயினும், அருளுருவமாகியும், தானே பரமாகியு மிருக்கின்ற புண்ணியஸ்தலமாகிய இவ்வருணாசலத்தை இப்போது நீ தரிசித்ததை முன்னிட்டு அக் கொடிய பாவத்தை நாம் நீக்கிவிட்டோம்; இனிமேல் நீ உன்னிடத்திற்குச் சென்று சுகமாக வாழ்வாயாக,' என்று கூறிப் பின்னர் திலோத்தமையை நோக்கி 'பெண்ணே! நீ இங்கடைந்து நம்மைத் தோத்திரஞ் செய்தபடியினாலே நாம் உன்மீ திரக்கங்கொண்டு உன்னுடைய மானத்தைக் காப்பாற்றினோம்; இனி நீ உன்னிஷ்டமான விடத்திற்குச் செல்வாயாக,' என்று சொல்லிவிட்டு அம்மலைக்குள் மறைந்தருளினார். அதன்மேல் நான் என்

னுடைய கவலை நீங்கி என்னிருப்பிடம் வந்து சேர்ந்தேன். அருணாசலத்தை யடைந்த மாத்திரத்தில் எத்தகைய பாவமும் தீருமென்பது இக்கதையினால் உமக்கு நன்குவிளங்கும்; முற்காலத்தில் என்னைப்போலவே பலர் இத்தலத்திற்சார்ந்து தங்களுடைய பாவங்களைத் தீர்த்துக்கொண்டு அருணாசலேசுரரிடத்தில் நல்வரங்களையும் பெற்றிருக்கின்றார்கள்.

இது நிற்க; முன்னொரு காலத்தில் சிவபெருமானுடைய திருவிளையாட்டினால் கற்பகாலம் முடிவுற்று அப்போதேற்பட்ட அந்தகாரமானது நீங்கிச் சிறிது இருள் மாத்திரமிருக்க வெளிச்சமுண்டாகி விடியுந்தருணமாயிருந்தது; அப்படியிருந்தும் மகாவிஷ்ணு விடிந்துபோனதை யுணராமலும், உலக சிருஷ்டிக்கேதுவாக என்னைப் படைக்காமலும், தம்முடைய நித்திரை தெளியாமல் பாற்கடல் மத்தியில் பாம்பணைமீது படுத்துக்கொண்டிருந்தார். அப்படி அவர் அந்தகாரம் நீங்கியும் விழிக்காமலிருக்கும் விநோதத்தைப் பார்த்துச் சின்மயரூபராகிய யோகியர்கள், அந்த விஷ்ணு, எழுந்திருக்கவும், மிகுதியாயிருக்கும் இருள் நீங்கி உலகமுண்டாகவும் கிருபை செய்யவேண்டுமென்று சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தார்கள்.

அப்படி அவர்கள் துதிக்கவே, எல்லாச் சீவராசிகளுக்கும் பிதாவாகியும், தம்மைத் துதிக்கும் அடியார்களுடைய ஆணவமலத்தை நீக்கி யருளுகின்ற பரிசுத்தராகியுமிருக்கும் பரமசிவக்கடவுள் உடனே நெருப்புமயமாகிய ஒரு சோதிசொரூபத்தை யடைந்து எங்கும் பிரகாசத்தைப் பரப்பி நெருப்புப் பொறிகளைச் சிதறினார். அவ்வாறு சிதறியவுடனே சிறிது பாக்கியிருந்த இருளும் நீங்கி அந்தப் பொறிகளாலேயே உலகங்களெல்லாம் உண்டாயின. அதன்மேல் அந்த யோகிகள் இருள் நீங்கி உலகங்களெல்லா முண்டாகியும் எழுந்திருக்காம லிருந்த விஷ்ணுவினிடத்திற் சென்று, 'விஷ்ணுவே! வாழி; விடிந்துபோய்விட்டது; எழுந்திருக்கக்கடவீராக,' என்று சொல்லி அவரை யெழுப்பினார்கள். அப்படி யெழுப்பவே, அந்த விஷ்ணு, சர்ப்பசயனத்தினின்றும் திடுக்கிட்டெழுந்து நடந்திருந்த விசேஷங்களைப் பார்த்ததிசயித்து, 'ஆ! ஆ!! உலகத்தை யுண்டாக்கும் பொருட்டு நான், உரிய காலத்தி லெழுந்து பிரமனைச் சிருஷ்டிக்காமல் நெடுநேரம் வரை பாம்பின்மேற் படுத்து நித்திரை செய்துவிட்டேன்; ஆதலால், எனக்கு மிகுந்த தோஷமுண்டாய்விட்டது; சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து அவர் மூலம் அதனைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்,' என்று மிகுந்த பயபக்தியுடனே சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து மனத்திற் றியானித்தார்.



அப்படி அவர் தியானிக்கவே, அடியார்கள் நினைத்த மாத்திரத்தில் அவர்களுக் கெதிரே தோன்றி, அவர்களுடைய துன்பத்தை நீக்குவதே தமக்குரிய தொழிலாகக் கொண்டிருப்பவராகிய சிவபெருமான், ஸ்படிகமலையின்மேல் விளங்கும் சோதிபோல வெண்மையாகிய விருஷபவாகனத்தின்மேல் செவ்வானம்போன்ற நிறத்துடனே யெழுந்தருளி அந்த விஷ்ணுவுக்கு முன்னே தோன்றினார். அங்ஙனம் அவர் தோன்றிய மாத்திரத்தில் விஷ்ணுவானவர் விரைந்தெழுந்து, உடனே அவருடைய தாமரைமலர் போன்ற பாதங்களில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக வணங்கி அவருடைய திவ்வியமான கிருபையைப் புகழ்ந்து, அவருக்கு அருக்கிய முதலிய பூசனைகள் புரிந்து அவருடைய மனத்தை யிளகச் செய்து பின்னர் அவருடைய திருமுகத்தை மிகுவிருப்போடு நோக்கி, 'சுவாமி! நான் எழுந்திருக்க வேண்டியகாலத்தில் விழித்தெழாமல் நெடுநேரம் மிகுந்த நித்திரையைச் செய்தபடியினாலே தோஷத்தைத் தேடிக்கொண்டேன்; ஆதலால், அத்தோஷத்தை நீக்கியருள வேண்டும்,' என்று தோத்திரஞ் செய்தார்.

அப்போது எருக்கம்பூமாலையைத் தரிப்பவராகிய சிவபெருமான் அந்த விஷ்ணுவை நோக்கி, 'விண்டுவே! ஒருவன்

அசுவமேதயாகம் முதலியவைகளைச் செய்வதாலும் நீங்காத அவனுடைய பாவமானது, அருணாசலத்தில் நம்மைப் பூசிப்பதால் நீங்கிவிடும்; ஆகையால், நீ சோதிமயமாகிய அருணாசலத்திற்குச் சென்று நம்மைப் பூசிப்பாயாக; அவ்வாறு செய்யின் இத்தோஷமானது உன்னை விட்டகலும்; வாசனையிருந்த மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த அவ்வருணாசலத்தின் வடிவத்திற்கும் என் வடிவத்திற்கும் பேதமில்லை; நான்கு வேதங்களுங்கூட அதன் பெருமையை அளவிட்டறியமாட்டா; விபூதியையே முக்கியமாகத் தரிக்கும் யோகியர்களும், உன்னைப்போன்ற பல விஷ்ணுக்களும், தொண்ணூற்றாறு பிரமர்களும் அத்தலத்தில் நம்மைப் பூசித்துத் தங்களுடைய தோஷங்களைப் போக்கி நன்மையை அடைந்திருக்கின்றார்கள்; முன்னொருகாலத்தில் தக்கன் தன்னுடைய புதல்வியாகிய உரோகிணி முதலிய இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கு மணஞ்செய்து கொடுக்க, அவன் அவர்களுடன் கூடிவாழ்ந்து வரும்போது அவர்களுள் உரோகிணியின்பேரில் மாத்திரம் அதிக விருப்பம் வைத்து மற்றவர்களை நேசிக்காமலிருந்தபடியால் அச்செய்கையையறிந்த தக்கன் அவனை நோக்கி, 'சந்திரனே! நீ உன்னுடைய மனைவியர் எல்லோரிடத்திலும் சமத்துவமான விருப்பத்தைச் செலுத்தாமல் ஒருத்தியின்மீது மாத்திரம் மிக்க விருப்பம் வைத்தபடியினாலே உன்னுடல் குன்றிப்போகக் கடவது,' என்று சபித்தான். அதன்மேல் அச்சாபத்தை யடைந்த சந்திரன் அதனை நீக்கிக்கொள்ளும்பொருட்டு அந்த அருணாசலத்தை யடைந்து நம்மைப் பூசித்து வணங்கிப் பல நன்மைகளை யடைந்தான்; இன்னும் அத்தலம், தன்னை நினைத்த மாத்திரத்திலேயே அவ்வாறு நினைத்தவர்களுக்கு முத்தியைக் கொடுக்கும்; நீ அங்குச் சென்றால் மேற்கூறியபடி இத்தோஷம் உன்னைவிட்டகலுவது நிச்சயம்' என்று கூறி மறைந்தருளினார்.



பின்னர், அந்த மகாவிஷ்ணு, சிவபெருமானுடைய கட்டளைப்படியே அக்கினி வடிவமாகிய அருணாசலத்தைத் தியானஞ்செய்துகொண்டு உடனே புறப்பட்டுப்போய்த் தடாகங்களிலுள்ள தாமரைமலர் வாசனை யிருந்து பரவியிருக்கின்ற சிறப்பினையுடைய அத்தலத்தை யடைந்து சந்தோஷத்துடனே இந்திர தீர்த்தத்தில் மூழ்கிக் கிரிப் பிரதக்ஷணஞ்செய்து அருணாசலேசுவரரைத் தொழுது அவருக்கு வேண்டிய பூசனை முதலிய சிறப்புக்களையும் செய்தார். அவ்வாறு செய்யவே அவருக்கேற்பட்டிருந்த தோஷமானது அப்பொழுதே அவரைவிட்டகன்றது; அதன்மேல் அவர் மிக்க பரிசுத்தமுடையவராய்த் தம்மிருப்பிடஞ் சேர்ந்தார். இக்கதைகளால், அருணாசலத்தை யடைந்தோருடைய எத்தனையபாவங்களும் நிச்சயமாகத் தீர்ந்து சுகமுண்டாகு மென்பதை நீர் நன்குணர்ந்துகொள்வீராக," என்று கூறி முடித்தார்.

பன்னிரண்டாவது

பாவந்தீர்த்த சருக்கம் முற்றுப்பெற்றது.

பதின்மூன்றாவது

## புளகாதிபச் சருக்கம்.

சனகரிஷியானவர், பிரமதேவர் மேற்கூறியபடி அருணாசலத்தை யடைந்து தங்களுடைய பாவங்களைப் போக்கிக்கொண்டவர் சரித்திரங்களைக் கேட்டபின், "புழுகு பூனைவடிவமாயிருந்த புளகாதிபனென்னும் அசுரன் அருணாசலேசுரால் நன்மை யடைந்த விதத்தையும் கூறவேண்டும்," என்று நான்முகக் கடவுளிடம் கேட்க, அவர் அவ்வாறே அதனைச் சொல்லத் தொடங்கினவராய் அவரை நோக்கி, "முனிவரே! உம்முடைய விருப்பப்படியே புளகனுடைய கதையையுங் கூறுகிறேன் கேட்பீராக: முற்காலத்தில் நினைத்தபடி வெவ்வேறு வடிவங்களை யெடுக்கத்தக்க, வல்லமை வாய்ந்த புளகனென்னும் பேர் அசுரனிருந்தான். அவன் ஒருநாள் புழுகு

பூனையினுடைய வடிவத்தை யடைந்து, மகாபுண்ணிய ஸ்தலமாகிய அருணாசலத்தின்மேல் உலாவிப் புழுகைச் சிதறினான். அதற்காக அருணாசலேசுரர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, 'இந்தப் புளகன் நம்மீது பக்திகொண்டு நம் வடிவமாகிய மலையில் புழுகைச் சிதறி நமக்கு அபிஷேகஞ்செய்தபடியால் மகா புண்ணியசாலியாய்விட்டான்; ஆகலால், இவனுக்கு மிகுந்த பலத்தையும் வாழ்வையும் கொடுத்தருளவேண்டும்,' என்று கருதி உடனே அவனுக்கு அளவற்ற பலத்தைக் கொடுத்தருளினார்.

அவ்வாறு பலத்தைக் கொடுத்த பின்பு அவன் அதனால் செருக்குற்றுப், பூமியிலுள்ளவர்களெல்லோரும் மிகுந்த பயத்தை யடையவும், தேவர்களும் முனிவர்களும் அளவற்ற துன்பத்தை யடையவும், நாள்தோறும் எண்ணிலடங்காத கொடுஞ் செய்கைகளைச் செய்துகொண்டு வந்தான். அவன் இவ்வாறு செய்த கொடுமைகளினாலே தேவர்களும் முனிவர்களும் மிகுந்த கஷ்டத்தை யடைந்து அதனைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுப் பருவதராஜ புத்திரியாகிய பார்வதியை இடப்பாகத்தில் வைத்தருளிய கருணாவாரிதியாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற கைலயங்கிரியைச் சார்ந்து அந்தப் பரமசிவக்கடவுளுடைய கமல பாதங்களில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக வணங்கி, எழுந்து நின்று பலதோத்திரங்களைச் செய்து, அவரை நோக்கி, 'அடியார்க்கு வந்த துன்பத்தை யகற்றி ஆனந்தத்தைக் கொடுத்தருளும் அலாபரணனே! உலகத்தில் புளகனென்னு மோரசுரன் தோன்றிப் புழுகு பூனையின் வடிவத்தைக்கொண்டு எழுலகங்களிலும் புகுந்து சஞ்சரித்துப், பல சேனாதிகளையும் வதைத்து, மனிதர்களுக்கும், முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் அளவற்ற கொடுந்துன்பங்களைச் செய்துகொண்டு வருகின்றான்; எங்களால் அத்துன்பங்களைச் சகிக்க முடியவில்லை; எவராலும் அவனை அடக்குதல் கூடவில்லை; அவன் மிகுந்த வல்லமையுடையவனாயிருக்கின்றான்; அவனால் உலகத்திற்கு நேர்



திருக்கும் துன்பத்தை நீர் நீக்கினால் நீக்கலாமே யன்றி வேறொருவராலுந் தீர்த்தல் முடியாது; ஆகலால், நீர் அவனை எவ்விதத்தாலும் அடக்கி இத்துன்பத்தை நீக்கியருளவேண்டும்,' என்று முறையிட்டார்கள்.

அவர்கள் இவ்வாறு முறையிடவே சிவபெருமான் அவர்கள்மீது இரக்கங்கொண்டு அவர்களை நோக்கி, 'பக்தர்களே! இந்த அசுரன் ஒருகாலத்தில் நம்முடைய வடிவமாகிய அருணகிரியில் அளவற்ற புழுகைச் சிதறி மிகுந்த புண்ணியத்தைத் தேடிக்கொண்டான்; அதனால் நாம் இவன்மீது கிருபைகொண்டு இவனுக்கு அளவற்ற பலத்தைக் கொடுத்திருக்கின்றோம்; அந்தப் பலத்தினாலேயே இவன் இவ்வாறு எவர்க்கும் அஞ்சாது வல்லமையான காரியங்களைச் செய்துகொண்டு வருகின்றான்; இவன் எளிதில் அழியமாட்டான்; ஆயினும், இவனால் இப்போதுங்களுக் குண்டாயிருக்கும் துன்பத்தை நீக்கவேண்டியது அவசியமாதலால், இவனை மோக்ஷத்தில் சேர்த்து இத் துன்பத்தை நீக்குகின்றோம்; இவன் இப்போது மிகுந்த கொடுஞ் செய்கைகளைச் செய்பவனாயினும், முன்னே அருணாசலத்தில் புழுகைச் சிதறி நமக்கு மிக்க ஆனந்தத்தைச் செய்து புண்ணியத்தைத் தேடி யிருப்பதால் இவனை வேறுவிதமாக அழிப்பது தகாது; இனி விரைவில் உங்கள் துன்பம் நீங்கும்; நீங்கள் உங்களிருப்பிடங்கட்குச் செல்லலாம்,' என்று கூறி அவர்களுடைய இருப்பிடங்கட்குச் செல்லுமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள், 'இனி நம்முடைய கடவுள் இத் துன்பத்தை யொழித்துவிடுவார்,' என்று மகிழ்ச்சிகொண்டு தங்களிருப்பிடங்கட்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அதன்மேல், வேதங்களுக்கு முதல்வராகிய சிவபெருமான் புழுகுபூனை வடிவமாயிருந்த புளகனையழைத்து அவனை நோக்கி, 'அசுரனே! உனக்கு முத்தியை அளிக்கின்றோம்; நீ இப்பொழுதே உலகவாழ்வை வெறுத்துப் புழுகுபூனை

வடிவமாகிய உன் தேகத்தை யொழிப்பாயாக,' என்று கூறினார். சிவபெருமான் இவ்வாறு கூறவே அந்தப் புளகாதிபன் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி யெழுந்து நின்று அவரை நோக்கி, 'பார்வதியை இடப்பாகத்தில் வைத்தருளிய பரமனே! இருமைக் கிருப்பிடமானவரே! பழமையானவரே! பராபரமாகியவரே! நெற்றிக்கண்ணை யுடையவரே! அரவாபரணரே! மழுக் கையரே! காளகண்டரே! அடியார்க்கெளியரே! இடபவாகனமூர்த்தியே! திரிபுரங்களை யெரித்த திறமையாளரே! உம்முடைய அடியேனாகிய நான் இப்பொழுதே நீரிட்ட கட்டளைப்படி தேகத்தை விடுகின்றேன்; இச்சமயத்தில் எனக்கொருவரங் கொடுக்கவேண்டும்; அஃதியாதெனில், நான் இப்போது கொண்ட வடிவமாகிய புழுகுபூனையின் மயிலுதிக்கும் பூனைகளில் உண்டாகும் புழுகை உம்முடைய திருமேனியில் நீர் ஏற்றுக்கொள்ள வேண்டும்; புழுகணியிறைவ ரென்னும் ஒரு பெயரையும் நீர் தரித்துக்கொள்ளவேண்டும்; இதுதான் நான் விரும்பும் வரம்,' என்று கூறினன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சிவபெருமான், அவன் விருப்பப்படியே அவ்வரத்தைக் கொடுத்தார். அதன் மேல் அந்தப் புளகாதிபன் தன்னுடைய புழுகுபூனை வடிவமாகிய தேகத்தை விட்டான். உடனே அவனுக்கு நம்பெருமானாகிய பரமசிவக்கடவுள் நற்பதவியைக் கொடுத்தருளினார். இவ்வாறு சிவபெருமான் அந்தப் புளகனை இரட்சித்து உலகத்தி லுண்டாகியிருந்த துன்பங்களைப் போக்கவே தேவர்களும், முனிவர்களும், மனிதர்களும் மிகுந்த மகிழ்ச்சியடைந்து உடனே பக்தியோடு சென்று சந்திரனைத் தரித்த சிரத்தினையுடைய சிவபெருமான் முடியில் அளவற்ற புழுகைச் சாத்தி பனிநீரால் அபிஷேகஞ்செய்து அவரை வணங்கித் தோத்திரஞ் செய்தார்கள். அவர்களால் சுவாமி சிரசில் அபிஷேகஞ் செய்யப்பெற்ற புழுகும் பனிநீரும் கலந்து அவரிருக்கு மாலயத்தில் அருவிபோலப் பெருகியோடின. பின்னர் உலகங்க



ளெல்லாம் சுகத்தையடைந்தன. சுவாமி மேற்கூறியபடி புளகனுக்கு வரங்கொடுத்ததற்குப் பொருத்தமாகவே அருணாசலத்தில் வச்சிராங்கத பாண்டியனால் பூஜிக்கப்பட்ட இலிங்கத்தில் 'புழுகணியிறைவர்,' என்னும் பெயரைக் கொண்டமர்ந்தார். மேற்கூறியபடி சிவபெருமான் புழுகைப் பிரியமாக ஏற்றுக்கொள்வதாகப் புளகனுக்கு வரங்கொடுத்திருப்பதனாலே அருணாசலேசுரருக்குப் புழுகபிஷேகஞ்செய்தல் மிகவும் விசேஷமுடையதாம்; ஆதலால், புழுகு, பனிநீர், கூட்டுவர்க்கச் சந்தனம் ஆகியவைகளை அருணாசலேசுரருக்கு அபிஷேகஞ் செய்தவர்களும், கண்கள் களிப்படையும்படியாக அவரைத் தரிசித்து வணங்கியவர்களும், அவருடைய புண்ணிய சரித்திரங்களைக் கேட்டவர்களும் மோக்ஷத்தை யடைவார்கள்; இது சத்தியம்,” என்று கூறி முடித்தார். இவற்றைக் கேட்டவுடனே சனகரிஷி மிகவும் ஆனந்தசாகரத்தில் மூழ்கினவராய் நான்முகக் கடவுளை நோக்கி, “பிரமதேவரே! உம்மால் அருணாசலேசுரருடைய மகிமைகளை நான் கேட்டு மகாபுண்ணிய முடையவனாயினேன்,” என்று அவரைப் பன்முறை ஸ்தோத்திரஞ்செய்து மற்றமுனிவர்களுடனே எழுந்து வணங்கினார்.

பதின்மூன்றாவது

புளகாதிபச் சருக்கம் முற்றுப்பெற்றது.

---

## வாழ்த்துக் கவிகள்.

### கலிவிருத்தம்.

“அஞ்செழுத்தும் வாழிவாழி யருணைவாழி யருணையான்
கஞ்சமுற்ற சரணம் வாழி கருணைவாழி கருணைபோன்

மஞ்சுபெற்ற வானம்வாழி வையம்வாழி வையமேற்
றஞ்சமுற்ற நீறம்வாழி சைவம்வாழி வாழியே."

"ஞானம்வாழி நன்மைவாழி நரநிராச நீதிசேர்
தானம்வாழி தருமம்வாழி சந்தவேத மாகமம்
கானம்வாழி கல்விவாழி கற்றறிந்த கேள்வியன்
பானவேர்கள் வாழியீச னடியர்வாழி வாழியே."

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

"இக்கதை படித்தோர் கேட்டோ
ரெழுதினோ ரெழுதி வைத்தோர்
மைக்கடல் சூழ்ந்த விந்த
வையக முழுதுங் காத்துத்
தக்கசந் தான போக
சௌக்கியந் தழைய வாழ்ந்து
இக்கரு ணேச ரன்பாற்
சிவபதம் பெறுவர் தாமே."

## அருணாசலபுராண வசனம்
## முற்றுப்பெற்றது.